# கலைச்சுடர்

## 15 வது ஆண்டு சிறப்பு மலர்

1997-2012

*15th Anniversary*

சுடர் 2



# கலைவாணி கல்வி நிறுவனம்

மானிப்பாய் வீதி, கோப்பாய், யாழ்ப்பாணம்.

## KALAIVANI EDUCATION INSTITUTE

MANIPPAI ROAD, KOPAY, JAFFNA. E-mail: kalaivani1997@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சுடர்

15வது ஆண்டு சிறப்பு மலர்

**1997 - 2012** **சுடர் - 2**

## கலைவாணி கல்வி நிறுவனம்

மானிப்பாய் வீதி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | கலைச்சுடர், சுடர் - 2 |
| ஆசிரியர் | : | மலர்க்குழு |
| மொழி | : | தமிழ் |
| தாளின் தன்மை | : | *70 gsm Bank* |
| நூலின் அளவு | : | *B5* |
| அச்சு எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 156 + xxii + Photos + விளம்பரங்கள் |
| பிரதிகள் | : | *500* |
| வெளியீடு | : | கலைவாணி கல்வி நிறுவனம்,<br>மானிப்பாய் வீதி, கோப்பாய்,<br>யாழ்ப்பாணம் |
| பதிப்பு | : | ATK PRINTERS, KOPAY. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவன கீதம்

*கலைவாணி கல்வி நிறுவனமே வாழ்க!*
*நிலைபெற்றே நீடூழி வாழ்க! வாழ்க!*

*எழில்மிகு கோவையம் பதியினில் அமைந்து*
*வளம்மிகு ஆளனி வனப்புடன் நிறைந்து*

***1997**முதல் தாயவள் நாமம் தாங்கி*
*தலை நிமிர்ந் தே நிற்கும்*
*கலைக்கூட ஆசான்கள் பெற்றோர் ஆர்வலர்*
*அனைவரும் கூடி அரும் பணியாற்றிடும்*
*கலைவாணி கல்வி நிறுவனமே வாழ்க!*

*செந்தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம் கணிதம்*
*விரும்பிடும் பாடங்கள் அனைத்துமே நிறைந்த*
*"கல்வியே ஒளி" என்னும் உன்னதநெறியைக் கொண்ட*
*கலைவாணி கல்வி நிறுவனம் வாழி!*
*கலைவானி கல்வி நிறுவனமே வாழி!*

*வந்திடும் மாணவர் வாஞ்சையுடன் கற்க*
*வசதிகள் பலவும் வளமாக அமைந்த*
*குறைகளை களைந்து நிறைவினை வளர்க்கும்*
*திறன்மிகு நிறுவனம் நீடுழி வாழ்க!*

*மாணவர் சேவைக்காய் மண்ணில் மாண்புடன்*
*வாழிய வாழிய வளம் பெருக*
*கலைவாணி கல்வி நிறுவனமே வாழ்க!*
*நிலைபெற்றே நீடூழி வாழ்க! வாழ்க!*
*கலைவாணிக் கல்வி நிறுவனமே வாழ்க!*
*நிலைபெற்றே நீடூழி வாழ்க! வாழ்க!*

*கலைவாணிக் கல்வி நிறுவனமே வாழ்க!*
*நிலைபெற்றே நீடூழி வாழ்க! வாழ்க!*

*ஆக்கம்:*
*ச. சவிகரன்*
*(கோவையூர் கவி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவையாதீன சிவாச்சாரியாரின் ஆசியுரை



சங்கத்தின் கதிரொளி காப்பியத்தில் வேரூன்றி எட்டுத்திசை எங்கும் பரவி இருக்கும் என் தமிழே உன்னை முதல் வணங்கு கின்றேன்.

இந்து சமுத்திரத்தின் முத்தாகவும் ரத்தினமாகவும் விளங்கும் இலங்கை திருநாட்டிலே தமிழும் கலைப்பண்பாடும் நிறைந்த சிவபூமியாகவும், வடமொழியிலும் தென்மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற முத்தமிழ் வித்தகர்களாகிய சிவாச்சாரிய பெருமக்களைக் கொண்டதும், கல்வி, கலை, கவின் கலையில் பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களையும், கவிஞர்களையும், பேரறிஞர்களையும், சைவப்புலவர்களையும் தன்னகத்தே கொண்ட ஈழமணித்திருநாட்டின் கருவாக விளங்குவது கோவையம்பதி ஆகும்.

தமிழ்கலை பண்பாட்டு விழுமியங்களையும், திறமைகளையும் செயலாற்றல் களையும் வெளிக்கொண்டு வரும் களமாக இக்கலைவாணி கல்வி நிறுவனம் காணப்பட்டு வருகின்றது. கோப்பாய் கிராமமானது கல்வி கலைப்பாரம்பரியத்தில் சிறந்து விளங்குவதற்கு காரணமும் இந்நிறுவனமாகும். இந்நிறுவனமானது இன்று 15ம் ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு மனமகிழ்வடைகின்றேன். இந்நிறுவன இயக்குனரான திரு.எஸ்.சிவரூபனின் அளப்பரிய அர்ப்பணிப்பும், ஆசிரியர்கள், மாணவர்களின் பெருஉதவியும் இந்நிறுவன வளர்ச்சிக்கு காரணமாகும். இந்நிறுவனமானது பல்வேறுபட்ட மாணவர்களை பல்கலைக்கழகம் செல்வதற்கும் உதவியுள்ளது. இந்நிறுவனமானது மேலும் பல வழிகளில் முன்னேற எல்லாம் வல்ல கண்ணகி அம்பாளின் பாதங்களை நமஸ்கரித்து ஆசி கூறுகின்றோம்.

கண்ணகா பூஜா துரந்தகர்
**சிவஸ்ரீ பரமசாமிக்குருமணி சண்முகராஜ சிவாச்சாரியார்**
பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
கோவையாதீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



ஈழவள திருநாட்டின் கலையழகும் கல்வி வளமும் கொளிக்கும் மணிமுடியாக திகழும் யாழ்ப்பாணத்தில் வரலாற்றுப் புகழ்வாய்ந்த கோப்பாய்க் கிராமத்தில் 1997 ஆண்டு திரு.சி.சிவரூபன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கல்விநிலையம் சரஸ்வதிதேவி பெயரைத் தாங்கிய கலைவாணி கல்விநிறுவனம் ஆகும். கோப்பாய் கிராமத்தில் பல கல்விநிலையங்கள் தோன்றி இடையில் மறைந்துவிட்டது. ஆனால் கலைவாணி கல்விநிறுவனம் தொடர்ந்து 15 ஆண்டுகளாக வீறுநடை போட்டு வளர்ச்சியடைந்து வருகிறது. இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் இறைவனுடைய திருவருளாகும். அறிவு, ஆற்றல், திறமைமிகக் ஆசிரிய பெருமக்களும் கோவையூர் மாணவ செல்வங்களின் பெற்றோர்களும் சேர்ந்து இந்த கல்விநிறுவனத்தை வளர்ச்சியடைய வைத்துள்ளார்கள். இங்கு தரம் மூன்று தொடக்கம் உயர்கல்வி வரை மாணவர்கள் கல்வி கற்று திறமையாக சித்தி பெற்று கல்வி நிறுவனத்திற்கு பெரும் புகழை தேடி கொடுத்துள்ளார்கள். மேலும் கலைவாணி கல்வி நிறுவனம் வளர்ச்சியடைந்த 25 வருஷ வெள்ளிவிழாவையும் கொண்டாட வேண்டும் என்று எல்லாம் வல்ல சித்திரவேலவப் பெருமானை பிரார்த்தித்து அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் எனது நல் ஆசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவாச்சாரிய இளஞ்சுடர்
**பூரண கீதச்சந்திரச் சிவாச்சாரியர்,**
பிரதமகுரு,
ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமிகோவில்,
கோப்பாய் வடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்



*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு*
*புண்ணுடையர் கல்லாதவர்"*

என்ற பொய்யாமொழியின் அருள் வாக்கை மூல மந்திரமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கலைவாணி கல்வி நிறுவனம் தனது பதினைந்து ஆண்டுகள் கல்விப் பயணத்தின் நிறைவில் வெளியிடும் "கலைச்சுடர்" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். நிலையத்தின் இயக்குனர் திரு.சிவராசா சிவரூபன் எனது மாணவன் என்ற வகையில் எனது மகிழ்ச்சி இரட்டிப்பாக உள்ளது.

இன்றைய கலைத்திட்டத்தில் பாடசாலைகள் பாட அலகுகளை முழுமையாக பூர்த்தி செய்வதில் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றன. அத்துடன் இன்று எமது நாட்டில் கல்வி போட்டி நிறைந்ததாக உள்ளது. இத்தகைய சூழ்நிலைகளில் தனியார் கல்வி நிலையங்களின் தேவை இன்று முக்கியம் பெற்றுள்ளது. இந்த வகையில் கோப்பாயில் உதித்த கலைவாணி கல்வி நிறுவனம், வலிகாமம் கிழக்கிலுள்ள பல நூற்றுக்கணக்கான மாணவர்களைத் தன்னுள் அடக்கி கல்விச்சேவை ஆற்றிக் கொண்டிருக்கின்றது. இந்த கல்வி நிறுவனம் வழமையான கல்விச் செயற்பாடு களுக்கு அப்பால் கவாய் காடினார் எனும் கல்வி உளவியலாளர் குறிப்பிடும் பன்முக நுண்மதிக்கும் முக்கியம் கொடுத்து வருவதை அவதானிக்க முடிகிறது. பரிசளிப்பு விழா, கலைவிழா, வாணிவிழா, கல்விச்சுற்றுலா, சிரமதானம் என்ற நிகழ்வுகளுடன் கணனிக்கல்வி, சங்கீதம், மிருதங்கம் முதலான துறைசார் செயற்பாடுகளையும் நடாத்தி வருவதன் மூலம் மாணவர் மத்தியில் பன்முக நன்மதியை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே மாணவர்களின் முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்துச் சேவையாற்றிக் கொண்டிருக்கும் கலைவாணி கல்வி நிறுவனம் மேலும் சிறக்க இறையருளைப் பிரார்த்தித்து வெளியிடப்படும் கலைச்சுடர் மலர் கல்வி உலகில் ஒளிவீசிப் பிரகாசிக்க மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

**திரு. இ.குணநாதன்**
*பிரதிக்கல்விப்பணிப்பாளர்,*
*யாழ்வலயம்,*
*யாழ்ப்பாணம்.*
***25.08.2012***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் மிகச்சிறந்தமுறையில் இயங்கி வரும் விரல் விட்டு எண்ணக்கூடிய தனியார் கல்விநிலையங்களில் கலைவாணி கல்விநிறுவனமும் ஒன்றாகும். அறுநூறிற்கு மேற்பட்ட மாணவர்களையும், இருபத்தைந்திற்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்ட கல்வி நிறுவனமாக பதினைந்து ஆண்டுகள் மங்காப் புகழுடன் திகழ்ந்து மாணவருக்கு அறிவூட்டி வருவது பராட்டுதலுக்குரியது.

கலைவாணி கல்வி நிறுவனம் கல்விப் பணியுடன் சமூகப்பணியையும் ஆற்றி வருவதுடன் கிராமப்புற மாணவர்களின் கல்விக்கு உறுதுணையாக தன்னாலான பங்களிப்பினை ஆற்றி வருவதும், மாணவர்களின் அடைவுமட்ட உயர்வுக்கு காரணமாக அமைந்திருப்பதும் வாழ்த்துதற்குரியதாகும்.

மாணவர்களின் அறிவாண்மையை வெளிக்கொணர்வதற்கு "கலைச்சுடர்" என்னும் சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவருவதற்கு எனது நல்லாசிகளை வழங்கி நிற்கின்றேன். மாணவர்களின் ஆக்க இலக்கியத்திறனை வெளிக்கொணர் வதற்கு நல்ல சந்தர்ப்பத்தை "கலைச்சுடர்" வழங்கி நிற்கின்றது.

கலைச்சுடர் வெளியிடுவதற்கு ஆர்வத்துடன் செயற்படும் கலைவாணி கல்வி நிலைய இயக்குனர் திரு.சி.சிவரூபன் அவர்களுக்கும் அவருடன் பக்கபலமாகச் செயற்படும் ஆசிரியர் குழுவினர், மாணவச் செல்வங்கள் யாவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு கால இடைவெளியில் தொடர்ச்சியாக "கலைச்சுடர்" சஞ்சிகை வெளிவருவதற்கும் இறை ஆசிகளை வழங்கி நிற்கின்றேன்.

**திரு.ம.பிரதீபன்,**
பிரதேச செயலர்,
வலிகாமம் கிழக்கு,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கல்வி வருங்காலத்தின் நாற்றங்கால் என்பதற்கமைய அறிவுக் கண்ணைத் திறந்து எதிர்காலத்தலைவர்களை உருவாக்கிடும் பணியில் கலைவாணி கல்வி நிறுவனமும் தனக்கென தனியிடத்தை வகித்து வருவது மகிழ்ச்சிக்குரியதே. கோப்பாய் கிராமத்தில் அறிவுப் பசிக்கு உணவு தேடிடும் சிறார்களுக்கு விருந்தளித்திடும் இவ் அறிவாலயம் கலைத்தெய்வமாம் கலைவாணியின் பெயர் கொண்டு கல்விப்பணி ஆற்றி வருகின்றது. தனது வளர்ச்சிப்பாதையில் தனிநடை போடும் இந்நிறுவனம் மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்களது ஆக்கங்களைக் கொண்டு சிறப்பான ஒரு மலரினை வெளியிடுவது என்பது இலகுவான விடயமல்ல. இந்நூலின் பிரசவம் சுகப்பிரசவமாக அமையவும், இந்நிறுவன கல்விப்பணி மென்மேலும் சிறப்புற்று ஓங்கவும் மனதார வாழ்த்துகின்றேன். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற குறள் மொழிக்கேற்ப வையகம் போற்ற கலைவாணியின் பணி தொடரவும் இதன் பணியில் கைகோர்த்துள்ள அனைத்து உள்ளங்களையும் பாராட்டுகின்றேன்.

**திரு.வே.க.கணபதிப்பிள்ளை** (S.L.E.S)

அதிபர்,

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச்செய்தி



கலைக்கு அரசி கலைவாணியின் பெயரால் இற்றைக்கு 15 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விநிறுவனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சியடைந்து பதினைந்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் இதன் "கலைச்சுடர்" எனும் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

ஆரம்பத்தில் கோப்பாய் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று அந்நோக்குகள் விரிவடைந்து ஒரு மாணவனின் பல்வேறு திறன்களையும் வளர்க்கின்ற ஒரு களமாக திகழ்கின்றது. ஒரு கல்விநிறுவனம் வெறுமனே மாணவரின் அறிவு விருத்தியை மட்டும் நோக்கமாகக் கொண்டிராது அவர்களது ஒழுக்கம், கட்டுப்பாடு, சமூகவிழுமியங்களைப் பாதுகாத்தல், மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு, மனிதாபிமானம், அழகியலுணர்வு, இத்தகைய எல்லாத்திறமைகளையும் வெளிக்கொணரும் இடமாக அமைதல் வேண்டும். இத்தகைய பண்பை இன்று எத்தனை கல்வி நிறுவனங்கள் நிறைவு செய்கின்றன என்பது கேள்விக்குறியே. மாணவர்களை பரீட்சைக்குத் தயாராக்குவதும், மாணவரிடம் பணத்தை சுரண்டுவதையும் நோக்கமாக கொண்டு இயங்கும் கல்விநிறுவனங்களின் மத்தியில் அவ்வாறில்லாது கலைவாணி கல்வி நிறுவனமானது மாணவர்களின் காலத்தின் தேவையறிந்து தனது கல்விச் செயற்பாட்டை எடுத்துச் செல்கின்றது.

இவ்வாறு சமகால விஞ்ஞான தகவல்தொழில்நுட்ப உலகிற்கு தேவையான திறன்களை விருத்தி செய்யக்கூடிய கற்றல், கற்பித்தல் முறைகள் மேற்கொள்ளப்படுகிறது. இன்று கணனி மூலம் சுயமாக கற்கின்ற திறன்களையே மாணவரிடத்தில் விருத்தி செய்ய வேண்டியுள்ளது. அதற்கமைவாக இங்கு கணனி கற்கையும் முதலிடம் பெற்றுள்ளமை சாலச்சிறந்ததே. மேலும் சமகால உலகில் ஆங்கிலத்தின் தேவை அதிகரித்துள்ளது. கணனி மூலம் கற்பதற்கு ஆங்கிலம் அவசியமாகவுள்ளது. இன்று கல்வியில் கணனியும் ஆங்கிலமும் இரு கண்ணாக கருதப்படுகிறது. ஒரு மொழியை இளமையிலிருந்து கற்பதுவே சாலச்சிறந்தது. அதற்கேற்ப மழலைகளிலிருந்து உயர்தரம் வரை சகல மாணவருக்கும் ஆங்கிலக் கல்வியை கற்பிப்பது போற்றுதற்குரியது. ஒரு கல்வி நிறுவனம் எதை எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் கலைவாணி கல்வி நிறுவனம் செய்து வருகின்றது.

எமது பிரதேச மக்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக பல்வேறு துயர் துன்பங்களுக்கு ஆளாகியிருந்தனர். எமது சமூகம் அல்லற்பட்ட இவ்வேளையில் கலைவாணி கல்வி நிறுவனம் பாதிக்கப்பட்ட மாணவருக்கு கற்றல் உபகரணம் வழங்கியமை மட்டுமல்ல, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழுகின்ற மாணவர்களுக்கு இலவசமாக கற்பிக்கின்ற மனிதாபிமானமும் அர்ப்பணிப்பும் மிக்க சேவையை மேற்கொண்டு வருகிறது. இன்றைய தேவை, எமது சமூகத்தின் துயர் துன்பங்களை களைந்து முன்பு எமது சமூகம் இருந்த கல்வி நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பதே எனது அவாவாகும். வாழ்க கலைவாணி கல்வி நிறுவனம், வளர்க அதன் சேவை.

**எஸ்.கே.யோகநாதன்**

யாழ்ப்பாணம் தேசியகல்வியியற்கல்லூரி,

கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட பிரதான இணைப்பாளரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட துணைத்தலைவருமான "கருமத்திருதி"

## லயன் Dr. வை. தியாகராஜா MJF, J.P அவர்களின்

## வாழ்த்துச்செய்தி



கலைவாணி கல்வி நிறுவனத்தின் 15 வது ஆண்டு நிறைவு வெளியீடாக வெளிவரும் "கலைச்சுடர்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இக்கல்வி நிறுவனத்தின் கடந்தகாலச் செயற்பாடுகளை நோக்குமிடத்து ஏனைய கல்வி நிறுவனங்களுக்குள் ஓர் முன்மாதிரியான செயற்பாடுகளை செயற்படுத்தும் ஒரு கல்விநிறுவனமாகத் திகழ்கின்றது.

ஆரம்பகாலத்தில் 30 மாணவர்களுடனும் 5 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப் பட்ட இந்நிறுவனம் கடந்த 15 ஆண்டு காலப்பகுதியில் பல முன்னேற்றங்களைக் கண்டு தற்போது 600 மாணவர்களையும் 25 ஆசிரியர்களையும் கொண்ட ஓர் கல்வி நிறுவனமாக வளர்ச்சி அடைந்துள்ளது. 5ஆம் ஆண்டு நிறைவில் "கலைச்சுடர்" சஞ்சிகை முதன் முதலில் வெளியிடப்பட்டது. 10 வது ஆண்டில் சிறந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியையும் நடாத்தியுள்ளது.

கல்விச் செயற்பாட்டில் சிறந்த பெறுபேறுடைய மாணவர்களை உருவாக்கு வதோடு மட்டுமன்றி, அழகியற் கலைகளான சங்கீதம், மிருதங்கம், போன்றவற்றைக் கற்பிப்பதுடன், உயர்தர மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களையும், சிறுவர்களுக்கான ஆங்கில வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றது.

கல்விச் செயற்பாட்டில் மட்டுமன்றி மாணவர்களை சமூகப்பணியில் இணைக் கும் நோக்குடன் சுனாமி நிவாரணம், டெங்கு ஒழிப்பு சிரமதானம் என்பவற்றிலும் ஈடுபடுத்தி பொதுச் சேவைகளிலும் மாணவர்களை ஈடுபட ஊக்கமளித்து வருகின்றமையையும் நான் நன்கறிவேன்.


இந்நிறுவனம் சிறந்த மாணவர்களை உருவாக்கி, நாட்டிற்கும் மக்களுக்கும், சிறந்த சேவையாற்றி பலன்தரு நல்விருட்ஷமாக வளர எனது ஆசியையும் நல்வாழ்த்துக்களையும் இக் "கலைச்சுடர்" சஞ்சிகையினூடாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

லயன். Dr. வை. தியாகராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைவாணியின் கல்விப்பணி சிறக்க வாழ்த்துகின்றேன்



கலைவாணி கல்வி நிறுவனம் 15 வருடங்களிற்கு மேலாக கல்விப்பணியாற்றி வருகின்றது. ஏறக்குறைய 600 மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் இந்நிறுவனம் சமூகசேவையிலும் முன்னின்று உழைக்கின்றது. இது பராட்டுக் குரிய விடயமாகும். "கலைச்சுடர்" என்ற சஞ்சிகையை ஐந்தாவது ஆண்டு நிறைவில் வெளியிட்டார்கள். இவ்வாண்டு மலர் ஒன்று வெளியிடப்படுகின்றமை அறிந்து மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நிறுவனமானது கணனிக்கல்வி, ஆங்கிலக்கல்வியின் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறைகளிலும் தனது சுவட்டினைப் பதித்து முன்னுதாரணமாக விளங்குகின்றது. தனியார் கல்வி நிறுவனங்கள் என்றால் கொட்டில்கள் என்று பலர் கருதுகின்றார்கள். ஆனால் கலைவாணி கல்வி நிறுவனத்தில் மண்டபங்கள். மாணவர்களிற்கு உகந்த கற்றல் சூழலில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றது. இவ்விடயம் முன்னுதாரணமான செயலாகும்.

பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படாத வகையில் எமது கல்லூரியுடன் இணைந்து தனது கற்பித்தல் பணியை முன்னெடுகின்றார்கள். நல்ல ஆசிரியர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இந்நிறுவனம் ஏழை மாணவர்களின் கல்விக்காக இலவசமாகவும் கற்பிக்கின்ற பணி இங்கு நடைபெறுகின்றது.

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது கலைவாணி கல்வி நிறுவனம் கலை, கல்வி, விளையாட்டு, கணனி என தனது துறையை விரிவாக்கி சமூக சேவைகளையும் செய்து வருவது பாராட்டப்பட வேண்டுமென மன நிறைவோடு வாழ்த்துகின்றேன்.

நன்றி!

*2012.08.27*

**திரு. க. இ. இராசசேகரம்**
அதிபர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்க என்றும் வளமுடன்"

## வாழ்த்துச் செய்தி



ஆல்போல வளர்ந்து அறுகுபோல் வேர்பரப்பி உறுதியான வளர்ச்சியின் உச்சிக்கே சென்றிருக்கும் கலைவாணி கல்வி நிறுவனத்தின் பதினைந்தாவது அகவையின் நிறைவில் வெளிவரும் கலைச்சுடர் - 2 என்ற சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்றைய போட்டி மிகுந்த கல்வி உலகிலே போட்டியை எதிர்கொள்ள மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச்செல்லும் பின்புலத்தில் கோப்பாயில் தோன்றி அமைதியான சூழலில் ஒழுக்கமும், கட்டுப் பாடும் இணைந்த வகையில் தனது கல்விச்சேவையை வழங்கி வரும் கலைவாணி கல்வி நிறுவனத்தின் பணி பாராட்டுதற்குரியது. கல்விச்சேவையை பல பரிமாணங்களில் அதாவது கணனிக்கல்வி, ஆங்கிலக்கல்வி என்றவகையிலும் மாணவர்களுக்கு தனது சேவையை வழங்கிவரும் இந்நிறுவனம் பொது அமைப்புக்களுடனும் மக்களுடனும் இறுக்கமான உறவைப் பேணிவருகிறது.

இன்னும் பல்லாண்டு தனது சீரிய கல்விச்சேவையை வழங்க வாழ்த்து கின்றேன்.

**திரு. அ. ஆனந்தராசா,**
அதிபர்,
யாழ்.கோ.சரவணபவானந்த வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கலைகள் போதிக்கும் கலைவாணியே நின்புகழ் வாழ்க"



கலைவாணி கல்வி நிறுவனம் தனது 15வது ஆண்டு நிறைவில் கலைச்சுடர் சஞ்சிகையினை வெளியிடுகின்றது. இச்சஞ்சிகையில் மாணவர்களின் கைவண்ணங்களும், ஆசிரியர் களின் படைப்புக்களும் வெளிவருவது சிறப்பானதாகும். இதன் மூலம் மாணவர்களிடையே சிந்திக்கும் திறன், கற்பனை, எழுத்தாற்றல் போன்றன வளர்ச்சியடைகின்றன. சஞ்சிகை வெளியீட்டினூடாக நிறுவனத்தால் ஆற்றப்படும் கல்வியின் வளர்ச்சியினை யாவரும் அறிந்து கொள்ளலாம். மாணவர்களின் ஒழுக்கம், கல்வி, உயர்வு, தலைமைத்துவம் போன்றவற்றில் இந்நிறுவனமானது மென்மேலும் சிறந்து விளங்க வேண்டும். சகல துறைகளிலும் இந்நிறுவனம் வளர்ச்சியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எனது ஆசியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி. சாந்தினி வாகீசன்**

அதிபர்,

யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சுடருக்கு வாழ்த்து



கலைவாணி கல்வி நிறுவனம் வெளியிடும் "கலைச்சுடர்" மலரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்நிறுவனம் 1997ஆம் ஆண்டு முதல் சிறப்பான ஒழுங்குடன் நடைபெற்று வருவதை அறிவேன். தனியார் துறைகள் ஒழுக்கக் கட்டுப் பாட்டுடன் சமூகத்திற்கு பயன் தரும் பணிகள் சிலவற்றையாவது செய்வது சமூகத்திற்கு நல்லது. வருமானம் ஈட்டுவது மட்டும் நோக்கமாக இருக்கக்கூடாது. வருமானத்தில் குறித்த பகுதியை ஒதுக்கி நல்லது செய்வது என்பது இக்கல்வி நிறுவனத்தின் பணியாக இருப்பது போற்றுதற்குரியதாகும்.

நல்ல ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருங்கிணையும் போது சமுதாயத்தில் பல சாதனைகள் நிகழ முடியும். அவரவர் தமக்குரிய நியதிகளைச் சரியாகக் கடைப்பிடித்தால் எல்லாம் நலமாக அமையும். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தான் முதலாவது பாடம் என எனது ஆசிரியர் குறிப்பிட்டதை இங்கு நினைவு கூற விரும்புகின்றேன். மாணவர்களுக்கு பாடத்திட்டத்திற்கு மேலான ஒழுக்க கல்வியையும், சமூகப் பணிகளுக்கான வழிகாட்டலும் இந்நிறுவனத்தில் முன்னெடுக்கப்படுவதை அறிகின்றேன்.


மலர் வெளியிடும் பணி என்பது மிகவும் சிரமமானது என்பதை அனுபவரீதியாக யான் அறிவேன். "கலைச்சுடர்" எனும் இதழ் சிறப்பாக வெளியிடப் பெற்று வருகிறது. "சுடர்" எனும் சொல் உயர் விழுமியம் கொண்டதாகும். அதற்கமைய மலர் சுடராகத் திகழ வாழ்த்துகின்றேன். மாணவர்களின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவது அவசியமாகும். "கலை வளர்த்தல் என்பது சமூகத்திற்கு கொடுக்கப்படும் ஊட்டச்சத்தாகும். மனச்சோர்வு நீங்குவதற்கு கலைகள் உதவும். இந்தவகையில் கலைச்சுடர் மலரும் அறிவுப்பசியை அனைவருக்கும் உண்டாக்க வேண்டும் என உளமார வாழ்த்துகின்றேன்.

**இரா.செல்வவடிவேல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கல்விக்குத் தெய்வமாகிய சரஸ்வதியின் நாமத்தைக் கொண்ட கலைவாணி கல்வி நிறுவனம் தனது 15வது ஆண்டு கால வரலாற்றில் இரண்டாவது மலராக "கலைச்சுடர்" என்ற பெயரில் நூலொன்றை வெளியிடுகின்ற சந்தர்ப்பத்தில் இதற்கான ஆசிச் செய்தியொன்றை வழங்குவதற்கு வாய்ப்பு கிடைத்தமையையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சேவைகளுள் சிறந்த சேவை கல்விச் சேவை அத்தகைய கல்வியை வழங்குகின்ற கலைவாணி கல்வி நிறுவனம் எனது பிரதேசத்தில் உள்ள மாணவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு தன்னுடைய பங்கினைமென்மேலும் சிறப்புற நடாத்த வேண்டும் என்பதுடன், கல்வி நிலையத்தின் இயக்குனரும் எனது நண்பனுமாகிய திரு. சிவராசா சிவரூபன் அவர்களிற்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

**திரு. இராமநாதன் ஐங்கரன்**

வலி - கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர்,

வலி - கிழக்கு கோப்பாய் பிரதேச இணைப்பாளர்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயக்குனர் அறிக்கை

கலைவாணி கல்வி நிறுவனம் 1997.12.15 அன்று எனது தாய் தந்தையாரின் ஆசியுடன் திருவாளர் கந்தையா நவரத்தினம் என்பவரது வீட்டில் ஆரம்பிக்கப் பட்டது. இந்த நிறுவன வளர்ச்சியில் கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூகநிலைய அங்கத்தவர்களின ஆதரவு சிறப்பானது. இதில் குறிப்பாக திரு. கணேசலிங்கம் (சிவா அண்ணா) திரு.வே.கணேசலிங்கம் ஆகியோரின் பங்கு அளப்பரியது.

### ஆசிரியர் குழாம்

12 ஆசிரியர்களுடன் எமது கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. அவர்களின் பெயர் விபரம் திரு.மோகன்ராஜ், திரு.குணசீலன், திரு.வாகீசன், திரு.ஜெகன், திரு. ஈஸ்வரமூர்த்தி, திரு.சுமணன், திரு.விஜய் செல்வி. விஜயகுமாரி, அமரர் திரு. லோகேஜ்வரன், செல்வி விஜிதா, செல்வி தயாநிதி. இவர்களில் 10 வருடம் தொடர்ச்சியாக பூர்த்தி செய்த ஆசிரியர்கள் திரு. வாகீசன், திரு. விஜய் என்போர் 2007 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் கௌரவிக்கப்பட்டனர். இதில் திரு.பொ.வாகீசன் தொடர்ந்தம் ஆசிரியராக பணியாற்றுகின்றுகின்றமை எமது நிறுவனத்திற்கு சிறப் பம்சம் ஆகும். இதில் ஆசிரியர் திரு. சுமணன் கனடாவிற்குச் சென்று 2008ஆண்டு பரிசளிப்பு விழாவிற்கு நிதியுதவி அளித்துள்ளார். அவருக்கு எமது நிறுவனம் சார்பில் நன்றிகள். தற்பொழுது பின்வரும் ஆசிரியர் குழாம் என்னுடன் நிறுவனக் கல்விப் பணிக்கு பக்கபலமாக உள்ளனர்.

1. திரு.இ.சிவரூபன் - முதல்வர்
2. திரு.பொ.வாகீசன் - வரலாறு
3. திரு.சு.கமலதாசன் - கணிதம்
4. திரு.ஜெயராஜ் - ஆங்கிலம்
5. திரு.ம.ரவீஸ்வரன் - விஞ்ஞானம்
6. திரு.சு.கஜேந்திரன் - விஞ்ஞானம்
7. திரு.தெ.இந்திரஜித் - கணிதம்
8. திரு.வீ.தயாகரன் - ஆங்கிலம்
9. திரு.செ.கார்த்தீபன் - புலமைப்பரிசில் ஆசிரியர்
10. செல்வி செ.மயூரி - புவியியல்
11. திரு.செ.சிவநேசன் - சைவசமயம்
12. திரு.செ.லதீசன் - கணிதம்
13. திரு.சி.சுகிர்தரூபன் - விவசாயம்
14. திரு.க.நிதர்சன் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்
15. திருமதி அ.அனுசா - (KIDS)
16. செல்வி.பா.ரஜினி - ஆரம்பப்பிரிவு
17. செல்வி.த.விஸ்ணுபிரியா - ஆரம்பப்பரிவு
18. செல்வி.சி.பபிலாயினி - சுகாதாரம்
19. திரு.S.கிருசாந்தன் - ஆசிரியரும், நிர்வாக உதவியாளரும்
20. திரு.மு.பேரின்பமூர்த்தி -வரலாறு
21. திரு.கு.துஸ்யந்தன் - தமிழ்
22. திரு.ம.வினோதன் - மிருதங்கம்
23. திருமதி.சோ.சுபதர்சினி - சங்கீதம்
24. செல்வி.ம.லக்சியா -ஆங்கிலமொழிமூலம் - கணிதம், விஞ்ஞானம்
25. திரு.P.ஜெயக்குமார் - ஆங்கிலமொழிமூலம் - வரலாறு, புவியியல், சுகாதாரம்
26. திரு.க.அனுசன் - குடியுரிமைக்கல்வி
27. செல்வி.க.சங்கீதா - சிங்களம்
28. திரு.வா.டிவாகர் - விஞ்ஞானம்
29. செல்வி.இ.சதீசா - எழுதுவினைஞர்
30. செல்வி.சி.தினேஸ்ராஜினி - எழுதுவினைஞர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாக உதவியாளர்

நிறுவனத்தின் ஆரம்பகால நிர்வாக உதவியாளராக திரு.யுதீஸ் அவர்கள் கடமையாற்றினார். தொடர்ந்து திரு.சி.தயாபரன், திரு.பிரபாகரன், திரு.க.ஜெயசீலன், திரு.க.பரணிதரன், திரு.ஜெ.வினோராஜ், திரு.ப.சியாமளன் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். இவர்களின் சேவை எமது கல்வி நிறுவன வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்றியது. தற்பொழுது திரு.சி.கிரிசாந்தன், செல்வி இ.சதீதா, செல்வி தினேஸ்ராஜினி ஆகியோர் சிறப்பாக சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் திரு.ர.குகன் என்பவர் உதவியாளராக அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்றார்.

12 மாணவர்களுடன் ஆரம்பிக்கபட்பட்டஎமது நிறுவனம் தற்போது 625 மாணவர்களைக் கடந்ததாக விளங்குகின்றது. மாணவர் அதிகரிப்பு கீழ் உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | மாணவர் தொகை | ஆண்டு | மாணவர் தொகை |
|---|---|---|---|
| 1997 | 12 | 1998 | 50 |
| 1999 | 125 | 2000 | 170 |
| 2001 | 250 | 2002 | 360 |
| 2003 | 400 | 2004 | 455 |
| 2005 | 468 | 2006 | 470 |
| 2007 | 475 | 2008 | 500 |
| 2009 | 520 | 2010 | 586 |
| 2011 | 600 | 2012 | 625 |

நகர்புற, கிராமப்புற பாடசாலை மாணவர்கள் இதில் அடங்குகின்றனர்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

எமது நிறுவனத்தின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறு 1ம் வருடம் செல்வன் கஜேந்திரா சித்தி பெற்றார். இது எமது நிறுவனத்திற்கு வளர்ச்சிக்கு ஒரு மைக்கல்லாக விளங்கியது. தொடர்ந்து பல மாணவர்கள் சித்தி அடைந்து வருகின்றனர். கடந்த 5 வருட பரீட்சைப்பெறுபேறுகள் வருமாறு.

| ஆண்டு | சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 2007 | 5 |
| 2008 | 5 |
| 2009 | 6 |
| 2010 | 8 |
| 2011 | 6 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்பொழுது திரு.எஸ்.கார்த்தீபன் அவர்கள் திறமையான முறையில் கற்பித்துக் கொண்டிருக்கிறார். அவர்கட்கு எமது நிறுவனத்தின் சார்பில் பாராட்டுக்கள்.

### க.பா.த(சாதாரணதர) பெறுபேறுகள்

எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு முதல் வருடத்தில் 7 பேர் கல்வி கற்றனர். அனைவரும் க.பொ.த உயர்தரத்திற்கு தகுதிபெற்றனர். இதில் செல்வி அ.டிலக்சாயினி அனைத்து பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்று நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டார். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் சிறப்பான பெறுபேகள் கிடைக்கப்பெற்றன. இவர்களில் 2006 ஆண்டில் செல்வி. துவாரகி (10A) 2009 ஆண்டு செல்வி சரண்யா (9A) பெற்று எமது நிறுவனத்திற்கு பெருமை சேர்ந்தார்கள். 2011 ஆண்டில் 3 மாணவர்கள் 8 பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றுள்ளார்கள். கடந்த ஐந்து வருடப்பெறுபேறுகள் வருமாறு.

| ஆண்டு | கல்வி கற்றோர் | சித்தியடைந்தோர் |
|---|---|---|
| 2007 | 55 | 53 |
| 2008 | 60 | 58 |
| 2009 | 65 | 64 |
| 2010 | 60 | 55 |
| 2011 | 66 | 60 |

### இணைபாடவிதானச் செயற்பாடுகள்

**(I) விழாக்கள்**

எமது நிறுவனம் வருடாந்தம் பரிசளிப்பு விழாவை சிறப்பாக நடத்தி வருகிறது. நிறுவனத்தில் மாணவர்கள் தவணைப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றன. தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த சாதரணதர பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு சிறப்புப் பரிசில் வழங்கி கௌரவிக்கப்படுகின்றனர். மேலும் அவ்வருட பல்கலைகழக அனுமதி கல்வியற் கல்லூரி அனுமதிகளில் எமது நிறுவனதில் கற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வருடமும் இந்துமாமன்றத்தால் சிறப்பாக வாணிவிழா கொண்டாடப்படுகின்றது. இதில் மாணவர்களின் சமயம் சார்ந்த கலைநிகழ்வுகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. 2007 ஆண்டளவில் (10வது ஆண்டு ஒட்டி) ஆசிரியர் திரு.எஸ்.சுமணன் அவர்களால் சமயபோட்டிகள் குறிப்பாக மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், பண்ணிசை, வினாவிடைப் போட்டி போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டன.

எமது நிறுவனத்தல் கணிசமான கிறிஸ்தவ மாணவர்கள் கற்பதனால் ஒளிவிழா டிசெம்பர் மாதம் கிறிஸ்தவ மன்றத்தினால் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வருடமும் தரம் 11 மாணவர்கள் தமது கற்றல் நடவடிக்கை சிறப்பாக மேற்கொண்டமைக்காக விருந்துபசாரத்துடன் நிறுவன்திற்கு தமது நினைவு சின்னங்களை அன்பளிப்புப் பொருட்களை தந்துள்ளனர். பொருள் விபரம் பின்ணிணைப்பில் உள்ளது. இன்றும் இவர்களுடைய அன்பளிப்பு பொருட்கள் பாவனையில் உள்ளது சிறப்பானதொரு அம்சமாகும்.

**மலர்வெளியீடு**

எமது நிறுவனத்தினால் 5 ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி கலைச்சுடர் -1 எனும் சஞ்சிகை 2002 ஆண்டு வெளியிடப்பட்டு வைக்கப்பட்டது. 15வது ஆண்டு நிறைவை யொட்டி இன்று கலைச்சுடர் இதழ் 2 உங்கள் கரங்களில் தவழ்வதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு ஆக்கங்களை தந்துதவிய விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், துறைசார்வல்லுனர்கள் ஆகியோருக்கு எமது பராட்டுக்கள் வாழ்த்துரைகள் வழங்கிய பெரியோர்களுக்கும் எமது நன்றிகள். விளம்பரங்களைத் தந்த உதவிய வர்த்தகப் ருெமக்களுக்கும் எனது நன்றிகள்.

எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 10 வருட நிறைவை ஒட்டி நிறுவன மாணவர்களுக்கிடையிலான இல்ல மெய்வல்லுனர் போட்டி சிறப்பாக நடை பெற்றது.

வீதியோட்ட நிகழ்வு, ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் பெற்றோர்கள் போன்றோர்கள் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த வீதியோட்ட நிகழ்விற்கு லயன் Dr. வை. தியாகராஜா அவர்கள் மருத்துவவாகன உதவியைத் ஒழுங்கு செய்து தந்துதவியுள்ளார். அவருக்கு எமது நன்றிகள்.

ஒவ்வொரு வருடமும் பரிசளிப்புவிழாவிற்கு முன்னோடியாக எமது நிறுவன கணித ஆசிரியரியான திரு.சு.கமலதாசன், திரு.T. இந்திரஜித், திரு.S.லதீசன் ஆகியோர் தரம்-10, 11 மாணவர்களுக்கு இடையிலான கணித வினாடிவினாவை நடாத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கும் எனது நன்றிகள்.

நாம் கோப்பாய் அறநெறிப்பாடசாலையுடன் சேர்த்து இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்படும் சமய அறிவுப்போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி உரிய சான்றிதழ்களை பெற்றுள்ளனர். இதனை ஒழுங்குபடுத்தி தந்த கோப்பாய் அறநெறி பாடசாலையின் நிர்வாகத்தினருக்கும் எமது நன்றிகள். அத்துடன் கோயில்களில் நடைபெறும் போட்டிகளிலும் எமது மாணவர்களும் பங்குபற்றி உள்ளனர்.

கிரிக்கெட் போட்டி ஒவ்வொரு வருடமும் பரிசளிப்புவிழாவை முன்னிட்டு நடாத்தபட்டு வருகின்றது. இதில் O/L மாணவர்களும் பழைய மாணவர்களும் பங்கு பற்றி சிறப்பித்து வருகின்றனர். அத்துடன் அதில் வெற்றி பெறும் அணியுடன் எமது ஆசிரியர் அணி விளையாடுவது சிறப்பம்சம் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலமர்வுகள்

எமது நிறுவனதம் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கு சகலபாடத்திலும் நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களை அழைத்து பரீட்சைக்கு செயலமர்வுகளை நடாத்தி வருகின்றது.

## கல்விச்சுறறுலா

மாணவர்கள் கற்றல் கற்பித்தல் உறுதுணையாக நாம் வெவ்வறு இடங்களுக்கு மாணவர்களை அழைத்து செல்வதுண்டு. இதில் குறிப்பாக 2010 ஆண்டு இலங்கையின் பல்வேறு இடங்களை மாணவர்கள் பார்வையிட்டு பயனடைந்துள்ளனர்.

## சமூக சேவைகள்

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி உள்ளோம்.

அத்துடன் டெங்குஒழிப்பு நடவடிக்கையில் கிராம அலுவலர் சுகாதாரப் பரிசோதகர் போன்றோரின் ஒத்துழைப்புடன் எமது கிராமத்தில் உள்ள 300 வீடுகளிற்கு எமது மாணவர்கள் ஆசிரியர்கள் சென்று சிரமதான பணியில் ஈடுபட்டனர். அத்துடன் மட்டக்களப்பில் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெற்றோரிடம் இருந்து சேகரிக்கப்பட்ட உடு புடைவைகளை உதயன் பத்திரிகை நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளோம். அத்துடன் எமது அயலில் சகல பொது அமைப்புகளுக்கும் எம்மாலான ஒத்துழைப்புகளை வழங்கி வருகின்றோம்.

## பாடசாலைகளுக்கான தொடர்பு

எமது அயலில் உள்ள பாடசாலைகளுடன் நாம் நெருங்கிய தொடர்புகளை பேணி வருகின்றோம். பாடசாலையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இணைபாடவிதானச் செயற்பாடுகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் எமதது கல்விநிறுவம் செயலாற்றி வருகின்றது.

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்துடன் நெருங்கிய உறவைப் பேணிவருகின்றோம். எமது நிறுவன நிகழ்வுகளை நடாத்துவதற்கு சகல வளங்களையும் அவர்கள் வழங்குகின்றனர். இந்த நேரத்தில் நாம் அங்கு அதிபர்களாக கடமையாற்றிய திரு. சண்முகரட்ணம் அவர்கள், திரு. ஞானசம்பந்தர் ஆகியோருக்கும் தற்போதைய அதிபர் திரு.அ.ஆனந்தராசா அவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

## இடம் தந்த பெருந்தகைகள்

திரு. கந்தையா நவரத்தினம் அவர்கள் நம் கல்வி நிறுவனம் ஆரம்பிக்க இடம்தேடிய போது எம்மை அழைத்து தான் தங்கியிருந்த வீட்டின் ஒருபகுதியை தந்து உதவினார். இவருடைய இந்த நன்னோக்கத்தினால் இன்று இந்த நிறுவனம் கோப்பாய் கிராமத்தில் பெருவிருட்சமாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிறுவனம் வளர்ச்சிப் பாதையில் செல்லுகையில் இடப்பற்றாக்குறை ஒரு முக்கிய பிரச்சனையாக இருந்த வேளை நாம் ஆச்சி என்று செல்லமாக அழைக்கும் சிந்தாமணிஆச்சி தனது காணியை எமக்கு தந்து உதவினார். அவருடைய இந்த அளப்பரிய நன்னோக்கும் கொண்ட சேவை என்றும் மறக்கமுடியாது. அவர் அமரராகினாலும் அவருடைய ஆத்மாசாந்தியடைய எல்லவல்ல இறைவனை பிராத்திக்கினறேன்.

திரு. அருமைநாயகம் அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் வெளிநாடு சென்று போது எங்களுக்கு இந்த முழு இடத்தையும் தந்து எமது நிறுவனம் ஒரே இடத்தில் அமைவதற்கு வழி சமைத்தார்கள். அவர்களுக்கும் எமது நன்றிகள்.

## KIDS PARK

எமது நிறுவனத்தின் படிநிலை வளர்ச்சியின் ஒரு கட்டமாக 2007 ஆண்டு குழந்தைகளுக்கான ஆங்கிலக்கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ஆசிரியர் திருமதி A. அனுஜா அவர்களும், திருமதி A. கனகராஜ் அவர்களும் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

நுண்கலைத்துறையில் மாணவர்கள் ஆர்வத்தை ஊட்டுவதற்காக சங்கீத வகுப்பை திருமதி சோ.சுபதர்சினி அவர்களும், மிருதங்க வகுப்பை திரு.ம.வினோக்காந் அவர்களும் கற்பிக்கின்றனர். இதில் கணிசமான மாணவர்கள் கற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கணனி (ICT)

மாறி வரும் உலகில் மாணவர்களை தாயர்ப்படுத்த உணர்ந்து எமது நிறுவனத்தில் கணினிக்கூடம் ஒன்று அமைத்து மாணவர்களுக்கு கணினி வகுப்புக்களை நடாத்தி வருகின்றோம். கணினித்துறையின் வளவாளர்காளாக திரு.க.ஜெயராஜா அவர்களும் திரு.Sநிதர்சன் அவர்களும் பணியாற்றுகின்றனர்.

## ஆசிரியர் கழகம்

எமது நிறுவனத்தின் அசிரியர்கழகம் ஒன்று உருவாக்கபட்டுள்ளது. இக்கழகத்தின் ஊடாக ஆசிரியரின் நலனோம்பு விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டு வருகின்றோம். இக்கழகம் மென்மேலும் சிறப்புற எது வாழ்த்துக்கள்.

## சனசமூகநிலையங்கள் விளையாட்டு கழகங்கள்

கோப்பாய் கிராமத்தில் அமைந்து சனசமூக நிலையங்கள் விளையாட்டு கழகங்கள் போன்றவற்றுடன் எமது நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்புகளை பேணிவருகின்றது. விளையாட்டுக்கழகங்கள் நடாத்தும் போட்டிகளில் எமது நிறுவன மாணவர்களும் பங்குபற்றி பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக உதவிகள்

எமது நிறுவனத்தில் நடைபெறும் சகல நிகழ்வுகளுக்கும் பந்தல்சேவை செய்து தருகின்ற திரு.ஜெயராஜா அவர்களுக்கும், ஒளிஅமைப்பினை வழங்குகின்ற திரு.மனோகரன், திரு.நிரஞ்சன் அவர்களும், ஒலி அமைப்பை வழங்கும் திரு.பாக்கிநாதன், திரு.சந்திரன் ஆகியோருக்கும் புகைப்பட வசதி செய்து தரும் திரு. கிரேதாகரன், திரு.அஞ்சனன் ஆகியோருக்கும் அச்சக வேலைகளை செய்த தரும் குரு பிறிண்டேர்ஸ் உரிமையாளர் திரு.பா.விமலேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

பழைய மாணவர் சங்கம்

எமது நிறுவன பழையமாணவர்கள் ஒன்றிணைந்து இந்தவருடம் பழையமாணவர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இது எமது நிறுவன வரலாற்றில் ஒரு மைக்கல். அத்துடன் 1998 இருந்து 2011 வரை கல்வி கல்வி கற்று வெளியேறிய பழையமாணவரின் அனைவருக்கும் எமது நன்றிகள். அவர்களது பணி மென்மேன் மேலும் சிறக்க எமது வாழ்த்துக்கள். எமது நிறுவன கீதத்தை வடிவமைப்புச் செய்தவர் எமது பழைய மாணவன் திரு.எஸ்.கவிகரன் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழ்த்துக்கள்

எமது நிறுவனத்தின் தற்பொழுத 10 வருடங்களிற்கு மேலாக ஆசிரியப்பணி யாற்றி வரும் தி.த.கமலதாசன், திரு.பொ.வாகீசன், திரு.என்.ஜெயராஜா, திரு.எம். ரவீஸ்வரன், திரு.ஏ.கஜேந்திரன் ஆகியோர் எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு பக்கபலமாக, தோளோடு தோளாக சேர்த்து பணியாற்றி வருவது சிறப்பம்சம் ஆகும். இவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்.

எமது நிறுவனத்தின் சகல அச்சுவேலைகளையும் A.T.K பிறிண்டேர்ஸ் உரிமையாளர் எமக்கு ஒழுங்குபடுத்தி தருவது சிறப்பம்சமகும். அவர்களுக்கும் எமது நன்றிகள்.

15வது அகவை நிறைவை ஒட்டியும் எமது நிறுவனம் வர்ணப்படத்துடன் கூடிய நாட்காட்டி ஒன்றினை வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

நிறைவுரை

எமது நிறுவன வளர்ச்சிக்கு என்னோடு தோளோடு தோள் கொடுக்கும் நல்லிதயங்களை நன்றியுடன் கரம்பற்றிக் கொள்கிறேன். இனிவருங்காலங்களிலும் தங்களின் ஆதரவோடு எங்கள் நிறுவனம் சிறப்பான கல்விப்பணிகளை முன்னெடுக்கத் தங்கள் நல்லாசிகளை நாடுகின்றேன்.

திரு.சி.சிவரூபன்
இயக்குநர்,
கலைவாணி கல்வி நிறுவனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயக் கல்வியின் தாற்பரியம்

***திருமதி. சுகந்தினி ஸ்ரீமுரளிதரன்***
முதுநிலை விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

எல்லாப்பிறப்பினுள்ளும் மானிடப்பிறப்பு ஒன்றே மாண்புமிக்கது. உயிர்கள் எனப்படுபவை ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ளன. ஆனால் ஆறறிவும் நிறையப் பெற்றவர்கள் மானிடர்களே. இந்த ஆறாம் அறிவானது சிந்தித்து துணிந்து செயலாற்றும் பகுத்தறிவாகும். இதன் காரணமாகவே வள்ளுவரும்,

***"சென்ற விடத்தால் செலவிடாது தீதொரீஇ***
***நன்றின் பாலுய்ப்பது அறிவு"***

எனக்குறிப்பிடுகின்றார். நன்று, தீது, நீதி, அநீதி, எனப்பகுத்தறியும் ஆற்றல் மனிதன் ஒருவனுக்கே உண்டு. இத்தகைய சிறப்பாற்றலை மேலும் வளர்த்துக்கொள்ள மனிதன் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும். கல்வி மக்களது அறிவு வளர்ச்சிக்கு உதவும் கருவியாகும். உலக வாழ்க்கைக்கு கல்விப்பொருள், செல்வப்பொருள், ஆகிய இரண்டும் வேண்டப்படுவதாயினும், செல்வப்பொருள் கூத்தாட்டும் அவைக்குழாம் போன்று வந்த இடம் தெரியாமற் சென்று விடும். ஆனால் கல்விப்பொருளோ ஏழு பிறப்பிலும் தொடரும் தகைமையது. இதனை,

***"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு***
***எழுமையும் ஏமாப்புடைத்து".***

எனக் குறிப்பிடுகின்றார் பொய்யாமொழிப்புலவர்.

ஒழுக்க நெறியைப் புகட்டி அந்நெறிப்படி நிற்கச் செய்யும் கல்வியே சமயக் கல்வி. சமயக்கல்வியானது தனிப்பட்ட நபரின் வாழ்க்கையையும், அதே நேரத்தில் நாட்டின், சமூகங்களின் ஒழுக்க கலாசாரத்தையும் உருவாக்கும் ஒரு பலம் பொருந்திய கருவியாக விளங்குகின்றது. இந்து சமயம் சார்ந்த வாழ்வு இவ்வுலகில் எதிர்ப்படும் பிரச்சினைகளை மனத்துணிவுடனும், உறுதியுடனும், வீரத்துடனும் அணுகும் மனப்பக்குவத்தை அளிப்பதாக உள்ளது. ***'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'*** என்று அப்பரை துணிவுடன் சொல்லவைத்தது சமய வாழ்க்கையின் விளைவே எனலாம். சமய வாழ்வு பலத்தையும், விடுதலையையும் அளிக்கின்றது. வாழும் நாள் அளவிட்டுக் கூறமுடியாதாயினும் வாழும்வரை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும். ஆறுமுகநாவலரும் ***'இந்த சரீரம் நமக்கு கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இன்னகாலத்தில் இந்தசரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்'*** என்று குறிப்பிடுவது குறிப்பிடத்தக்கது. மேலும் எல்லா நலனுக்கும் இருப்பிடம் இறைவனே. அவனை அறிவுத் தெளிவினால் தூயமனத்தால் நினைக்க, வணங்க எல்லா நலனும் வந்தெய்தும். நல்லெண்ணங்களினால் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்திருப்பின் வாக்கிலிருந்து நல்லினிய மொழிகளே பிறக்கும். ***'உள்ளத்தில் ஒளி உண்டானால் வாக்கினில் ஒளி உண்டாகும்'***. என்ற கூற்று இவ்வுண்மையை தெளிவாக புலப்படுத்தும். ஆகவே எண்ணங்களை தூய்மை பெறச்செய்தல் வேண்டும். இதற்கு அவசியமானது சமய சன்மார்க்கமே. இதனைக் கல்வியின் மூலமே குறிப்பாக சமயக்கல்வியினனூடகவே உண்டாக்கிக் கொள்ளமுடியும்'. என்ற விபுலானந்த அடிகளும் உரைத்துள்ளமை சமயக்கல்வியின் தாற்பரியத்தை எடுத்துக்காட்டுகின்றது.

நல்லொழுக்கத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் வழிவகுப்பதே கல்வியின் நோக்கம் என்பது நாவலரின் திட்டவட்டமான முடிவாகும். ***'கல்விக்கு பயன் அறிவு, அறிவுக்கு பயன் ஒழுக்கமுமாம்'*** என்று நாவலர் கூறுவதை நோக்கும் போது ஒழுக்கத்துடன் வாழ்வதற்கு கல்வி துணை நிற்கின்றது என்பதை விளங்கிக் கொள்ளமுடியும். கல்வி கற்ற காரணத்தினால் நன்மை, தீமை என்பவற்றினை ஆராய்ந்து நன்மையைக் கடைப்பிடிப்பதால் அது ஒழுக்கத்திற்கு வழிவகுக்கின்றது. கல்வியை இளமை தொட்டு மரண பரியந்தம் வரை விடாமற் கல்வி கற்க வேண்டும். ***"மனிதன் கல்வியில் பிறந்து, கல்வியில் வாழ்ந்து, கல்வியினை ஒரு வாழ்க்கை பழக்கமாகக் கொள்ளவேண்டும்"*** என்றும் நாவலர் குறிப்பிடுகின்றார். கல்லாமையினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்காட்டி கல்வியின் அவசியத்தைப் பல அறிஞர்கள் வலியுறுத்துவதைக் காணமுடிகின்றது. சாந்துணையும் கல்வி அல்லது வாழ்நாள் முழுவதும் கல்விகற்க வேண்டும் என்பதை வள்ளுவர்,

***'யாதாயினும் நாடாமல் ஊராமல் என்னொருவன்***
***சாந்துணையும் கல்லாதவாறு'***.

என வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கோட்பாட்டினை முன்வைக்கின்றார். 'சமயமே குழந்தையை நல்லவனாக உருவாக்குவதில் அதிக பங்கை செலுத்துகின்றது. குழந்தையின் சமய நம்பிக்கைக்கு தீங்கு வரக்கூடிய வகையில் கல்வி அமையுமானல் கல்வியின் பயன் அற்றுவிடும்' என்று ஆணித்தரமாக நாவலர் குறிப்பிடுகின்றார். இக்கருத்துக்களிலிருந்து பிறவி என்ற பெருங்கடலில் மூழ்கி விடாது துணை நின்று கரைசேர வல்லதாகிய சமயக் கல்வியை மக்கள் அனைவரும் கற்க வேண்டும் என்பதை உணர முடிகின்றது. ஒரு பறவையானது வானிற் பறந்து செல்வதற்கு சிறகுகள் எங்ஙனம் அவசியம் தேவைப்படுகின்றதோ அதே போன்று மனிதன் பூரண வாழ்வு வாழ்வதற்கு மெஞ்ஞானமும், விஞ்ஞானமும் வேண்டப்படுகின்றது எனலாம். மனித வாழ்க்கையை புதுப்பிக்கச் செய்யும் பணியில் சமயம் ஏற்கும் பகுதி விஞ்ஞானம் ஏற்கும் பகுதியை விட முக்கியத்துவத்தில் எவ்வாற்றானும் குறைந்ததன்று. பொதுவாக விஞ்ஞானக் கல்வியினால் மனித முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதையும், சமயக் கல்வியினால் அமைதியும் அன்பும் செழிக்கும் என்பதையும் பல அறிஞர்கள் காலத்திற்குக் காலம் சுட்டி வருகின்றனர். இன்று விஞ்ஞானக் கல்வியினால் உயர் நிலையை எய்தியுள்ள பல நாடுகளில் உள்ள மக்கள் இந்தியாவின் ஆன்மீகக் கல்வியைப் பெற்று அமைதிபெற விரும்புவதை அவதானிக்க முடிகின்றது. தனிப்பட்ட மனிதன் ஒருவனுக்கு, உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றும் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய வளர்ச்சிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தேவையே. உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றால் உடல் மிடுக்காக வைக்கப்படுகின்றது. விஞ்ஞானம், திறனாய்வு ஆகியவற்றால் மனம் விளக்க முறுகிறது. கலை, இலக்கியம், தத்துவம், மதம் ஆகியவற்றால் ஆன்மா ஒளிர்கின்றது. மனித இனத்தில் ஆன்மா வளர்ச்சியடையத் தேவையாயின் மிகவும் இன்பம் ஊட்டும் சக்திகளின் செயலாற்றிலே தான் அது நடத்தப்பட வேண்டும் என தத்துவ மேதை ராதாகிருஷ்ணன் ஆன்ம வளர்ச்சியில் சமயத்தின் முக்கியத்துவம் அறிவிலும் குறைந்ததன்று என்பதை தெளிவுபடுத்துகின்றது.

***"இன்று நாட்டில் அமைதி இல்லை என்று கூறுகின்றோம் உண்மையில் மனிதனின் அகத்தில் தான் அமைதியில்லை மனிதனிடம் மன அமைதி இல்லாத போது உலகம் முழுவதும் அமைதி இல்லை என்று கூறுகிறான்"*** என்று பகவான் சத்தியசாயிபாப கூறியுள்ளமை சிந்திக்கத்தக்கது. ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் அமைதி ஏற்படும் போது தான் உலகிலும் நிரந்தர அமைதி ஏற்படுகின்றது. இதற்கு ஆத்மீகக் கல்வி துணை நிற்கின்றது. கல்வி பற்றிய விவேகானந்தரின் சிந்தனைகளும் மனித விழுமியங்களின் அடிப்படைகளையே எடுத்தியம்புகின்றன. ***"கல்வி என்பது மூளைக்குள் விடயங்களைப் போட்டு திணிப்பதல்ல வாழ்க்கையை உருவாக்கக் கூடிய மனிதனை மனிதனாக்கக் கூடிய நல்ல ஒழுக்க கருத்துக்களை கிரகித்து நடக்கும் ஆற்றலுள்ள கல்வி ஊட்டப்பட வேண்டும். ஐந்து உயர்ந்த பண்புகளை கிரகித்து அவற்றை உன் வாழ்விலும் நடத்தையிலும் ஊடுருவச் செய்வாயானால் ஒரு நூல் நிலையம் முழுவதையும் மனப் பாடம் செய்தவனை விட நீயே அதிகம் கற்றவன் ஆவாய்".*** எனும் விவேகானந்தரின் கூற்றானது ஒரு நாட்டின் முன்னேற்றமும் மனித மேல்நிலைப் பண்பாடுகளும் அந்த நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி அறிவாற்றலை பொறுத்தே அமைகின்றது என்பதை எடுத்துக் கூறுகின்றது எனவே கல்வி ஒன்றே இன்றைய அடிப்படைத் தேவையாகின்றது.

***"இன்றைய கல்வி முறையானது உள்ளத்தை புத்தக உள்ளடக்கத்தால் நிரப்புவதும் பரீட்சை மண்டபத்தில் அவற்றினை வெளியேற்றி விடுதலும், பின்னர் வெற்று உள்ளத்தோடு வீடு திரும்புவதாகவும் அமைகின்றது. உண்மைக் கல்வி உள்ளத்தை பண்படுத்துவதனை தன்னகத்தே கொண்டுள்ளது. நீங்கள் கற்பவை முழுமையாக இருப்பதற்குரிய பூரணத்தின் ஒருபகுதியாக இருக்க வேண்டும்"*** என மனித மேம்பாட்டு கல்வி விழுமியம் பற்றி சாயிபகவானும் விளக்கியுள்ளார். ஒழுங்கான கல்வியினை கற்பதன் மூலமே ஒருவன் மனநிறைவுடன் கூடிய சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் முழுமையான அசைவை ஏற்படுத்த முடியும். அத்தகைய முழுமையக் கொண்ட கல்வியே இன்றை நாட்டின் தேவையாகும். கல்வி அமைப்பிலே சமய ஆன்மீகக் கூறுகள் முக்கிய இடம்பெற வேண்டும் என்று விவேகானந்தர் வலியுறுத்துகின்றார். நமக்குத் தேவைப்படும் கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்கக் கூடியதாகவும் உள்ளத்திலே ஆற்றலை அதிகப்படுத்தக் கூடியதாகவும் நமது வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை அளிப்பதாகவும் அமைய வேண்டும் ஆயின் சமய ஆன்மீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைக் கல்விக்கு இன்றியமையாதது எனலாம். சுருங்கக் கூறின் உண்மைக் கல்விக்கு சமயம் அடிப்படையாக அமைந்திருப்பது அவசியம். சுவாமி விவேகானந் தரின் அறைகூவல் ஆகிய **"எழுந்திரு! விழித்திரு!"** என்ற சொல்லாட்சிகள் ஆத்மீகம் பற்றிய உண்மை நிலையை குறிப்பிடுகின்றது. எழுந்திரு என்ற அறைகூவல் மனிதன் தனது உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கான அழைப்பாகும். இது கல்வி சார்பான இலட்சியமும் ஆகும். கல்வியானது மனிதனின் உறங்கும் ஆற்றல்களை விழித்திடச் செய்யவும் செயற்படச் செய்யவும் உதவுகின்றது. சைவ சமயக் குரவர் ஆன மாணிக்கவாசகர் சுவாமிகளின் திருப்பள்ளியெழுச்சியின் உள்ளடக்கமும் இதுவே ஆகும்.

இன்றைய உலகில் இளைஞர்களிடையே காணப்படும் போட்டிக்கும், பொறாமைக்கும், அமைதியின்மைக்கும் முக்கிய காரணம் ஒழுக்கமின்மையே என துணிந்து கூறலாம். இளைஞர்களிடையே நல்லொழுக்கம் காணப்படும் பொழுதுதான் அவர்கள் சமூகநலன், சமூகவளர்ச்சி என்பன பற்றி சிந்திக்க முற்படுகின்றார்கள். எனவே மாணவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வாழ்வதற்கு ஏற்றாற்போல் ஒவ்வொரு நாட்டுக் கல்விக் கொள்கையும் சமயக் கல்வியைக் கொண்டமைந்திருத்தல் வேண்டும். சமயக் கல்வி கற்பிக்கப்படாத நாடுகளில் ஒழுக்கக் கல்வி போதிக்கப்படுவதன் காரணம் மாணவர்களின் ஒழுக்கத்தை பேணுவதற் கேயாம். மனிதன் உயிரினும் மேலாக ஒழுக்கத்தை மதித்தல் வேண்டும் என்பதனை திருவள்ளுவரும்,

**"ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்"**

என்று கூறியுள்ளமை நோக்கத்தக்கது ஒவ்வொருவர்க்கும் வாழ்க்கையில் விழுப்பம் தரும் செல்வம் கல்வியும் ஒழுக்கமும் ஆகும். அதனை சிறந்த தர்மமாகப் போற்ற வேண்டும். ஸ்ரீ.அரவிந்தரும் தேசியக் கல்விக் கொள்கையை வகுக்கும் பொழுது சமயக் கல்வி ஒழுக்கக் கல்வி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கின்றார். **"ஒழுக்க சமயக் கல்வி முழுமையாக கல்வித்திட்டத்தில் இடம்பெற வேண்டும் இத்தகைய கல்வி குழந்தையின் இளம் பருவத்தில் இருந்து தொடங்கப் பெற வேண்டும்"** ஆகவே உயர்ந்த உள்ளத்திற்கு இளமையில் இருந்தே பயிற்சி பெறுவது கல்வியின் இறுதி இலட்சியம் என்று வகுத்த அரவிந்தர் ஒழுக்கத்தின் அடிப்படையில், சமயத்தின் அடிப்படையில் அமைத்த கல்வித்திட்டத்தினாலேயே இவற்றை அடைய முடியும் என்றார். கல்விக் கேள்வி இல்லாதவர்கள் கடவுளை அறிந்து வழிபட்டு உய்யமாட்டார்கள் என்பது **"கல்லார் நெஞ்சில் இல்லான் ஈசன்"** என்றும் **"கற்றவர் தொழுதேற்கும் சீர்கரையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா"** என்றும் **"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலா கருணை மாகடலை மற்றவர் அறியா மாணிக்க மலையை"** என்ற திருவாக்குகளால் அறிய முடிகிறது.

உண்மைக் கல்வி என்பது மனிதனது உள்ளத்திற்கும் அறிவாற்றலுக்கும் ஆலோசனை நெறிப்படுத்தல் என்பவற்றினை வழங்கித் தூய சாத்வீக இன்பத்தை ஈட்டுவதற்கு அழைத்துச் செல்லும் கருவியாகும். இக்கல்வியினை மாணாக்கருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதில் குரு முக்கிய இடத்தினை வகிக்கின்றார். குரு என்ற பெயர் **"அறியாமையை நீக்குபவர்"** என்ற பொருளைத் தரும். அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற ஆசிரியரை அடைவதே இறைவனின் திருவருள் தான் என்ற கருத்தினை திருவருட்பயன் எடுத்துக் கூறும்.

**"அறியாமை உள்நின்(று) அளித்தே காணும் குறி**
**ஆகி நீங்காத கோ"**

ஆத்ம ஞானம் தானாக விளங்க மாட்டாது. அதை விளங்கச் செய்வதற்கு ஞானசாரியன் வேண்டும். ஆன்ம ஞானத்தை அடைவதற்கு ஞானசாரியன் இன்றியமையாதவன். **"எழுத்தறிவித்தவன் இறைவன்"** என்ற நிலையில் குரு இந்துப்பாரம்பரியத்தில் தெய்வீக நிலைக்கு உயர்த்தப்படுகின்றான். அறியாமையில் சிக்குண்டு அல்லற்படும் ஆன்மாக்களுக்கு உரிய வழி காட்டுவதற்கு இறைவனின் திருவருளே குருவாக தோன்றுகின்றமைக்கேற்ப சில குறைகளையும் சில நிறைகளையும் பெற்றிருப்பார். எனவே ஒவ்வொரு மாணவர்க்கும் அவருக்கு ஏற்ற வகையில் உரிய அறிவுரையும் உபதேசமும் தேவைப்படும். அவ்வாறு அவரவர் தன்மைக்கேற்ப தேவையானவற்றை சிறந்த முறையில் உருவாக்கி அவர் தம் குறைகளை களைந்து நிறைவு பெறச் செய்யும் வகையில் அறிவு ஆற்றல் வளரத் துணைபுரிவதே குருவின் சிறப்பான பணியாக அமைகின்றது. மாணவரை ஒரு நோயாளியாகவும் குருவை நோய் தீர்க்கும் மருத்துவராகவும் உவமித்து மாணவரின் தேவைகளை ஆசிரியனே தெரிந்து கொள்ளவும் அதற்கு வேண்டியன செய்யவும் வல்லவர் என்ற கருத்து திருவருட்பயனில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**"அகத்துறு நோய்க்குள்ளிநீர் அன்றி அதனைச்**
**சகத்தவரும் காண்பாரோ தான்"**

அதாவது அறியாமையில் சிக்குண்டு அவதியுறும் ஆன்மாக்களுக்கு ஆதரவளித்து கடைத்தோற்றத் துணை செய்ய கூடிய ஆற்றல் குரு ஒருவருக்கே உண்டு என்ற கருத்து திருவருட்பயனில் கூறப்பட்டுள்ளது. ஆகவே இத்துணை சிறப்புமிக்க குருவானவர் சமயக் கல்வியை புகட்டுவதன் மூலமாகத்தனிப்பட்ட நபரின் வாழ்க்கை யையும் அதே நேரத்தில் நாட்டிலுள்ள சமூகங்களின் ஒழுக்க கலாசாரத்தையும் உருவாக்கக் கூடியதாக உள்ளது. எல்லா ஆசிரியர்களும் சமயக் கல்வியை கற்பிக்கலாம் என்ற நிலை மாறி பயிற்றப்பட்ட சமய ஆசிரியர்களே சமயத்தை கற்பிக்கும் போது மாணவர்கள் மேலும் பயன் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் சமயத்தை பாடசாலையில் கற்பிப்பதாலோ அன்றி ஒழுக்கத்தை போதிப்பதாலோ மாத்திரம் மாணாக்கரை சமூக வயப்படுத்த முடியாது. மாணவர்களுடைய ஆளுமை வளர்ச்சியில் பெற்றோர், உறவினர், அவர்கள் வதியும் சமூகத்தில் வாழ்வோர் ஆகிய அனைவரும் பங்கெடுத்துக் கொள்ளும் போது தான் மாணவர்கள் மேன்மை அடைவார் எனலாம்.

பல்வேறு தாற்பரியங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் சமயக் கல்வியினை நாம் போற்றி பாதுகாப்பது மட்டுமன்றி அதனை நடைமுறைப் படுத்துவதன் ஊடாகவும் உலக அமைதி சமதானத்தை ஏற்படுத்தி சமூக சீரழிவுகளையும் தடுத்து அதனூடாக நல்லதொரு உலகை உருவாக்க வழி செய்யும் என்பதில் ஐயமில்லை.

**'வாழ்க உலகெலாம்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியலில் மதமும் பண்பாடும்

**திரு. சின்னத்தம்பி - பத்மராசா**
B.A.(cey),P.G Dip.IN. Edu,M.Ed, M.phil

மதம் என்பது மனிதனை நல்வழிப்படுத்தும் ஒரு நெறியாகும். இறைவனையும் ஆன்மாக் களையும் தொடர்புபடுத்தும் ஒரு நெறியாக அல்லது வழியாக, அல்லது பலமாக மதம் மிளிருகின்றது. இதனையே எல்லா மதங்களும் செய்கின்றன. இதற்கு மேலாக மத நிம்மதியையும் தியாக சிந்தனையையும் வளர்த்து மிருக உணர்வுகளையும், தீய எண்ணங்களையும், ஆணவத்தையும் அகற்றி நல்வழிப்படுத்தும் ஒரு நெறியாக மதம் விளங்குகின்றது. இதனையே அமெரிக்காவில் உள்ள சமயக் கல்வி நிறுவனமும் "உயிருக்கு உறுதி பயப்பனவற்றை உணர்ந்து சிக்கனப்பிடிக்கும் பக்குவத்தை ஊட்டும் சாதனமாகவும், அதன் பயனாகவும் அமைதியும் கல்விமுறை பற்றிய விசாரணை" எனக் கூறியுள்ளது. இதிலிருந்தும் உயிரானது நிலை பேற்றிற்குரிய நல்ல செயல்களைப் புரிந்து உறுதி பெறவும், ஆன்மாக்களின் இறுதி இலட்சியமாகிய வீடுபேற்றை அடைவதற்கும் உதவுவதே மதக்கல்வி யின் நோக்கம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் இன்று மதமும், சமயக்கல்வியும் தனது இலக்கை எந்த அளவிற்கு அடையச் செய்கின்றது என்பது கேள்விக் குறியாக உள்ளது. உலக இந்து மாநாடுகள் நடைபெற்ற இக் காலத்தில் மேற்படி விடயம் தொடர்பாக ஆராயப்படுவது பொருத்தமுடையதே. ஒருவரின் ஆளுமை யானது முழுமையாக விருத்தியடைவதற்கு சமயக்கல்வி அவசியம் என்பதை கல்வியியலாளர்கள் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆயினும் இதற்குப் புறநடையாகவும் கல்வி வாசனையே இல்லாத பலரும் பண்பாட்டாளர்களாகவும் அறிவாளர்களாகவும் இருப்பதையும் நோக்கமுடிகிறது. இன்று சமயக்கல்வியானது தனது நோக்கத்தை சரியாக எட்ட முடியவில்லை. மாறாக முரண்பாடு, மோதல், வெறி, தீய எண்ணங்களை உருவாக்கும் ஒன்றாக மாறி வருவதையும் காணமுடிகிறது. இதனையே உவிலிஸ் பிரபு என்வர் குறிப்பிடுகையில் "கல்வியின் நோக்கம் மனக்கதவுகளைத் திறப்பது. சமயக்கல்வியிலோ மனக்கதவுகளை அடித்து மூடுவதில் நேரத்தைச் செலவிடுகிறோம்" என்கிறார்.

இன்றைய சமுதாயத்திலே கோவில்களிலும் இல்லங்களிலும் மேற்கொள்ளப் படும்கிரியை, வழிபாடு, திருமுறை ஓதுதல், புராண படனம், பிரசங்கம் வைத்தல் போன்ற செயற்பாடுகளையே சமயம் எனப் பின்பற்றப்டுகிறது. ஒரு மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை மேற்படி காரியங்களை தவறாது சமய நெறி எனக் கருதுகிறான். ஆனால் இவை தான் சமயம் அல்ல. காலையும் மாலையும் கடவுளை வணங்குவது தான் சமயம் அல்ல. இதனையே இந்திய தத்துவ ஆசிரியர்களில் ஒருவராகிய பேராசிரியர் இராதாகிருஷ்ணனும் "மறைபொருள் பற்றிய கல்வியையும் கிரியைகள் அல்லது சடங்குகள் பற்றிய உண்மைகளையும் அறிதல் மட்டும் சமயமாகிவிடாது" என்கிறார். எனவே சமூக வாழ்க்கையுடன் சமயமானது தொடர்புறுகின்ற வேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு உண்மையைக் கண்டறிதலும் (இதனையே தரிசனம் அல்லது அறிவுக்காட்சி என்கிறோம்.) உண்மையை உய்த்து அறிதலும் (இதனையே அனுபவம் என்கிறோம்.) இடம்பெற வேண்டும். மேற்படி விடயங்கள் இடம்பெறுதலே சமயத்தின் இரு பிரதான அம்சங்கள் ஆகும். இவை இரண்டும்' செவ்வனே இடம்பெறின் அதுவே சமயத்தின் நோக்கங்களைப் பிரதிபலிக்கும்.

ஒரு சமயமானது அச்சமயத்தவர்களது பண்பாட்டை மறைமுகமாகச் சுட்டி நிற்கிறது. உலகில் உள்ள சமயங்கள் பலவும் அவற்றைப் பின்பற்றுகின்றவர்களது பண்பாட்டைச் சுட்டி நிற்பதைக் காண முடிகிறது. எனவே ஒரு சிறந்த பண்பாட்டை பேணுவது சமயத்தின் முக்கிய குறிக்கோளாகின்றது. இன்றைய யதார்த்த உலகிலே பணம், பொருள் தான் மனிதனைத் திருப்திப்படுத்த கூடியவைகள் அல்ல என்பது வெள்ளிடை மலையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கோடி கோடியாக பணத்தைச் சேகரித்தாலும், ஆடம்பர பங்களா, அணிகலன்கள், வாகனங்கள் இருந்தாலும் அவை எல்லாம் ஒரு மனிதனை பூரண திருப்திப்படுத்திவிட முடியாது என்பதை இன்றைய உலகிலுள்ள பலரது வாழ்வு பாடமாகக் கூறியுள்ளது. எனவே இவற்றுக்கு அப்பால் சற்று ஆழமாகச் சிந்திப்போமானால் ஒரு மனிதனை பூரண திருப்த்தியடைய வைப்பது சமயமே ஆகும். மனதிற்கு மனநிறைவையும் சாந்தியையும் தருவது சமயம் ஒன்றேயாகும்.

சமயம் என்பதற்கு விளக்கம் கொடுக்க முற்பட்ட சுவாமி பவ்த்தரானந்தா அவர்களும் "மனிதனுள் அடங்கியுள்ள ஈடேற்றத்தைப் பெற விரும்பும் ஓர் அவா அல்லது உந்துதலின் பிரதிபலிப்பே சமயம்" என விளக்கம் கொடுத்துள்ளார். இத்தகைய சமயத்துக்கு அத்திவாரமாக அமைபவை அச்சமயம் தொடர்பான தத்துவங்களே ஆகும். இத்தத்துவங்கள் அனைத்தும் உண்மையானதும் அறிவு பூர்வமானதும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய கருத்துக்களையே முன்வைத்துள்ளன. எவ்வாறு இலக்கியங்கள் ஒரு காலத்தின் அனைத்து அம்சங்களையும் பிரதிபலித்துக்காட்டுகின்றதோ அது போலவே சமய தத்தவங்களும் வாழ்வின் இலட்சியத்தைக் காட்டி நிற்கின்றன.

ஓர் உன்னதமான சமயமானது வேண்டி நிற்பது ஒழுக்கமேயாகும். மனித வாழ்வில் உன்னதமானதும் ஒழுக்கம். இவ்வொழுக்கமானது இல்லையெனில் வாழ்ந்ததில் அர்த்தமில்லை. இதனாலேயே தான் பொய்யா மொழிப்புலவனாகிய திருவள்ளவரும் தனது குறளினிலே "ஒழுக்கம் விழுப்பம் தரலால் அவ்வொழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"என்கிறார். இதனையே பேராசியர் இராதாகிருஷ்ணன் "உண்மைச் சமயம் வேண்டுவது சடங்குகள் அல்ல நன்னடத்தையே" எனக்குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதனிடம் நல்ல மனப்பாங்கை ஏற்பட வைப்பது சமயமே என இமானுவல்காந் என்கின்ற ஜேர்மனிய தத்துவ ஞானியும் குறிப்பிட்டள்ளார். எனவே மனம், வாக்கு, காயம் என்பவற்றுக்குத் தூய்மையை தரக்கூடியது ஒழுக்கமே. அவ்வொழுக்கத்தை வளர்ப்பதே சமயமாகும். ஆனால் இன்றைய யதார்த்த நிலையில் இது எவ்வளவு சாத்தியமாகியுள்ளது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விக்குரிய விடயமாகவே நோக்கப்ப டுகிறது. சமயமானது ஒரு மனிதனிடம் இருக்கவேண்டிய நற்பண்புகளாகிய அன்பு, சேவை, காதல், தியாகம், தொண்டு, பக்தி ஆகியவற்றை வளர்க்கின்றது

சமயமானது உள்ளத்தூய்மையை ஏற்படுத்துகின்றது. உள்ளமானது தூய்மையானால் வாழ்வில் அமைதி, சாந்தம், அன்பு மகிழ்வு எல்லாம் தானே கை கூடும். இவை கைகூடினால் வாழ்வானது சிறப்படையும் என்பதில் சந்தேகமில்லை. சுவாமி விவேகானந்தர் கூட கடவுள் தான் அன்பு. இதனையே LOVE IS GOD என்கிறார்கள். சித்தர் பரம்பரையில் வந்துதித்த திருமூலரும் "அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார் அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்."என்கிறார். எனவே அன்பு வடிவினனானவனே இறைவன் என்கின்றன சமயங்கள். எனவே அவ்வன்பு வடிவினனான இறைவனைக் காண நாம் அனைத்து உயிர்கள் மீதும் அன்புடையவர்களாக இருத்தல் அவசியமாகிறது. இன்று அன்பானது மனிதசமுதாயத்திலே குன்றி வன்பு மலிந்துள்ளது. உலகில் தினசரி கொடூரங்களும், வன்முறைகளும் அரங்கேறிக்கொண்டே இருக்கின்றன. சமயங்களும் அவற்றின் நிறுவனங்கள் சார்செயற்பாடுகளும் அதிகரித்துக் கொண்டே செல்லும் இவ் வேளையில் அதற்குச் சமாந்தரமாக வன்முறைகளும் வளர்ந்துகொண்டே செல்வதைக் கண்கூடாகக் காணக் கூடியதாக உள்ளது. இவை எல்லாம் சமயம் என்ற அர்த்தத்தை அழித்தேவிடுகின்றன. எனவே உண்மையாகவே சமயமானது வளர்கிறது என்றால் மேற்படி செயற்பாடுகள் அருகிச் சென்றிருக்கும். எனவே சமயம் என்பதன் அர்த்தம் புரிபடாததையே இவை துல்லியமாகக் காட்டி நிற்கின்றன எனலாம்.

நாம் எல்லோரும் சத்தியத்தின் தலைவனாக மகாத்மா காந்தியைக் குறிப்பிடுகின்றோம். அக்காந்தியே தனது வாழ்வில் தீமை செய்தவர் மீதும் அன்பு கொண்டவராக ஒரு உண்மைச் சமயியாக வாழ்ந்திருந்தார் என்பதை அறியாமலில்லை. மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்ற நாகராம்ஹேட்சேயை மறைவதற்கு முன்னர் மன்னித்து அவர் மீதும் அன்பு செலுத்தி மறைந்தார். அதுமட்டுமன்றி எல்லா மக்கள் மீதுள்ள அன்பினாலேயே தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்ததுடன் சாதிப்பாகுபாடுகளையும் மத வேற்றுமைகளையும் கண்டித்திருந்தார். காந்தியைப் போற்றும் நாம் காந்தியின் போதனைகளை சமய வாழ்வை மட்டும் கடைப்பிடிக்கத் தயங்குகின்றோம். சமயமானது நம்மிடையே உள்ள பல்வேறு தீய பழக்கங்களை நீக்குவதற்கு உதவுகிறது. எம்மிடத்தே எழுகின்ற ஆணவத்தின் இயல்புகள் எனப்படுகின்ற விகற்பம், கற்பம், குரோதம், மோகம், அஞர், மதம், நகைப்பு, கொலை என்பவற்றையும் கன்மத்தின் இயல்புகளாகிய இருத்தல், கிடத்தல், விடுதல், இயற்றல், மேவல், பரநிந்தை என்வற்றையும் அறியாமையாகிய மாயையும் நீக்குவதற்குரிய வழியை சமயமானது போதிக்கின்றது.

இன்று உலகெல்லாம் போற்றப்படுகின்ற பகவத்கீதையும் மேற்படி ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை நீக்கும் வழிவகைகளை வகுத்துக் கூறியுள்ளது. இன்றைய சமயத்தில் உள்ளவர்கள் இவற்றை ஆழ்ந்தகன்று நோக்குவதில்லை. அவ்வுயரிய நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் தத்துவத்தைக் கைக்கொண்டால் இன்பமேயன்றித் துன்பம் இல்லை. கீதையைப்போல் மிகநேர்த்தியான உயரிய தத்துவம் எதனையம் கண்டதில்லை. என ஜேர்மனிய அறிஞர் கூறியிருந்ததிலிருந்து இதன் சிறப்புப் புலனாகிறது. இன்றைய 21ம் நுற்றாண்டில் கல்வியின் நோக்கமாகக் குறிப்பிடப்படுவது ஒழுக்கத்தையும் விழுமியத்தையும் வளர்த்து சமூகமேம்பாட்டிற்கு உதவுவதே. இதனையையே சமயமும் ஆற்றுகிறது. ஆனால் இன்று சமய பாடம் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை இலகுவில் எடுக்கப்பயன்படுகிறதே ஒழிய அதில் குறிப்படப்படும் விடயங்களை அதன் தத்துவத்தை அறிந்து கைக்கொள்ளும் நிலை இல்லை எனலாம்.

மனித நாகரிகத்தினை வளர்ச்சியடையச் செய்யவும் சமயமானது உதவி யுள்ளது என வரலாற்று ஆசிரியர்கள் பலரும் குறிப்பிடுகின்றனர். இச்சமயமானது மனிதனுக்காகவேயுள்ளது. சமயத்திற்காக மனிதன் இல்லை. எனவே மனிதனுக்காகவே உள்ள சமய வாழ்வை ஒவ்வொரு மனிதனும் வாழவேண்டியது கடமையாகின்றது. இன்றைய நிலையில் உலகாயுதக் கருத்துக்கள் எழுவதால் சமயப் பூசல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இவற்றிலிருந்து விடுபட நாம் தயாராக வேண்டும். இதையே சிக்காக்கோ நகரில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் கலந்துகொண்டு உரை யாற்றிய சுவாமி விவேகானந்தரும் "இன்று காலை ஒலித்த மணி சமயப் பகைக்குச் சாவு மணியடிக்கட்டும்." பேனாவின் மூலமும் வாளின் மூலமும் இனி சமயப்பகை நேராதிருக்கட்டும்" எனக் கூறினார். ஆனாலும் இன்றுவரை அவரின் கருத்து மெய்த்துவிடவில்லை. காரணம் இன்று நிறுவன ரீதியாக பல சமய அமைப்புக்கள் எழுச்சிபெற்று சமயப் பொறையை வளர்த்துவருகின்றன. "இந் நிறுவன ரீதியான சமய அமைப்புகள் போதிக்கின்ற சமயகல்வி நெறியெல்லாம் வெறும் மூடத்தனமானவை. அந்நெறியால் மக்கள் வீண்போகின்றனர்". என்றார் இராமலிங்க சுவாமிகள்.

இன்று சமய நெறிகள் சமயக் கொள்கைகளையும், கிரியைகளையும், வரலாற்றையும், பெரியவர் களது அனுபவங்களையும் போதிக்கின்றனவே தவிர எல்லா மதங்களும் வலியுறுத்திக் கூறுகின்ற உண்மையை நடைமுறையில் அனுபவிப்பதைக் கற்பிக்கவில்லை என்பதை உண்மையாளர்கள் எவரும் மறுக்கமாட்டார்கள். இன்று சமயக்கல்வி சமய பேதங்களையும் பிறமயங்களை அழிப்பதையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நிலை மாறவேண்டும். எல்லா சமயங்களினதும் உண்மைகள் ஒன்று என்பதை என்று மனிதகுலம் உணருகின்றதோ அன்றே சமயப் பூசல் இல்லாது போய்விடும். மலர் மலர்ந்தவுடன் எவ்வாறு தேனீக்கள் தாமாகவே அம்மலரைச் சேர்கின்றதோ அதேபோல் நாம் உண்மைச் சமய வாழ்வை வாழ்ந்தால் ஏனையோரும் அதனைப் பின்பற்றி வாழ்வார்கள். இதுவே சமயம் எமக்குப் போதிக்கும் உண்மையாகும். சமயத்தைப் பேசிக் கற்றுப் பயனில்லை. அனுபவியுங்கள். அதனூடாக ஞானத்தை, ஓர் மன அமைதியை, இன்பத்தை நுகருங்கள்.

**உஷாத்துணை நூல்கள்.**



1. இந்து சமயபாடம், 1978 பாடநூல்.
2. சுவாமி விவேகானந்தரின் உரைகள், இராமகிஷ்ணமிஷன் வெளியீடு.
3. இந்துசமய தத்துவங்கள் பேரா. T.M.P. மகாதேவன்.
4. சமயம் வளர்த்த சான்றோர் நூல் கட்டுரைகள்.


❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாலாயிரம் திவ்விய பிரபந்தமும் பெரியாழ்வாரும் - ஓர் அறிமுகம்



*ச.லலீசன்* (SLTES -CLASS III),
விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

## நாலாயிரம் திவ்விய பிரபந்தம்

ஞானச்சுடர் விளக்கேற்றி நாரணர்க்குச் சொல் மாலை சூட்டிய ஆழ்வார் பெருமக்கள் பன்னிருவர் ஆவர். பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், திருப்பாணாழ்வார், ஆகியோரே இப்பன்னிருவருமாம். இவர்கள் திருமாலைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடிய தேன் தமிழ்ப் பாடல்களே நாலாயிரம் திவ்வியபிரபந்தம் எனப் போற்றப்படுகின்றன. ஆழ்வார்களது காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கும் ஒன்பதாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாகும். நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தை நாதமுனிகள் தொகுத்தார்.

நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை 3892 ஆகும். (பாடல் எண்ணிக்கை குறித்துக் கருத்து வேறுபாடுகளும் உண்டு. 3776 என்போரும் உளர்.) பிற்காலத்தில், இராமானுஜரின் சமகாலத்தவரான திருவரங்கத்தமுதனார் பாடிய இராமானுஜ நூற்றந்தாதியின் 108 பாடல்களையும் சேர்த்து நாலாயிரம் என்ற எண்ணிக்கையைச் சமன் செய்தனர்.

திருமாலை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடுவோர் வைணவர் ஆவர். இவர்கள் கொள்ளும் பக்தி நெறி பிரபக்தி அல்லது பரபக்தி என அழைக்கப்படும். வைணவ நெறியில் அவதாரக் கோட்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. (அவதாரம் - கீழ் இறங்குதல்) கிணற்றில் விழுந்தவனைத் தூக்க வெளியே நிற்பவனும் கிணற்றுள் விழுந்து அவனுடன் அனுபவங்களைச் சந்தித்துக் கரையேற்றுவதற்கு இக்கோட்பாட்டை ஒப்பிட்டுப் பார்ப்பர். அடியவருடைய இன்ப துன்பங்களில் பங்கேற்பவராகத் திருமாலைக் கண்டு தெளிந்து அவருடைய பெருமைகளை வெளிப்படுத்தும் வகையில் ஆழ்வார்கள் பாடல்களைப் பாடினர்.

திருமாலை மிகவும் உரிமையோடு போற்றியும் நிந்தாஸ்துதி செய்தும் ஆழ்வார்கள் பக்திப் பாடல்களைப் பாடினர். சைவ நாயன்மார்கள் சிவன் மீது காட்டிய உறவு உரிமையை விட ஆழ்வார்கள் திருமாலிடம் உரிமையைச் சற்று அதிகமாகவே காட்டினர். பெரியாழ்வார் தம்மை யசோதையாகவும் பரம்பொருளாகிய திருமாலை மகனாகவும் பாவனை செய்து பாடிய பாடல்கள் பெரியாழ்வார் திருமொழி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத் தாயாகவும் இறைவனைப் பிள்ளையாகவும் கருதி வழிபடும் மார்க்கத்தை வைணவர்கள் வாத்ஸல்ய மார்க்கம் என்றும் குறிப்பர். இது சைவர்களின் சற்புத்திர மார்க்கத்துடன் ஒப்பிடக்கூடியது.

## பெரியாழ்வார்

பாண்டி நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் கலியுகம் உருத்ரோதன வருடம் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் வேதியர் குலத்தில் பெரியாழ்வார் அவதரித்தார். கருடனின் அம்சமாகக் இவர் கருதப்படுகின்றார். இவரது தந்தை முகுந்தாச்சாரியார். தாய் பதுமையார். இளமைத் திருநாமம் விஷ்ணுசித்தர் என்பதாகும். பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவராகிய ஸ்ரீ ஆண்டாள், பெரியாழ்வாருடைய புதல்வி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பெரியாழ்வாரது காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு என்பர். திருமாலுக்கு மலர்மாலை சாத்தி வழங்கவென்று திருநந்தவனம் அமைத்து அந்தப் பணியே தனது குறிக்கோளென வாழ்ந்தவர் பெரியாழ்வார். இவரது காலத்தில் பாண்டி நாட்டை வல்லப தேவன் என்ற பாண்டிய அரசன் ஆண்டு வந்தான். அவன் ஒரு நாள் இரவு நகரச் சோதனை செய்து வரும்போது ஒரு வீட்டுத் திண்ணையிலே அந்தணன் ஒருவன் படுத்திருப்பதைக் கண்டான். அவனை யாரென விசாரித்தான். அதற்கு அவன், தான் கங்கையில் நீராடி வருவதாகத் தெரிவித்தான்.

"அப்படியா? சரி, எனக்கொரு பாடல் கூறுக" என்றான் அரசன். அதற்கு அவன் **"மழைக்காலத்திற்குத் தேவையானதை மற்றைய எட்டு மாதங்களிலும் தேடிப் பெறுக. இரவுக்கு வேண்டியதைப் பகலில் பெறுக. முதுமைக்கு வேண்டியதை இளமையில் பெறுக. மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேடுக"** என்ற பொருள்படும்படியாக வடமொழிச் சுலோகமொன்றைக் கூறினான்.

இதைக் கேட்ட அரசன் தன்னுள் ஒரு புத்துணர்வு ஏற்பட்டிருப்பதாக உணர்ந்தான். மறுமைக்கு வேண்டியதை இம்மையில் தேட வேண்டும் என உறுதி கொண்டான். தன் அரசவைக் குருவாக விளங்கிய செல்வநம்பியை அழைத்து "மறுமைக்குத் தேட வேண்டியவை யாவை?" என வினவினான். கல்வியிற் சிறந்த வல்லுநர்களே இவ்வினாவுக்குச் சரியான விடை தருவர் எனக் கூறிய செல்வ நம்பி சரியான விடை கூறுபவருக்குப் பொற்கிழி பரிசாக அளிக்குமாறும் வழிப்படுத்தினான்.

செல்வநம்பியின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது. விடயம் எல்லா இடத்திற்கும் அறிவிக்கப்பட்டது. பொற்கிழி மீதிருந்த கவர்ச்சி காரணமாகப் பன்னாட்டு அறிஞர்கள் பாண்டி நாட்டிற்கு வந்து திரண்டனர். விஷ்ணுசித்தருக்கு (பெரியாழ்வாருக்கு) அருள் சுரக்க எண்ணிய திருமால், அவரது கனவில் தோன்றி "நீர் போய் பொற்கிழியை அறுத்துக் கொண்டுவாரும்" என்றார். அதற்கு ஆழ்வார், "சாத்திர ஞானம் இல்லாத அடியேன் எவ்வாறு இதனைச் செய்வது?" என்றார். "இதுகுறித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்கு ஏன் கவலை? எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்" எனக் கனவில் விடை பகன்றார் திருமால்.

அரசவை நோக்கிச் சென்ற விஷ்ணுசித்தரை அரசனும் அரசவைக் குருவும் வரவேற்றனர். உரிய ஆசனத்தில் அமர்த்தினர். **மறுமைக்குரிய நலங்களைப் பெறுவதற்கு ஒரே வழி திருமாலை முழு முதற்கடவுளாக வழிபடுவதே"** என எடுத்துரைத்தார் ஆழ்வார். அப்போது கட்டி வைக்கப்பட்டிருந்த பொற்கிழியும் பெரியாழ்வாரை நோக்கித் தாழ்ந்து வந்தது. ஆழ்வார் பொற்கிழியைப் பெற்றுக் கொண்டார்.

அரசன் முதலானோர் பெரியாழ்வாரைப் பணிந்து வணங்கி யானை மீது ஏற்றி 'பட்டர் பிரான்' என்ற சிறப்புப் பெயர் வழங்கி நகர் வலம் வந்தனர். அதன் போது திருமால் தம் பிராட்டியாரோடு கருட வாகனத்தில் அமர்ந்தபடி காட்சி நல்கினார். இறைவனது திருக்காட்சியை எல்லோரும் கண்ணாரக் கண்டனர். எல்லோரும் இரசித்துப் பார்ப்பதால் இறைவனுக்கு கண்ணூறு ஏற்பட்டு விடுமோ எனப் பெரியாழ்வாரது ஏழை நெஞ்சம் நினைத்தது. உடனே இறைவனை வாழ்த்திப் பல்லாண்டு பாடினார்.

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு*
*பலகோடி நூறா யிரம்*
*மல்லாண்ட திண்தோள் மணிவண் ணாஉன்*
*சேவடி செவ்விதிருக் காப்பு*

இவ்வாறாகத் தொடங்கிப் 12 பாசுரங்களில் 'திருப்பல்லாண்டை' அமைத்தார். பொற்கிழியைத் திருமால் கோவிலுக்கு அர்ப்பணித்து அழகிய கோபுரம் எழுப்பினார். பழையபடி நந்தவனத் திருத்தொண்டுக்கு மீண்டார்.


கண்ணன் மீது மிகுந்த பக்தி கொண்டு இவர் பாடிய 461 பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி எனப் போற்றப்படுகின்றன. பெரியாழ்வாரால் மங்களசாசனம் (பாடல் பெற்ற) செய்யப்பெற்ற திருத்தலங்களது எண்ணிக்கை 19 ஆகும்.

## பெரியாழ்வார் திருமொழி

வைணவ சமயத்தைச் சேர்ந்த பன்னிரண்டு ஆழ்வார்களுள் பெரியாழ் வாருக்குத் தனியிடம் உண்டு. ஆண்டாளின் தந்தையாகிய இவர் கிருஷ்ணாவதாரத்தில் தன் மனதைப் பறிகொடுத்தவர். தன்னைத் யசோதையாகவும் கிருஷ்ணனைக் குழந்தையாகவும் கருதிப் பாடல்கள் பாடினார். பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த மஹாவிஷ்ணுவிடம் தேவாதி தேவர்கள் எல்லோரும் சென்று ஒரு சமயம் மன்றாடி நின்றார்கள். கம்சன், சிசுபாலன் முதலிய கொடியவர்களின் கோரச் செயல்கள் அதிகரித்த நிலையில், அவர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றுமாறு இவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையேந்தி நின்றார்கள். இவர்களது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்த மஹாவிஷ்ணு யது குலத்தில் தான் தேவகி வயிற்றில் பிறப்பதாகவும் அக்குலத்தில் இருக்கும் கம்சனை அடக்குவதாகவும் திருவார்த்தை அருளினார்.



கொடியவர்களை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு மஹாவிஷ்ணு துலாவாபர யுக இறுதியில் கிருஷ்ணாவதாரத்தை (9ஆவது அவதாரம்) மேற்கொண்டார். தேவகிக்கும் வசுதேவருக்கும் மகனாகப் பிறந்த இவர் கம்சன் போன்ற கொடியவர்களிடமிருந்து தப்பிக்கொள்வதற்காக யசோதை - நந்தகோபன் மகனாக வளர்ந்தார். எனவேதான் கண்ணனின் வளர்ப்புத் தாய் என யசோதையைக் கொள்கிறோம். பெரியாழ்வார் தன்னை யசோதையாகக் கருதிப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்களைப் பாடினார். பெரியாழ்வாரும் யதுகுலத்தைச் சேர்ந்தவரே. யதுகுலம், யாதவ குலம், ஆயர் குலம் என்பன ஒரு பொருள் தருவன. பெரியாழ்வார் பாடிய பாடல்கள் திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி ஆகிய நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரியாழ்வார் திருமொழி பிரதானமானது. இது 461 பாடல்களைத் தன்னகத்தே கொண்டது.

குழந்தைக் கண்ணனின் திருவவதாரத்தில் மனதைப் பறிகொடுத்ததாகப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்கள் ஆரம்பமாகின்றன. அழகிய மாளிகைகள் நிறைந்த திருக்கோட்டியூரில் அழகிய முடியும் நிறைகுணங்களும் உடைய கண்ணபிரான் பிறந்த இனிய மனையில் ஆயரும் ஆய்ச்சியரும் அவன் பிறந்த மகிழ்ச்சியால் ஒருவர் மேல் ஒருவர் நறுநெய் தடவி சுண்ணங்கள் (பவுடர்) பூசி மகிழ்ச்சிகொண்டதால் அவற்றைக் கலந்த மாளிகை முற்றம் சேறு ஆயிற்று எனப் பெரியாழ்வார் பாடத் தொடங்குகின்றார். இறுதியில் கண்ணன் தன் நெஞ்சில் குடிபுகுவதாகப் பாடுகின்றார்.

"வடதடமும் வைகுந்தமும் மதிற் துவராபதியும்
இடவகைகள் இகழ்ந்திட்டு என்பால் இடவகை கொண்டனையே"

எனப் பாடுகின்றார். நூலில் இடம்பெறும் ஒவ்வொரு பகுதியினதும் நிறைவம்சமாக நூலைப் படிப்பவர் பெறும் பயன் பற்றியும் கூறுகிறார். பல்லவர் கால இலக்கியங்களில் நூற்பயன் கூறல் ஒரு பண்பாக விளங்குகின்றது.

தமிழில் எழுந்த பிரபந்த வகைகளுள் பிள்ளைத் தமிழ் என்பதும் ஒன்று. இது பிள்ளைக் கவி, பிள்ளைப் பாட்டு என்றும் அழைக்கப்படுகின்றது. பெரியாழ்வார் கண்ணனின் குழந்தைப் பருவம் பற்றிப் பாடிய பகுதிகள் பிள்ளைத் தமிழ் என்ற பிரபந்தத்திற்கு இட்ட அத்திபாரமாகக் கொள்ளப்படுகின்றது. பிள்ளைத் தமிழ் நூல்களுள் முதல் நூல் ஒட்டக் கூத்தர் பாடிய குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஆகும். இது சோழர் காலத்தில் எழுந்தது.

பிள்ளைத் தமிழ் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் காப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்னும் பத்தும் பருவங்களைப் பற்றிக் கூறும்.

இந்தப் பத்தில் இறுதி மூன்றையும் தவிர்த்து அதற்குப் பதிலாக கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைச் சேர்த்துக் கூறுவது பெண்பாற் பிள்ளைத்தமிழ் ஆகும். பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தங்களில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுவதுமுண்டு. இன்று 120 இற்கு மேற்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள் பிரபலமாக இனங்காட்டப்படுகின்ற போதிலும் இவையெல்லாவற்றிற்கும் ஓர் அடிப்படையை வழங்கிய பாடல்களாகப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்களையே கொள்வர்.

கண்ணனின் திருவவதாரம், கண்ணன் திருமேனி அழகு, தாலப் பருவம், அம்புலிப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், தளர்நடைப் பருவம், அச்சோப் பருவம், புறம் புல்கல், கண்ணன் அப்பூச்சி காட்டுதல், கண்ணனை



முலையுண்ண அழைத்தல், காதுகுத்தல், நீராட்டம், குழல்வாரக் காக்கையை வா எனல், கோல் கொண்டு வா எனல், பூச்சூட்டல், காப்பிடல், பிள்ளை விளையாட்டு, ஆயர் மங்கையர் முறையீடு, அம்மம் தர மறுத்தல், கண்ணனைக் கன்றின் பின் போக்கிய அன்னை இரங்குதல், கண்ணன் மீண்டு வரும் கோலங்கண்டு அன்னை மகிழ்தல், கண்ணன் மீண்டு வருங்கோலங் கண்டு கன்னியர் காமுறல், கோவர்த்தன கிரியைக் குடை கொண்டமை, கண்ணன் குழல் ஊதல், நற்றாய் இரங்கல், தலைவன் பின் சென்ற மகளைக்குறித்துத் தாய் பலபடி உன்னி ஏங்குதல், உந்தி பறத்தல், அனுமன் சீதைக்குக் கூறிய அடையாளம், திருமாலைக் கண்ட சுவடு உரைத்தல், திருமாலிருஞ்சோலை, திருக் கோட்டியூர், பத்தராய் இறப்பார் பெறும் பேறு, திருமாலின் நாமம் இடுதல், கண்டம் என்னும் திருப்பதி, திருவரங்கம், எம பயம் நீக்கென அரங்கத்து அரவு அணையானை வேண்டுதல், தன் தகவின்மையை அறிவித்தல், பண்டன்று பட்டினம் காப்பே, திருமாலிருஞ்சோலைப் பெருமானைப் போகவிடேன் எனல், அடிமைப்பட்டுத் தாம் பெற்ற நன்மைகளை நினைத்துக் களித்தல், ஆகிய உள்ளடக்கங்களைக் கொண்டது.

இவற்றுள் நீராட்டம் என்னும் பகுதி உயர்தர வகுப்புக்களில் தமிழ்ப் பாடம் கற்கும் மாணவர்களுக்குரிய பாடப்பகுதியாக விளங்குகின்றது இப்பகுதியில் கண்ணனைக் குழந்தையாகவும் தன்னைத் தாயாகவும் முன்னிறுத்தி அவனை நீராட்ட அழைப்பதாகப் பெரியாழ்வார் சித்திரிக்கிறார். நீராட விருப்பின்றிக் குறும்பு செய்யும் கண்ணனை அழைப்பதில் பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பு அழகாக வெளிப்படுத்தப்படுகின்றது. புராணங்கள் குறிப்பிடும் கண்ணனது தீரச் செயல்கள் பற்றியும் பெரியாழ்வார் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகின்றார். மராமரம் சாய்த்தமை, பூதனையிடம் பாலுண்டு அவளைச் சாய்த்தமை, கொடிய சகடாசுரனை வதம் செய்தமை, மலைப்பாம்பு உருவில் வந்த அகாசுரனைக் கொன்றமை எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியவர்களை அழிக்கும் கண்ணனது பேரருளையும் பெரியாழ்வார் 'நீராட்டம்' என்ற பகுதியின் ஊடாக வெளிப்படுத்துகின்றார்.

## பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பு

பெரியாழ்வார் திருமொழியில் இரண்டாம் பத்தில் நீராட்டல் என்ற தலைப்பில் "வெண்ணெய் அளைந்த" எனத் தொடங்கும் பாசுரம் அமைந்துள்ளது. குழந்தைக் கண்ணனை நீராட வருமாறு அழைப்பதாக இப்பாசுரம் அமைந்துள்ளது. பெரியாழ்வார் தன்னை யசோதையாகப் (கண்ணனின் வளர்ப்புத் தாய்) பாவனை செய்து பாடிய இப்பாடல்களில் தாய்மைப் பண்பு சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றது. கண்ணன் மீது தான் கொண்டிருக்கும் ஆழ்ந்த பக்தியைப் புலப்படுத்துவதற்குத் தாய் பிள்ளை உறவாடலை ஒரு உத்தியாகப் பெரியாழ்வார் கையாள்கின்றார். நீராட விருப்பின்றிக் குறும்பு செய்கிறான் கண்ணன். அவனை அழைப்பதில் தாய்மைப் பண்பை வெளிக்காட்டுகிறார் பெரியாழ்வார்.



வெண்ணெய் அளைந்த பிசுபிசுப்போடும் மாட்டுத் தொழுவத்தில் விளையாடி உடலெங்கும் புழுதியோடும் வருகை தருகிறான் கண்ணன். இவனை நீராட்டிச் சுத்தப்படுத்த வேண்டுமெனத் தாய் விரும்புகிறாள். குழந்தைக் கண்ணன் அதற்கு இசையவில்லை. இதனால் தன்னோடு தேய்த்தபடி நித்திரைசெய்ய அனுமதிக்க மாட்டேன் என்கிறார் பெரியாழ்வார். குழந்தைகள் தாயோடு தேய்த்தபடி உறங்கு வதையே விரும்புவர். இச்செயலை நினைவுபடுத்திப் பெரியாழ்வார் தனது தாய்மைப் பண்பை வெளிக்காட்டுகின்றார்.

நீராட விருப்பமில்லாத குழந்தையை இசைய வைப்பதற்காகத் தாயானவள் பல்வேறு ஆயத்தங்களைச் செய்கிறாள். நீராட்டுவதற்குத் தேவையான எண்ணெ யையும் குழந்தை உண்பதற்கு விரும்பும் புளிப்பழத்தையும் தாய் தன்னுடன் வைத்திருக்கிறாள். நெல்லி இலைகளிட்டுக் காய்ச்சிய வெந்நீரைக் கடாரத்தில் தயாராக வைத்திருக்கிறாள். மஞ்சளும், செங்கழுநீர் மாலையும், நறுமணம் வீசும் சந்தனமும், கண்ணுக்கிடும் மையும் கொண்டு வந்து வைத்துள்ளாள். பாலிற் சர்க்கரை கலந்து காய்ச்சி அப்பம் முதலான குழந்தைக் கண்ணனுக்கு உகந்த பலகார வகைகளையும் சுட்டு வைத்துள்ளாள். உண்பதற்காக் கனிகளையும் தருவேன் என நம்பிக்கை தருகிறாள். இவ்வாறாக வெளிப்படுத்தப்படும் ஆயத்தநிலைகளும் ஆசை காட்டி அழைக்கும் பாங்கும் பெரியாழ்வாரின் தாய்மைப் பண்பை வெளிப்படுத்தி நிற்கின்றன.



குழந்தையின் குறும்புகளை இரசித்துத் தாய் மனம் மகிழ்வது இயல்பானது. குழந்தைக் கண்ணனின் குறும்புகளை வெளிக்காட்டி இரசித்துப் பெரியாழ்வார் குதூகலிக்கிறார். வெண்ணெய் அளைந்தும் புழுதி குளித்தும் விளையாடும் கண்ணனைக் கண்டு மனம் மகிழ்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பூணித் தொழுவினில் புக்குப் புழுதியளைந்த பொன்மேனி காணப் பெரிதும் உகப்பன் ஆகிலும் கண்டார் பழிப்பர்" என்கிறார். இதே நேரம் தன் குழந்தையைப் பிறர் பார்த்துப் பழிக்கக் கூடாது என்ற தாய்மைப் பண்பும் பெரியாழ்வாரிடம் வெளிப்படுகின்றது. மேலும் கன்றுகள் ஓடிச் செல்லுமாறு அவற்றின் செவிகளில் கட்டெறும்பு பிடித்துவிடும் குழந்தைக் கண்ணனின் குறும்புகளையும் கூறுகிறார். எண்ணெய்க் குடத்தையுருட்டியும் இளம்பிள்ளைகளைக் கிள்ளி எழுப்பியும் கண்ணைப் புரட்டி விழித்தும் குறும்பு செய்யும் குழந்தையைக் கண்டு உவகையடைகிறார். பசுக்கன்றின் வாலில் ஓலை கட்டியும் பழங்கள் உதிர்ந்து விழும்படி கல்லால் எறிந்தும் குறும்பு செய்யும் கண்ணனை நினைத்துப் பார்க்கிறார். குழந்தைப் பருவக் குறும்புகளை இரசிக்கும் பெரியாழ்வாரின் மனோநிலை அவரது தாய்மைப் பண்பையே வெளிக்காட்டுகின்றது. "உறிமேல் வைத்த வெண்ணெயை நீ பிறந்த நாள் முதல் நான் பெற்றறியேன்" என்பதில் குழந்தையின் குறும்பிலும் பெருமிதம் கொள்ளும் தாய்மை உணர்வு வெளிக்காட்டப்படுகின்றது.



"நீ பிறந்த திருவோண நாள் ஆதலால் இன்று நீ நீராட வேண்டும்" என்பதில் தாய்மைக்குரிய கண்டிப்பையும் பெரியாழ்வார் வெளிக்காட்டுகின்றார். தனது குழந்தை தனக்குக் கிடைத்த அரிய செல்வம் என்றே எந்தவொரு தாயும் கருதுவாள். "நண்ணல் அரிய பிரானே!" என்றும் "எம்பிரான் ஓடாதே! வாராய்!" என்றும் "வாய்த்த புகழ் மணி வண்ணா!" என்றும் "அழகனே!" என்றும் "ஒலிகடல் ஓதநீர் போலே வண்ணம் அழகிய நம்பி" என்றும் "மாணிக்கமே! என் மணியே!" என்றும் கண்ணனைப் பெரியாழ்வார் குறித்துக் காட்டும் நிலைகள் அவரது தாய்மைப் பண்பைக் காட்டுகின்றன.

கண்ணனது வீரச் செயல்களை புலப்படுத்தும் புராணக் கதைகளை நினைவுபடுத்தித் தாய் பெருமை கொள்கிறாள். "நின்ற மராமரம் சாய்த்தாய்" என்றும் "வஞ்சகப் பேய் மகள் (பூதனை என்ற அரக்கி) துஞ்ச வாய் முலை வைத்துக் கொன்றாய்" என்றும் "கஞ்சன் (ஹம்சன்) புணர்ப்பினில் வந்த கடிய சகடம் (சகடாசுரனை) உதைத்தாய்" என்றும் "மலைப் பாம்பு உருக் கொண்டு வந்த பகாசுரன் என்ற அரக்கனைப் பின்தொடர்ந்து ஓடி அவனைப் பிடித்துக்கொண்டு ஆட்டினாய்" என்றும் கண்ணனின் வீரச் செயல்களைக் கூறித் தாய் பெருமைகொள்வது போலப் பெரியாழ்வார் குறிப்பிடுவது அவரது தாய்மை உணர்வைக் காட்டுகின்றது.

"நாண் இத்தனையும் இலாதாய் நப்பின்னை (கண்ணன் தேவியருள் ஒருத்தி) காணின் சிரிக்கும்" என்றும் கூறுகின்றார். இவ்வாறு கண்ணனுக்கு உணர்வு மேலீட்டை ஊட்டி நீராடவைத்த தாயாகப் பெரியாழ்வார் விளங்குகின்றார். "யசோதை மஞ்சனம் ஆட்டிய ஆற்றை" என உரைப்பது ஈற்றில் கண்ணன் நீராடினான் என்பதை உறுதிப்படுத்துகின்றது. கண்ணன் மீதான ஆழ்ந்த பக்தியை வெளிப் படுத்தும் விதமாகப் பெரியாழ்வார் தன்னை யசோதையாகக் கருதிப் பாடிய இப்பாடல்களில் இயல்பாகவே அவரிடம் உள்ள தாய்மைப் பண்புகளும் வெளிப் படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EVEREST FANCY & MULTI TRADES

**Dealers in School Bags, Fancy Goods, Toys, Face Wash & Electrical Items**

## எவறெஸ்ற் பான்சி அன் மல்ரி ரேட்ஸ்

10, New Market (Inside),
Jaffna.

10, புதிய சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

*Tele: 077 5386279.*

# KAJAN MOTORS WORKS

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும்
திருத்தம் செய்தல், சுத்திகரித்தல் மற்றும் பெயின்ரிங்
வேலைகளை திறமையாக செதிட உங்கள் அபிமான இடம்

## கஜன் மோட்டோர்ஸ் வேக்ஸ்

*Pillayar Kovilady,*
*Kopay Center, Kopay.*

பிள்ளையார் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

# அரவிந்தன் நகை மாடம்

# ARAVINTHAN NAGAI MAADAM

**Genuine 22 kt Jewellery Manufacturing Jewellers**

1/5, Kasthuriyar Road,
Jaffna.

1/5, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*T.P: 077 6070670.*

# LUCKY SALOON

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்
உங்கள் அழகை மேலும் அழகுபடுத்தும்
முடிஅலங்ரிப்பு வேலையை திறம்பட செய்திட உங்கள் தெரிவு

## லக்கி சலூன்

Manipay Road, Kopay.

மானிப்பாய் வீதி, கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T.KUMARASAMY TEXTILES

**Dealers in Textiles Specialist in Sarees, Blouses & Readymade Garments**

# த.குமாரசாமி டெக்ஸ்டைல்ஸ்

44, 42, Grand Bazaar, Jaffna.

Tele: 222 8847, Fax: 222 8847. E-mail: tkumarasamy@sltnet.lk

# MAKARANI PADDU SOLAI

# மகாராணி பட்டுச்சோலை

50, Grand Bazaar, Jaffna. 50, பெரியகடை, யாழ்ப்பாணம்.

*Tele: 021 222 3104, 021 222 7035*

# MAARUTHI ENGINEERS

*All kinds machining work, Welding, All vehicles locks, Aluminum fitting and Motobike mechanics.*

VAN FOR HIRE

Manipay Road, Kopay.

Tele: 077 1130012, 021 223 0321

# BOOK LAB

தேர்ந்த நூல்களின்
இறக்குமதியாளர் – வெளியீட்டாளர்.

# புத்தகக் கூடம்

ஆளுமை மிக்க மனித சமூகத்தின் பலம் புத்தகங்களும் வாசிப்புக்களுமே!
நூல் பண்பாட்டையும் நூலகப் பண்பாட்டையும் உருவாக்க ஒன்றிணைவோம்.

*Tele: 021 222 7290, 077 1285749.*
*E-mail: booklab@gmail.com.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LEDCHUMY TAILORS

அனைத்து வகையான தைத்தல் வேலைகளையும்
ஓரே இடத்தில் செய்து பெற்றிட உங்கள் தெரிவு

# லக்ச்சுமி ரெயிலர்ஸ்

Poin Pedro Road, Kopay Junction. பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச்சந்தி.

# சரஸ்வதி விலாஸ்

தேநீர்கடை என்றால்
உங்கள் நினைவிற்கு வரும் கடை

# SARASVATHY VELAS

Point Pedro Road, Kopay Junction. பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச்சந்தி.

# JEYARAJAH MOTORBIKE WORKS

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும்
திருத்தம் செய்திட உங்கள் அபிமானம் பெற்ற

# ஜெயராஜ் மோட்டார்சைக்கிள் வேக்ஸ்

*Point pedro Road, Kopay Junction.* பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச்சந்தி.

# THANKAPALAM MOTORS WORKS

அனைத்து வகையான மோட்டார் சைக்கிள்களும்
திருத்தம் செய்தல், சுத்திகரிப்பு செய்தல்
போன்ற சேவைகளை துரிதமாக செய்து பெற்றுக்கொள்ள

# தங்கப்பழம் மோட்டார் வேக்ஸ்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THURAIRAJA BICYCLE WORKS

திறமையாக சகல சைக்கிள்களும் திருத்தம்
செய்திட உங்கள் ஒரே தெரிவு

## துரைராஜா சைக்கிள் வேக்ஸ்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

# மகிந்தினி ஸ்ரோர்ஸ்

சகல வகையான அன்றாட வீட்டுத்தேவையான
பொருட்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்

## MAHINTHINI STORES

உரிமையாளர்:
தி. பாமதேவன்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

# KAJAAN STORES

அனைத்து வகையான சைக்கிள் உதிரிப்பாகங்களும்
பாடசாலை பொருட்கள் மற்றும் அழகுசாதனப்பொருட்கள்
நியாய விலையில் வாங்கிட உங்கள் அபிமானம் பெற்ற

## கஜான் ஸ்ரோர்ஸ்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

# RANI SALOON

முடிஅலங்ரிப்பு வேலையை மனதிற்கேற்றவாறு
திருப்தி கரமாக செய்திட உங்கள் அபிமான தெரிவு

## ராணி சலூன்

உரிமையாளர்:
அ. தர்மலிங்கம்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேதன வீட்டுத் தோட்டம்

***திருமதி. கிருபவதனி சிவதீபன்,***
*விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்,*
*விவசாயத் திணைக்களம் (விரிவாக்கம்),*
*யாழ்ப்பாணம்.*

அன்றாடம் வீட்டுக்குத் தேவையான உணவு வகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வீட்டிலும் அதன் சுற்றுப் புறத்திலும் கிடைக்கக் கூடிய இயற்கையான உயிரியல் மூல வளங்களைப் பயன்படுத்தி போசாக்கு நிறைந்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தோட்டம் வீட்டுத் தோட்டம் எனப்படும்.

- வளங்கள்
- பண்ணைக் கழிவுகள்
- பசுந்தாட் பசளைகள்
- சமையலறைக் கழிவுகள்
- மண் உயிரினங்கள்

## நன்மைகள்

- வீட்டைச்சுற்றியுள்ள இடவசதியை முழுமையாகப்பயன்படுத்தல்
- சமச்சீரான சத்துணவு பெறலாம்
- விருப்பத்திற்கு ஏற்ற உணவு வகைகளைப் பயிரிடலாம்
- வருமானம் அதிகரிக்கும்
- நஞ்சற்ற உணவு கிடைக்கும்
- பீடை நாசினிப் பாவனையை குறைக்கலாம்
- கழிவுப்பொருட்களை உற்பத்திக்குப் பயன்படுத்தலாம்
- அசேதன உரப் பசளைப் பாவனையை குறைக்கலாம்
- சுற்றாடல் மாசடைதலை தவிர்க்கலாம்
- மண் வளம் பேணப்படும்
- தொடர்ச்சியாக உணவு பெறக் கூடியதாக இருக்கும்
- குறைந்தளவு நிலத்தில் அதிக பயன் பெறலாம்
- தேவையான போது அறுவடை செய்யலாம்
- உடற் பயிற்சியும், மனதிற்கு அமைதியும் கிடைக்கும்

## வீட்டுத் தோட்டத்தை திட்டமிடும் போது கவனிக்க வேண்டியவை

- பயிர்களுக்கு ஏற்ப இடத்தை தெரிதல்
- நாளாந்த வீட்டுத்தேவைக்கு ஏற்றதும், போசணைப் பெறுமானம் கூடியதுமான பயிர்களைத் தெரிவு செய்தல்
- காபோவைதரேற்று கொண்டவை
  - மரவள்ளி, வற்றாளை, குரக்கன், சோளம், தினை
- புரதம் கொண்டவை
  - பயறு, கௌபி, உழுந்து, போஞ்சி, பயற்றை, அவரை, துவரை
- கொழுப்புக் கொண்டவை
  - தேங்காய், சோயா அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயிர்ச்சத்து, கனிப்பொருட்கள் கொண்டவை
  - மரக்கறிகள், இலைக்கறிவகைகள், பழப்பயிர்கள்
- வாசனைப் பயிர்கள்
  - இஞ்சி, மஞ்சள், கறிவேப்பிலை, றம்பை
- மூலிகைப் பயிர்கள்
  - துளசி, தூதுவளை, முடக்கொத்தான்
- வீட்டிலும் சுற்றாடலிலும் உள்ள வளங்களைப் பயன்படுத்தல்
  - இடம், நேரம், முயற்சி, தாவர, விலங்குக் கழிவுகள்
- வருடம் முழுவதும் அறுவடை பெறக்கூடிய விதத்தில் திட்டமிட்டு பயிர்களை நடுதல்.
- சுழற்சி முறையில் பயிர்ச் செய்கையைத் தொடர்ச்சியாகச் செய்தல்
- வேலி ஓரங்களில் முருங்கை, அகத்தி, பப்பாசி, மூலிகைச் செடிகள் போன்றவற்றை நடல்.
- மரத் தேவைக்காக நடுவதற்கு உத்தேசிக்கும் மரங்களை வீட்டை விட்டு தூரத்தில் நடுதல்.
- குசினிக் கழிவுகள், பயிர்க் கழிவுகள், குப்பை கூழங்களை சேமித்து கூட்டெரு தயாரித்து பயிர்களுக்கு இட்டு பயன் பெறல்
- நிழல் உள்ள இடங்களில் மிளகு, மஞ்சள், இஞ்சி, சேம்பு போன்ற பயிர்களை நடுகை செய்யலாம்
- நீர் வடிப்புள்ள, சூரிய வெளிச்சமுள்ள இடங்களில் கங்குன், பொன்னாங்காணி, கொஹில போன்ற இலை மரக்கறிகளை நடுகை செய்யலாம் பூக்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றை வீட்டின் முன்புறம் நட்டு அழகிய சூழலை ஏற்படுத்தலாம்.

**கொள்கலன்களில் நாற்று உற்பத்தி**

**தேவையான பொருட்கள்**

- மேல் மண்
- கூட்டெரு
- சல்லடை
- நிழல் இல்லாத இடம்
- உக்கிய மாட்டெரு
- பொதிகள்
- விதை
- நீர் வடியக் கூடிய இடம்

## நோக்கம்


- தரமான ஆரோக்கியமான நாற்று உற்பத்தி செய்தல்.
- பாதகமான காலத்திலும் நாற்றுக்களை உற்பத்தி செய்தல்.
- போகமற்ற காலங்களிலும் பயிர்களை உற்பத்தி செய்தல்.
- விரைவாக உற்பத்தியை பெறல்.
- அதிக விளைவு பெறல்.
- படுநிலையங்களை குறைத்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்முறை விளக்கம்

### ஊடகம் தயார் செய்தல்



- மேல்மண் அரித்தல்
- உக்கியஎரு அரித்தல்
- கலத்தல்- மேல்மண்: உக்கியஎரு - 1:1
- கொள்கலன்களை தயார் செய்து ஊடகத்தை நிரப்புதல்



- ஊடகமிடப்பட்ட கொள்கலனில் விதையிட்டு நாற்றை உருவாக்கல்



**நடுகை**

- நடுகைக் குழி தயாரித்தல்
- கொள்கலனிலிருந்து வேறாக்கல்
- நடுகை

### கொள்கலன்களில் மரக்கறிப் பயிர்ச் செய்கை முக்கியத்துவம்

- விவசாய இரசாயனங்களற்ற, சுத்தமான உடன் மரக்கறிகளை பெறக்கூடிய, செலவு குறைந்த, இலகுவில்பராமரிக்கக்கூடிய வழி வீட்டுத்தோட்டச் செய்கையாகும்.
- நகரப்புறம், வளம் குன்றிய இடப்பற்றாக்குறையான இடங்களுக்கு இத்தொழில் நுட்பம் ஏற்றதாகும்.
- தாவரங்களின் வளர்ச்சிக்குத்தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து எந்த ஒரு பயிரையும் கொள்கலன்களில் வளர்க்கமுடியும்..

### திட்டமிடலில் கவனம் செலுத்தப்படவேண்டிய விடயங்கள்

- கொள்கலன் தெரிவு
- வளர்ப்பு ஊடகம் தயாரித்தல்
- பயிர்த்தெரிவு
- பயிர் ஸ்தாபித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பயிர் பராமரித்தல்
- பீடை முகாமைத்துவம்
- அறுவடை

**கொள்கலன் தெரிவு**


பயிரின் போசணைத்தேவை, வேர்விடும் தன்மை, பயிரின் வளர்ச்சிக்காலம் என்பவற்றிற்கேற்ப கொள்கலன்கள் தெரிவு செய்யப்படல்வேண்டும்.

- பொலித்தீன் பைகள்
- உரப் பைகள்
- பிளாஸ்ரிக் கொள்கலன்கள்,
- தகரப்பேணிகள்

**வளர்ப்பு ஊடகம் தயாரித்தல்**

பயிருக்குத் தேவையான சகல போசணைப் பொருட்களைக் கொண்ட மண் ஊடகம் தயாரிக்கப்படும்

காற்றூட்டல், நீர்வடியும்திறன், நோய்எதிர்க்கும் திறன் என்பனவற்றை அதிகரித்துக் கொள்ள வளர்ப்பு ஊடகத்துடன் சிறிதளவு கருக்கிய உமியை கலக்கலாம்.




**பயிர்த் தெரிவில் கவனிக்க வேண்டியவை**

- சமவிகித உணவைப் பெறுதல்
- நுகர்வோர் விருப்பு வெறுப்பு
- கிடைக்கக்கூடிய சூரிய ஒளி
- கிடைக்கக்கூடிய நீர்
- பயிரிடப்படும் பருவகாலம்
- சூழல் காரணிகளின் தாக்கம்
- சகித்து வளரக்கூடிய ஆற்றல்
- பீடைகளை எதிர்க்கும் ஆற்றல்
- சந்தைப்பெறுமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடத்தெரிவு**

- நேரடி சூரிய ஒளி
- போதிய இடவசதி

**தவிர்க்கப்படவேண்டிய இடங்கள்**


- வெப்பத்தை தெறிப்படையச் செய்யும் சுவர்கள்
- சீமெந்து நிலங்களுக்கு அருகில்
- கடும்காற்று உள்ள இடங்கள்
- கூரைத்தண்ணீர் விழும் இடங்கள்

**பயிர் ஸ்தாபித்தல்**



- நாற்றுக்களை கொள்கலன் நாற்று மேடைகளில் உற்பத்தியாக்குதல்
- வீரியமான நாற்றுக்களை தேர்ந்து பொருத்தமான கொள்கலனில் நாட்டல்
- கொள்கலனின் பருமன், பயிரின் பருமன், ஒளித்தேவை என்பனவற்றைப் பொறுத்து நாட்டப்பட வேண்டிய பயிர்களின் எண்ணிக்கையானது வேறுபடும்.

**ஒரு கொள்கலனில் ஒரு பயிர்**



**ஒரு கொள்கலனில் ஐந்து பயிர்**



**நீர் பரிபாலனம்**

- நீர் பற்றாக்குறை ஏற்படின் மண் சூடேறும்
- அதிக நீர் ஊற்றினால் வேர்கள் பாதிக்கப்படுவதுடன் வெளியேறும் நீரின் மூலம் கனியுப்புகள் அகற்றப்படுமாகையால் தேவையான போது சரியான அளவு நீரை ஊற்றவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ திரவப்பசளை,கூட்டெருவை இடையிடையே சேர்ப்பதனால் கூடிய உற்பத்தி யைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**வீட்டுத்தோட்டத்தில் பயிரிடக்கூடிய பயிர்கள் பற்றிய சில முக்கிய தகவல்கள்**

| பயிர் | விதை எண்ணிக் கை (1 கிராமில்) | நடுகை இடைவெளி | | | 1 வது அறுவடை பெற எடுக்கும் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| | | வரிசைகளுக் கிடையே (செ.மீ) | பயிர்க ளுக்கி டையே (செ.மீ) | ஒரு குழியில் நாற்றுக் கள்∴ விதைக ள் | |
| பூசணி | 18-25 | 300 | 300 | 1-2 | 90 |
| பாகல் | 3-5 | 150 | 100 | 1-2 | 75 |
| புடோல் | 3-5 | 150 | 150 | 1-2 | 75 |
| பாக்கு | 9-12 | 150 | 150 | 1-2 | 75 |
| கெக்கரி | 30-40 | 100 | 100 | 2 | 45 |
| மரவள்ளி | - | 90 | 90 | 1-2 | 240-270 |
| கத்தரி | 250-300 | 90 | 60 | 1 | 75 |
| வெண்டி | 20-29 | 90 | 60 | 1 | 45 |
| பயற்றை | 8-10 | 90 | 30 | 1-2 | 60 |
| தக்காளி | 300-375 | 90 | 50 | 1-2 | 75 |
| சிறகவரை | 4-6 | 75 | 60 | 1-2 | 90 |
| கொடிபோஞ்சி | 3-5 | 60 | 45 | 1-2 | 60 |
| மிளகாய் | 160-400 | 60 | 45 | 2 | 75 |
| கோவா | 200-350 | 50 | 40 | 1 | 75 |
| செடிபோஞ்சி | 4-6 | 50 | 10 | 1-2 | 45 |
| கறி மிளகாய் | 150-200 | 40 | 40 | 1-2 | 45 |
| பசளி | 40-80 | 30 | 30 | 1 | 60 |
| பீற்றூட் | 50-60 | 30 | 10 | 1 | 75 |
| முள்ளங்கி | 75-140 | 20 | 10 | 1 | 45 |
| கரட் | 750-1250 | 30 | 5 | 1 | 105 |
| கங்குன் | - | 45 | 30 | 1-2 | 60 |
| வல்லாரை | - | 20 | 20 | 2-3 | 60 |
| பொன்னாங்காணி | - | 20 | 20 | 1-2 | 60 |
| முளைக்கீரை | 1900-2000 | 30 | 15 | 1-2 | 45-60 |
| லீக்ஸ் | 350-400 | 5 | 10 | 1 | 150 |

**வீட்டுத்தோட்டத்தில் பீடைக் கட்டுப்பாடு**

**பீடைகளைக் கட்டுப்படுத்த அறிந்திருக்க வேண்டியவை**

✦ பீடைத்தாக்கத்தின் போது பயிரில் ஏற்படும் மாறுபாடன அறிகுறிகள் / சேதங்கள்
✦ ஒவ்வொரு பயிரையும் தாக்கக்கூடிய பீடைகள், பூச்சிகள் பற்றி அறிந்து கொள்ளல் ஒவ்வொரு பீடையினதும்
✦ பயிரில் அவதானிக்கப்பட வேண்டிய பருவங்கள்
✦ சேதம் ஏற்படுத்தும் பருவம்
✦ இனப்பெருக்க முறைகள்
✦ முட்டையிடும் இடங்கள்
✦ மறைவிடங்கள்
✦ பழக்கவழக்கங்கள்
✦ தாக்கும்தன்மை / பெருகும் காலப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீடைகளைக் கட்டுப்படுத்தும் முறைகள்

### 1. பொறிமுறைக்கட்டுப்பாடு

- கையால் பொறுக்குதல் - முட்டை, புழு
- பயிர் மீதிகளை அகற்றல் - வாழை - நீள்மூஞ்சிவண்டு, தென்னை - கருவண்டு
- தரைப்பண்படுத்தல் - வெட்டுப்புழு, குறவன் அழிக்கப்படும்
- தாக்கப்பட்ட பகுதியை நீக்கல்
  - கத்தரி காய் தண்டு துளைப்பான் களைகட்டல்/ கையால் பிடித்து அகற்றல்
- நீரை விசிறுதல்
- தூய்மையாக்கி நீரால் கழுவுதல்
- தூரிகைகளால் துடைத்தல்
- தாக்குப்படக்கூடிய காய்கள், பழங்களுக்கு கவசமிடுதல்
- தாக்கப்பட்ட பகுதிகளை அகற்றி அழித்தல்
- மண் அணைத்தல்
- ஒளிப்பொறி - அந்துகள், வண்டுகள் அழிக்கப்படும்
- உணவுப்பொறி - பழஈ கட்டுப்படுத்தப்படும்
- நிறப்பொறி - மஞ்சள் இலைச்சுரங்கமறுப்பி, அழுக்கணவன்
- ஒலிப்பொறி - கசட் நாடாவைப்பயன்படுத்தி
- உறையிடல் - புடோல் பழஈ கட்டுப்படுத்தப்படும்
- வெறுப்பூட்டும் பயிர் செய்தல்
  - தக்காளி / கோவா பயிர்ச்செய்கையால் கோவா இலையரிபுழு கட்டுப்படுத்தப்படும்
- இயற்கை எதிரிகளைப் பற்றி அறிந்திருத்தல்.

### 2. இயற்கை நாசினிகளைப் பாவித்தல்

- **வேப்பம் விதை:** 20-35 கிராம் விதையை இடித்து ஒரு லீற்றர் நீரில் கலந்து 12 மணிநேரம் ஊறவிட்டுப் பாவித்தல்
- **வேப்பமிலை:** 2 கிலோ இலை 5 லீற்றர் நீரில் பொன்னிறமாக வரும் வரை அவித்து 12 மணிநேரம் ஊறவிட்டுப் பாவித்தல்.
- **மாட்டுச்சலம்:** இருகிழமை புளித்த சலத்தின் ஒரு பங்குக்கு இருபங்கு நீர் கலந்து தெளித்தல்.
- **அடுப்புச் சாம்பல்:** அவித்த சாம்பலை ஆறவிட்டு இலைகளில் தூவுதல்
- **உள்ளிக்கரைசல்:** 100 கிராம் உள்ளியை நன்கு அரைத்து அதன் சாற்றுடன் 2 மே. கரண்டி மரக்கறி எண்ணையை சேர்க்கவும் அத்துடன் 10 கிராம் சவர்க்காரத்தை நன்கு துகள்களாக்கி சேர்க்கவும். இவற்றுடன் ½ லீற்றர் நீரை சேர்த்து 12 மணித்தியாலம் ஊறவிட வேண்டும். இவ்வாறு ஊறிய கரைசலை 20 லீற்றர் நீருடன் கலந்து இம் மரக்கறிப்பயிர்களுக்கு தெளிப்பதன் மூலம் பீடைகளைக் கட்டுப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நோய்க் கட்டுப்பாடு**

**1. வைரசு நோய்கள்** :வைரசால் நரம்பு தெரிவதால் சித்திரவடிவம், மொசாக், இலைச்சுருள், குருக்கன், குருத்தழுகல் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

**கட்டுப்பாடு** :நோயற்ற விதை பாவித்தல், நோயுற்றவற்றை பிடுங்கி அழித்தல், நோயைக் காவும் பூச்சிகள் கட்டுப்படுத்தல், களைகளைக் கட்டுப்படுத்தல், உபகரணங்களை தொற்று நீக்கி பாவித்தல் எதிர்ப்பினம் நடல்.

**2. பற்றீரியா நோய்கள்** :மென்னழுகல், வாடல், கங்கர், இலைப்பள்ளி, கொப்பு வெளிறல்.

**கட்டுப்பாடு** :பாதிக்கப்பட்ட தாவரத்தை அகற்றல், பயிர் சுகாதாரம் சுழற்சி முறைப்பயிர் செய்கை, எதிர்ப்பினம் இடல்

**3. பங்கசு நோய்கள்** :பழ அழுகல், இலைப்புள்ளி, முற்கூற்று பிற்கூற்று வெளிறல், பூஞ்சணம். துரு, கொப்பு வெளிறல், எரிபந்தம்.

**கட்டுப்பாடு** :மண்ணைத் தொற்று நீக்கல், விதையைத் தொற்று நீக்கல், ஈரலிப்பைக் குறைத்தல், நோய்ப்பட்ட பகுதியை நீக்கல், போடாக்கலவை விசிறல்.

போடோக் கலவை 30 கிராம் செப்பு சல்பேற்றை ½ லீற்றல் நீரில் கரைக்கவும், 30 கிராம் சுண்ணாம்பை 1 ½ லீற்றல் நீரில் நன்றாகக் கரைக்க வேண்டும். பின்னர் சுண்ணாம்பு சலவையினுள் மெதுவாக செப்பு சல்பேற்றை ஊற்றி மெதுவாக தடியினால் கலக்கவும். பிளாஸ்ரிக் அல்லது மரப்பாத்திரங்களை மட்டும் பாவிக்க வேண்டும். கலவை தயாரித்தவுடன் பாவித்து முடிக்க வேண்டும்.

கத்தரி. தக்காளி. மிளகாய் என்பனவற்றில் ஏற்படும் காய் துளைப்பான் பீடையை கட்டுப்படுத்த உயிரியல் நாசினியை தெளிக்கலாம். இவை மனிதர்களுக்கோ ஏனைய பறவை, விலங்குகளுக்கோ தீங்கு விளைவிக்க மாட்டாது.

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VITHTHY STORES

அனைத்து வகையான மளிகைப் பொருட்களையும்
ஓரே இடத்தில் பெற்றிட உங்கள் நம்பிக்கையான தெரிவு

## வித்தி ஸ்ரோர்ஸ்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

# பவகரன் களஞ்சியம்

அன்றாட வீட்டுத்தேவைக்கான பொருட்களை
மலிவாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்ள

## PAVAKARAN STORES

வெள்ளருவப் பிள்ளையார் கோவில் வீதி, கோப்பாய் மத்தி.

# P.M STORES

அனைத்து வகையான மளிகைப் பொருட்களையும்
ஓரே இடத்தில் மலிவாக பெற்றிட
உங்கள் நம்பிக்கையான தெரிவு

## குலம் கடை

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

# THARSAN STORES

அனைத்து வகையான மாளிகைப் பொருட்களையும்
ஓரே இடத்தில் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள
உங்கள் நம்பிக்கையான தெரிவு

## தர்சன் ஸ்ரோர்ஸ்

Point pedro Road, Kopay Junction. பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச்சந்தி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SURES BICYCLE WORKS

சைக்கிள் திருத்தம் செய்தல் வேலைகளை
திறமையாக செய்திட உங்கள் ஒரே தெரிவு

## சுரேஸ் சைக்கிள் வேக்ஸ்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.


---

# பிரகாஸ் ரயர் வேக்ஸ்

சகல வகையான ரயர் வேலைகளும் திறமையாக செய்து கொள்ள



## PIRAKAS
## TYRES WORKS



Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

---

# KAJAN MOTORS

அனைத்து வகையான மோட்டார் சைக்கிளும்
திருத்தம் செய்தல், சுத்திகரித்தல் வேலைகளை
திறமையாக செய்திட உங்கள் அபிமானம் பெற்ற

## கஜன் மோட்டோர்ஸ்

Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.

---

# NERO SALOON

ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லோரும்
முடிஅலங்ரிப்பு வேலையை செய்திட உங்கள் அபிமான தெரிவு

## நிரோ சலூன்


Manipay Road, Kopay. மானிப்பாய் வீதி, கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஏற்பட்டு வரும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி

வளர்முக நாடுகளில் தகவல் தொழில்நுட்பத்தை விருத்தி செய்யும் பணிகளும் அதனூடாக சர்வதேச பொருளாதாரத்தைப் பெருக்கும் முயற்சிகளும் அரச மட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் சமகாலத்தில் அத்தகைய பணியில் இலங்கையும் ஆர்வத்துடனும் அதிக எதிர்பார்ப்புடனும் களமிறங்கியுள்ளது. இலங்கையின் பிரதான பொருளாதார மூலமாக எற்றுமதி வர்த்தகம் விளங்குவதுடன் இவ் ஏற்றுமதிக்காகவென மேற்கொள்ளப்படும் கைத்தொழிற் துறைகள் விரிந்த பகுதியைக் கொண்டதாகவும் விளங்குகின்றன.



**திரு. க. நிதர்சன்**
ஆசிரியர்,
கலைவாணி கல்வி நிறுவனம்.

இலங்கையின் உள்நாட்டு உற்பத்திகள் 54% வளர்ச்சியை கடந்த 2003ல் காண்பித்த போதிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை குறிப்பாக கணினி மென்பொருள் தயாரிப்புத்துறை இவ்வளர்ச்சிகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை.

இலங்கையில் கணினி மென்பொருள் துறை மிகக் குறைந்த வேகத்திலேயே வளர்ச்சி கண்டு வருகின்றது. உள்ளூர்த் தேவைகளுக்காகவும் குறைந்தளவிலான வெளிநாட்டு ஏற்றுமதிகளுக்காகவும் தயாரிக்கப்படும் மென்பொருள்களினூடாக 1996 வரை 5 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 2001 வரை 58 மில்லியன் அமெரிக்க டொலர்களும் 2003 வரை 80 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கைக்கு வருமானமாகக் கிடைத்தன.

2010ல் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானத்தை இம்மென் பொருள் துறை மூலமாக ஈட்டிக் கொள்ள முடியும் என பொருளியலாளர்களால் எதிர்வு கூறப்பட்டது.

உள்நாட்டுச் சந்தைகளுக்காகவும் ஏற்றுமதிகளுக்காகவும் மென்பொருள் உற்பத்திகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வரும் 200க்கு மேற்பட்ட மென்பொருள் அபிவிருத்தி நிறுவனங்கள் இலங்கையில் உள்ளன. அத்துடன் புகழ்பெற்ற மைக்ரோ சொப்ட் மற்றும் ஒராகில் ஆகிய நிறுவனங்களும் தமது அலுவலகங்களை இலங்கையின் தலைநகரில் திறந்துள்ளன.

இவை பாடசாலை பல்கலைக்கழகம் மற்றும் திறந்த மட்டங்களில் போட்டி களை நடாத்தி தமது சொந்த உற்பத்திகளுக்கான பிரசார மற்றும் விநியோகப் பணிகளில் ஈடுபடுவதுடன் இலங்கையிலுள்ள கணினி ஆர்வலர்களை இனங்கண்டு அவர்களை விருப்பமான துறைகளில் ஊக்குவிக்கும் பணிகளிலும் ஆர்வம் காட்டி வருகின்றன.

தற்போது உலகில் நிலவி வரும் திறந்த வள மென்பொருள் முறைமை Open Source Software System இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையை எழுச்சி பெறச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கும், பூகோளக் கணினித் துறையில் இலங்கை முன்னணி வகிப்பதற்குமான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

திறந்த வள செயற்திட்டங்களில் பங்கு கொள்ளும் பெரும்பாலான கணினி அபிவிருத்தியாளர்கள் (Developers) அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டவர்களாக இருக்கின்ற அதேவேளை வெகு சொற்பமான சிலரே ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். எனினும் இந்த உண்மை இலங்கையைப் பெருமளவு பாதிக்க வில்லையாயினும் மென்பொருள் உற்பத்தியாளர்களின் தோற்றமும் அதிகரிப்பும் இலங்கையில் மிகக் குறைந்தளவிலேயே இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

'லங்கா மென்பொருள் ஸ்தாபனம் (Lanka Software Foundation) என்பது திறந்த வள உலகினால் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்தி அதனூடாக இலங்கைக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். இவ் ஸ்தாபனம் கொழும்பு மற்றும் மொரட்டுவ ஆகிய பல்கலைக்கழகங்களிலும் இலங்கை தகவல் தொழிநுட்ப நிறுவனத்திலும் SLIIT உள்ள ஆய்வுகூடங்களை அபிவிருத்தி செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் ஜாவா, சிப்ளஸ் மொழிகளிலான செயற்றிட்டங்களிலும் பங்கெடுத்து வருகின்றது.

இலங்கையில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் மாற்றங்களும் கணினி அபிவிருத்திப் பணிகளும் அதன் தொழில்நுட்ப விருத்திக்கான புதிய அணுகுமுறைகளை இனங்காண்பித்துள்ளன. இவ்வணுகுமுறைகள் புதிய மென்பொருள் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக் கூடிய நன்கு திறன் விருத்தி செய்யப்பட்ட உலகத் தரம் வாய்ந்த அதிக மென்பொருள் கட்டுமாணப் பணியாளர்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை பரவலாக ஏற்பட்டு வருகின்றது.

1996 லிருந்து உலகின் நவீன தகவல் தொழில்நுட்பங்களை உள்வாங்கிக் கொள்வதில் இலங்கை ஆர்வம் காட்டி வருகின்றது. 1985களுக்குப் பின்புதான் கணினிப் பாவனை இலங்கையில் அறிமுகமானபோதிலும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பரவலாக அது பாவனைக்கு வந்தது 1996க்குப் பின்புதான். தற்போதைய நிலையில் ஒரு நிறுவனத்துக்கு அல்லது ஓர் அலுவலகத்துக்கு அவசியப்படும் முதன்மைத் தளபாடமாக கணினி மாறிவிட்டது. இது இலங்கையின் தொழிநுட்ப வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

அவ்வாறே தமக்கென மின்னஞ்சலையும் இணையத்தளத்தையும் கொண்டிருக்கும் நிலையை ஒவ்வொரு நிறுவனமும் அதற்கு மேல் ஒவ்வொரு தனிநபரும் பெற்றுள்ளனர்.

இணையத்தைத் தமது கல்வி, பொருளாதார மற்றும் பொழுதுபோக்குத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் வழக்கத்தை நகர்ப்புறங்களில் உள்ள பெரும்பாலானோரும் கிராமப்புறங்களில் உள்ள சிறுதொகையினரும் கொண்டிருக்கின்றனர். இணையத்தளப் பாவனை மிக வேகமாக வளர்ந்து வரும் நடைமுறையாக சராசரியாக இலங்கை முழுவதும் அவதானிக்கப்படுகின்றது.

1996ல் 2504 ஆக இருந்த இணையக் கணக்குகள் (Internet Accounts), 2003ல் 85500 ஆகவும், 2008ல் 200000 ஆகவும் அதிகரித்துள்ளது. 2000க்கு முன்னர் சுமார் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களாக ஏற்பட்டு வந்த அதிகரிப்பு வீதத்திலும் பார்க்க கூடிய அதிகரிப்பை கடந்த 2008ன் ஒரே ஆண்டில் மட்டும் அவதானிக்க முடியுமாக இருக்கின்றமை விசேட அம்சமாகும். இவ்வதிகரிப்புக்கான சாத்தியங்களில் தனிநபர் கணினிப் பாவனைப் பெருக்கம், தொடர்பாடல் நிறுவனங்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் காண்பிக்கும் போட்டி, அதற்காக வழங்கும் சலுகைகள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

எனினும் அயல்நாடான இந்தியாவுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வளர்ச்சி வேகம் என்பது மிகத் தாமதமாகவே நிகழ்ந்து வருகின்றது. ஏனெனில் தகவல் தொழிநுட்பத் துறையில் இந்தியாவானது அமெரிக்காவுக்குப் போட்டியாக எழுந்து நிற்கும் ஒரு நாடாகும். அமெரிக்காவின் பொருளாதாரத் துறை விருத்திக்கான பெரும் பங்களிப்பை தகவல் தொழில்நுட்பத் துறை வழங்குகின்ற போதிலும் அமெரிக்காவின் தகவல் தொழிநுட்பத்துறையில் பெரும் பங்கு வகிப்போர் இந்தியர்களாவர்.

அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை இந்தியாவில் கற்று உயர் கல்விக்காக அமெரிக்காவுக்குச் சென்று அங்கு தமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்து உயர்ந்த சம்பளத்துடன் ஒரு வேலையையும் தேடிக் கொண்டு அங்கேயே குடியமர்ந்தவர்கள். இன்று அந்த இந்தியர்கள் இல்லையெனில் அமெரிக்காவின் தகவல் தொழில்நுட்பத்துறை ஒரேயடியாகக் கீழே விழுந்து விடும் என்ற நிலையுள்ளது.

இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மிகத் தாமதமாகவே தோன்றியதெனினும், மிகத் துரிதமாக வளர்ச்சி கண்ட ஒன்றாகும். இந்தியாவில் 3000க்கு மேற்பட்ட நிறுவனங்கள் மென்பொருள் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகின்றன. 1996ல் 734 அமெரிக்க டொலர்களாக இருந்த மென்பொருள் ஏற்றுமதி வர்த்தகம் 2001ல் 6,200 மில்லியனாக வளர்ந்தது. 2010ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி இரண்டு இலட்சம் மில்லியனுக்கு மேற்பட்ட அமெரிக்க டொலர்கள் வருமானத்தை இந்தியாவின் தகவல் தொழிநுட்பத்துறை ஈட்டியுள்ளது.

இந்தியாவின் பெரும்பாலான திணைக்களங்கள் தகவல் தொழில் நுட்பத்தினூடாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான நகரங்களில் பொலிஸ் சேவைகள் மற்றும் நிருவாக சேவைகள், நீர்க்கட்டணம், மின்சாரக் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் மற்றும் வரிகள் முதலான கட்டணச் செலுத்தல்கள் என்பன இன்டர்நெட் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும் உண்மையில் இந்தியா கணினித்துறையில் பெருவளர்ச்சி கண்ட ஒரு நாடு அல்ல. உலக வங்கி 2001ல் வெளியிட்ட மதிப்பீட்டு அறிக்கையொன்று, கணினிப் பாவனையாளர்களை அதிகமாகக் கொண்ட முதல் 14 நாடுகளைப் பட்டியலிட்டிருந்தது.

அதில் 1000 பேருக்கு 510 பேர் தொடர்ச்சியாகக் கணினியைப் பயன் படுத்துவோர் எனும் விகிதத்தில் ஐக்கிய அமெரிக்கா முதலிடத்திலும் 1000 பேருக்கு 360 பேர் எனும் விகிதத்தில் கனடா இரண்டாம் இடத்திலும் 1000 பேருக்கு 297 பேர் எனும் விகிதத்தில் ஹொங்கொங் மூன்றாம் இடத்திலும் இடம்பிடிக்க இந்தியாவோ 1000 பேருக்கு 3 பேர் எனும் விகிதத்தில் இறுதி ஸ்தானத்தையே பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தவிர, இன்டர்நெட் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் இன்டர்நெட் பாவனைகளை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் 'குளோபல் இன்பேர்மேஷன் டெக்னோலஜி' எனும் அமைப்பு 2007ல் வெளியிட்ட தரப்படுத்தல் ஒன்றில் டென்மார்க், சுவீடன், சிங்கப்பூர், பின்லாந்து, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா, ஐஸ்லாந்து, பிரித்தானியா, நோர்வே என்பன முறையே உலகின் முதற்பத்து (டொப் டென்) நாடுகளாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் இந்தியா 44ம் இடத்தையும் இலங்கை 86ம் இடத்தையும் பெற்றிருந்தன.

இத்தகைய தரப்படுத்தல்களில் முதனிலை நோக்கி முன்னேற வேண்டுமாயின் அதற்காக இலங்கை கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மற்றும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களும் கொள்கைகளும் இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சியில் தாக்கம் செலுத்தத் தொடங்கி விட்டுள்ள நிலையில் அவற்றுக்கு மேலதிகமாக துறைசார்ந்த விற்பன்னர்களையும் நிபுணர்களையும் உருவாக்குவதற்கும் இலங்கை அரசு துரித முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப பாடவிதானங்கள் இலங்கையில் கணினிப் பாவனையின் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகியுள்ளன. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கணினி கற்கை நிலையங்களையும் கணினி ஆய்வுகூடங்களையும் அமைப்பதற்காக திறைசேரியின் ஊடாக நிதி ஒதுக்கி இலவச கணினிகளையும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்பக் கருவிகளையும் வழங்குவதற்கும் அவற்றில் கற்பிக்கும் ஆசிரியர்களை இலவச கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் மூலமாக வளப்படுத்துவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவைதவிர இவ்வாண்டு தகவல் தொழில்நுட்ப ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டமையும் ஈ-ஸ்ரீலங்கா உள்ளிட்ட முன்மொழிவுகளும் இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற்கான சிறந்த முயற்சிகளாக விளங்குகின்றன.

இத்தகைய திட்டங்களின் பயனாக மூத்த தலைமுறையினர் தவிர்ந்த ஏனையோர் தகவல் தொழில்நுட்பத்துடன் மிகச் சிறியளவிலேனும் பரிச்சயம் கொண்டவர்களாக மாறிவருகின்றனர். குறிப்பாக சிறுவர்கள் தமது கல்வி பொழுது போக்குத் தேவைகளுக்காக கணினியைப் பயன்படுத்தும் வீதமும் அதிகரித்து வருகின்றது.

இத்தகைய ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதற்காக அரசுக்கு நன்றி செலுத்த வேண்டியதுடன் வழங்கப்படுகின்ற இத்தகைய பெரும் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தி, தமது துறைசார் திறனையும் தகைமையையும் வளர்த்துக் கொண்டு அவற்றினூடாக தமக்கும் தமது தாய்நாட்டுக்கும் பெருமை சேர்ப்பது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் பாடுபடுவதும் இலங்கை மக்கள் அனைவர் மீதுமுள்ள முக்கிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் தகவல் தொழில்நுட்ப துறையானது எதிர்கொண்டுள்ள சவால்கள்**

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையானது இலங்கையில் மிக விரைவாக வளர்ச்சியடைந்து வருகின்ற போதிலும் இத்துறையில் வேலைக்கமர்த்த போதியளவு நிபுணத்துவம் மிக்க ஊழியர்களை பெறுவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் முறையான இடவசதிகளை பெறுவதிலும் வேகமான இணையத்தள வசதிகளை பெற்றுக் கொள்வதிலும் சிக்கலான நிலைகள் காணப்படுவதாகவும் இந்த நிலை தொடருமானால் எதிர் காலத்தில் இத்துறை பாரிய சவால்களை எதிர் கொள்ள நேரிடுமென பிரைஸ்வோட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனத்தின் மேற்கொள்ளப்பட்டிருந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

பிரதான தடங்கலாக வாகனத்தரிப்பிட வசதியுடன் கூடிய தரமான தொழில் அலுவலகங்கள் சாதாரண விலையில் பெற்றுக் கொள்ள முடியாமல் அமைந்துள்ளதென ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உயர் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில அறிவுடைய நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை போதியளவு இல்லை எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் பிபீஓ துறைகளை சேர்ந்த நிறுவனங்கள் பெருமளவான செலவீனங்களை தமது தொடர்பாடல் பிரிவில் மேற்கொண்டிருந்த போதிலும் உயர் வேக இணைய சேவை வழங்குநர்களின் மூலம் வழங்கப்படும் தரமற்ற சேவைகளின் மூலமாகவும் இந்த துறையில் பின்னடைவு ஏற்படுவதாக ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த துறையானது தகவல் தொழில்நுட்பத்துறையில் வளர்ச்சியடைந்து வரும் இதர நாடுகளிலிருந்தும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. இந்தியா மற்றும் கிழக்கு ஐரோப்பா மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் காணப்படும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஜாம்பவான்களாகிய நிறுவனங்களின் மூலம் சவால்களை எதிர் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH SHOULD BE MADE COMPULSORY IN OUR SCHOOL CURRICULUM

BY. V. THAYAKARAN.
Teacher,
Kalaivani Education Institute



"English, as a subject, should be made compulsory in our school curriculum"

Number of scholars and educationists have on several occasions put forward this proposal for the consideration of the government. But it has not yet been paid the proper attention by the planning body of the Ministry of Education. However, having well realized the importance of English the so called scholars and educationists have submitted the suggestion to the country's educational policy makers.

Although English is treated as one of the subjects in our schools, beyond that it is a language which is spoken in most parts of the world. So it is called the international language. The people in Britain are the owners of the English language. Even though there are number of people in other countries who are native speakers of English. For example, English functions as the mother tongue of the people in countries like Canada, Australia and Germany. As far as multi-lingual country like Srilanka is concerned, English plays a specific as a link language. Being a link language, it shortens the gap among the people from different communities too.

Speaking about the importance of English, most of the printed materials in various branches of education are available only in English. If a person wants to widen his knowledge in any desired branch of education, he must have a basic knowledge of English. So English expands our knowledge in various fields.

And also English is a must for higher education. Without having a sound knowledge in English one cannot follow any higher education courses because the relevant books are found only in English. Without a basic knowledge in English nobody can refer to those books.

At the same time, translating all those books in to one's native language is also a very difficult and time – consuming job. On the other hand, the words may lose their



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

originality when they are translated from English to another language. Then the translated script will not convey the real meaning as in the original English script. For example, when a medical term or a computer term is translated from English to Tamil we can hardly understand the meaning as it has in English. The reason for this problem is that every language has a unique nature. When we translate a certain material, this uniqueness makes an impact on it.

Considering all these things, we are able to come to a conclusion that we have to absorb any kind of learning material in its original language it self to have a perfect understanding. At this juncture, the importance of English is very clearly understood.

As indicated above, English is not only used for the academic purposes. It is used for many other purposes as well. For example in the fields such as telecommunication, space research, aviation and navigation. English is the language which is used in their operations. English language has a special characteristic which is hardly observed in the other languages. We can give more messages in less time if we speak in English. This is the reason for what the above mentioned fields use English for their functions and operations.

Next to that, our people are migrating to foreign countries for various purposes. Now a days, in particular, they fly to countries overseas in search of a better income, that is to have a sound financial capacity. In these types of situations if they have a good command in English they can survive in any corner of the world finding well-paid jobs as well.

There is another very important aspect that we have to take into our consideration. We know that there are so many well-learned intellectuals living among us. But most of them have a defect in the knowledge of English. If they had paid the due attention at the proper time in this side they would have achieved very top level positions in their lives. So we should not allow this tendency to continue during the time of our coming generation too. We have to be very cautious that our kids are taught English properly and made standard in the field The only way to achieve all these targets is to make English as a compulsory subject in our school curriculum. The government and the related ministry should seclere English also a compulsory subject as mathematics to follow the advance level instructions. In some of our schools the English medium education has been introduced for certain classes. It is really a good sign. But this is not enough. If we want to see a perfect advancement in our children, as said earlier, the government should immediately take all the possible measures to make English as a compulsory subject. Without having it as a word of mouth we have to have it in practice as early as possible.

❏❏❏



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச அபிவிருத்தியில் வங்கிகளின் பங்களிப்பு

## *Role of Banking Sector in Regional Development*

*சி. திருச்சொந்தூரன்*
BA (HONS) in Planing
MA in Public Administration

பிரதேசம் என்பது தனக்கேயுரிய அடிப்படைப் பண்புகளைக் கொண்டுள்ள ஓர் பரப்பை குறிக்கின்றது. இத்தனிப்பட்ட பண்புகளே குறித்த ஓர் பிரதேசத்தை ஏனைய பிரதேசங்களில் இருந்து வேறுப்படுத்திக் காட்டும் தனிச்சிறப்பாகும். எந்தவொரு பிரதேச அபிவிருத்தியும் குறித்த பிரதேச கட்டமைப்பைச் சரிவர விளங்கிக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. இவ்வகையில் பிரதேச அபிவிருத்தி நோக்கில் கோப்பாய் பிரதேசத்தை விளங்கிக் கொள்வதும் கடினமானது.

கோப்பாய் பிராந்தியம் சனச்செறிவுள்ள விவசாயப் பின்புலத்தைக் கொண்ட பிராந்தியமாகும். இடவளர்சசியும் மக்கள் வளர்ச்சியும் சம வளர்ச்சியுடையதாக அமையும் போதே பிரதேச அபிவிருத்தியும் சாத்தியமாகும். ஆனால் கோப்பாய் போன்ற பிரதேசங்களில் மக்கள் வளர்ச்சியும் இடவளர்ச்சியும் சம வளர்ச்சியுடையதாக உள்ளதா என்பதே பிரதான கேள்வியாகும். இதற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்.

(1) நகர உருவாக்கவியல்புக்கள் கட்டமைக்கப்படாமை.
(2) சமூக பொருளாதார உட்கட்டமைப்புக்கள் (Social – Economic intra structure) அபிவிருத்தி அடையாமை.
(3) அபிவிருத்திக் கலாசாரம் (Development Culture) மக்களிடையே குறைவாக காணப்படுதல்.
(4) பாரம்பரிய தொழில் முயற்சிகளில் நாட்டம் கூடுதலாக இருத்தல்.
(5) பழமைவாத சிந்தனைகளின் போக்கு மக்களிடையே புரையோடியிருத்தல்.
(6) நகர்நோக்கிய இளுவிசைக் காரணிகளது செல்வாக்கு அதிகமாக காணப்படுதல்.
(7) வறுமையும் - வேலையின்மையும் மக்களை மலினப்படுத்தி வருகின்றமை போன்ற பல காரணங்களை குறிப்பிட முடியும்.

பிரதேசங்கள் பொருளாதார ரீதியாகவும் சமூகரீதியாகவும் தனிமைப் படுத்தப்படக் கூடாது. இவ்வாறு புறந்தள்ளப்படுவதனை மத்திய நிர்வாக மையங்கள் சரியாக இனங்கண்டு அதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே பிரதேசங்கள் வளர்ச்சியடைய முடியும். இவ்வகையில்

**(1) அடிப்படைத்தேவைகளை பெறுவதிலுள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும்.**
உதாரணமாக கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு வசதிகள், வங்கிச்சேவைகள், குடிநீர் வழங்கல், மருத்துவம் என அனைத்து தேவைகளும் இலகுவாக கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) வேலைவாய்ப்பினை நோக்காகக் கொண்டு இடம்பெறும் நகர்நோக்கிய தொழிற்படை அசைவினை (Mobility) படிப்படியாக குறைத்தல் வேண்டும். குறிப்பாக பிரதேசத்திற்கேயுரிய தொழிற்துறைகளான விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும். விவசாய மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில் முயற்சிகள் (Agro based industry) வளர்ச்சியடைய வேண்டும்.

(3) வறுமை மற்றும் வருமான சமமின்மைகளை குறைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(4) புதிய தொழில்நுட்ப முறைகளின் வருகையை உள்நுழைய செய்தல் வேண்டும்.

(5) பொருளாதார சமூக உட்கட்டமைப்புக்களின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தல் வேண்டும்.

(6) மனிதவள மேம்பாட்டை விருத்தியடைய செய்தல்.

(7) கிராமிய மக்களை பலமுள்ளவர்களாக்குதல். (empowerment)

(8) பால்நிலை வேறுபாடுகளை களைதல்.

(9) கிராமியப் பாதுகாப்பை ஏற்படுத்தல்.

போன்ற செயற்பாடுகளை செய்வதன் மூலம் பிரதேச அபிவிருத்தி நோக்கி மக்களை வழிப்படுத்த முடியும். இவ்வகையில் மேற்குறித்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் வங்கிகளின் வகிபாகம் என்ன? எந்தவொரு பிரதேசத்திலும் வளர்ச்சிக்கான உந்துவிசைகளை வங்கிகளோ/நிதிசார் நிறுவனங்களோ ஏற்படுத்தி யிருக்கின்றன. பொதுவாக சேமிப்புக்களை வைத்திருப்போரையும் அச்சேமிப்பு தேவைப்படுவோரையும் ஒன்றிணைக்கின்ற இடமாக தொழிற்பட்ட வங்கிகள், இன்று நவீனத்துவத்தின் திறவுகோல்களாகவும் மாறியுள்ளன. இதனால்

(1) கிராமிய வறுமை தணிக்கப்பட்டு வருகின்றது. உதாரணமாக இலங்கை மத்திய வங்கி வணிகவங்கிகளினூடாக நடைமுறைப்படுத்திவரும் நுண்பாக வறுமை ஒழிப்பு செயற்றிட்டத்தின் மூலம் (Poverty Alleviation Micro Finance project) படிப்படியாக கிராம மட்டங்களில் வறுமை தணிக்கப்பட்டு வருகின்றது.

(2) பாரம்பரிய தொழில் முயற்சிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

எமது ஜீவனோபாய தொழில் முயற்சிகளான விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன் பிடி போன்றன நிதி வளங்களது பற்றாக்குறையினால் எம்மை விட்டு விலகிச் செல்லாது எம்முடன் தொடர்ந்து இருப்பதற்கான முயற்சிகளை வங்கிகள் தமது கடன் வழங்கலூடாக ஏற்படுத்தி வருகின்றது.

உதாரணமாக விவசாயத்துறை வளர்ச்சியை இலக்காகக் கொண்டு மத்திய வங்கியின் நிதி உதவியுடன் வணிகவங்கிகளினூடாக நடைமுறைப்படுத்தி வரும் "NCRCS" (New Comprehensive Rural Credit Scheme) எனும் விவசாய கடன் திட்டமும் மீன்பிடித்துறையின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டது. "Diyawaradiriya' கடன் திட்டமும் குறைந்த வட்டியுடன் நிலைத்து நிற்கும் அபிவிருத்தி (Sustainable Development) நோக்கி பிரதேசங்களை வளர்ச்சி பெறச் செய்வதற்கு வங்கிகள் வழங்கும் சலுகைகளாகும். இவற்றின் மூலம் வங்கிகள் விவசாயிகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ வலுவுள்ளவர்களாக மாற்றுகின்றது.
✦ தலைமைத்துவ பண்புடையவர்களாக மாற்றுகின்றது.
✦ முயற்சியாளர்களாக பரிணமிக்கச் செய்கின்றது.
✦ எதிர்பாராமல் ஏற்படும் இடர்களினாலும் நிதிசார் இடர்களிலிருந்தும் விவசாயிகளை பாதுகாக்கின்றது.
✦ வருமான மட்டத்தை உயர்த்தி வருமான ஏற்றத்தாழ்வினை இல்லாதொழிக்கின்றது.
✦ மற்றையோரில் தங்கி வாழும் நிலையை இல்லாமல் செய்கின்றது.

(3) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவித்து வருதல். (Small and medium industries) உதாரணமாக போரால் பாதிக்கப்பட்ட வடக்கின் தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பு செய்ய மத்தியவங்கியின் நிதி உதவியுடன் வணிக வங்கிகளினூடாக நடைமுறைப்படுத்தி வரும் "வடக்கின் வசந்தம்" (Awaking North) கடன் திட்டத்தின் மூலம் உள்நாட்டு தொழில் முயற்சியாளர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

(4) புனர்வாழ்வு (Rehabilitation) புனரமைப்பு (Reconstruction) செயற்பாடுகளுக்கு நிதி உதவி வழங்கி வருகின்றமை.
(5) மக்களின் வாழ்விடங்களை நோக்கி தனது சேவை மையங்களை விஸ்தரித்து வருகின்றமை. இதனால் மக்களிடையே வங்கிசார் பழக்கவழக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.
(6) இணைய வங்கிச் சேவைகள் (e – banking) தொலைபேசி முறையூடான வங்கிச் சேவைகள், (Mobile banking facilities) நடமாடும் வங்கிச்சேவைகள் போன்றவற்றின் மூலம் உடனடி வங்கிச் சேவைகளையும் நவீன எண்ணக்கருக்களையும் மக்களிடையே புகுத்தி வருகின்றன.
(7) நிதிசார் ஆலோசனைகளை மக்களுக்கு வழங்கி பணசுற்றோட்டத்தையும், பணவாக்க செயற்பாடுகளையும் இலகுபடுத்தி வருகின்றது.
(8) வெளிநாட்டு பண அனுப்புதல்கள் (e – cash) வாகன குத்தகை வசதிகள் (Leasing) சர்வதேச வர்த்தக செயற்பாடுகளுக்கான வசதிகள் (International trade) போன்றவற்றி னூடாகவும் மக்களுக்கு உடனடிச் சேவைகளை வங்கிகள் வழங்கி வருகின்றன.

இதன் மூலம் பிரதேசங்கள் தன்னிறைவுடையதாகவும் பொருளாதார வளர்ச்சியுடையதாகவும் இருப்பதற்கு வங்கிகள் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கின்றன. இவ்வகைப்பட்ட அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை கோப்பாய் இலங்கை வங்கிக் கிளையும் பிரதேச அபிவிருத்திக் கண்ணோட்டத்துடன் செயற்படுத்தி வருகின்றதென்றால் மிகையாகாது.

❑❑❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SELVAN DIESAL ENGINEERS

Automotive Engineers,
Turning Workers,
Complete Lines For
Vehicle Repairs and
Reconditions.

சகலவிதமான டீசல் என்சின்களும்
நுட்பம் மிக்க வல்லுனர்களினால் திருத்தம்
செய்துகொள்ள நாடவேண்டிய இடம்

# செல்வன்

# டீசல் என்ஜினியரிங்

*T.P: 021 222 7276*

**Point Pedro Road,**
**Kopay Junction.**

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்ச்சந்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THARAN DOLD HOUSE

தரமான 916 நகைகள்

கண்கவர் 22கரட் தங்க நகைகளை
ஓடருக்கு பெற்றிட நம்பகமான ஸ்தாபனம்

# தரன் நகை மாளிகை

M.M.V Road,
Nelliady, Karaveddy.

ம.ம.வி. வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

Tele: 021 320 1690

# மலர் மிஷா மல்ரி சொப்

சகல வகையான அன்பளிப்புப் பொருட்கள்,
அழகு சாதனப் பொருட்கள்,
மற்றும் பாடசாலை உபகரணங்கள்
நியாய விலையில் பெற்றுக் கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்

# MALAR MESHA MULTI SHOP

Navalady Lane,
Kopay South.

நாவலடி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை

<u>எமது பிரதேசத்தில் இப்பரீட்சையில் ஆசிரியர், மாணவர், பெற்றோர் - பங்கு</u>

**மெத்தப் பெரிய படிப்பு படித்து மேதையாக வரவேண்டும் என நினைத்து என் அப்பன் தொப்பை யப்பனுக்கு தேங்காய் உடைத்து தரம் ஐந்திற்கு அனுப்பி வைப்பார்கள்**

*திரு. எஸ்.கார்த்தீபன்,*
ஆசிரியர்,
கலைவாணி கல்வி நிறுவனம்



**அன்பான பெற்றோர்களே!**

இச்சிறார்கள் உங்கள் பிள்ளைகள். அவர்களை கற்பிக்கும் பொறுப்பு உங்கள் கைகளிலேயே உள்ளது. அளவுக்கதிகமாக அவர்களுக்கு ஊட்ட நினைக்காதீர்கள். குறிப்பாக தரம் ஐந்தில் பாடசாலைகளிலும், கல்வி நிலையங்களிலும் பயிற்சியளிக்கும் வினாத்தாள்களே அதிகமாக இருக்கும். இச்சந்தர்ப்பத்தில் அவர்களை மீண்டும் வீட்டில் மீட்டல் செய்ய ஊக்கம் கொடுங்கள். கண்ட கண்ட இடங்களில் இருக்கும் வினாத்தாள்களை எல்லாம் வாங்கி அவர்களுக்குச் சலிப்பு ஏற்படுத்தாதீர்கள். "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பதற்கு இணங்க எதையும் அளவுடன் நிறுத்திக் கொள்ளுங்கள்.

மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் பாடசாலைகளுக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்குமாக இலங்கை அரசினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் புலமைப் பரிசில் பரீட்சையும் ஒன்றாகக் காணப்படுகின்றது. அவ்வகையில் க.பொ.த (சாதாரண) தரம், க.பொ.த. (உயர்தரம்) என்பவையும் முக்கியமானவையாக கருதப் படுகின்றன. புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை நெறிப்படுத்துபவன் எனும் வகையில் எனது அனுபவத்தின் ஊடாக அனுபவித்த விடயங்களை பேனா முனை கொண்டும், இவ் இதழின் துணை கொண்டும் உங்கள் மனதில் விதைக்க முயல்கின்றேன்.

ஆரம்பக்கல்வித் துறைக்கும் முக்கிய தேவையாக இப்பரீட்சையை நோக்க வேண்டும். இப்பரீட்சையில் சித்தியடைவதற்கு அல்லது உயர்புள்ளியை பெறுவதற்கு மாணவர்களை தயார்ப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். கிராம மட்டத்தில் இதற்கான முயற்சிகள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

மேடைப் பேச்சுக்களின் போது பெரியவர்கள், கற்றவர்கள் கூறுவது இப்பரீட்சை இம்மாணவர்களுக்கு அப்பாற்பட்டது என்றும், இதை கவனத்தில் எடுக்கத் தேவையில்லை என்றும், ஆனால் அவர்களுடைய பிள்ளைகள் தரம் ஐந்திலே கற்கும் போது மாறிமாறி ஏற்றி இறக்குவதும், அத்துடன் தமது வீட்டில் Personal class (பிரத்தியேக வகுப்பு) எடுப்பதும் நடக்கத்தான் செய்கின்றன.

## நெறிப்படுத்தல்

இப்பரீட்சையில் காலத்திற்குக் காலம் வினாக்களின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பொதுவாக வினாத்தாள்கள் குறிக்கப்பட்ட காலத்திற்கு இலகுவானதாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் சில வருடங்கள் கடினமானதாகவும் அமைந்து விடுகின்றன. அந்த வகையில் நாம் மாணவர்களை காலத்திற்கு ஏற்ப தயார்படுத்த வேண்டும். இத்தன்மையை நன்கு உணர்பவர்களாக தொடர்ச்சியாக தரம் ஐந்திற்கு கற்பிக்கும் ஆசிரியர்களே உள்ளனர்.

அவ்வகையில் அண்மைக்காலத்தில் நடைபெற்று முடிந்த பரீட்சைகளை ஒப்பிட்டு நோக்கும் போது இலகுபடுத்தப்பட்ட வினாத்தாள்களே வெளிவந்த வண்ணம் உள்ளன. குறிப்பாக 2010, 2011 வினாத்தாள்கள் இத்தன்மையை நன்கு வெளிப்படுத்துகின்றன. இவ்வாறே தற்போது (2012) நடைபெற்று முடிந்த பரீட்சையும் இலகுப்படுத்தப்பட்டதாகவே (ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை தழுவியதாக) அமைந்துள்ளது.

நான் இங்கு குறிப்பிடும் "இலகுபடுத்தப்பட்ட" என்பதன் பதம் சுலபமானது என்பது அல்ல. அதாவது இந்தப் பரீட்சையை எதிர்கொள்ளும் பத்து வயது சிறுவர்களை நன்கு புரிந்து கொண்ட ஓர் ஆசான் தயாரித்து வழங்கும் வினாத்தாளாகவே அமைந்துள்ளது. மாணவர்கள் தமது நுண்ணறிவையும் விவேகத்தையும் துணைகொண்டு அவர்கள் இப்பொதுப்பரீட்சையை எதிர்கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்கு ஏற்ற நுட்பமான முறையில் இப்பரீட்சை அமைந்துள்ளது என்பதை குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும்.

குறிப்பாக 2007, 2008 அல்லது அதற்கு முற்பட்ட பரீட்சை வினாத்தாள்களை நோக்கும் போது அப்பரீட்சைகள் ஓர் எல்லையற்ற பரந்த பாடப்பரப்பைக் கொண்டவையாகவும், இச்சிறார்களால் விவேகத்துடன் பதிலளிக்க முடியாத தன்மையை உடையனவாகவும் அமைந்துள்ளன. நன்கு பயிற்சி பெற்ற ஆசான் கூட குறிப்பிட்ட நேரத்தினுள் இவ்வினாத்தாள்களுக்கு விடையளிப்பது என்பது கடினமானதாகவே உள்ளது. அவ்வாறு இருக்கும் போது இப்பத்துவயது மாணவர்கள் எவ்வாறு எதிர்கொள்வது? இவற்றுக்கெல்லாம் தீர்வாக தற்போதைய வினாத்தாள்கள் மாணவர்களுக்கு திருப்திகரமானதாக அமைந்துள்ளது என்பது உண்மையே. தற்கால வினாத்தாள்கள் இவர்களுக்குரிய தரம் மூன்று, தரம் நான்கு, தரம் ஐந்து ஆசிரிய அறிவுரைப்பு வழிகாட்டியில் உள்ள பாடப்பரப்புக்களைத் தழுவியதாக வினாக்கள் தொகுக்கப்பட்டு மாணவர்களை பரீட்சிக்கும் தன்மையை வெளிகாட்டுகின்றன.

எனவே நாம் அவ்வகையான வினாத்தாள்களை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் மாணவர்களை தயார்ப்படுத்த வேண்டும். இச்சிறார்கள்அனைத்து பாடப்பரப்புக்களையும் மனனம் செய்ய முடியுமா? கட்டுக்கட்டாக புத்தகங்கள், கொத்துக் கொத்தாக வினாத்தாள்கள், என்று எல்லாமே வியாபார உலகமாக மாறும் இவ் உலகில் இச்சிறார்கள் விலை பேசுப்படுகின்றார்கள், விற்கப்படுகிறார்கள்.

சந்தையில் மரக்கறிகள் பல உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தரம். தரத்திற்கு ஏற்ப விலை. சில மரக்கறிகள் குவியல்களாக இருக்கும். சில பைக்கற்றுக்களில் இருக்கும். அனைத்தும் தரமானதா? அல்லது அனைத்தும் தரமில்லையா? இதை பார்த்து வாங்குவது தான் புத்திசாலித்தனம். மரக்கறி தானே போனால் போகட்டும். ஆனால், இந்த பிஞ்சு உள்ளங்களும் மாறி மாறி விற்கப்படுகின்றார்கள். இதைத்தான் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இந்த ஆடம்பரக் கொண்டாட்டங்கள் தான் இந்த பிஞ்சு மனங்களை மறைமுகமாக காயப்படுத்துகின்றன.

யாழ்ப்பாணத்தில் எத்தனை புத்தகசாலைகள்? எத்தனை விற்பனை நிலையங்கள்? அனைத்திலும் அமோக விற்பனை. இச்சிறுவர்களின் அண்ணாமார், அக்காமார், அப்பா, அம்மா, பாசமான மாமா, மாமி, அயல்வீட்டு ரீச்சர் என இவர்கள் மேல் பாசாபாசம். அதன் வெளிப்பாடாக ஒவ்வொருவரும் ஆளுக்கொரு புத்தகம், ஆளுக்கொரு வினாத்தாள், அதிலும் "கொத்து", "மஞ்சரி", "பேழை", "சிகரம்", "சிட்டு", "பொட்டு", என அனைத்தையும் வாங்கிக் கட்டிக் கொண்டு வந்து இவர்கள் மேல் சுமத்துகின்றனர். வாங்கி கொடுத்ததும் அவர்களுக்கு சந்தோஷம். ஆனால் இச்சிறார்களுக்கோ விழி பிதுங்கும். அம்மா சொல்லுவா இன்றைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வாங்கியதை செய்! நாளைக்கு மாமா வாங்கியதைச் செய்! நாளை மறுதினம்.... என்றும் கட்டளை பிறக்கும், ஆனால் பிள்ளைக்கோ பாடசாலை வீட்டு வேலையை கூட செய்ய நேரம் இல்லை. பாடசாலை முடிந்ததும் ரியூசன், ரியூசன் முடிந்ததும் Personal Class. (பிரத்தியேக வகுப்பு) இப்படியாக "வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது" போன்றதான நிலைதான் இச்சிறார்களுக்கு ஏற்பட்டுள்ளது.

உங்களுக்கு "பசுத்தோல் போர்த்த புலி" இன் கதை தெரிந்திருக்கும் பல காலம் வேட்டையாடி வயதாகிப் போனதால் வேட்டையாட முடியாமல் அதே ருசியாக மாமிசம் உண்ண வேண்டும் என ஆசை கொண்ட புலி பசுவின் தோலை போர்த்தி அங்குவரும் விலங்குகளை வேட்டையாடி பசியை தீர்த்ததாம்" அதே போலத்தான் தற்போது புத்தகசாலைகளில் புத்தகங்களும், வினாத்தாள்களும், புத்தகங்களின் அட்டை (Cover) புதுப்புது வர்ணங்களில், பற்பல பெயர்களில் வெளி வந்து கொண்டு இருக்கின்றது. ஆனால் உள்ளீடுகள் ஒரே மாதிரியானவையாகவும், மீள் திருத்தம் செய்யப்படாமலும், பழைய வினாத்தாள்களுக்கு ஏற்ப பரந்த பாடப்பரப்புக்களைக் கொண்டவையாகவும் இருக்கும். அதிலும் புதினம் என்னவெனில் அனேக தவறுகள் காணப்படும்.

உ + ம் : எமது நாட்டின் தேசிய விலங்கு யாது? யானை

எமது நாட்டின் ஜனாதிபதியின் பெயர் யாது? சந்திரிக்கா

எமது நாட்டின் கல்வி அமைச்சர் பெயர் யாது? சுசில்பிரேமஜெயந்த

என்பவற்றுடன் உவமைத்தொடர், பழமொழி, ஒத்தசொல், சேர்த்தெழுதல், சிங்கள சொற்கள், போன்ற ஏனையவற்றிலும் ஒவ்வொரு புத்தகங்களிலும் ஒவ்வொரு மாதிரியான விளக்கங்களுடன் காணப்படுகின்றன. இவ்வாறான பிழைகளை பிள்ளைகள் கண்டு பிடித்து இது சரி இது பிழை என பிரித்துபடிக்க முடியுமா?

இதே போலவே வினாத்தாள்களும். இதைப்பற்றி சொல்லத் தேவையில்லை. புலமைப் பரிசில் வினாத்தாள்களை நினைத்தவர்கள் நினைத்த மாதிரி அச்சிட்டு வெளியிடுகின்றனர். இவ்வினாத்தாள்களை மாணவர்களுக்கு விளங்கப்படுத்துவது என்பது "கல்லில் நாருரித்தல்" போன்றது. அனேகமான வினாத்தாள்கள் Copy / Paste ஆகத்தான் இருக்கின்றது. நீங்கள் கூறுவீர்கள் "எது எப்படி இருந்தாலும் விஷயம் இருந்தால் சரிதானே" அதுவும் எனக்கு புரிகின்றது. இங்கு பிரச்சினை என்னவென்று மாணவர்களுடன் அருகில் இருந்து கற்பிக்கும் போது தான் இதன் தாக்கம் புரியும்.

தற்கால மாணவர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் பல பயிற்சி வினாத்தாள்களை செய்பவர்கள். வினாத்தாள்களுக்கு விடையளித்துக் கொண்டு செல்லும் போது ஒரு வினா கடினமானதாக இருக்கின்றது என வைத்துக் கொள்வோம். உடனே அம்மாணவர்கள் அடுத்த வினாவை செய்யத் தொடங்குவான். நாம் மறித்து "இதைஏன் செய்யவில்லை" என்று கேட்கும் போது "அது சேர் கேள்வி பிழை" என்று விடை வரும். இப்போது புரிகிறதா? உண்மையாக சரியான வினாவாக இருந்தும் மாணவர்கள் தொடர்ச்சியாக பிழையான வினாக்களை சந்திக்கும் போது இப்படியான மாயைக்குள் தள்ளப்படுகின்றார்கள். இது தான் நடைமுறை உண்மை.

## கருத்தரங்குகள்

அண்மைக்கால வருடங்களில் இப்பரீட்சைக்கான கருத்தரங்குத் தொடர்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன. பல்வேறுபட்ட துறைகளில் உள்ளோர், நிறுவனங்கள், தனியாள் என பலர் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றனர். க.பொ.த (உயர்தரம்) வகுப்புக்களில் கல்வி நிறுவனங்களில் இருந்து கல்வி கற்பது போல் முந்நூறு, ஐந்நூறு, எழுநூறு என மாணவர் எண்ணிக்கை கொண்டதாக இக்கருத்தரங்குகள் வெற்றிகரமான முடிவடைந்தன என தகவல்கள் வெளிவரு கின்றன. உண்மையாக இந்நிகழ்வுகளைப் பார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ து வேடிக்கையாகவும் விநோத மாகவும் உள்ளது. பாடசாலைகளிலோ, கல்வி நிறுவனங்களிலோ முப்பது, நாற்பது, ஐம்பது மாணவர்களை வைத்துக் கொண்டு கற்பிக்க ஆசிரியர்கள்



படும் பாடு அவர்களுக்குத்தான் தெரியும். அச்சந்தர்ப்பத்தில் இந்த ஐம்பது மாணவர்களையும் ஒரு முகப்படுத்தி அனைவரையும் கற்றலில் ஈடுபட வைக்க எவ்வளவு சிரமப்படுகின்றார்கள் என்பதும் அவர்களுக்குத் தான் தெரியும்.

ஆனால் மண்டபம் நிறைந்த மாணவர்கள் கூட்டத்தோடு அறுநூறு, எழுநூறு, எண்ணூறு மாணவர்களுக்குக் கற்பித்தோம், வெற்றிபெற்றோம், பரிசுமழை பொழிந்தோம், என்று மார்தட்டி அனுப்புகின்றார்கள். இதன் பெறுபேறு "பூச்சியம்" என்று தான் கூற வேண்டும். பொதுவாக மாணவர்கள் கருத்தரங்கிலே பங்கு பற்றிவிட்டு மீண்டும் கற்க வரும் போது "நேற்று எப்படி கருத்தரங்கு?" என ஒரு வினாவை போட்டும் பார்ப்பதும் உண்டு. அதற்கான விடை ஒவ்வொரு வருடமும் மாறாமல் வரும் "சேர் அதுக்குள்ள போறதுக்கு பட்டபாடோ.....", "அதுக்கும் ரிக்கட்டாம் சேர்....", "கதிரை கிடைக்கல சேர்...", "ஏதோ பெரிசாபோட்டுக் காட்டிச்சினம் பின்னுக்கு தெரியல சேர்...", "ஒரு பேப்பர் தந்து செய்விச்சினம் சேர், Part - 1 இல் இருபது கேள்விக்கு விடை சொல்லிச்சினம், Part - II ஐ வீட்டில்செய்யட்டாம், செய்து போட்டு ரீச்சருட்ட கொடுத்து திருத்தட்டாம், விடைத்தாளும் தந்தவசேர்.." இவ்வாறாக பதில்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இப்படியாக இம்மாணவர்களை ஓர் மாயைக்குள் பலியாக்குவது பெற்றோர்கள் தான்.

**சம்பவம்:** முன்னை வருடம் ஒன்றில் கருத்தரங்கு கொண்டாட்டம் பெரும் அமளிதுமளியாக இடம் பெற்று கொண்டிருந்தது. அப்போது ஒரு மாணவன் முறையாக மாட்டிக் கொண்டான். எப்படி? அவனின் அம்மா ரூ###.## இற்கு ஒரு ரிக்கட்டும் வாங்கி வந்திருக்கிறார். என்னத்துக்கு என்று கேட்கின்றீர்கள் தானே? படம் பார்க்கவல்ல, கருத்தரங்குக்கு. அது பிரச்சனையல்ல, அவனின் அப்பாவும் ஒரு ரிக்கட்டோடு வந்துவிட்டார். விஷயம் என்ன வெனில் இரண்டும் ஒரு நாள் கருத்தரங்கு, ஒன்று ஒன்பது மணிக்காம், மற்றையது ஒரு மணிக்காம், மாகாணமட்ட இறுதிப் பரீட்சை ஒன்பது மணிக்காம். எப்படி இருக்கு நிலைமை? இப்படியான சம்பவங்களும்இடம் பெற்றுத்தான் இருக்கின்றன.

கருத்தரங்கு என்பது "இலவு காத்த கிளி" க்கு ஒப்பானது உண்மையாக கற்பிக்க வேண்டும், இவர்களை சித்தியடைய வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் இதை நடாத்துபவர்கள் பாடசாலைகளுக்கு சென்று ஒவ்வொரு வகுப்பாக குறிப்பிட்ட நேரம் கற்பிக்கலாம். அது சற்று பயனாக இருக்கும்" என்னத்துக்கு என்னத்தை செய்யவேண்டும், என்னத்துக்கு என்னத்தை செய்யக்கூடாது என்று தெரியாமல் தவறாக வழிநடத்தப் படுகின்றது இம்மாணவர் குழாம். கருத்தரங்கிற்கு மாணவர்களை அழைத்து செல்வது "நல்லூர் திருவிழாவிற்கு நகை நட்டோடு ஒரு பெண்ணை அனுப்பி வைப்பதற்கு ஒப்பானது" என்றே சுருக்கமாக கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாக்கள்

இப்பரீட்சை வினாத்தாள்களின் அண்மைக்கால போக்கை நோக்குகின்ற போது...

*2010* ஆண்டு வினாத்தாளில் Part - II வினா இல. *(52)*

தரப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப அட்டவணையில் உள்ள வெற்றிட நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | சிலாபம் | 76km |
| கொழும்பு | புத்தளம் | 142 km |
| புத்தளம் | அநுராதபுரம் | 72km |
| சிலாபம் | அநுராதபுரம் | ......... |

*2011* ஆண்டு வினாத்தாளில் Part - II வினா இல. *(51)*

உருவில் உள்ள தகவல்களுக்கு கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிட நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | மாத்தறை | 160km |
| காலி | மாத்தறை | 45km |
| காலி | அம்பாந்தோட்டை | 125km |
| கொழும்பு | அம்பாந்தோட்டை | ......km |

இம்முறை *(2012)* வினாத்தாளில் Part - II வினா இல. *(51)*


உருவில் உள்ள தகவல்களுக்கு கேற்ப அட்டவணையில் உள்ள வெற்றிட நிரப்புக.




| இருந்து | வரைக்கும் | தூரம் |
|---|---|---|
| கொழும்பு | அம்பாந்தோட்டை | 245 km |
| கொழும்பு | மாத்தறை | 160 km |
| காலி | அம்பாந்தோட்டை | 125km |
| காலி | மாத்தறை | ......km |

இவ்வாறான வினாக்கள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இம்முறை வினாத்தாளில Part - II வினா இல. *(50)*




உருவில் உள்ள முக்கோணியின் சுற்றளவு 10m ஆகும்.

பக்கம் AB யின் நீளம் 2m *50* cm உம், பக்கம் BC யின் நீளம் 3cm 80cm உம் ஆகும். பக்கம் AC யின் நீளம் யாது? ........

இவ்வினாவிற்கு விடையளிக்க சற்று சிரமப்பட்டிருக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Part II வினா (20) கொழும்பிலிருந்து பதுளை வரையுள்ள புகையிரதப்பாதையில் இருக்கும் ஒரு புகையிரத நிலையம்


1) வட்டவளை (2) ஹபரனை (2) சீதுவை (4) வவுனியா

இவ்வினாவிற்கு விடையளிப்பது எமது மாணவர்களுக்கு சிரமமே.

Part II வினா (இல - 19) தென்மாகாணத்தைச் சேர்ந்த ஒரு நகரம்?

1). களுத்துறை (ii) பலாங்கொடை (iii) அம்பலாங்கொடை (iv) மொனராகலை

Part - 1 (2012) வினாத்தாளை நோக்கும் போது (வினா இல 32) தரப்பட்டுள்ள வடிவங்களில் மூன்றை சேர்த்து ஒரு செவ்வகத்தை அமைக்கலாம். அவ்வடிவங்கள் யாவை?




Part - 1 (2012) வினா (34 ) 2013 ம் ஆண்டின் நடுவில் வரும் தினம் யாது?


1) யூன் 30 2) யூலை 1 3) யூலை 02

Part - 1 (2012) வினா (35) ஒக்ரோபர் 01 உலக சிறுவர் தினமாகும். 2013ஆம் ஆண்டில் யனவரி 01 தொடக்கம் ஒக்ரோபர் 01 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

1) 273 2) 274 3) 275

வினா இல (37) முழு உருவத்தின் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்?

1) 4
2) 6
3) 8



இவ்வாறாக சிந்திக்கத் தூண்டும் வினாக்கள் இடம் பெற்றுத்தான் இருக்கின்றன. எனவே இவ்வாறான வினாத்தாள்களை எதிர்கொள்வதற்கு ஏற்றாற் போல் மாணவர்களை நாம் தயார்ப்படுத்த வேண்டும். வெறுமனே புத்தகப் பூச்சிகளாக "அனைத்தையும் பாடமாக்கு, எந்நேரமும் படி படி" என வற்புறுத்தி பிஞ்சு மனங்களை நோகடிக்காமல் அன்பாக அவர்களுக்கு கற்பித்துக் கொடுக்க வேண்டும். இந்த முறையில் நாம் நடந்து கொள்ளா விட்டால் பிள்ளைகள் நெறிபிறழ்ந்து செல்வார்கள். உதாரணமாக கடந்த வருடம் ஒன்றில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதச்சென்ற மாணவன் ஒருவன் பரீட்சைக்குரிய நேரம் வரை தனக்குரிய ஆசனத்தில் இருந்தபடியே வினாக்களுக்கு விடை எழுதாமல் வெறுந்தாளை திருப்பிக் கொடுத்து விட்டான். இதற்குரிய காரணம் பற்றி அவனிடம் விசாரித்தபோது அவர் தன்னை பெற்றோர் விளையாட விடாமலும், தொலைக்காட்சி பார்க்க விடாமலும் தொடர்ந்து படிபடி என வற்புறத்தி வந்ததாக தெரிவித்திருந்தான். ஆகவே நான் எனது பெற்றோருக்கு ஒரு பாடம் படிப்பிக்கவே இப்படி செய்தேன் என்று கூறியதாக பத்திரிகை வாயிலாக அறிந்திருப்பீர்கள்" வெறுமனே தரம் ஐந்திற்கு வந்தவுடன் அவர்களை படிப்பிக்க எடுக்கும் ஊக்கத்தைவிட தரம் மூன்று, தரம் நான்கு வகுப்புக்களிலேயே அவ்வகுப்புக்களுக்கு ஏற்ற விடயங்களை கற்றுத்தெளிந்து கொள்ள வழி செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவனமும் தரம் ஐந்து வகுப்பு

இங்கு கற்கும் மாணவர்களை நாம் சமய ஆசார முறைப்படி வரவேற்று அவர்களை ஓர் மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்துலுக்கு உட்படுத்துகின்றோம். அயல் பாடசாலைகளுடன் இணைந்து எமது கற்பித்தல் நடவடிக்கைகளை முன்னெடுக் கின்றோம். இம்மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சிகரமான முறையில் பாடங்களை கற்பதனை அவதானிக்கின்றோம். முன்னைய காலத்தில் இங்கிருந்து தொலைதூரம் சென்று களைத்துப் போகும் நிலையை மாற்றி, இங்கிருந்து நகர்ப்புற பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களும் இங்கு மேலதிக கற்றலுக்காக வரும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். பரீட்சை நெருங்கும் காலத்தில் மேலதிக மான மீட்டல் பயிற்சிகளையும், வகுப்புக்களையும் நடாத்தி மாணவர்களை வழிப்படுத்துகின்றோம். இவ்வாறாக மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு அனுப்பும் போது அவர்களுக்கான மன அமைதியை, திருப்தியை ஏற்படுத்தும் முகமாக நடைபெறும் நிகழ்வொன்றையும் ஏற்படுத்தி அவர்களுக்கு ஓர் பூரணமான வழிப்படுத்தலையும் வழங்கி வருகின்றோம். அன்றைய நிகழ்வுகளில் இடம் பெறும் ஒவ்வொரு நிகழ்வுகளும் எமது மனதில் ஆழமாக பதிந்த பதிவுகளாக இடம் பெறுகின்றன. இவ்வாறு கல்வியைப் பெறும் இம்மாணவர்கள் தமது கற்றலில் கன்னி நகர்வில் வெற்றி கண்டு மேன்மேலும் தமது நகர்வினை உயர்த்தி செல்ல நாம் உறுதுணையாக நிற்க வேண்டும். இத்தகைய நெறிமுறைகளை கையாண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயார்ப்படுத்துவதற்கான வகுப்புக்களை நடாத்து பவர்களை நாம் நட்புணர்வோடு வரவேற்க வேண்டும்.

மேலும் பரீட்சை முடிவுகள் வெளியாகியவுடன் சித்தியடைந்த மாணவர் களின் மகிழ்வையும் சித்தியடையத் தவறிய மாணவர்களின் கவலை, ஏக்க உணர்வையும் சமாளிக்கும் அத்தருணத்தையும் நாம் உணர்ந்தவனாகையினால் இவ்விடயங்களை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். எனவே இச்சிறார்களை இப் பரீட்சையில் வெற்றி அடைவதற்கு எமது சமூகம் விழிப்புடன் செயற்பட்டு அவர்க ளுடைய மனம் புண்படாத வகையில் சரியான வழிகாட்டலை வழங்கி கற்றல் கற்பித்தலை மேம்படுத்தி கொடுக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.


"துள்ளித்திரியும் பள்ளிச் சிறுவர்களை அள்ளி அணைத்து அறிய கல்விதனை ஊட்டிடுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியங்களில் கூறப்படும் திணைபற்றிய குறிப்புக்கள்

(ஐந்திணை, ஐந்நிலம், ஐந்தொழுக்கங்கள்)




திரு. கு. துஷ்யந்தன்
ஆசிரியர்,
கலைவாணி கல்வி நிறுவனம்


தமிழில் திணை என்னும் சொல் பிரிவு என்னும் பொருளைத் தருகிறது. திணிவைப் பிரித்துக் காட்டுவது திணையாகும். தொல்காப்பியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளபடி "மொழியியற்றிணைகள்" உயர் திணை அஃறிணைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. "பொருளியற் றிணைகள்" அகத்திணை ,புறத்திணைகள் என இருவகைக்குள் அடங்குகின்றன. இதனடிப்படையில் பழந்தமிழ் இலக்கியங்கள் அகத்திணை புறத்திணை என இரண்டாக வகைப்படுத்தப்டுகின்றன. திணை என்பதனை ஒழுக்கம் எனப் பொருள் கொண்டு பாட்டுடைத் தலைவர்களின் ஒழுக்கத்தைப் பாடற்பொருளாகப் பாடுவதை திணை எனக் கொண்டனர்.

**அகத்திணை :**

ஓர் ஆணும் பெண்ணும் காதலால் இணைந்து தமக்குள்ளே இன்பம் துய்த்து வாழ்தல் அகவாழ்வு ஆகும். இவ்வாறு அவர்கள் தமது உள்ளத்துள் அதாவது அகத்துள் நுகரும் உணர்வுகள் குறித்தவற்றையே பழந்தமிழ் இலக்கியங்கள் அகத்திணை என்கின்றன.

**புறத்திணை :**

பழந்தமிழர் தமது வாழ்வியலில் போர், அரசியல் முதலியவை தொடர்பான வாழ்வு புறவாழ்வு எனப்படுகிறது. மேற்படி புறவாழ்வு தொடர்பான ஒழுக்கம் புறத்திணை என வழங்கப்படுகிறது.

**ஐந்நிலம் :**

பண்டைத் தமிழகத்தின் நிலப்பரப்புகள் ஐம்பெரும் பிரிவுகளாகப் பிரிகப்பட்டுடிருந்தன. அவை வருமாறு

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | மலையும் மலை சார்ந்த நிலமும் |
| முல்லை | - | காடும் காடு சார்ந்த நிலமும் |
| மருதம் | - | வயலும் வயல் சார்ந்த நிலமும் |
| நெய்தல் | - | கடலும் கடல் சார்ந்த நிலமும் |
| பாலை | - | மணலும் மணல் சார்ந்த நிலமும் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐந்தொழுக்கங்கள்

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | புணர்தல் (கூடுதல்) |
| முல்லை | - | இருத்தல் (காத்திருத்தல்) |
| மருதம் | - | ஊடல் |
| நெய்தல் | - | இரங்கல் (வருந்துதல்) |
| பாலை | - | பிரிதல் / உடன்போக்கு. |

### ஐந்திணை

வகைப்படுத்தப்பட்ட நிலங்கள் ஐந்து, வகைப்படுத்தப்பட்ட ஒழுக்கங்கள் ஐந்து, ஆகிய வற்றின் திணிவே ஐந்திணை என்று அழைக்கப்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் இவற்றில் திணை மயக்கங்களாய் ஏற்படுவதுண்டு என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

### அகத்திணைப்பிரிவுகள்

| | |
|---|---|
| குறிஞ்சித்திணை | முல்லைத்திணை |
| மருதத்திணை | நெய்தல்த்திணை |
| பாலைத்திணை | கைக்கிளைத்திணை |
| பெருந்திணை | |

இவற்றில் கைக்கிளைத்திணை, பெருந்திணை என்பன முறையே ஒருதலைக் காதலையும் பொருந்தாக் காமத்தையும் குறிக்கின்றன. இதனால் இவை தமிழர் வாழ்வியலில் பெருமைக்குரியனவாகக் கொள்ளப்படுவதில்லை.

ஏனைய ஐந்தும் நிலத்திணைகளுடன் இணைந்து பெயரிடப்பட்டிருப்பதைப் காணலாம். அகவாழ்வின் அம்சங்களாகத் தமிழ் இலக்கியங்கள் காணும். புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பவை ஒவ்வொன்றும் ஐவகை நிலத் திணைகளில் ஒவ்வொன்றுக்கும் சிறப்பானவையாகக் கொண்டு இலக்கியம் செய்யப்படுதல் அக்கால வழக்கமாகும்.

### குறிஞ்சித்திணை : -

குறிஞ்சியாவது "மலையும் மலைசார்ந்த இடங்களும்" இயற்கையழகும், வளங்களும் நிறைந்தவையாக இளமைப்பருவத்தாரிடையே 'புனர்தலும் புணர்தல் நிமித்தமும்' செல்லவும் இவைபற்றியெல்லாம் நினைக்கவும் அணுக்கரிடையே தம்முணர்வுகளை எடுத்துக் கூறவும் பொருந்துவனவாக அமைந்திருக்கும் நிலப்பகுதிகள். எனவே தனித்து வேட்டை மேற்சென்ற இளைஞனும், புனம் காத்து நிற்கும் கன்னியும் ஒருவரை ஒருவர் கண்டு காதலுற்று ஒன்றுபடுவதற்கு ஏற்ற நிலைக்களமாகித் தம் காதல் நாடகத்தை அரங்கேற்றிக் கொள்ளும் மேடையாக அமைந்தது குறிஞ்சித்திணையாகும். குறிஞ்சித்திணைக்கு கூதிர் காலம் மற்றும் முன்பனிக்காலம் பெரும் பொழுதுகளாகவும் கார் சிறு பொழுதாகவும் அமையும். இக்குறிஞ்சித்திணைக்குரித்தான துறையாக ஓர் எடுத்துக்காட்டு "பகற் குறிக்கண் செறிப்பு அறிவுற இத் தோழி வரைவு கடாயது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முல்லைத்திணை :-**

முல்லைத்திணை என்பது காடும் காடு சார்ந்த நிலங்களுமாகும். இந் நிலத்து ஆயர்களது வாழ்வியல், ஆடவர் ஆனிரை மேய்த்தற்கு பகற்பொழுதெல்லாம் காட்டிடத்தே இருத்தல், மகளிர் பால் பயன்களைவிற்று வருதல் போன்ற ஒழுக்கத்தோடு ஒட்டியதாகும். ஏறு தழுவி வெல்பவனுக்கே மகளைத்தரும் வழக்கமும் அவனையே விரும்பி ஏற்கும் கன்னியர் மனமும் இத்திணையின் சிறப்பான மரபுகள். இதனால் காத்திருத்தல் தன்மை, இயல்பாக இருத்தல் என்பதனை முல்லைத் திணைக்குரிய ஒழுக்கமாக்கினர்.

முல்லைத்திணைக்குக் கார்காலம் பெரும் பொழுதாகவும் மாதலை சிறு பொழுதாகவும் அமையும். இம்முல்லைத்திணைக்கு உரித்தான துறையாக ஓர் எடுத்துக்காட்டு "வினை முடிந்து மீளும் தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லியது"

**மருதத்திணை :-**

மருதம் என்பது வயலும் வயல் சார்ந்த நிலமும். இவை வளமான செந்நெல் விளையும் பகுதி என்பதால், உழுதுண்டு வாழும் பெருஞ்செல்வர் வாழ்வது இயல்பாயிற்று. இவர்கள் தமது வளமையால் காமத்தில் எளியராகி பரத்தமை மேற்கொள் ளுதல் நிகழ்த்தினர்.

இதனால் தலைவியர்க்கு "ஊடலும் ஊடல் நிமித்தமுமாக எழும் பேச்சுக்களும்" இயல்பாகும். இது குறித்தே ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திணைக்கு உரித்தா னதாக்கினார்கள். இதற்கு ஆறு பருவங்களும் பெரும் பொழுதாகவும் விடியல் சிறு பொழுதாகவும் அமையும். மருதத்திணைக்குரித்தான துறைக்கு ஓர் எடுத்துக்காட்டு "பரத்தையின் பிரிந்து வந்த தலைமகனுக்கு கிழத்தி சொல்லியது"

**நெய்தல்திணை :-**

கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல் நிலமாகும். மீன் வளம்' நாடி கடலிலே திமில் ஏறிச் செல்வது, பெரும்பாலும் ஆடவர் தொழில் ஆதலின் அவர் குறித்த பொழுதில் திரும்பாத போது "இரங்கலும் இரங்கல் நிமித்தமும்" ஆக எழும் பேச்சுக்களும் இந் நிலத்திற்கு இயல்பாயின.

நெய்தற்திணைக்கு ஆறு பருவங்களும் பெரும் பொழுதாகவும் எற்பாடு சிறுபொழுதாகவும் அமையும். இதற்கு உரித்தான துறையாக ஓர் எடுத்துக்காட்டு "பகற் குறிக்கண் வந்த தலைவன் சிறைப்புறத்தானாக தோழி தலை மகளுக்குச் சொல்லுவாளாய் தலைவனுக்குச் சொல்லியது.

**பாலைத்திணை :**

குறிஞ்சியும் முல்லையும் முறைமுறையே திரிந்து கதிரவன் வெம்மையாலே எங்கும் வளமை தீய்ந்து போயுள்ள இடங்களே பாலை என்பதாகும். இதனால் காதலரிடையே "பிரிவும் பிரிதல் நிமித்தமும்" ஆக எழும் பெருந்துயரத்தையும் பாலைக்கு உரிமைப்படுத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறலைகள் வரும், கொலையும், துன்பமும், வெம்மையும் இந்நிலத்திற்குரிய தன்மைகள். பாலைத்திணைக்கு வேனில் மற்றும் பின்பனிக்காலம் என்பன பெரும் பொழுதுகளாகவும் நண்பகல் சிறு பொழுதாவும் அமையும். இந்நிலத்திற்கு உரித்தான துறைக்கு ஓர் எடுத்துக்காட்டு "பொருள்வயின் பிரிவு கடைக்கூடிய தலைவன் நெஞ்சுக்குச் சொல்லியது"

**புறத்திணைப்பிரிவுகள் :**

1. வெட்சித்திணை
2. வஞ்சித்திணை
3. உழிஞைத்திணை
4. தும்பைத்திணை
5. வாகைத்திணை
6. காஞ்சித்திணை
7. பாடான் திணை

இப்புறத்திணைகளின் செய்திகளை பின்வரும் பழம் தமிழ்ப் பாடல் சுட்டி நிற்கிறது.

"வெட்சி நிரை கவர்தல், மீட்டல் கரந்தையாம்
வட்கார்மேல் செல்வது வஞ்சி, உட்காது
எதிர் ஊன்றல் காஞ்சி, எயில்காத்தல் நொச்சி
அது வளைத்தல் ஆகும் உழிஞை, அதிரப்
பொருவது தும்பையாம், போர்களத்து மிக்கோர்
செருவென்றது வாகையாம்"

**வெட்சித்திணை**

ஒரு நாட்டின் மீது போர் தொடுக்க விரும்பும் ஒரு மன்னன் அந் நாட்டு எல்லையூடு புகுந்து ஆநிரைகளைக் கவர்ந்து செல்வதையும் அவ்வாறு களவாடிச் செல்லப்படும் ஆநிரைகளை மீட்டு வருவதையும் கருப்பொருளாகக் கொண்டவை.

**வஞ்சித்திணை**

மன்னன் ஒருவன் வேற்ற நாட்டின் மீது படை நடத்திச் செல்வது அதனைப் பகை யரசன் எதிர்ப்பது ஆகிய செய்திகளை கூறுவது.

**உழிஞைத்திணை**

படைநகர்த்திச் செல்லும் அரசன் வேற்று நாட்டுக் கோட்டையை முற்றுகையிடுவதையும் அக்கோட்டையை பாதுகாத்து நிற்கும் பகையரசன் நவடிக்கை களையும் பற்றிக் கூறுவது.

**தும்பைத்திணை**

படையெடுத்து வந்த வேற்று நாட்டு அரசனுடன் போர்செய்து அவனை வெல்வது பற்றிக் கூறுவது.

**வாகைத்திணை**

மன்னனுடைய வெற்றி பற்றிய செய்திகளைக் கூறுவது.

**காஞ்சித்திணை**

அழகு, செல்வம், இளமை, யாக்கை, உலகு என்பவற்றின் நிலையாமையைக் கூறுவது.

**பாடாண் திணை**

பாடப்படுகின்ற ஆண் மகனின் ஒழுக்கலாறுகளைஎடுத்துக் கூறுவது.

நன்றி

❑❑❑




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர் - விலங்கு ஒன்றிணைந்த பண்ணை முறை

## CROP AND LIVESTOCK INTEGRATED FARMING SYSTEM


ஒரு குறித்த அலகு நிலத்தை முற்றுமுழுதாகப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை, விலங்கு வேளாண்மை, சக்திவலு உற்பத்தி போன்ற அனைத்துச் செயற்பாடுகளையும் ஒரேநேரத்தில் மேற்கொண்டு அதி உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பண்ணை முறை பயிர்-விலங்கு ஒன்றிணைந்த பண்ணைமுறை எனப்படும்.




*சி.சுகிர்தரூபன்*

*ஆசிரியர்,*

*கலைவாணி கல்வி நிறுவனம்.*


உரு: 1

இப்பண்ணை முறையின் பிரதான நோக்கம் பயிர்ச்செய்கை நிலங்களை அதிஉச்ச முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட நிலப் பகுதியில் கிடைக்கக் கூடிய மூலவளங்களையும் உள்ளீடுகளையும் பயன்படுத்தி தொடர்ச்சியாகவும் கூடிய அளவிலும் விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்தலாகும்.

பயிர்ச் செய்கையும் மிருக வளர்ப்பும் ஒன்றிணைந்த விவசாய முறையானது தொன்மையானது. பன்நெடுங்காலமாக எமது விவசாயிகள் ஏதோ ஒரு வழியில் பயிர்ச்செய்கையையும் மிருகவளர்ப்பையும் செய்துவருகிறார்கள். எனினும் தற்போதைய காலகட்டத்தில் இவ் ஒன்றிணைந்த பண்ணை முறையானது எமது நாட்டிற்குப் பொருத்தமானதாக இருக்கும். ஏனெனில் அதிகரித்து வரும் சனத்தொகைக்கேற்ப உணவு உற்பத்திகளையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மேலும் சனத்தொகை அதிகரிப்பு, வீடமைப்புத் திட்டங்கள், நகரமயமாக்கல், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல காரணங்களால் நிலங்கள் துண்டாடப்படுவதனால் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பின் அளவு குறைவடைந்து வருகிறது. எனவே சிறியளவிலான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்ச்செய்கை நிலப்பரப்பிலிருந்து அதிஉச்சப் பயனை பெற்றுக் கொள்வதற்கும் குடும்பத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களுடன் பலவித விவசாய விளை-பொருட்களை பெற்றுக்கொள்வதற்கும் இவ் ஒன்றிணைந்த பண்ணை முறை வழிசமைக்கிறது.

எமது நாட்டின் விவசாய நிலங்களிற் பெரும்பாலானவை மழையை நம்பியிருப்பதால் பயிர்ச்செய்கை இடர் நிறைந்ததாகவும் விவசாயிகளின் வருமானம், வேலை வாய்ப்பு என்பன தொடர்பாக நிலையற்ற தன்மை காணப்படுகிறது. இதன் காரணமாக பயிர்ச்செய்கைகளில் மட்டும் தங்கியிராமல் பயிர்செய்கையுடன் ஒன்றிணைக்க கூடிய பல்வேறு விலங்கு வளர்ப்பு முயற்சிகளிலும் ஈடுபடவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தனித்தனி முயற்சிகளை விட ஒன்றிணைந்த விவசாய முயற்சியின் மூலம் ஒரு குறித்த அலகு நிலப்பரப்பில் இருந்து கிடைக்கும் விளைபொருட்களின் உற்பத்தி மிகவும் அதிகரிக்கின்றது. எனவே ஒரு முயற்சி பிழைக்கும் போது இன்னொன்று கை கொடுப்பதாக அமைவதுடன் வருடம் முழுவதும் மாறிமாறி ஏதாவது ஒரு முயற்சி வருமானம் தரக்கூடியதாகவும் இருக்கும்.

பயிர் - விலங்கு ஒன்றிணைந்த பண்ணை முறையில் பின்வரும் பயிர்களையும் விலங்குகளையும் வளர்க்கலாம்.

### I. பயிர்வகைகள்

a தானியப் பயிர்கள் - நெல், சோளம், குரக்கன் ·
 கிழங்குப் பயிர்கள் - மரவள்ளி, உருளைக்கிழங்கு. கரணை
c மரக்கறிப் பயிர்கள் - தக்காளி, வெண்டி, கத்தரி
 பழப் பயிர்கள் - மா, பலா, வாழை, தேசி, அன்னாசி
e இலை மரக்கறிகள் - கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, பசளி, அகத்தி
 வெட்டுப்புல் - *Guinea, co3, Napier*
 மேச்சல் புல் - *Centro*
 பெருந்தோட்டப் பயிர்கள் - தேயிலை, இறப்பர், தென்னை

### 2. விலங்கு வகைகள்


a கால்நடைகள் - ஆடு, மாடு, எருமை, பன்றி, முயல்
 பறவைகள் - கோழி, தாரா
c மீன்கள் - *Caprinus carpio, Tilapia spp, Car fishes, Catla catla*

பின்வரும் ஒன்றிணைந்த பண்ணை முறைகளில் பயிர்களையும் விலங்குகளையும் வளர்த்து விவசாய உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

01. நெல் - மீன்கள் ஒன்றிணைந்த முறை
02. நெல் - மீன்கள் - அசோலா தாரா ஒன்றிணைந்த முறை
03. நெல் - புற்கள் - பசு ஒன்றிணைந்த முறை
04. மரக்கறி - மீன் ஒன்றிணைந்த முறை
05. மரக்கறி - மீன் - தாரா ஒன்றிணைந்த முறை
06. மரக்கறி - புற்கள் - பசு ஒன்றிணைந்த முறை
07. பழங்கள் - புற்கள் - மீன் ஒன்றிணைந்த முறை
08. பழங்கள் - புற்கள் - பசு ஒன்றிணைந்த முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உரு: 2

09. வாழை - புற்கள் - ஆடு ஒன்றிணைந்த முறை
10. தேயிலை - புற்கள் - ஆடு ஒன்றிணைந்த முறை
11. தேயிலை - புற்கள் - பசு ஒன்றிணைந்த முறை
12. இறப்பர் - புற்கள் - பசு ஒன்றிணைந்த முறை
13. தென்னை - புற்கள் - மரக்கறி - மீன் - பசு ஒன்றிணைந்த முறை
14. தென்னை - புற்கள் - அன்னாசி - பசு ஒன்றிணைந்த முறை

எமது தேவை சந்தை வாய்ப்பு என்பவற்றிற்கேற்ப பயிர்ச் செய்கையில் பல்வேறு வகையான பயிர்களை வளர்க்கலாம். பயிர்களில் இருந்து அகற்றப்படும் பாகங்களை (பயிர்கழிவுகள்) இலை குழைகள், வைக்கோல், சோளக்குழைகள், மரக்குழைகள் மற்றும் மேச்சற்புல், வெட்டுப்புல் போன்றவை விலங்குணவாகப் பயன்படுத்தப்படுகிறது. அத்துடன் பண்ணை விலங்குகளின் கழிவுகள் (மலம்,சலம்) தொழுவக் கழிவுநீர் என்பன சேதனப் பசளையாகவும் இலைகுழைகள் நைதரசன் நிறைந்த பசுந்தாட் பசளையாகவும் பயன்படுத்தப்படுவதால் நிலம் மாசடைதல் தடுக்கப்படுவதுடன் செயற்கைப் பசளைக்காக (இரசாயன வளமாக்கிகள்) செலவாகும் பெருந் தொகைப் பணத்தையும் மீதப்படுத்தி உற்பத்தி செலவு குறைக்கப்படுகிறது.

விலங்கு வளர்ப்பு மூலம் எமது அன்றாட தேவைகளுக்கான இறைச்சி, பால், முட்டை போன்றவற்றை பெற்று விலங்குப்புரதத் தேவையை பூர்த்தி செய்து கொள்ளமுடிவதுடன் தேவைக்கு அதிகமாக உள்ளவற்றை சந்தைப்படுத்துவதன் மூலம் வருமானத்தையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் விவசாய நிலங்களை உழுதல், உற்பத்தி பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு போக்குவரத்து ஊடகமாக மாடு, எருமை போன்றவற்றை பயன்படுத்துதல் காரணமாக உற்பத்திச் செலவு குறைக்கப்படுகிறது. விலங்கு வளர்ப்பில் உள்ள மிகமுக்கிய அம்சம் என்னவென்றால் நாளாந்தம் தொடர்ச்சியாக மேலதிக வருமானத்தைக் கொடுப்பதுடன் பயிர்ச் செய்கையில் ஏற்படும் பணப்பற்றாக்குறையையும் ஈடுசெய்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளுக்கு வீடமைக்கும் போது காற்றோட்டம், வெளிச்சம் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். காலநிலை வலயங்களுக்கேற்ப விலங்குப்பட்டிகள், தொழுவத்தின் அமைப்பு அளவுப் பிரமாணங்கள் சிறிதளவில் வேறுபடுகின்றன. சுகாதாரமான விலங்குப்பட்டிகள் சுத்தமான பால் உற்பத்தியில் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. விலங்குகளை கையாளுதல், உணவூட்டல், இனப்பெருக்கம், சுகாதார பராமரிப்பு. பதிவுகளைப் பராமரித்தல் போன்ற பல விடயங்கள் விலங்குகளின் முகாமைத்துவத்தினுள் உள்ளடக்கப்படுகிறது. வெற்றிகரமான விலங்கு வளர்ப்புக்கு சரியான முகாமைத்துவம் காணப்படல் வேண்டும்.

பயிர் - விலங்கு ஒன்றிணைந்த பண்ணை முறையின் சிறப்பம்சம் யாதெனில் உயிர்வாயு (Bio gas) உற்பத்தி செய்யப்படுவதாகும். உயிர்வாயுவினை கால்நடை வளர்க்கும் இடங்களிலும் கால்நடை வளர்ப்புடன் ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் இடங்களிலும் உற்பத்தி செய்யும் வாய்ப்பு அதிகளவில் காணப்படுகிறது. விலங்கு, பயிர்க் கழிவுகளை காற்றின்றிய சூழலில் நொதிக்கச் செய்து உயிர்வாயு உற்பத்திசெய்யப்படுகிறது. மாட்டுச்சாணம் இதனை உற்பத்தி செய்வதற்கு மிகவும் வாய்ப்பானதாகும். இலைகுழைகள், கழிவு நீர் என்பவற்றையும் இதற்குப் பயன்படுத்தலாம். உயிர் வாயுவின் உற்பத்தியின் பின்னர் வெளியேற்றப்படும் கழிவுகளை(ஸ்லரி) மிகச்சிறந்த உரமாகவும் மீன்கள், தாராக்கள் என்பவற்றிற்கு உணவாகவும் பயன்படுத்தலாம். இவ் உயிர்வாயுவானது மீதேன் (60-65%), கரியமிலவாயு (35-40%) சிறிய அளவில் ஏனைய வாயுக்கள் (ஐதரசன்சல்பைட்டு, நைதரசன், ஐதரசன், அமோனியா) என்பவற்றை கொண்ட ஓர் கலவையாகும். இவ் வாயுக் கலவையில் எரிபொருளாக பயன்படுவது மீதேன் ஆகும்.

உயிர் வாயு பல வழிகளில் பயன்படுத்தத்தக்கது. பெரும்பாலும் சமையலிற்கு எரிபொருளாகவும் வீட்டில் ஒளிச் சக்தியை பெறுவதற்கு சக்தி முதலாகவும் பயன்படுத்தப்படுகிறது. இவ் உயிர்வாயு உற்பத்தியானது தற்போதைய எரிபொருள் விலையேற்றத்திற்கு மிகவும் இலாபகரமாக அமையும் என்றால் மிகையாகாது.

எமது நாட்டில் ஒன்றிணைந்த பண்ணைத் திட்டங்களை தனிப்பட்டவர்கள் பலரும் அரசாங்கப் பண்ணைகள் சிலவும் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றன. இவ் ஒன்றிணைந்த பண்ணை முறையை மேற்கொள்ளும் போது கழிவு பொருட்கள் மீள் சுழற்சிக்கு உள்ளாக்கப்படுவதனால் நிலத்தில் கழிவுப் பொருட்கள் தேங்கிக் காணப்படாது. இதனால் சூழல் மாசடைதல் தடுக்கப்படுவதுடன் மண்ணின் நீர் பற்றி வைத்திருக்கும் தன்மை, மண்வளம் என்பன அதிகரிக்கின்றன. ஆகவே இப் பயிர் - விலங்கு ஒன்றிணைந்த முறையானது சூழலுடன் நேசமான முறையாகக் காணப்படுகின்றது. எனவே தான் தற்போது நடைமுறையில் உள்ள பல்வேறு பயிர்ச்செய்கை முறைகளில் இவ் ஒன்றிணைந்த பண்ணை முறை மிகச்சிறந்த முறையாகக் காணப்படுகிறது. எனவே நாமும் இவ் ஒன்றிணைந்த பண்ணை முறையை சிறிய அளவிலோ பெரியளவிலோ மேற்கொண்டு உச்சப்பயனை பெற்று எமது நாட்டை அபிவிருத்திப் பாதையில் அழைத்துச் சென்று ஆசியாவின் அதிசயமாக மாற்றுவதற்கு ஒன்றிணைவோமாக.

❑❑❑


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவி

**திரு. எஸ். கிரிசாந்தன்**
ஆசிரியர்,
கலைவாணி கல்வி நிறுவனம்

உடம்பில் எதிர்பாராத விபரீதம்/ நோய் ஏற்படும் போது அதனை ஏதோ ஒரு விதத்தில் அவ்விபரீதத்தை ஒரு அளவிலாவது மருத்துவ உதவி ஏற்படும் வரை அதன் ஆபத்தைக் குறைத்தல், தடுத்தல்/ அற்றுப்போக வைத்தல் முதலுதவி ஆகும்.

நல்ல முதலுதவியாளனின் செயற்பாடுகள்

1. முதலில் செய்ய வேண்டியவற்றை முதலில் செய்தல்.
2. அண்மையில்/ சூழலில் கிடைக்கும் பொருட்களின் உதவியுடன் சிறந்த முதலுதவி அளித்தல்.
3. தேடி விரைந்து சென்று முதலுதவி சிகிச்சை அளித்தல், காலத்துக்கேற்ப சேவையில் செயற்படுதல்.
4. நோயாளியைப் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தி கட்டாயமாக படுக்க வையுங்கள். முன்னுரிமை யாருக்கு, எந்த நோயாளிக்கு என்பதை நீங்களே தீர்மானித்தல் வேண்டும்.
5. கை, கால், காயங்கள் இருப்பின் இதயத்திலும் பார்க்க உயர்த்தி வையுங்கள். தலை/ நெஞ்சுப் பகுதி காயப்பட்டிருப்பின் உடம்பின் மேற்பகுதி உயர்த்தப்பட வேண்டும்.
6. இரத்தம் பெருக்கை கட்டுப்படுத்த நேரடியாக காயத்தின் மீது அமுக்கத்தை பிரயோகித்து இரத்தம் கசிந்தால் அதற்கு மேலதிக அணியம் வைத்து மேலதிக கட்டுக்களை இடுதல் வேண்டும்.
7. கட்டினை 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை தளர்த்தி விடவும். இரத்தப்பெருக்கு நின்று விட்டால் இறுக்கக் கட்டத்தேவையில்லை. அவ்வாறு தேவைப்படின் 2 நிமிடங்கள் கழிந்த பின் கட்டிக்கொள்ளலாம்.
9. Air way, Breathing, Circulation என்பவற்றை சோதித்துப் பார்த்து துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.
10. சாதாரண மனிதனின் சுவாசம் ஒரு நிமிடத்திற்கு 16 ஆகவும் நாடித்துடிப்பு 72 ஆகவும் இருக்கும். இதனை அடிக்கடி சரி பார்த்துக் கொள்ளுங்கள்.
11. ஒட்சிசன் கலந்த குருதி மூளைக்கு தொடர்ந்து 5 நிமிடங்களுக்கு செல்லாவிடின் 10 நிமிடங்களில் இறப்பு நேரிடும்.
12. சுவாசம் நின்றால்/ குறைந்தால் செயற்கை சுவாசம் அளியுங்கள்.
13. இதயத்துடிப்பு நின்றால் இதயத்தை அமுக்கித் தொழிற்படுத்துங்கள்.
14. சுவாசம், நாடித்துடிப்பு இருப்பின் சுயநினைவு அற்றவர்களுக்கு நினைவு மீள்நிலையில் படுக்கவைத்து உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து அவசர சிகிச்சைக்கு உட்படுத்த வேண்டும்.
15. துப்பரவு செய்வதற்கு தொற்று நீக்கப்பட்ட பொருட்கள் பாவிக்கப்படல் வேண்டும். கைகளை சவர்க்காரம் போட்டு கழுவ வேண்டும்.
16. அவதானம், சாமர்த்தியம், விடாமுயற்சி, அனுதாபம் என்பவை முக்கியமானவை.
17. நோயாளியைத் தைரியப்படுத்த வேண்டும். தானும் ஒரு போதும் பதட்டப்படக் கூடாது.
18. காயமடைந்த நோயாளியை வெதுவெதுப்பாக வைத்திருத்தல் வேண்டும். அவசியம் ஏற்படும் போது இதற்காக கம்பளியால் போர்த்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இரத்தக் கசிவு ஏற்படுமிடத்து அதனை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இரத்தம் குறையும் போது அதிர்ச்சி ஏற்படலாம். இரத்தக்கசிவை உடனே நிறுத்த வேண்டும்.
20. நோயாளியை சுற்றி வேடிக்கை பார்ப்பவரை அப்புறப்படுத்த வேண்டும்.
21. நோயாளியை பெரும்பாலும் தேவையின்றி அசைப்பதை தவிர்க்க வேண்டும்.
22. நல்ல காற்றோட்டத்தினை வழங்க வேண்டும்.
23. இறுக்கமாக உள்ள உடைகளை தளர்த்தி விடவும்.
24. முக்கோண கட்டுத்துணியாலும் சுருளான கட்டுத்துணியாலும் காயத்திற்கும் முறிவிற்கும் ஏற்றவாறு கட்டுதல் கூடிய பயன் தரும்.
25. நோயாளியை எவ்விதத்திலும் வைத்தியரிடம் / வைத்தியசாலைக்கு கொண்டு போவது அவசியம்.

## முதலுதவியாளனுக்கு தெரிந்திருக்க வேண்டியவை

1. தன்னைத் தானே பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.
2. உமது உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சிறப்பாகவும் திறம்படவும் நடத்தவும், எப்போது சேவையை தொடங்க வேண்டும் என்பதும், செய்யாது நிறுத்த வேண்டும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும்.
3. எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படினும் ஏனையோரின் விபரீதங்கள் காயங்கள் முறிவுகள் என்பவற்றினை நீக்கும் போது உமக்கு மனமகிழ்ச்சியும் மனத்திருப்தியும் ஏற்படும். எவ்வுதவி முன்னதாகவும் எவ்வுதவி பின்னதாகவும் செய்ய வேண்டும் என்பதை அறிந்து செயற்படல் வேண்டும்.
4. உமது கடமை காரணமாக களைப்படைந்திருப்பின் கடமையிலிருந்து விடுபட்டு ஆறுதலாக இருத்தல் வேண்டும். கடின வேலை செய்யும் முதலுதவியாளன் கட்டாயம் ஓய்வெடுக்க வேண்டும். அன்றில் அவரின் முழு நன்மையையும் பெறமுடியாது.
5. அமைதி நிலவும் காலங்களில் ஆபத்து நேரத்தில் ஏற்படக்கூடிய காயங்கள் முறிவுகள் விஷக்கடி ஆகியவற்றுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதனை விரிவாகத் தெரிந்து வைத்திருப்பது அவசியமானதாகும்.
6. உமது பொது அறிவையும் உம்மில் இயங்கும் எண்ணங்களையும் ஒருமித்த மனிதாபிமான முறையிற் கடமையைக் கண்ணியமான முறையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
7. நீங்கள் காயத்தை/ காயம் பட்டவரையே கவனமுடன் பாதுகாக்க வேண்டும் என்பதனை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.
8. அனர்த்தம் நடைபெறும் நிலையில் பயமின்றி எங்கும் சுயமாகவே போக முடியுமான நேரங்களில் மட்டுமே நீங்கள் சென்று உங்கள் கடமைகளை செய்தல் வேண்டும்.
9. உங்களை நீங்கள் பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும். இல்லையெனில் அது உங்களுக்கு ஆபத்தை தரக்கூடும்.
10. ஆபத்தான நேரங்களில் உங்களது நன்மை கருதி உடனடியாகவே உங்கள் கடமைகளை இடைநிறுத்தவும்.
11. களத்தில் இறங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதற்கு முன்னதாகவே அங்கு ஏற்பட்ட/ ஏற்படவுள்ள பிரச்சனைகள் மற்றும் ஆபத்துக்களை அறிந்திருத்தல் அவசியமாகும்.
12. எதிர்பாராத நிகழ்வுகளையும் எண்ணமுடியாத நிகழ்வுகளையும் எதிர்கொள்ளத்தயாராக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. எப்போதும் சாதுரியமாகவும் அமைதியாகவும் இருக்க வேண்டும்.
14. நோயாளர்களை கவனிக்கும் போது பாதுகாப்பாகவும் உத்தரவாதமாகவும் இருக்க வேண்டும்.
15. DRABC ஆகியவற்றை சரியாக அறிந்து செயற்பட வேண்டும்.
16. இறப்பிலிருந்து பாதுகாக்க இயலுமானவரை உதவி செய்வது ஒரு மனிதாபிமானதாகவும் மனதிற்கு மகிழ்ச்சியாகவும் இருப்பதிற் சந்தேகமில்லை.
17. எல்லோருக்கும் எப்போதும் உதவி செய்யமுடியாது. இருப்பினும் எல்லோருக்கும் மிகச் சிறப்பான உதவி செய்ய முன்வர வேண்டும்.
18. காயப்பட்டவர்களை தமது உடம்பு உஷ்ணம் குறையாமல் அதை மேலும் தடுப்பதற்கு துணி/கம்பளியால் போர்த்திவிட வேண்டும்.
19. காற்றோட்டம் எப்போதும் தடைப்படாது நேராக சுவாசப்பைக்கு போவதினை சரிபார்க்க வேண்டும்.
20. நெஞ்சில்/ வயிற்றில் ஏற்படும் இரத்தப்பெருக்கினை அதே இடத்தில் வைத்து தடுப்பது சரியானதாகும்.
21. நோயாளியின் பின்புறத்தைப் பரிசோதனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
22. எலும்பு முறிந்தவரை அசையாது வைத்திருப்பது அவசியம். அசைக்கும் போது அவ்விடத்தில் உள்ள மிருதுவான இழையங்களும் குருதி குழாய்களும் பாதிப்படையும்.
23. எப்போதும் தொற்றற்ற துணிகள் சுகாதார முறையில் பாவிக்கப்படல் வேண்டும்.
24. நோய்களை கட்டுப்படுத்தல் முதலுதவியாளரின் கடமையாகும்.
25. அசுத்தங்களை அகற்றி சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதும் முதலுதவியாளரின் கடமையாகும்.
26. நீர் ஒரு நம்பிக்கையான முதலுதவியாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
27. தனியாக இயங்குவதிலும் பார்க்க ஒரு குழுவாக இயங்குவது சாலச்சிறந்தது.
28. ஒரு சனக்கூட்டத்தில் முதலுதவிச்சேவை செய்யும் போது இந்த முறை இலகுவாக இருக்கும்.
29. இதற்கான சேவை அடையாளத்தை எப்போதும் அணிந்திருத்தல் வேண்டும்.
30. சிறந்த முதலுதவி சேவையை செய்யும் போது ஆனந்தமாக இருக்கும்.

## குருதி தொடர்பான முதலுதவி

1. குருதி இழப்பு (Blood loss)

**முதலுதவி :-**

1) குருதி வெளியேறும் இடத்தை ஒரு கிருமி நீக்கப்பட்ட அணியத்தை வைத்து இறுக்கமாக அமுக்கி கட்டலாம்/ ஒரு பிளாஸ்டரை போடலாம். அணியம் குருதியினால் நனைந்திருப்பின் அதற்கு மேல் இன்னோர் அணியத்தை பாவிக்கலாம்.
2) குருதி வெளியேறும் பாகத்தை உயர்த்தி ஓர் ஆதாரத்துடன் நிலை நிறுத்திக்கட்டலாம். இதயம் இருக்கும் மட்டத்திற்கு மேலே உயர்த்த வேண்டும்.
3) காயத்தில் அழுக்கு இருப்பின் நீராற் கழுவி ஓர் அணியத்தை வைத்து சுற்றவுள்ள இடத்தையும் துப்பரவு செய்யவும். காயத்தில் அன்னியப் பொருட்கள் இருப்பின் அதனை அகற்ற வேண்டாம். ஒரு மோதிரச் சும்மாடு போட்டு அதனை சேர்த்து கட்டவும்.
4) காயப்பட்ட பகுதியை ஆட்டாமல் அசைக்காமல் வைத்திருக்கவும்.
5) நோயாளியை வசதியான நிலையிற் படுக்க வைக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உள்ளக குருதிப் பெருக்கு (Internal Bleeding)

முதலுதவி :-

1) அதிர்ச்சி ஏற்படுவதை தடுக்கவும்.
2) கால்களை உயர்த்தி அசையாது வைத்திருக்கவும்.
3) எதையும் உட்கொள்ளக் கொடுக்க வேண்டாம்.
4) மருத்துவ மனைக்கு உடனே எடுத்து செல்லவும்.

## 3. அதிர்ச்சி (Shock)

முதலுதவி :-

1) நோயாளியின் தலையைப்பதிவாக வைத்து கால்களை உயர்த்தி விடவும். தலை, மார்பு, வயிறு ஆகியவற்றில் காயம் இருப்பின் தோளினை உயர்த்தி தலையை ஒருபக்கமாக திருப்பி நினைவு மீளும் நிலையில் வைக்கவும். (Recovery Position)
2) இறுக்கமான உடைகளை தளர்த்தி விடவும்.
3) நோயாளிக்கு குடிக்க ஏதும் கொடுக்க கூடாது. நீரினால் நாக்கை மட்டும் நனைத்து விடவும்.
4) நோயாளியின் உடம்பை அசைக்க வேண்டாம்.
5) நோயாளியை உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்து செல்லவும்.

## 4. மயக்கமடைதல் (Fainting)

முதலுதவி :-

1) நோயாளியின் காலை உயர்த்திப் படுக்க வைக்கவும்.
2) நல்ல காற்றோட்டத்தை வழங்க வேண்டும்.
3) இறுக்கமான உடைகளை தளர்த்தி விடவும்.
4) சுயநினைவு பெற்றதும் தைரியம் ஊட்டவும்.
5) குடிக்க ஏதாவது பானம் கொடுக்கவும்.

## 5. வாயிலிருந்து குருதி வெளிவரல் (Bleeding from mouth)

வாயின் உட்பகுதி, சொண்டு, நாக்கு ஆகியவற்றிற் காயம் ஏற்பட்டால் குருதி வெளிவருவது ஆபத்தாக முடியும். பல்லுப் பிடுங்கிய பின் குருதி வெளிவருவதை தடுப்பது கடினம். சில வேளைகளில் இக்குருதி வெளிவருவதை தடுப்பது கடினமாக இருக்கும். சில வேளைகளில் சுவாசத் தொகுதிக்கு போனால் அது சுவாசக் குழாய்களில் அடைப்பை ஏற்படுத்தும். இதனால் அவர் அறக்க நேரிடும்.

முதலுதவி :-

1) நோயாளியை இருக்கச் செய்து காயம் உள்ள இடத்திற் பஞ்சினை வைத்து தலையினை காயம் உள்ள பகுதிக்குச் சாய்த்து இருக்க வைக்கவும்.
2) காயத்தினை நோயாளி தன் இரு விரல்களினாலும் 10 நிமிடம் அழுத்தி வைத்திருக்கச் செய்யவும்.
3) குருதி நிற்காவிடின் மேலும் பஞ்சு வைக்கவும்.
4) குருதியை விழுங்க விடாது வெளியில் துப்பவும்.

## 6. மாதவிடாய் காலக் குருதி வெளியேறல் (Bleeding during menstruation)

இது நடக்கும் போது வயிறு நோகும். இது மாதவிடாய் நோவாக இருக்கும். குருதி வெளியேற்றம் அதிகமாக காணப்படின் தொற்றுக்கள் ஏற்படக் கூடும். சுகாதாரக் கவனிப்பு இக் கால கட்டத்தில் (தனிநபர் சுகாதாரம்) இன்றியமையாததாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலுதவி :-

1) தனிமைப்படுத்தவும்
2) சுத்தமான உறிஞ்சுந்துணிகளை (Sanitary Pad) பாவிக்கவும்.
3) தனக்கு சுகமான நிலையில் இருக்கச் செய்தல்.
4) மேலும் நோவாக இருப்பின் நோ தணிக்கும் பனடோல்/ டிஸ்பிறின் வில்லைகளை பாவிக்கவும்.
5) பெண் உறுப்பில் யார் மூலமாகவேனும் தாக்கம் ஏற்படின் அவ்வுறுப்பினை கழுவாது மலசலம் போகாது டாக்டரை சோதிக்கும்படி ஆய்த்தமாதல் வேண்டும்.

## 7. உயர் குருதி அமுக்கம். (High Blood Pressure)

அறிகுறிகள் :-

1) அதிகளவு வியர்வை
2) தலையிடி, தலைச்சுற்று, நெஞ்சுபடபடப்பு, மூக்கில் இருந்து இரத்தம் வருதல், இரவில் அதிக சலம் கழித்தல், மூச்சுத்திணறல்

உயர் குருதி அமுக்கத்தால் பாதிப்படையும் அங்கங்கள்

1) இதயக் குருதிச் சுற்றோட்டம்
2) மூளை, நரம்புத் தொகுதி
3) சிறு நீரகம்
4) கண்

முதலுதவி :-

ஆவண செய்து விரைவாக வைத்தியசாலைக்கு அனுப்பவும்.

□□□






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

சங்கத்தொட்டிலிலே வளர்ந்த செந்தமிழ்
சிப்பிக்குள் முத்துச் சிவிப்பது போல்
என்கவிக்குள் நீ சிலிர்க்க
சதா சிவனை வேண்டுகின்றேன்.

கலைகளின் தாயே முத்தமிழே
கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ்
கற்பாறையுடன் கரையாதோ உனைக்கேட்டு

மூவேந்தர் வளர்ந்த முத்தமிழும் நீயே
முச்சங்கங்கள் உனை வளர்த்தனவோ
முன்னர் உன்னை அரவணைக்க
என்ன தவம் செய்தாய் நீயோ?

இயலாகி இசையாகி நாடகமாகி
உரையோடும் பாட்டோடும் இலக்கணமாய்
உயிரோடு கலந்த முதுமொழியாய்
இவ் உலகில் வாழ்கின்றாய்.

உலகமொழிகளிலே
ஆதிஅந்தம் உனக்கில்லை
பைந்தமிழே தமிழரின் தாய்மொழியே
வீரமுரசம் செய்யும் வெற்றித்தமிழே

செம்மொழியான தமிழ்மொழியே
தித்திக்கும் தெவிட்டாத தீந்தமிழே
பண்ணாகப் பாவலர் உனை வளர்க்கையிலே
கண்ணாக இருந்து கலைக்கோலம் புரிவதேனோ?

தமிழ் தந்த வள்ளுவனே
தரணியில் முதற் புலவனாவான்
தமிழ்கவி கம்பனுக்கு
தக்கதோர் இணையுமுண்டோ

தமிழர் தம் பண்பாட்டிற்கு ஈடாய்
தரணியிற் பண்பும் உண்டோ?
தமிழர் பண்பது அழியுமானால்
தரணியில் அழிவது தமிழன்றோ?

சினிமாவே உன்னை அரவணைக்கும்
சிந்துதமிழே இந்து மா கடலின்
இணைமொழியும் நீயே
இணையத்தில் இடம்பிடித்த
ஒருமொழியும் நீயே

கன்னித்தமிழே நீ
கலைக்கோலம் புரிவதேனோ?
இருபத்தோராம் நூற்றாண்டதனிலே
இனிய தமிழர் உனக்கு விழா
எடுக்கின்றார்.

செந்தமிழே உனைப்பாட
எத்துணைத் தகுதி எனக்குண்டோ
நானறியேன்
இயன்றவரை பாடுகின்றேன்
பைந்தமிழே பிழை பொறுப்பாய்

த. நிரஜா
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த வானத்திலென்றும் பௌர்ணமியின் கீற்றுக்கள்

பாசம் வேர்விட
சுயநலம் விடைபெற
சுகதுக்க வேளையிலும்
தோள் தருவதே நட்பு
ஆண்பெண்ணும் விளக்கினால்
பாசநெய் வளர்த்திட
தியாகத் திரியினிலே
சுடர்விடுவதே நட்பு

ஆத்மாத்த நட்புக்கு
அமாவாசை வருவதில்லை
அந்த வானத்திலென்றும்
பௌர்ணமியின் கீற்றுககளே
உறவுகளின் ஆழத்தில்
எதிர்பார்ப்பே குமிழியிடும்
நாட்டின் ஆழத்தில் உன்
உயிர்ப்பே மூச்சாகும்.

நட்பின் விசாலம் பரப்புக்கு
கட்டிவிட முடியாத வரம்பு
கட்டிய தாலியே சறுக்கிட்டு
கபரி றுதனையே குறுக்கிட்டு
கபரி றுதனையே திரித்தாலும்
பெற்ற தாயே பேதமை
வலைதனை விரித்தாலும்
உற்றபொழுதென்றில் உறுதுணையாய்
வந்து உயிர் மீட்கும் நட்பு

இருள்சூழ் பொழுதுகளில்
ஒளிமிளரும் நட்பு உன்
இருவிழியின் விளிம்புகளில்
உருளுகின்ற கண்ணின
ஒற்றி யெடுக்கும் கைக்குட்டை
தோழமையென்பது
எப்போதும் ஆண்பாலுக்கும்
பெண்பாலுக்கும் பொதுவானது
காமத்துப்பாலுக்கு அப்பாற்பட்டது.
உப்பில்லா உணவு
ஒருபோதும் ருசிப்பதில்லையே
நட்பில்லா வாழ்வும் அதேபோல் தான்
தோழமைத் தோட்டத்தில்
வாசப் பூக்கள் பூத்தால்
நாளும் பூக்கும் நலமே
காகிதப் பூக்கள் பூத்தால்
கத்தரிக்கும் அவலமே

சில மனிதர்களின்
வாழ்க்கைக் கிண்ணத்தில்
நட்புத்துளிகளாக
விதைத்துளிகளும் விழுகின்றன ஆனால்
உண்மையை மட்டும்
ஆடையாய் அணிந்த
உன்னத நட்பு
உயிருள்ளவரை வாழும்

R.P.வசீகரன்
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாதது கல்வி

காலம் பார்த்து வயலில்
விதைத்த விதை பின்பு
பச்சைப் பசுமையான இயற்கையை
தோற்றுவிப்பது போல்

இங்கிதம் பார்த்து சிறுபிள்ளை
மனதில் விதைத்த கல்வி
மனதை எத்தனை கூறுபோட்டாலும் - கல்வி
காலத்தால் அழியாது.

நிலத்தில் பற்றற்றநிலையில் நேர் கொண்டார்
மழைநீரால் அடித்துச் செல்வது போல்
மனதில் விருப்பமின்றி கற்கின்ற கல்வி
மனதில் நின்று நீங்கிவிடும்

உளிகொண்டு செதுக்கிய சிற்பம்
நிலைத்து நிற்பது போல்
எழுத்தாணி கொண்டு எழுதிக்கற்கும் கல்வி
காலத்தால் அழியாது.

கடும் காற்றிலும் பறக்காது
கொடும் மழையிலும் கரையாது
நெடுந்தீயிலும் எரியாது நீ கற்றகல்வி
காலத்தால் அழியாது.

வி. விஜிதரன்
*தரம் 11*

# புன்னகை

ஒரு நாள் மட்டும் வாழுகின்ற
மலர்களின் புன்னகையைப் பார்
ஒருவர் மனதையும் பாதிக்காத
தெளிவான உண்மையான புன்னகை

மனிதா! நீ ஏன் பழகவில்லை
மலர்களைப் போல புன்னகைக்க
பல நாள் வாழ்ந்து முடிக்கின்றார்
பலபேர் மனதைக் கடிக்கின்றார்

உன்னில் ஒருவன் உயர்ந்துவிட்டால்
வஞ்சகம் கொண்டு புன்னகைக்கின்றாய்
நீ தான் உலகில் உயர்வென்றால்
கர்வத்துடனே புன்னகைக்கின்றாய்

ஊனமுள்ள மனிதனைப் பார்த்து
ஏளனமாய் புன்னகைக்கின்றாய்
உனக்கு பிடிக்கா மனிதனிடம்
உண்மையின்றி புன்னகைக்கிறாய்

புன்னகை ஆண்டவன் கொடையப்பா
அமுதத்திலும் மிக்க இனிமையப்பா
புன்னகையை நீ விஷமாக்கி மற்றவர்
மனதைக் கொல்லாதே

கா.விசாலி
*தரம் 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணி கல்விநிறுவனம்

கல்வியைப் போதிக்கும் கலைவாணி கல்விநிறுவனம்
கலைகளைத் தந்து கலைவாணி உறையும் ஆலயம்
சிவரூபன் ஆசான் நினைவினிலே
சிறப்பாக உதித்தாயே நனவினிலே
உதித்தாயே கோவை ஊரினிலே
உதித்து நின்றாயே எம் மனதினிலே
அடைந்தாயே அகவை பதினைந்தை
ஆளாக்குவது எம்மை உன்விந்தை

வேரூன்றினாய் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற்று ஏழு
விருட்சமாய் மாறி நீ பல்லாண்டு வாழ
மார்கழி மாதம் பதினைந்தாம் நாளை
மகிழ்வோடு கொண்டாடுவாய் பிறந்தநாளை
கேள்விக்குறியாக வந்த பல தடவைகள்
கேள்விகளுக்காய் அளித்தாய் விடைகள்
வளம் மிகுந்த ஆசிரியர்கள் வளத்தினைப்
பெறவந்த நல்மாணவர்கள்

கலைவாணி மகுடவாசகம் "கல்வியே ஒளி"
கல்விமான்களை செதுக்கும் ஆசான்கள் உளி
எண்திசையிலிருந்தும் உனை நோக்கி வருவர்.
எங்கிருந்து வந்தாலும் உயர் இடத்தை அடைவர்.
உன் புகழோ தொடும் உச்சம்
உன் நிறுவன அழகோ எல்லாம் விஞ்சும்
என்றுமே வற்றாத கல்வி ஆழி நீ
எமக்கு காட்டிடுவாய் நல்வழி நீ

கோ. கண்ணன்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுயுகம் படைத்திடுவோம்

மனிதம் என்ற மகத்தான சொல் இன்று
மண்டியிட்டு மாய்கிறதே
புனிதம் என்ற வார்த்தை இங்கு
புரையோடிப் போனதுவே

மாணவம் என்ற மணியான சொல்லின்று
மாண்டிழுந்த சாய்கிறதே
வீணவம் என்று பலர் பேசிட
நாடகம் வீதியெங்கும் அரங்கேறுகின்றதே

ஆசிரியர் என்ற அர்த்தமுள்ள சொல் இன்று
ஆராத கருதியற்று அபஸ் வரமாகிறதே
தேசுடைய தெய்வத்தொழில் இன்று
தெருக்கல்லாய் அமைகிறதே ஏன்?

கயமைகள் எங்கும் காலுான்றி எழுந்திட
கண்ணியங்கள் மண்ணிற் புதைந்திட
நயமிகு நந்தவன காற்றுமிங்கு
நாற்றமிழந்த வீசுவது ஏன்?

பிஞ்சு மழலைகளின் கொஞ்சும் ஒலியும்
பேய்க் கதறலாகி ஒலிப்பதென்ன
நஞ்சுக்குளியலில் நிதம் ஊறியவை
நெஞ்சிழந்து நினைவு தடுமாறுதம்மா

தன்னலச் சேற்றில் தரணி அமிழ்ந்ததால்
தருக்கெழுந்து தலை விரிந்தாடுதம்மா
சொன்னால் முடியுமோ சோதனை
சோம்பி இருந்திடில் இது மாறிடுமோ?

கல்விச்சாலிறங்கி வந்திடும் சொல்லேருழவரே
காரிருள் போக்கிட உளங்கொள்வீர்
நல்லவை தேடி நாளைய தலைமுறைக்கு
நலிந்தவை போக்கிட நீ எழுவாயா

பொய்மைச் சகதிக்குள் புழுத்திருக்கும்
புலமைக்கருத்துக்களை களைந் தெறிவீர்
மெய்மை உணர்த்தி மனிதம் வளர
மேதினி ஒர்குலம் எனும் விரிந்த பார்வை

மண் வயல் உழுது நீ இங்கு
மண்டிய களைகளை அகற்றிடு
தினமும் அம்மியும் நகரும்பாங்கில்
திடமுடன் வழிகாட்டு ஆசானே

மாணவம் இங்கு மணிமுடியாகிட
மகத்துவம் இங்கு உயரந்திட
மாணரும் காகனை புரிந்திட மாநிலா,
ஆசானே எழுந்திரு

குருத்துக்கள் கருகாமல் தளிர்க்கவும்
குவலயம் எங்கும் செழிக்கவும்
வருத்தம் நீங்கி வானுயர் வாழ்வு பிறக்கவும்
வந்திடுவாய் ஆசானே கரம் சேர்த்து

கவலைகள் நீங்கவும் கயமைகள் ஒழியவும்
காலமொன்று புதிதாகி வசந்தம் வந்திடவும்
அவலத்துக் கொரு தகனக்கிரியை செய்து
அவனியில் புதுயுகம் படைத்திடவா

**வி.வாசவன்**
*தரம் 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்தினம்

சிறுவர்தினம் கொண்டாட நந்தலாலா
சேர்ந்து நாங்கள் வந்து விட்டோம் நந்தலாலா
உலகில் உள்ள சிறுவர் எல்லாம் நந்தலாலா
ஒன்று கூடி மகிழ்வாரே நந்தலாலா

படி படி எம்மை எல்லாம் நந்தலாலா
பிடித்து இழுக்க வேண்டாமே நந்தலாலா
பாடி ஆடி மகிழ்ந்திடவே நந்தலாலா
பாசமாக எமை விடுங்கோ நந்தலாலா

கதைகேட்க ஆசை உண்டே நந்தலாலா
காதுக்கினிய கதை சொல்லுங்கோ நந்தலாலா
வதைத்து எம்மை அடக்க வேண்டாம் நந்தலாலா
வாட்டிக் காய விட வேண்டாம் நந்தலாலா

சிந்திக்க எம் மூளை உண்டு நந்தலாலா
சிறிது நேரம் ஓய விடுங்கோ நந்தலாலா
விளையாட விருப்பமுண்டு நந்தலாலா
விடுதலையாய் எமை விடுங்கோ நந்தலாலா

உரிமை பல எமக்குண்டு நந்தலாலா
உவந்து அதைத் தந்திடுங்கோ நந்தலாலா
அடித்தெம்மை அடக்க வேண்டாம் நந்தலாலா
அன்பால் எம்மை வளர்ந்திடுங்கோ நந்தலாலா

பா. வித்தகி
தரம் 8

# பதினைந்தாவது அகவையில் எம் கல்லூரித் தாய்

பதினைந்தாவது அகவையில்
எம் கல்லூரித் தாய்
கதிரவன் கதிர்
கரங்களில் தவழ்ந்து
நட்சத்திர மகுடம்
தரித்து
விண்ணில் - திரு
விளக்காய் மிளிரும்
கலைவாணி தாயின்
மறு அவதாரமாய்
அவள் கலைகளை
கசடறக் கற்பித்து
கரை சேர்க்கும்
ஓடமாய்
கோவை மண்ணில்
மிளிர்ந்திருக்கும்
எம் கல்லூரியன்னை
கலைவாணி.
இன்று தன்
மூவைந்தாவது
அகவை நிறைவில்
அகம் மகிழ
தடம் பதிக்கின்றாள்
கல்விச் சிகரமாய்
தலைமை ஆசிரியரின்
வழியில்
வழி நடத்தும்
உதவிக் கரங்களாய்
நல்ல நல்ல
ஆசான்களுடன்
கல்வி ஒளியை நோக்கி
நாமும் நடக்கின்றோம்
எதிர் காலமும்
எம்மோடு நடைபோடும்
பற்பல ஆண்டுகள்
கலைவாணி அன்னை
சளைக்காமல்
உயர்ந்திருப்பாள்
எம்மை வழி நடத்திச்
செல்ல.

ச.இராஜதுளசி
2011 O/L



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் மாலைப் பொழுது

நன்றாய் செக்கச்சிவந்த வானம்
தென்றல் வாகாய் பாடும் கானம்
பட்சிகள் கூட்டில் செல்ல
என்மனம் லயித்தது மெல்ல
இருள் சூழும் பொழுது அது
மனதைப் பறிக்கும் மாலைப்பொழுது
இறைவன் தீட்டிய ஓவியம் அது
இயற்கை கொடுக்கும் காவியம்
மல்லிகை மணக்கும் மணத்திலே என்
மனம் கவரும் கணத்திலே
நிலவு தோன்றுவது வானிலே என்
மனது சொல்லுது கனவிலே

கவிதாஞ்ஜி சந்திரகாந்தன்
தரம் - 7

## புதுவருடம்

சித்திரை ஆண்டே வா வா வா
சின்னவர் எமக்கு இன்பம் தா
உற்றவர் எல்லாம சேரலாம்
உந்தன் வரவால் மகிழலாம்
ஊஞ்சல் கட்டி ஆடலாம்
உயரப் பட்டம் ஏற்றலாம்
சித்ரை என்றால் பலகாரம்
சின்னவர் எமக்குப் புதுஆடை
நித்திரை விட்டு எழுந்தவுடன்
சாத்திர முறையில் நீராடல்
புத்தம் புதிய ஆடையுடன்
கோயில் போவோம் !
கடை போவோம்!
அப்பா தருவார் கைவிஷேடம்
அம்மா தருவாள் முத்தங்கள்

வாகீசன் டிலக்சனா
தரம் 7

## நல்லபயிர்கள்

நல்ல நல்ல பயிர்களாம்
நாமே செய்யும் பயிர்களாம்
நன்றாய் விளையும் பயிர்களாம்
எம்மைக் காக்கும் பயிர்களாம்

வீட்டில் விளையும் பயிர்களாம்
விலையில்லாப் பயிர்களாம்
விளையாட்டாக நாமெல்லாம்
வீட்டில் வளர்க்கும் பயிர்களாம்

சந்தைப் பொருட்கள் சிலவுமே
சர்ச்சையான பொருட்களாம்
சந்ததியோர் எல்லோரும் பார்த்து
வாங்கும் பொருட்களாம்

சுத்தமான சூழலில் விளையும்
நல்ல பயிர்களாம்
சத்துடனே உண்ணலாம்
சுகத்துடனே வாழலாம்

B. சாருணி
தரம் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் எத்தனை நாட்கள்....?

பிரிந்து செல்லும் புரியாத உறவினால்
மனம் அழுது தொலைக்கின்றது
விருப்பங்களைக் கோர்த்துக் கொடுத்த
பெண்ணின் மனத்திற்கு - இப்போது
வெளிப்படுகின்ற பெயரோ
"ஏமாற்றங்களின் மறுவாழ்வு"

காலம் கடந்து
காத்திருப்புக்கள் தொடர்கின்றன
கனதியான பிரியங்கள் கட்டாய
மாற்றம் பெறும் என்று
"இலவு காத்த கிளியாய்"
இன்னும் - அவள்
காத்திருக்க நினைக்கிறாள்.

மாற்றங்கள் வரும் என்ற
மாயச் சூழலுக்குள் மௌனத்தைப் பரிசாக்கும்
பொல்லாத துரோகங்கள்
வலியின் உந்துதலில் கதறியழுதும்
காத்திருக்கும்
கண்களின் விழியோரம்
கண்ணீரை சேகரிக்கின்றன
காத்திருந்தே கலங்குகின்றது.
அந்த புனிதமான உள்ளம்

கடந்த இரவுகளில்
தலையணையில் கவிதை எழுதியது
பிரிந்த பெண்ணின் கண்ணீர் மட்டும்!
காற்றுக் கூடக் கலங்குகின்றது.
பெண்ணின் கவலைகண்டு
ஆனால் நீயோ! அவளை
விட்டு விலகிச் செல்கிறாய்
அவளைத் தவிக்க விட்டு!
புரிந்துகொள்ளுங்கள்!
நொடிகளில் மறைவாகும்
புரிதலற்ற உறவுகளுக்காய்
உருண்டோடும் நாட்கள்
உரியவர்களுக்கு கேட்கப் போவதில்லை
இன்னும் எத்தனை நாட்கள்
காத்திருந்தே களைக்கப் போகின்றீர்கள்...?

கஜபாலினி ஸ்ரீதரன்
தரம் 10

## வேண்டுதல்

கரங்களைக் கூப்பி
நாடாள முன்வரும்
நன் மக்களே!
எங்கள் எதிர்காலத்தைக்
கொஞ்ச மேனும் வளமாக்குங்கள்
உங்கள் எதிர்கால நலன்களைச் சற்றே
புறந்தள்ளி வையுங்கள்....!

B. சருணி
தரம் - 4

## வினோத உடை

பிஞ்சில் பழுந்து விட்டானோ..?
என்று பெரியாரே
பயப்படாதீர்கள்....
வினோதமாய் உடை அணிந்து
பார்ப்பவர் கண் கவர்ந்து
வினோத உடைப்போட்டியில்
வெற்றிவாகை சூட
வந்துள்ளேன்....!

B. சருணி
தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SELVI MULTI SHOP

சகல வகையான சைக்கிள், மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, வாட்டப்பம்
உதிரிபாகங்கள், அழகுசாதனப் பொருட்கள், மளிகை பொருட்கள் பாடசாலை உபகரணங்கள்
போன்றவற்றை பெற்றுக்கொள்ள உங்கள் ஒரே தெரிவு

## செல்வி பல்பொருள் வாணிபம்

Point Pedro Road,
Putharmadam Kopay.

உரிமையாளர்:
வி. செல்வி

மானிப்பாய் வீதி,
புதர்மடம் கோப்பாய்.

# சாந்தன் மல்ரி சொப்

சகல வகையான அன்பளிப்புப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள் மற்றும் போட்டோக்கொப்பி, லெமனேற்றிங்
வசதிகளைப் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடம்

## SHANTHAN MULTI SHOP

Point Pedro Road, Kopay.

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

# K.K. RAMANAN JEWELLERS

*Jewellers & Diamond Merchants*

சகல வடிவங்களிலும் தங்கநகைகளை குறித்த தவணையில் செய்து தருபவர்கள்

## K.K ரமணன் ஜுவலர்ஸ்

"UMAPATHY"
No. 57, Palaly Road,
Kantharmada, Jaffna.

T.P: 021 222 8343, 077 7593794
E-mail: ramananharan@yahoo.com
Skype: haran51

# KARUNAKARAN RAMANAN

Flora

*Flora Tissue* இன்
ஏகவிநியோகஸ்தர்கள்



## K.K ரமணன் ஜுவலர்ஸ்

No. 57, Palaly Road,
Kantharmada, Jaffna.

T.P: 021 222 8343,
077 7593794




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மித்திரன் மல்ரி சொப்

அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப்பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் கூல் சோடா, யூஸ், ஐஸ்கிறீம், பிஸ்கட்வகைகள் என்பவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள

# MITHERAN MULTI SHOP

Manipay Road,
Kopay North, Kopay.

மானிப்பாய் வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

# CD HOUSE

அனைத்து தமிழ், ஆங்கிலத் திரைப்படங்கள்,
ஓடியோப் பாடல்கள், வீடியோப் பாடல்கள், தொடர் நாடகங்கள்,
இசை நிகழ்ச்சிகள், றெஸ்லிங் தொடர்கள்,
சிறுவர்களுக்கான காட்டூன் படங்கள் போன்ற சீடிகளை
வாடகைக்கும் விலைக்கும் பெற்றுக்கொள்ள
உங்கள் நம்பிக்கையான தெரிவிடம்.

# CD ஹவுஸ்

Manipay Road,
Kopay.

மானிப்பாய் வீதி,
கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் தாய் வாழ்த்து

அன்னைத் தமிழ் அவள் அரியணை ஏறினாய்
எங்கள் பள்ளியிலே
அன்னவள் மடியில் தவழ்ந்து வருகின்ற
சின்னஞ் சிறுவர் நாம்.

எந்த மொழிகளைக் கற்று வந்தாலும்
எங்கள் உயிர் தமிழே
எந்தையர் மொழி எம் சொந்த மொழியிதை
ஏற்றமுடன் பயில்வோம்

சுந்தரத் தமிழை சுவைத்து மகிழ்ந்திடும்
செந்தமிழ் சிறுவர்கள் நாம்
மந்திர சக்தியைத் தந்திடும் தமிழ்த்தாயை
வந்தனை செய்திடுவோம்

அன்னையின் அற்புத ஆற்றல்களை நாம்
பெற்று எழுந்திடுவோம்
அன்னவள் ஆணையில் அகிலத்தை வென்றிடும்
சக்தியைப் பெற்றிடுவோம்

(அன்னை...)

## தமிழன் உயிர் தமிழ்

அகத்தியன் வளர்தத தமிழ்
அகரத்தை வளர்த்த தமிழ்
யுகத்தின் முழுமை தமிழ்
யுகத்தின் இளமை தமிழன்

காப்பியன் சுமந்த தமிழ்
வள்ளுவன் சுவைத்த தமிழ்
பாரதி கதைத்த தமிழ்
பாவேந்தர் காதலித்த தமிழ்

சிலம்பை உடைத்த தமிழ்
சீதையை உயர்த்திய தமிழ்
சதங்கை கட்டிய தமிழ்
சரித்திரம் காட்டிய தமிழ்

கன்னியாய் வாழ்ந்திடும் தமிழ்
கவிதையாய் வாழ்ந்திடும் தமிழ்
கணினியாய் நிமிர்ந்திடும் தமிழ்
கணிதமாய் நிலைத்திடும் தமிழ்

போர்கள் நடத்திய தமிழ்
புலவர்கள் பாடிய தமிழ்
வீரர்கள் காத்திடும் தமிழ்
வெறறியர்களை அமித்திடும் தமிழ்

தமிழன் உயிர் தமிழ்
தமிழன் உயிர் தமிழ்
அமிழ்தின் கதிர் தமிழ்
அணுவின் புதிர் தமிழ்

கே. வேணுஜா
தரம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொலைக்காட்சி

நாட்டிலே நடப்பதெல்லாம்
நல்ல பல செய்தியெல்லாம்
வீட்டினிலே காட்டி விடும்
விந்தையான பெட்டியிது

தொலைதூரக் காட்சியெல்லாம்
தொடுத் தூரம் தெரிய வைக்கும்
அலைகடலைத் தாண்டி ஒளி
அலைகளால் அறிய வைக்கும்

விண் வெளியில் நடப்பவரை
வீட்டிற்கே கொண்டு வந்து
கண் எதிரில காட்டி விடும்
களிப்படையச் செய்து விடும்

வீட்டினுள்ளே திரையரங்கம்
வீடெல்லாம் கலை முழங்கும்
ஏட்டிலுள்ள கல்வியெல்லாம்
எளிதினிலே ஊட்டிவிடும்

பி.பிரியங்கா
தரம் 4

## புனிதநாள்

பாவங்களைத் தீர்த்திட
பரம்பிதா பிறந்த நாள்
பாதகர்களை அழித்திட்ட
பாலன் பிறந்த நாள்
தீமைகளை அழிய
திருமகள் பிறந்த நாள்
தியாகி பிறந்த நாள்
சிலுவை சுமந்திட்ட
சீவாளன் பிறந்த நாள்
முள் வலி தாங்கிய
முதல்வன் பிறந்த நாள்
மக்களை காத்திட்ட
மன்னவன் பிறந்தநாள்
மானிடர்களாய் மரணித்த
மாவீரன் பிறந்த நாள்
கல்வாரி காவிய நாயகன்
பிறந்த நாள்
இன்நாளே எங்கள் திரு நாள்
யேசு பாலன் பிறந்த நன் நாள்

இ.யூட்சின்மேரி
தரம் 3

## "அம்மா"

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை" என்ற கூற்றுக்கு இணங்க பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தவர் எனது அம்மா

- எனது அம்மா மிகவும் அழகானவர்.
- என் மேல் மிகவும் அன்புகொண்டவர்
- பள்ளிக்கு அனுப்பி படிக்க வைப்பவரும் எனது அம்மாவே!
- சுவையான உணவுகளை சமைத்து தருவதும் எனது அம்மாவே!
- மாலைவேளை விளையாடும் போது எனது அம்மாவும் சேர்ந்து விளையாடுவார்.
- "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்று கூறுவார்கள். அதுபோல் எனது அம்மாவை என்றும் வணங்கிடுவேன்.

நன்றி

சி.காருண்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரில் புதுமைகள் சேர்ந்திடுவீர்

முதுகில் புத்தகப் பையுடனே
முந்திச் செல்லும் பிள்ளைகாள்
எதுவும் கற்று அறிந்திட
ஆசைகொள்ளும் பிள்ளைகாள்

அன்னை தந்தை உறவினர்
அன்பைப் பேணி வாழுவீர்
என்றும் உயர்வு கொள்ளலே
எதையும் ஆய்வு செய்குவீர்

தினமும் உடலைப் பேணிடவே
தேகப் பயிற்சி செய்திடுவீர்
மனதில் உறுதி கொள்வதால்
வெற்றி என்றும் கிட்டுமே

தெருவோரம் காணும் பொருட்களை
தீண்டின் அபாயம் நேரலாம்
குருவின் சொல்லைக் கேட்டுமே
கற்று உயர்வு கொள்ளுவீர்

தமிழர் என்ற பெருமையை
தரணி தன்னில் நாட்டவே
தமிழர் தம் கலைகளை
அறிந்து தெளிவு கொள்ளுவீர்

ஒற்றுமை எங்கும் ஓங்கிடவே
ஒன்றாய் இணைந்து கைகோர்த்து
பற்றுடன் மண்மேல் வாழ்ந்திடுவீர்
பாரில் புதுமைகள் சேர்த்திடுவீர்

லோ. திலக்ஷி
*தரம் 10*

## பண்பாட்டுப்பாலம்

மனிதன் அன்று பொல்லாத விலங்கு
அவனிடம் இருக்க வில்லை வாழ்க்கை ஒழுங்கு
தனக்குள் வகுத்தான் ஒரு கோடு
அதுதான் ஒவ்வொருவரின் பண்பாடு
அதன் பின் மனிதன் மனிதனானான்
பண்பாடு பேணும் புனிதனானான்
இன்று கண்காணும் நாகரிகம் - மனிதனை
தன்பக்கம் வலித்து அழைக்கிது
தாயின் கருவில் உருவான குழந்தை
தாயை விட இளமையான அழகென்று
சேயை நம்பி நீ தாயை கொன்றால்
சேயும் ஆகாரமின்றி இறந்து விடுமே
பண்பாடு தந்த நாகரிக அழகில்
மோகம் கொண்டு பண்பாட்டை மறந்தால்
நாகரிகம் விரைந்து அநாகரிகமாகும்
மனிதனும் முன்போல் விலங்காவான்
நாகரிக நதியில் பண்பாடே ஒரு பாலம்
நதியை ரசித்த படி பாலத்தில் நட தப்பில்லை
பாலத்தை விட்டு நதியினில் குதிப்பதா!
வேண்டாம்
அங்கு அழகான வெள்ளி அலை அற்பன்
உன்னை அடித்துச் சென்று விடும்.
பண்பாட்டு பாலத்திலே கவனமாக நில்

ந.நவரூபி
*தரம் 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித விநோதங்கள்

$33^2 = 1089$

$333^2 = 110889$

$3333^2 = 11108889$

$33333^2 = 1111088889$

$333333^2 = 111110888889$

$3333333^2 = 11111108888889$

$333333333^2 = 1111111088888889$

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 0 | x | 9 | + | 1 | = | 1 |
| 1 | x | 9 | + | 2 | = | 11 |
| 12 | x | 9 | + | 3 | = | 111 |
| 123 | x | 9 | + | 4 | = | 1111 |
| 1234 | x | 9 | + | 5 | = | 11111 |
| 12345 | x | 9 | + | 6 | = | 111111 |
| 123456 | x | 9 | + | 7 | = | 1111111 |
| 1234567 | x | 9 | + | 8 | = | 11111111 |
| 12345678 | x | 9 | + | 9 | = | 111111111 |
| 123456789 | x | 9 | + | 10 | = | 1111111111 |

பா. ஆதித்தியன்
*தரம் 9*

**ஜோக்:**

அதோபார் மொட்டை
அவன் உயரமோ ரொம்ப குட்டை
அவன் நெற்றியில் பட்டை
பரீட்சைக்கு எடுத்துச் செல்கின்றான் அட்டை
அவன் பரீட்சையில் வாங்குவதோ முட்டை

அ. தினேஷிகா
*தரம் - 5*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்துறவி விவேகானந்தரின் சிந்தனைகள்

- கைகள் இருப்பது பிறருக்கு உதவி செய்யத்தான் பட்டினியாய்க் கிடந்தாலும் கடைசிப் பருக்கையையும் பிறருக்குக் கொடுப்பது தான் நல்லது. கொடுப்பவன் முழுமை பெற்று முடிவில் கடவுளாகின்றான்.
- ஒருவருக்கு உதவி செய்ய எண்ணி, யாருடைய கை முன்னே நீளுகிறதோ, அவனே மக்களில் சிறந்தவன். பரந்த இந்த உலகத்தில், கிராமம் கிராமமாகச் சென்று மனித குலத்திற்கு நன்மை செய்வதை கடமையாகக் கொள்ளுங்கள். மற்றவர்களின் நன்மைக்காக நரகத்திற்குக் கூடச் செல்ல தயாராகுங்கள்.
- தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட்டிக் கொள்வதில் ஆற்றலைச் சிதற விடாமல் அமைதியுடனும், ஆண்மையுடனும் ஆக்கபூர்வமான கடமைகளில் அக்கறை காட்டுங்கள்.
- சேவை செய்யும் வாய்ப்பு எல்லாருக்கு கிடைப்பதில்லை. தன் குழந்தைகளில் யாராவது ஒருவருக்கு உதவி செய்யும் வாய்ப்பை கடவுள் அளித்தால் அதன் மூலம் நீங்கள் பாக்கியம் பெற்றவராகிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.
- நல்லவர்கள் உலகில் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனிதகுலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை உலக வரலாறு எங்கும் காணமுடியும்.
- பாமரர்களுக்கு கல்வியையும், மனத்திற்கு தைரியம் மிக்க சொற்களையும் வழங்குவது தர்மங்களில் சிறந்த தர்மாகும். ஒருவன் கல்வி பெறுவதால் அவனுடைய குடும்பமே முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளே குடி கொண்டு இருக்கின்றன.
- யாருடைய நம்பிக்கையையும் கலைக்க முயலாதீர்கள். முடியுமானால் அந்த மனிதனுக்கு அவன் கொண்ட நம்பிக்கைக்கும் மேலாக இன்னொன்றைக் கொடுங்கள்.
- நாம் நினைக்கும் ஒவ்வொரு எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சூட்சுமத்தன்மையை அடைகிறது.
- மனிதன் தன் வாழ்க்கையைத் தானே உருவாக்கிக் கொள்கின்றான். தனக்குத் தானே அமைத்துக் கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.
- எழுந்து தைரியமாக நின்றால், உன்விதியை நீயே நிர்ணயிப்பாய்.
- கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பர், அன்பைக் கொள்ளாமல் பொருளை மட்டும் கொள்ளும் விலைமகன் போன்றவர் ஆவார். அவருடைய நட்பினை ஏற்றுக்கொள்ளாதீர்கள். நம்மைப் பற்றிச் சிந்திக்காமல், மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறதளவு நினைத்தால் கூடப் போதுமானது. இந்தச் சிந்தனை சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாகத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற பேராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். அறிவால் அடையமுடியாத உயர்ந்த இடத்திற்கு நல்ல மனநிலை ஒருவனை அழைத்துச் செல்லும்.
- உங்களிடமே நீங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். ஒரு காலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறுவித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள்.
- வீர இளைஞர்களே! முன்னேறிச் செல்லுங்கள். கட்டுண்டு கிடக்கச் செய்யும் தடைகளை வெட்டி வீழ்த்தவும், எளியவர்களின் துயரச்சுமையை குறைக்கவும், இருண்ட உள்ளங்களில் ஒளியேற்றவும் முன்னேறிச் செல்லுங்கள்.
- நம்புங்கள் இறைவனின் கட்டளை வந்துவிட்டது. பாமரமக்களும், எளியவர்களும் நலம்பெற வேண்டும் உழைத்திடுங்கள். இறைவனின் கையில் நீங்கள் ஒரு கருவி என்ற உணர்வுடன் பிறருக்கு சேவை செய்யுங்கள்.
- உங்களிடம் நேர்மை இருக்கிறதா? பொதுநலத்துடன் சேவை செய்கிறீர்களா? அன்பு இருக்கிறதா? இம்மூன்றும் இருந்தால் பயமே வாழ்வில் தேவையில்லை, மரணம் கூட உங்களை நெருங்க முடியாது.
- இறைநம்பிக்கையோடு செயற்படுங்கள். அவரையே எப்போதும் சார்ந்திருங்கள். உங்களை எந்தச் சக்தியும் எதிர்த்து நிற்க முடியாது.
- வலிமையின்மையே துன்பத்திற்கான ஒரே காரணம் பொய்யும், திருட்டும், கொலையும், மற்ற அனைத்து பாவச் செயல்களும் மனபலவீனத்தாலே தோன்றுகின்றன.
- உலக வாழ்வுக்குள் வந்துவிட்டீர்கள். அதற்கு அறிகுறியாக ஏதேனும் அடையாளத்தினை விட்டுச் செல்லுங்கள். எழுந்திருங்கள், உழையுங்கள் இல்லாவிட்டால் நாம் பூமியில் பிறந்ததில்ஒரு பயனும் இல்லை.
- அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொருசெயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். அமைதியையும் ஆசியையும் கொண்டுவராத அன்புச்செயல்கள் உலகத்தில் எதுவுமே இல்லை.
- கடவுள் பற்றில்லாமல் இருக்கிறார். ஏனென்றால் உலகம், உயிர்கள் அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.
- இயற்கையை வெல்வதற்கே மனிதன் பிறந்திருக்கின்றான். அதற்குப் பணிந்து போவதற்காக அல்ல.
- இங்கேயே, இப்போதே நிறைநிலையை அடையமுடியாதென்றால் வேறெந்த மறுவாழ்க்கையிலும் அடைவோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.
- பாவம், புண்ணியம் என்று எதுவும் இல்லை. நம்மிடம் உள்ளதெல்லாம் அறியாமை மட்டுமே. கடவுளை உணர்வதால் அறியாமை விலகுகின்றது.
- முதலில் நீ செல்ல வேண்டிய பாதையைக் கண்டுபிடி. அதன்பிறகு செய்ய வேண்டியது எதுவும் இல்லை. கைகளைக் குவித்தபடியே கடவுளைச் சரணடைந்துவிடு. பாதையின் போக்கிலேயே இலட்சியத்தை அடைந்து விடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓய்வு ஒழிவில்லாமல் வேலை செய்து கொண்டே இரு. ஆனால் செய்யும் வேலையில் நீ கட்டுப்பட்டு விடாதே. அதற்குள் சிக்கிக் கொள்ளாதே. இதுதான் கீதையின் வழி.
- எழுந்திருங்கள், எழுந்திருங்கள் நீண்ட இரவு கழிந்துவிட்டது. பகல்பொழுது நெருங்கிக் கொண்டிருக்கிறது. என் அன்பான இளைஞர்களே! உங்களுக்கு வேண்டுவதெல்லாம் உற்சாகம் உற்சாகம் மட்டுமே!!
- சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒருவர் இல்லாதிருக்கும் போது அவரைப் பற்றி, பிறர் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள்.
- மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பது கூட சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமக்கு தந்து விடும்.
- வாழ்க்கை என்னும் போர்க்களத்தில், அஞ்சாது எதிர்த்து நிற்கும் வெற்றி வீரன் ஒருவனுடைய மனநிலையே இப்போது நமக்கு தேவை.
- மரணம் என்பது நமக்கு உறுதியாக ஒருநாள் வந்தே தீரும். அதற்குள் சிறிதளவாவது பிறருக்கு பயன்பட்டு அழிந்து போவது நல்லது.
- கோழைகளுடனோ அல்லது பொருளற்ற அரசியலுடனோ எந்தவிதத் தொடர்பும் எனக்கு இல்லை. கடவுளும் உண்மையும் தான் உலகிலுள்ள ஒரே அரசியல் மற்றவை எல்லாம் வெறும் குப்பை.
- அன்பின் மூலமாகச் செயற்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும்.
- மிருக இயல்பு, மனித இயல்பு, தெய்வீக இயல்பு என்ற மூன்றுவிதமான இயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். இதில் தெய்வீக இயல்பை வளர்ப்பது ஒழுக்கமாகும்.
- மரணம் என்பது மிக உறுதியாக இருக்கும் போது, நல்ல ஒரு செயலுக்காக நம் உயிரைத் தியாகம் செய்வது மேலானது.
- நமக்கு கிடைப்பது வெற்றியோ தோல்வியோ அதைப்பற்றி கவலைப் படாதீர்கள். தன்னலம் கருதாமல் சேவையில் ஈடுபடுங்கள்.
- பாமரனைப் பண்புள்ளனவாகவும், பண்புள்ளவனை தெய்வமாகவும் உயர்த்துவது ஆன்மீகப் பணியாகும்.
- ஒரு லட்சியத்தைத் தேர்ந்தெடுங்கள். அதன்வழியே மனதைச் செலுத்தி உங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்துங்கள். உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த கருத்து நிறைந்திருக்கட்டும்.
- ஆன்மீகம் நமக்கு சோறு போன்றது. மற்றவை எல்லாம் கறி, கூட்டுப் போலத்தான்.
- நன்மை செய்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யமுடியாவிட்டால் மரணமடைந்து விடலாம்.

மா. ஆரணி
தரம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தியின் பொறுமை

மகாத்மாகாந்தியையும், சர்தார் வல்லபாய் பட்டேலையும் 1932 ஆம் ஆண்டு கைது செய்து சிறைச்சாலையில் அடைத்தது. ஆங்கிலேய அரசு இந்தியாவின் அரசியல் சமூகத் தலைவரான வல்லபாய்பட்டேல் நாட்டின் சுகந்திரத்திற்காக போராடியவர்களில் குறிப்பிடத்தக்கவர். "இரும்புமனிதர்" என்று இவரை சிறப்பித்துக் கூறுவார்கள்.

இருவரும் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துக் கொண்டு இருந்தபோது காந்திஜி வாழ்ந்து வந்த பர்தோவி ஆச்சிரமத்தை ஆங்கிலேயே அரசு விற்று விட்டுப்போவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன.

இதை அறிந்த வல்லபாய் பட்டேல் மிகவும் வேதனை அடைந்தார். அவர் காந்தியிடம் "தங்கள் ஆச்சிரமத்தை ஆங்கிலேய அரசு விற்பதா. இது மகா அக்கிரமம் என்னால் இதை தாங்கிக் கொள்ளமுடியவில்லை" என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினார்.

அப்போது காந்திஜி இதற்குப் போய் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? ஆச்சிரமத்தை விற்றால் விற்று விட்டுப்போகட்டுமே அத்துடன் பாருங்கள்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான சிறையை நாம் எடுத்துக் கொண்டிருக்கும் போது நமக்குச் சொந்த ஆச்சிரமத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. அவ்வளவு தான் இதில் எனக்குத் துளிகூட வருத்தமில்லை" என்றார். இதைக்கேட்ட வல்லபாய்பட்டேல் தங்களைப் போன்ற வலிமைசாளியை உலகில் வேறு எங்குமே காணமுடியாது. பொறுமை கடலிலும் பெரியது எனும் பொன்மொழியை தங்களின் வாழ்க்கையைப் பார்த்துத்தான் கூறியிருக்கின்றார்கள் போலிருக்கிறது. முதுகில் மரம் வளர்த்திருக்கிறது என்றால் நல்லது தானே .நிழல் கொடுக்கும் என்ற சொல்லும் உன்னத ரகத்தைச் சேர்ந்தவர். உலகிலேயே தாங்கள் ஒருவர்தான் என்பதைத்தவிர வேறு எதையும் என்னால் தற்போது கூற முடியவில்லை என்றார். இதைக் கேட்ட காந்திஜி ஒரு புன்னகையை மட்டும் சிந்தினார்.

வ.சாயிருக்ஷன்
தரம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவே குழந்தையின் முதல் ஆசான்

குழந்தையின் வளர்ச்சியுடன் விருத்தியும் அது கருவிலிருக்கும் போதே ஆரம்பிக்கிறது. விருத்தி என்ற போது அதன் அசைதிறன் மாத்திரமின்றி வேக வளர்ச்சியையும் உள்ளடக்குகிறது.

குழந்தையின் கல்வி என்பது சிறுவர் பாடசாலையிலேயே தொடங்குவதாக பலரும் தப்பாக எண்ணுகின்றார்கள். ஆனால் கருவிலே மூளை உருவாகின்ற இரண்டு மாத வளர்ச்சிலிருந்தே அதன் கல்வியும் ஆரம்பிக்கிறது எனலாம். வளர்ச்சியும் விருத்தியடையும் மூளை குழந்தை பிறக்கும் போதே கணிசமாக விருத்தியடைந்து விடுகிறது. அம்மாவின் அரவணைப்புடனான தாய்ப்பாலூட்டலிலும் தாலாட்டிலும் குழந்தை கிரகிக்க ஆரம்பிக்கிறது. இந்த உலகை அம்மாவின் அன்பினூடாக இது காண ஆரம்பிக்கிறது. அம்மா தான் ஒரு குழந்தையின் முதலாவது ஆசிரியை . ஆசிரியை என்னும் போது கற்பித்தல் என்பதைவிட குழந்தை கற்க உதவுதலே ஆகும். கல்விக்குத் தந்தை என நாம் பொதுவாக சொன்னாலும் உண்மையில் தாயே பிள்ளையின் விருத்தியில் முதலாவதாக செயற்பட ஆரம்பிக்கிறார்.

ஒரு குழந்தை தாயுடன் வளர்வதே சிறந்தது. தாய்க்கு நிகரான பராமரிப்பாளர் எவரும் இருக்க முடியாது. தாயின் பராமரிப்பிலும் தாயப்பாலுாட்டலிலும் இருக்கும் ஒரு குழந்தை அப்பொழுதே அபாரமாக கற்க ஆரமப்பிக்கிறது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். இதில் நிறைய உண்மை இருக்கிறது. இன்னொரு வகையில் சொல்வதானால் தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள். குழந்தையின் ஆரம்பகாலம் உடல் உள வளர்ச்சியின் அத்திபாரம் எனலாம். இக்காலத்தில் மனதில் பதிவன காலமெல்லாம் தொடரும்.

பிறக்கும் போதே குழந்தையால் பார்க்க முடியும், கேட்கமுடியும், நுகரமுடியும், ஒலி எழுப்ப முடியும், உணர முடியும் ஒரு தாயானவள் குழந்தையைப் பார்த்துப் பேசும் போது தாலாட்டு பாடும் போதும் அதன் மூளை துாண்டப்படுகிறது. குழந்தையைத் தொடுதலும், அணைத்தலும் முக்கியமானது. பாலூட்டும் போதும் உணர்வுத் துாண்டலும் இதன் மூலம் விருந்தியும் ஏற்படுகிறது. தாய்ப்பாலுடன் அன்னை வீரத்தையும் கலந்து ஊட்டினாள் என நம் முன்னோர் சொன்னதெல்லாம் இதைத் தானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூளை வளர்ச்சியுடன் இணைந்து அதன் விருத்தியும் உருவாகின்றது. குறிப்பாக மூளையின் வளர்ச்சி முதல் ஐந்து ஆண்டுகளில் உச்சமாக இருக்கிறது. மூன்று வயது முதல் எட்டு வயது வரை விருத்தி துரிதமாக அதிகரிக்கிறது. இந்தக் காலகட்டத்தில் அம்மா, அப்பா, சகோதரர், பாட்டி, பாட்டன் என்போரின் அரவணைப்புடன் விருத்தி இணைந்து செல்கிறது. முன்பள்ளியிலும் ஆரம்பப்பள்ளியிலும் பெண்களே பராமரிப்பாளராகவும், ஆசிரியைகளாகவும் பணியாற்றுகின்றமைக்கும் குழந்தைக்கு அம்மாவை ஒத்த நெருக்கத்தை பிணைப்பை ஏற்படுத்தலே ஆகும். பின்னர் ஆசிரியர்களின் பணி தொடர்கிறது.

குழந்தையின் மூளை விருத்தியில் மாதா, பிதா, குரு, என்போர் முக்கிய பங்காற்றுகின்றனர். இவர்களை முன்னோடியாகக் கொண்டே குழந்தைகள் வளர்கின்றன. பெரும்பாலான பிள்ளைகள் அம்மாவையோ அல்லது அப்பாவையோ ஒத்ததாக இருப்பதற்கு பரம்பரை அலகுகள் ஒரு காரணம் அதற்கு மேலாக அவர்கள் ஊட்டி வளர்க்கும் விதமும் காரணமாக அமைகிறது. இதையே எடுப்பார் கைப்பிள்ளை என நம் முன்னோர் கூறுவர் குழந்தை வளர்ந்து வரும் போது சூழலையும் சூழலில் உள்ளவர்களையும் கிரகிக்கிறது. குழந்தையின் குணம் இயல்புகளில் இது மாற்றத்தை ஏற்படுத்துகிறது. குழந்தையாக இருந்தவர்கள் சிறுவர்களாகும் போது நல்ல குணங்களை மாத்திரமின்றி தீயவற்றயையும் கற்றுக்கொள்வது இயல்பே இந்த இடத்தில் தான் பெற்றோரின் கண்காணிப்பும் அன்பான முறையான வழிநடத்தலும் அவசியமாகிறது. குழந்தையை கட்டுப்படுத்தம் போது அவதானமாக இருக்க வேண்டும். கண்டிப்பதோ, தண்டிப்பதோ எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் எது சரி பிழை என்பதை அன்பாக எடுத்துச் சொல்லலாம் உண்மை புரியும் போது சிறுவர்கள் சரியாக நடப்பார்கள். தண்டிக்கும் போது சிறுவர்களின் மனதில் எதிரான சிந்தனைகளே மேலோங்கும் குழந்தைகளின் மனதில் எதிரான சிந்தனைகளோடு மேலோங்கும் குழந்தைகளின் சுகத்திரமான வளர்ச்சியையும் விரக்தியையும் உறுதிப்படுத்துவதுடன் அவர்களின் சுதந்திரம் என்பது நல்ல சிந்தனையோடு இருப்பதையும் வளர்த்தெடுத்தல் அவசியம் சிறார்களுடன் பெற்றோர்கள் நேரத்தைக் கழிப்பதால் அவர்களைச் சரியாக வழிநடத்த முடியும். வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் இன்னும் ஒருபடி கூடுதல் அன்பைப் பொழிய வேண்டும்.

செ.சரணியா

*தரம் 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வா பான்சி

அலுமினியப் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் கதிரைவகைகள்,
அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப்பொருட்கள்
மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# SELVA FANCY

Manipay Road,
Kopay Center, Kopay.

மானிப்பாய் வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

# AMBAL MILL

**நெல் உடைத்தல், அரிசி தீட்டல்,
மிளகாய் அரைத்தல், உழுந்து அரைத்தல்,
போன்ற வேலைகள் யாவும் துரிதமாகவும்
தரமாகவும் செய்து பெற்றுக்கொள்ள
ஒரேஇடம்**

# அம்பாள் அரைக்கும் ஆலை

Manipay Road,
Kopay Center, Kopay.

மானிப்பாய் வீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகன்

## சுப்பர்மாக்கற்

புடைவை வகைகள், பிளாஸ்ரிக் கதிரைவகைகள்,
அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப்பொருட்கள்
மற்றும் பாடசாலை உபகரணங்கள் என்பவற்றை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# THIRUMURUGAN

## SUPER MARKET

Neervely. நீர்வேலி.

# STAR HOTEL

## & COOL BAR

உணவு வகைகள், குளிர் பானங்கள்
தரமாகவும் விரைவாகவும் நியாய விலையில்
பெற்றுக்கொள்ள ஒரேஇடம்

## ஸ்ரார் ஹோட்டல் அன் கூல்பார்

*Seruppiddy North, Neervely.* சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.
*PointPetro Road, Jaffna.* பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
*T.P: 077 7724055, 077 4341016*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜமுகன்

## தொலைத்தொடர்பு நிலையம்

இன்ரநெற் வசதிகள் மற்றும்
தொலைத்தொடர்பு வசதிகள், போட்டோக் கொப்பி,
லெமனேற்றிங், அனைத்து வகையான
கையடக்கத் தொலைபேசிக்கான சிம் காட் மற்றும்
றீலோட் வசதிகளையும் ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள

## KAJAMUGAN COMMUNICATION

Point Pedro Road,
Kopay Junction.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்ச் சந்தி.

# THIRUMAGAL

## PHARMACY & MULTI SHOP

மருந்து வகைகள்,
அனைத்து வகையான பால்மாக்கள்,
குளிர்பான வகைகள் மற்றும் பாடசாலை
உபகரணங்கள் என்பவற்றை
பெற்றுக்கொள்ள ஒரேஇடம்

## திருமகள் பார்மஸி அன் பல்பொருள் வாணிபம்

Point Pedro Road,
Kopay Junction.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய்ச் சந்தி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐங்கரன் நெற் கொம்
## அன் பான்சி

இன்ரநெற் வசதிகள் மற்றும் போட்டோக் கொப்பி,
லெமனேற்றிங், சீடி றைறிங், பைக்ஸ், ஈமெயில்,
உள்நாட்டு வெளிநாட்டு வீடியோ கோல்,
றீலோட் காட், சிம்காட், அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப்பொருட்கள் என்பவற்றை
நியாய விலையில் பெற்றுக்கொள்ள

# AYNKARAN NET COM
## & FANCY

Point Pedro Road,
Seruppiddy North.
Madaththady.

T.P: 021 223 0525
075 0418149, 077 3553368

சிறுப்பிட்டி வடக்கு,
பருத்தித்துறை வீதி,
மடத்தடி.

# KANTHAN
# BODY BUILDERS

தரமாகவும் விரைவாகவும் நியாய விலையில்
வாகனங்களின் BODY (பொடி) அடித்தல் வேலைகளை
செய்து பெற்றுக்கொள்ள ஒரேஇடம்

# கந்தன் பொடி வேக்ஸ்

*Neervely South,*
*Neervely.*

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைப்படங்களின் திசை மாற்றம், இளைஞர் மனங்களில் தடுமாற்றம்

மண்ணுலகிலே மனிதப் பிறவியிலே மழலைப் பருவத்தைத் தொடர்ந்து வருவது வாலிபப் பருவமாகும். சொற்களைச் சிந்தனையிலும், கல்வியைக் கண்களிலும்கொண்டு இயங்க வேண்டியது சகல இளைஞர்களதும் தலையாய கடமையாகும். இத்தகைய இளைஞர்களிடையே அடக்கம், பண்பு. ஒழுக்கம், தைரியம், சுயநம்பிக்கை போன்ற குணங்கள் இருப்பதால் அவர்களுக்கு விழுப்பத்தை ஏற்படுத்தி விடும்.

"மாநிலம் செம்மையுற வேண்டுமெனின் மாந்தர் மனம் செம்மையுற வேண்டும்" மாந்தர் ஆனவர் மாணவப்பருவத்திலேயே வெற்றிப்பாதைக்கு வழிப்படுத்தப்பட வேண்டும். அப்பாதையில் இருக்கக் கூடிய எண்ணிலடங்காத தடைகளைக் கண்டு மனம் சஞ்சலப்படாது சரியான முறையில் அந்தத் தடைக்கற்களையும் வெற்றியின் படிக்கற்களாக மாற்றும் திறமை இளைஞர் மத்தியில் உண்டாக வேண்டும். இத்தகைய தடைகளிலொன்றே திரைப்படம் ஆகும்.

தினசரி நடைபெறும் நிகழ்வுகளை மக்களுக்கு உணர்த்தும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்ட விஞ்ஞான விந்தையும் வெகுசனத்தொடர்பு சாதனமுமே தொலைக்காட்சி ஆகும். ஆரம்பத்தில் மக்களிற்கு கருத்துக்களை விளக்குவதற்காகவே கருத்துச்செறிவு, கற்பனை ஆழம், இலக்கியச் சிறப்பு மிக்க திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு வெளிவந்தன. இதனால் இன்றைய காலப்பகுதியில் வாழ்ந்த இளைஞர்களும் அறிவுக்குத் தீனி தேடிக் கொண்டனர்.

நல்லொழுக்கமும், இலக்கிய அறிவும், பண்பாடு மிக்கவர்களாகவும் விளங்கினர். இதன் காரணமாகச் செழுமை பெற்று விளங்கியது. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. கலாசாரம் காலச்சக்கரத்தில் சுழன்று அடிபட்டுச் செல்ல படிப்படியாகத் திரைப்படங்கள் இயந்திரமான மனித வாழ்வில் இன்பத்துடன் கூடிய ஆறுதலை வழங்குவதற்கு ஏற்ற ஒரு கருவியாக மாற்றம்பெற்றது.

இந்த மாற்றத்தின் விளைவாக மக்களைக் கவர்வதன் மூலம் வருமானம் பெறும் நோக்கில் பல்வேறு முறைகளில் கலாசார சீரழிவுகளை ஏற்படுத்தக் கூடியனவாகவும், வன்முறை எண்ணத்தை மனங்களில் விதைத்து விடக்கூடியனவாகவும் பாலியல் உணர்வுகளைத்தூண்ட வல்லனவாகவும், போதைக்கு அடிமைப்படவும், மற்றும் தீய பழக்கவழக்கங்களில் ஈடுபடக் கூடியனவாகவும் வெளிவருவதால் திரைப்படம் என்ற ஊடகம் அதன் தூய்மையையும் சிறப்பையும் இழந்தது.

இத்தகைய திரைப்படங்களை வாலிபப்பருவத்திலே உள்ள இளைஞனோ யுவதியோ பார்க்க நேரிடின், அவனது பொன்னான நேரம் வீணாகிப் போவதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை தொடர்பான பிழையான கண்ணோட்டத்தையும் பெற்றுவிடுவான். உதாரணமாக மது அருந்துதல், புகைப்பிடித்தல், வன்முறைகளில் ஈடுபடல், முறையற்ற பாலியல் உறவுகள், தகாத உறவுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், படுக்கையறைச் சமாச்சாரங்களையெல்லாம் சமூகத்தில் நாகரிகமாகக் கருதப்படும் செயல்கள் என்று ஒரு தவறான கருத்து அவர்களின் மனதில் தோன்றி விடும். மேலும் திரைப்படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகளைப் பற்றி மேலான எண்ணங்களைக் கொண்டிருத்தலும், அவர்களைப் பின் தொடர்வதும் இளைஞர்களைச் சீரழிக்கும் செயல்களாகும்.

இன்றைய காலத்தில் வெளிவரும் திரைப்படப்பாடல்கள் இளைஞர், யுவதிகளின் மனதில் ஆலமரமாய் வளர்ந்து பல தீய விழுதுகள் தோன்றிச் சமூகத்தையே சாக்காடாக்கும். அந்த வகையில்

"டாடி மம்மி வீட்டில் இல்ல
தடை போட யாரும் இல்ல
விளையாடுவோமா உள்ளே
நீ வாடா" என்ற பாடலினையும்
"கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா?.. இல்ல ஓடிப் போய்
பிள்ளை குட்டி பெத்துக்கலாமா? என்ற பாடலினையும்

"வாடா மாப்பிளை வாழைப்பழ தோப்புல
வொலிபோல் ஆடலாமா ஆடும்
சாக்கில சைக்கிள் கைப்பில.." என்ற பாடலினையும்சில உதாரணங்களாக்க கொள்ளலாம்.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி" என்றும்

"நல்ல பேரை வாங்க வேண்டும் பிளளைகளே இந்த நாடு எனும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளாய்" என்றும்

"திருடாதே பாப்பா திருடாதே" என்றும் "அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்து விட்டு அதிட்டம் இல்லை என்று அலட்டிக் கொள்வார்" என்றும் இளைஞர் யுவதிக்கெல்லாம் அறிவுரைகளையும், எதிர்கால விழிப்பையும் ஊக்கத்தையும் உயர்வையும் ஊட்டிய பாடல்கள் எங்கோ? அன்றைய பாடல்கள் இளைஞர்களைப் பக்குவப்படுத்திப் பண்புள்ளவராக மாற்றியது. இன்றைய பாடல்கள் கலாசாரக் கட்டுக்கோப்பை அழித்து சீரழிவின் சிகரத்தில் கொண்டு சென்று விட்டுள்ளது. என்பதால் இன்றைய திரைப்படங்களாலும் அவற்றிலுள்ள பாடல்களாலும் பல்வேறு தீமைகள் எற்பட்டுச் சமூக கலாசார மானிடவியல் பாதிக்கப்படுகின்றது என்பது வெளிப்படை உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இன்றைய திரைப்படங்களைப் பற்றிச் சில முடிவுகளை மேற்கொள்ளலாம். அவற்றுள் சீரழிவைத் தரும் திரைப்படங்களே அதிகம் வெளிவருகின்றன. கலாசாரமோ, பண்பாடோ, சமயமோ அவற்றில் கவனிக்கபடுவதில்லை. வர்த்தக ரீதியில் அதிக பணத்தைச் சம்பாதித்தலே நோக்கமாக உள்ளது. பெண்கள் போகப்பொருட்களாகவும், விளம்பரப் பலகைகளாகவும் செயற்படுகின்றனர். பஞ்சமாபாதகங்களைச் செய்தல் சமூக அந்தஸ்தாக கருதப்படுகிறது. குடி குடியை கெடுத்தாலும் குடிப்பதை உயர் அந்தஸ்தாக கருதுகின்றனர். பெரியோரை மதித்து நடத்தல் நசுக்கப்பட்டுள்ளது. படிககும் போதே குடிப்பதும்: காதல் கொள்வதும்: பார் பீச் செல்வதும் நாகரிகமாக்கப்பட்டுள்ளது. நன்னடத்தை என்றால் என்ன? என்று கேட்குமளவுக்கு அது உச்சத்தைத் தொட்டுள்ளது. இத்தகைய திரைப்படங்கள் இளைஞர் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இதனால் நிச்சயம் எதிர்காலம் இருள் சூழ்ந்த காலமே என்பதில் ஐயமில்லை.

இந்நிலை நீங்க வேண்டுமாயின், திரைப்படங்கள் அவைஅமைக்கப்பட்டதன் உண்மை நோக்கத்திற்கென தயாரிக்கப்படின் அவற்றினால் இளைஞர் சமுதாயம் புத்துயிர் பெறுவதுடன் அவர் வாழ்வில் விடிவும் தோன்றும். இளைஞர்கள் அன்னப்பறவைப் போல் ஆராய்ந்து நல்லவைகளை நாட வேண்டும். இல்லையேல் விட்டிற் பூச்சி போன்று வாழ்ந்தால் இளைஞர் சமுதாயம் பெருமை பெற முடியாது.

இ. யசிந்தினி
தரம் 11

## முயற்சி

அலையலையாய்த் துன்பங்கள்
தொடர்ந்து தொடர்ந்து வந்தாலும்
மலையைப் போல் உறுதியுடன்
மண்ணில் வாழப் பழகுநீ

கடமை தன்னைக் கண்ணாக
கருதி நீயும் செயற்பட்டால்
காற்றைப் போல விரைவாக
கவலைகள் யாவும் மறைந்திடுமே

முயற்சி என்றும் உயர்ச்சி தரும்
முன்னோர் சொன்ன முதுமொழியிதுவே
முயற்சி கொண்டு செயற்பட்டால்
முன்னேற்றத்தைப் பெற்றிடுவாய்.

கணேஸ் துஷந்திகா
தரம் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்

**"விலங்கோடு மக்களனையர் இலங்குநூல்**

**கற்றாரோடு ஏனை யவர்"**

என்கின்றார் வள்ளுவர். கல்வியறிவுடையோரே மனிதர் என்றும், கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளம்புகிறது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதர்களாக மதிக்கும் என்பது புலனாகிறது. மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் கல்வியறிவினைத் தேடிக் கொள்வதற்குப் பல வழிகள் உண்டெனினும் அவற்றுள்ளே மிகச்சிறந்தது நூல்கள் மூலம் பெற்றுக் கொள்ளுதலேயாகும். நூல்கள் மூலம் அறிவைப் பெற்றுக் கொள்ளவேண்டுமாயின் நாம் நூல்களை வாசிக்க வேண்டும். வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமே அது சாத்தியமாகும். "என்னை என்றும் எச்சந்தர்ப்பதத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்றான் ஆங்கிலக் கவிஞன் ஒருவன். இதனாலேயே நல்ல நூல்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்ளுங்கள் என்று அறிஞர்கள் வலியுறுத்துகிறார்கள்.

இளமைப்பருவம் இனியது. இப்பருவத்திலேயே நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் நமது மொழியாற்றல் விருத்தியுறும். பாடங்களிற் சிறப்புடைய முடியும். வாழ்க்கை பூராகவும் நாம் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய வழியை கண்டு கொள்ளலாம்.

நூல்கள் பலதரப்பட்டவை. வரலாறு, சமயம், தத்துவம், விஞ்ஞானம், இசை, புனைகதை, விளையாட்டு எனப் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் உள்ளன. இவற்றை நம் விருப்புக்கேற்ப தெரிவு செய்து படிக்க வேண்டும் நமது எதிர்கால முன்னேற்றத்திற்கும் வாழ்க்கைக்கும் பயன் தரும் நூல்களை அறிந்து கற்றல் வேண்டும். சோர்வு ஏற்படும் வேளைகளில் எல்லாம் நாம் நூல்களைத் துணைக் கொண்டால் வேறு துணை நமக்குத் தேவைப்படாது.

புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் ஒரு போதும் தனிமை உணர்வைப் பெறுவதில்லை. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவர்கள் புத்தகங்களை நாடிச்சென்று விடுவதே இதற்குக் காரணமாகும். வாழ்க்கையில் ஏற்படும் சோர்வுகளை, தோல்விகளை அவர்கள் விரும்பிய நூல்களை வாசித்து அவற்றின் மூலம் போக்கிக்கொள்வர்.

நூல்கள் அறிவு தரும் அரிய செல்வங்கள். வேறு செல்வங்களைக் கள்வர்கள் களவாடிச் சென்று விடலாம். ஆனால் புத்தகங்கள் தரும் அறிவுச் செல்வத்தை நம்மிடமிருந்து எவருமே கவர்ந்திட முடியாது. இதனாற்றான் புத்தகங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற சிறந்த கருவூலம் எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" என்றார் ஆங்கில அறிஞர் ரஸ்கின். புத்தகங்களால் ஒருவன் பெறும் அறிவை இன்பத்தை மற்றவர்கள் தட்டிப்பறித்திட முடியாது. வாழ்நாள் முழுவதும் அவை அவனுக்குப் பயன்தரும் நூல்கள் படிக்கின்ற வழக்கம் இல்லாதவனின் வாழ்க்கை சூனியமாகிப் போகும். கிணற்றுத் தவளை போன்றே அவன் கருதப்படுவான்.

பொழுதுபோக்குக்காகவும் சிலர் நூல்களைப் படிக்கின்றார்கள். இத்தகைய நூல்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே படிப்போருக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றன. கற்பனைக்கதைகள் நாவல்கள் என்பன இந்தவகையில் அடங்கும். கற்பனைக்கதைகளை மட்டும் படித்து விட்டு ஏனைய நூல்களை ஒதுக்குதல் கூடாது. கற்பனை உலகில் நாம் வாழ்ந்திட முடியாது. நமது உள்ளத்திற்கு நலம் தரும் நூல்களை நாம் தெரிந்து கற்க வேண்டும். நல்ல சிந்தனைகள் அடங்கிய நூல்களே நம் உள்ளத்திற்கு உகந்தவையாகும். அத்தகைய நூல்களைக் கற்க நாம் முயல வேண்டும். நமது அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரியவல்ல நூல்களைத் தேடிக் கற்றால் அவை நமது வாழ்க்கைக்குப் பயன் தரும்.

கவிதைகள், பெரியார் வரலாறுகள், சமயநூல்கள் என்பன நமக்கு நன்கு வழிகாட்டவல்லன. அவை நமது சிந்தனை விருத்திக்கும் துணைபுரியும் வன்மைமிக்கன. எவ்வளவுக்கு எவ்வளவு நூல்களை வாசிக்கின்றோமோ அவ்வளவுக்கு அறிவு விருத்தியடையும்.

நல்ல நூல்களே நமது நல்ல நண்பர்கள் என உணர்ந்து நூல்களை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி கரையற்றது.

**"கல்வி கரையில் கற்பவர் நாள்சில**
**மெல்ல நினைக்கிற் பிணிபல..."**

என்று இடித்துரைக்கிறது நாலடியார். எனவே வாழும் நாளில் கரையற்ற கல்வியின் சிறிய அளவையேனும் கற்றிட நாம் முயல வேண்டும். அதற்கு நல்ல நூல்களை நமது நண்பர்கள் ஆக்கிக் கொள்வதே நல்வழியாகும்.

"நல்ல நல்ல நூல்களே நமது நல்ல நண்பராம்". நல்ல நல்ல நூல்களை நாளும் நண்பராக்குவோம்".

பா.கீர்த்தனா
*தரம் 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வானொலி ஊடகத்தின் தோற்றம்

இலங்கையில் வானொலித் தொழில்நுட்பப் பயிலுநர்களது முயற்சியின் பெறுபேறாகவே இலங்கை வானொலி ஊடகம் தோற்றம் பெற்றது. 1922 இல் ஜூன் மாதம் "சிலோன் வயலஸ் கிளப்" எனும் பெயரில் 1923 ஜூன் மாதம் பெயர்மாற்றம் பெற்றது. இச்சங்கத்தின் நோக்கம் இலங்கையில் வானொலி சேவையொன்றை ஆரம்பிப்பதாகவே இருந்தது. பிற்காலத்தில் இது இலங்கை தென்னிந்திய றேடியோ சங்கம் என அழைக்கப்பட்டது.

இலங்கை வானொலி வரலாற்றின் முன்னோடியாகக் கருதப்படுபவர் பிரதம தந்தி தொடர்பு பொறியியலாளர் எட்வோர்ட் ஹார்ப் என்பவராவர். இலங்கையில் வானொலிச் சேவையொன்றை ஆரம்பிப்பதற்காக அக்கறையுடன் செயற்பட்ட குழுக்கள் பல இருந்தனவாகக் குறிப்பிடப்படுகின்றது. 1923 நவம்பர் அளவில் கொழும்பு பல்கலைக்கழக கொலேஜில் சிறிய டிரான்ஸ் மீற்றர் ஒன்றைப் பயன்படுத்தி பயிலுநர்களுக்கான கல்வி நிகழ்ந்துள்ளது. 1923 ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் திகதி அன்று படிப்பு நடவடிக்கைகளுக்காக இருந்த ஒலிபரப்பு சட்டபூர்வமானதா என தபால்மாஅதிபர் விசாரிக்கப்பட்டுள்ளார். தபால்மாஅதிபர் இது பற்றி தனது மேல் அதிகாரியான செயலாளரிடம் ஆலோசனை கேட்ட போது செயலாளர் படிப்பு நடவடிக்கைகளுக்காக ஊடகத்தை பயன்படுத்துவதற்கு சட்ட அனுமதியானது அவசியமில்லையென அலுவலகத்தின் ஊடாக பதிலளித்துள்ளார்.

இதுவரை வானொலி பயன்பாட்டுக்காக சட்டங்கள் தயாரித்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தமையும் அச்சட்டங்கள் பிரசித்தப்பட்டு உடனடியாக அனுமதிப் பத்திரங்களை கோருமாறு பல்கலைகழக கொலெஜலான் தலைவருக்கு செயலாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார். அவ்வனுமதிப்பத்திரங்களுக்காக கட்டணம் அறவிடப்படமாட்டாதெனவும் அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருந்தார். ஜேர்மன் நீர்முழ்கிக் கப்பல் ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட திரான்ஸ் மீற்றர்களை பயன்படுத்தி தந்தித் தொடர்பு திணைக்களத்தினால் தலைவர் எட்வார்ட் ஹப்பர் என்பவரால் டிரான்ஸ்சிஸ்ரர் இயந்திரம் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக இலங்கை பொறியியலாளர்களின் உதவிகள் பெறப்பட்டதாக கூறப்படுகின்றது.

1923 ம் ஆண்டு ஜீலை மாதம் 15ம் திகதி 1908 ன் தபால் தொடர்பு சட்டத்தை திருத்தியமைக்க அரசாங்கம் நடிவடிக்கைளை எடுத்ததோடு 1924 ஜனவரி 31ம் திகதி வானொலியை செவிமடுப்பதற்கு வானொலி வருவிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் சட்டம் மீளவும் திருத்தப்பட்டது. அவ்வாண்டிலேயே தபால்மாஅதிபரின் தலைமையில் வானொலி நடவடிக்கைகளைக் கண்டறிவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. உறுப்பினர்களாக தந்திக் தொடர்பு பிரதம பொறியியலாளர் எட்வர்ட் ஹாப்பரும் மற்றும் வானொலி பயிலுநர் சங்கத்தின் தலைவரும் இருந்தார்கள். இக்குழுவினரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக ஆய்வொன்று நடத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

(1) இலங்கையில் வானொலி ஒலிபரப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமா?
(2) அவ்வாறு ஆரம்பிக்க வேண்டுமானால் அரசாங்கத்தாலா தனியார் துறையினராலா ஆரம்பிக்கப்பட வேண்டும்?
(3) தனியார் துறையினரால் எனின் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டியது ஒரு கம்பனிக்கா? அல்ல பல கம்பனிக்கா?
(4) வானொலி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்காக சபையொன்று நியமிக்கப்பட வேண்டுமா? அவ்வாறு நியமிக்கப்பட வேண்டுமாயின் அச்சபையில் இடம்பெற வேண்டியோர் யார்?

என்னும் வினாக்களுக்கு விடைகளை பெற்றுக் கொடுப்பதே அக்குழுவின் பணியாகும்.

அக்குழுவானது இலங்கையில் வானொலி சேவையொன்று ஆரம்பிப்பதற்கு சிபாரிசு செய்ததோடு அது அரசாங்கத்தால் கொண்டு நடாத்தப்பட வேண்டு மெனவும் விதந்துரைத்தது. 1924 ஜீன் 27ம் திகதி கொழும்பு கிறிஸ்தவ வாலிபர் நூலக மண்டபத்தில் இருந்து (YMCA) இலங்கை பொறியியலாளர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு ஒலிபரப்பொன்று நடத்தப்பட்டதாக அறிக்கை கூறுகின்றது. ஆளுநர் சேர் வில்லியம் ஹென்ரி அவர்களின் அறிவிப்பு தந்தித்தொடர்பு திணைக்களத்தில் பொருத்தப்பட்டிருந்த திரான்சிஸ்ரர் ஊடகமாக ஒலிபரப்பப்பட்டது.

ஹாப்பர் அவர்களின் பரிசோதனை வெற்றி பெற்றதோடு அரசாங்கத்தினால் புதிய இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. ஒரு கிலோவாற் இயந்திரமொன்றை பயன்படுத்தி வானொலி நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை காலமும் வானொலி ஒழுங்குமுறை சாராது ஒலிபரப்புக்களை செய்தது. தட்டில் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாட்டுக்கள், செய்திகள் மற்றும் காலநிலை அறிக்கை என்பன அவற்றுள் அடங்கும். ஆளுநர் சேர் கியூ கிளிப்ட் அவர்களால் 1925 டிசெம்பர் 16ம் திகதி உத்தியோக பூர்வமாக இலங்கையில் வானொலி ஆரம்பிக்கப்பட்டது. அது ஆசியாவிலேயே முதலாவது வானொலியாகும். பிரித்தானிய பேரரசில் பிரித்தானியா தவிர்த்து ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் நிறுவப்பட்ட வானொலி சேவை இதுவாகும். இந்த வரலாற்று பூர்வமான நிகழ்ச்சியின் முக்கியத்துவம் இலங்கை மக்களுக்கு பெருமைக்குரிய விடயமாகும்.

பு.கஜமுகன்
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சியத்தின் வெற்றி

"எனக்கு ஒரு மதிப்பும் கிடையாது என்று பூச்சியத்துக்கு ஓரே மனவேதனை. என்னால் யாருக்கு என்ன பிரயோசனம்? ஒன்றும் இல்லை. இவ்வுலகிலுள்ள மக்கள் எவரும் என்னை விரும்புவதில்லை. நான் சுயவிருப்பத்தில் அவர்களிடம் சென்றாலும் என்னை ஒதுக்கித்தள்ள தயங்கமாட்டார்கள். நான் எனது இன்பதுன்பங்களுடன் 1Km தூரத்துக்கு ஒழுங்கு வரிசையில் நின்றாலும் எவரும் என்னை ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. எண் வரிசையில் எதற்காக என்னைச் சேர்க்க வேண்டும்?" என்று பூச்சியம் கவலை கொண்டு அங்கலாய்த்தது. காலம் வராதோ என மனவேதனையுடன் நடைப்பிணமாக திரிந்து அதற்கு விடிவுகாலம் பிறக்கும் நேரம் நெருங்கியது. எனவே காடுமேடெல்லாம் தனியே திரிந்து களைப்பு மிகுதியால குகை ஒன்றினுள் புகுந்து நன்றாகத் தூங்கிவிட்டது.

கணிதமேதை இராமானுஜம் வந்தார். அங்கு வந்து சேர்ந்த அவருக்கு ஓரே வியப்பு. மற்றைய எண்கள் அனைத்தையும் வரிசையாக நிற்கும்படி சொன்னார். பூச்சியம் அங்கு இல்லாததைக் கண்டுகொண்டார். "பூச்சியத்துக்கு என்ன நடந்தது?" என்று மற்றைய எண்களிடம் விசாரித்தார். பூச்சியத்துக்கு என்ன நடந்தது என்று மற்றைய எண்களுக்குக் கூடத் தெரியாது. "உங்களுக்கு நான் ஒரு கதை சொல்லப் போகின்றேன். பூச்சியம் எங்கிருந்தாலும் உடனடியாக அழைத்து வாருங்கள்" என்று கூறினார். கதை கேட்கும் ஆவலில் மற்றைய எண்கள் பூச்சியத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

பல சிரமத்தின் மத்தியில் குகைக்குள் அயர்ந்து துாங்கிக் கொண்டிருந்த பூச்சியத்தைக் கண்டனர். தூங்கிக் கனவு கண்டு கொண்டிருந்த பூச்சியத்திற்கு மற்ற எண்களின் அரவம் கேட்டு விழிப்பு ஏற்பட்டது. சற்று நடுக்கம் கொண்டு தன்னால் ஒரு பிரயோசனமும் இல்லை என்று திரும்பத்திரும்பக் கூறிய பூச்சியத்தைக் கணித மேதையின் முன் கொண்டுவர மற்றைய எண்களுக்குப் பெரும்பாடாகி விட்டது. பூச்சியத்தைக் கண்ட கணித மேதைக்கு சந்தோஷம் பொறுக்க முடியவில்லை. "நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போகின்றேன். பூச்சியத்தை மையமாகக் கொண்டு நான் சொல்லப்போகும் கதை அதற்குப் பூரண திருப்தி அளிக்கும் என்பதில் ஐயமில்லை" என்று கணிதமேதை இராமாயணம் கூறினார. கவலை தோய்ந்த முகத்துடன் இருந்த பூச்சியத்தின் முகத்தில் இப்போது புன்சிரிப்புக் காணப்படடது. இப்படி வா என்று பூச்சியத்தைப் பார்த்து கணித மேதை கட்டளையிட்டார். அவரது கட்டளைப்படி பூச்சியம் அவரருகிற் சென்று நின்றது.

பின்னர் எண்வரிசையில் நின்ற ஒன்றை அழைத்து பூச்சியத்தின் வலது பக்கம் நிற்கச் சொன்னார். இப்போது இருவரினதும் மதிப்பு என்னவென்று பூச்சியத்திடம் கேட்டார். பூச்சியம் அதற்குப் பத்து என மகிழ்ச்சியுடன் விடையளித்தது. பூச்சியத்திற்கு அளப்பெரிய ஆனந்தம் தனக்குள்ள மதிப்பு பூச்சியத்துக்கு இப்போது நன்றாகத் தெரிந்துவிட்டது. தன்னில் ஒரு பிரயோசனமும் இல்லை என்று கற்பனை பண்ணியதற்குக் கணித மேதையிடம் மன்னிப்புக் கேட்டது. அதே போலத்தான் நாமும் நமது அவசியத்தையும் ஆற்றலையும் உணராது வீணே காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கின்றோம். நமக்குள் ஒரு ஆற்றல் கட்டாயம் இருக்கும். அதை தகுந்தவாறு வெளிப்படுத்திக் கொள்வதுதான் வெற்றியின் இரகசியமாகும்.

"தீமை உங்களை வெல்ல விடாதீர்கள்
நன்மையால் தீமையை வெல்லுங்கள்.

டிலானி யுகராஜ்
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்மம் தலை காக்கும்

அன்று திங்கட்கிழமை கதிரவன் தனது பொற்கதிர்களால் பூமியை தட்டி எழுப்பிக்கொண்டிருந்தான். சூரியனைக் கண்டதும் பறவைகள், விலங்குகள் என்பன தமது கூட்டிலிருந்து எழுந்து இரை தேடுவதற்காக ஒலி எழுப்பியவாறு சென்றன. பாரதி அவசர அவசரமாக எழுந்து தனது காலைக் கடன்களை முடித்து விட்டு பாடசாலை செல்வதற்காக தயாராகிக் கொண்டிருந்தாள். ஆம். அழகிய முகம், நீண்ட கருங்கூந்தல், பார்ப்பவரை மயக்கும் கண்கள் என அவளை வர்ணித்துக்கொண்டே செல்லலாம். அவளது அழகைப் போல் அவளது உள்ளமும் வெள்ளை உள்ளம். அவள் தரம் 11இல் கல்வி கற்கின்றாள். தினமும் பாடசாலைக்கு முதலில் சென்று நிற்பவள். அன்று எழுப்புவதற்கு எவருமில்லை. அவனும் அவளது தம்பியும் தான். அம்மாவிற்கோ உடல்நிலை சீரில்லை அம்மாவிற்கு உதவி செய்து விட்டு தம்பியையும் வெளிக்கிடுத்தி தானும் தயாராக நேரம் 7.50. அதன் பின் அம்மாவிடம் ஆசீர்வாதம் வாங்கிவிட்டு பாடசாலையை நோக்கி மிகவேகமாக நகர்ந்தாள். வேகமாக சென்றதனால் எதிரே வந்த வாகனத்தை கவனிக்காது பாதையை கடந்து விட்டாள். ஆனாலும் எதிரே வந்த வாகனத்திடமிருந்து மயிரிழையில் தப்பித்துக் கொண்டாள். மீண்டும் தனது பயணத்தை தொடர்ந்து பாடசாலையை வந்தடைந்தாள். இவள் வந்து சேரவும் பாடசாலை ஆயத்தமணி அடிக்கவும் சரியாக இருந்தது.

அவள் தனது வாழ்க்கையில் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற நோக்கத்துடன் கல்வி கற்று வருகின்றாள். அவளது தந்தை சிறப்பான மருத்துவ வசதி இல்லாததால் இவர்களை விட்டு பிரிந்து விட்டார். ஒவ்வொரு நாளும் பாடசாலை நுழைவாயிலை கடந்து பாடசாலை நுழைவாயிலை நுழையும் போதும் அவளது தந்தையும் அவளது இலட்சியமும் அவளது சிந்தனையில் வரும். மீண்டும் அவளது சிந்தையிலிருந்து அவை 1ம் பாடவேளைஆசிரியர் வகுப்பிற்கு வந்த பின்னர் நீங்கும். அவ்வாறே அவளது எண்ணம் அவளது தந்தையின் நினைவுகளை மீட்டன. இரு வருடங்களிற்கு முன்பு அவளது தந்தை ஒரு ஆசிரியராகவும் சமூக சேவையாளராகவும் திகழ்ந்தார். அவளது கிராமத்தில் அவளது அப்பாவை தெரியாத எவருமே இருக்க முடியாது. அப்படி தனது சேவைகளை மக்களிற்காக செய்து வாழ்ந்து கொண்டிருந்தார். அன்பான குடும்பம் என்றால் முதலில் எல்லோர் மனக்கண்ணிலும் வருவது இவளது குடும்பமே. அவ்வாறு தனது வீட்டிலும் அன்பாக சந்தோசமாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் தந்தை நெஞ்சு வலியால் அவதிப்படடுக் கொண்டிருந்தார். தனது தந்தையை அருகில் உள்ள வைத்தியசாலைக்கு ஏற்றிக்கொண்டு சென்றனர்.

செல்லும் வழியில் தந்தை அவளுடன் சில வார்த்தைகள் கதைத்துக்கொண்டு வந்தார். "பிள்ளை நீ எந்நாளும் நல்ல செயல்களையே செய்ய வேண்டும். அப்பாவை விட பெரியவளாக வர. வேண்டும். ஒரு வைத்தியராக வந்து எமது கிராமத்தில் ஒரு வைத்தியசாலையை அமைக்க வேண்டும். எமது கிராமமக்களுக்கு வைத்திய உதவி செய்ய வேண்டும்." இவ்வாறு சொல்லிக்கொண்டு வந்தவர் வைத்தியசாலையை அடைவதற்கு முன்பு இறைவனடி சேர்ந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவை இழந்தவள் கதறி அழுதாள். மீண்டும் அப்பாவின் உடலுடன் வீடு வந்து இறுதிக்கிரியைகள் யாவும் நிறைவு செய்தாள். அப்பாவை இழந்து இருவருடங்கள் ஆன பின்பும் இன்னும் அவள் சிந்தையிலிருந்து அந்நிகழ்வு அழியவேயில்லை. இறுதியாக தனது தந்தை சொன்ன அந்த வார்த்தைகள் அவள் மனதில் ஆழமாக பதிந்தது. அன்றிலிருந்து தனது இலட்சியமாக வைத்தியதொழிலை ஏற்றுக் கொண்டாள். தனது இலட்சியத்தை அடைய இன்னும் ஒரு மாதமே இருந்தது. அந்த நிலையில் "இன்று அதிகாலை நான் வீதியில் வாகனத்துடன் மோதியிருந்தால் எனது இலட்சியம் எவ்வாறு நிறைவேறும். நான் எனது அப்பாவின் ஆசையை எவ்வாறு நிறைவேற்றியிருக்க முடியும்?" என்ற பல வினாக்கள் அவள் மனதில் எழுந்தன. ஆனால் அவளது தந்தை செய்த தர்மம் அவளது உயிரைக் காப்பாற்றியது. இன்றிலிருந்து அவளும் தர்மச் செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மேலும் மேலோங்கியது. தனது தந்தையின் ஆசையை நிறைவு செய்வேன் என்ற உறுதியுடன் அவள் 1ம் பாடவேளையை படிப்பதற்கு ஆயத்தமானாள்.

கு.கிருஜா
தரம் 11

## அறிவு பிறந்தது

சின்னத்தம்பி ஒரு சாமியார் அவர் பக்கத்து ஊருக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். நல்ல வெயில் அவரால் நீண்டதூரம் நடக்க இயலவில்லை. நன்கு களைத்துப்போனார். தூக்கம் வேறு. என்னசெய்வது என்று யோசித்தார். செல்லும் வழியல் ஒரு குளம் இருப்பதைக் கண்டார். அதில் இறங்கித் தண்ணீர் குடித்தார். தாகம் நீங்கியது. ஆனால் களைப்புத் தீரவில்லை. குளத்துக்கு அண்மையில் நின்ற ஒரு மரத்தடியில் அமர்ந்தார். சிறிது நேரத்தில் துாக்கம் வந்தது. தலைக்குக் கையை அணைகொடுத்துக் கொண்டு மரத்தடியிலேயே படுத்துத்தூங்கி விட்டார். சிறிது நேரம் சென்றிருக்கும். செல்வி, நளினி என்னும் இரு பெண்களும் குளத்தில் தண்ணீர் எடுப்பதற்காக வந்தார்கள். அவர்கள் குறும்புக்காரர்கள் குளக்கரையில் படுத்துத் துாங்கும் சாமியாரைக் கண்டார்கள். "பாவம் ! சாமியார், கட்டாந் தரையில் படுத்திருக்கிறார்" என்றாள் செல்வி. "சும்மா போடி எல்லாவற்றையும் துறந்த சாமியாரால் தலையணையைத் துறக்க முடியவில்லையே. கையைத் தலைக்கு அணையாக வைத்துப் படுத்திருக்கிறாரே பார்த்தாயா?" என்றாள் நளினி கிண்டலாக. பெண்களின் கிண்டல் பேச்சைக் கேட்ட சாமியார் வெட்கமடைந்தார். உடனே தலைக்கு அணையாக வைத்திருந்த கையை எடுத்து நீட்டிக் கொண்டார். குளத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு இரு பெண்களும் திரும்பி வந்தார்கள். "பார்த்தாயா, நான் சொன்னதும் சாமியார் தலைக்கு வைத்திருந்த கையை எடுத்து விட்டார்" என்று சொன்னாள் நளினி, செல்வியோ மிக்க கோபத்துடன் "சொந்தப் புத்தி வேண்டாமா? அடுத்தவர் பேச்சைக் கேட்பவர் எல்லாம் ஒரு ஞானியா? இவருக்கு ஏன் துறவு?" என்று சொல்லிச் சிரித்தாள். அதைக் கேட்டதும் சாமியாருக்குச் "சுரீர்" என்றது. "ஊர் நாலும் பேசும். நாம் ஏன் அதற்குச் செவி சாய்க்க வேண்டும்? நமது சொந்த அறிவுப்படி தான் நாம் நடந்து கொள்ள வேண்டும்" என்ற ஞானம் (அறிவு) அப்பொழுது தான் அவருக்குப் பிறந்தது.

ஈ.சிவானுஜா
தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமொழிச்சொற்களும் அவற்றின் தமிழ் சொற்களும்

| வடமொழிச்சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|
| அபிஷேகம் | திருமுழுக்கு |
| அநுக்கிரகம் | அருள் |
| அனுபவம் | நுகர்ச்சி |
| அவசரம் | விரைவு |
| ஆஸ்தி | சொத்து |
| உத்தரகிரியை | இறந்த பின் செய்யும் கிரியை |
| உபந்யாசம் | சொற்பொழிவு |
| ஏகாந்தம் | தனிமை |
| கடாட்சம் | கடைக்கண்பார்வை |
| குவலயம் | பூமி |
| யௌவனம் | இளமை, அழகு |
| யோக்கியதை | தகுதி, நேர்மை |
| கௌளி | பல்லி |
| சந்நியாசி | துறவி |
| பந்துக்கள் | உறவினர் |
| நித்திலம் | முத்து |
| வரப்பிரசாதம் | அருள் |

## அறிந்ததில் அறியாதது

- அமெரிக்காவில் உள்ள சுதந்திர தேவி சிலையின் ஆட்காட்டி விரலின் நீளம் 8 அடி ஆகும்.
- சிலி நாட்டில் உள்ள "அற்றகாமா" பாலைவனத்தில் இதுவரை மழை பெய்ததற்கான பதிவே இல்லையாம்.
- சுறா மீன்கள் சுமார் நூறு (100) ஆண்டுகள் வாழக்கூடியவை.
- தேனீக்கள் மணிக்கு 19Km தூரம் வரை பறக்குமாம்.
- ஒக்டோபஸ் மீனினத்திற்கு மூன்று இதயங்கள் உள்ளன.
- ஏனைய நிறங்களை விடவும் நுளம்பைத் தன்பக்கம் ஈர்த்துக் கொள்ளும் சக்தி நீல நிறத்திற்கே அதிகம் உண்டு.
- மனிதர்களுக்கும் கோலா கரடிகளுக்கும் மாத்திரமே கைகளில் ரேகை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரைக் காத்த பலி ஆடு!

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த ஆண்டியப்பன் தன் தந்தையின் நண்பர் வீட்டில் வளர்ந்தான். அவன் பெரியவனானதும் அவனிடம் இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் கொஞ்சப் பணமும் கொடுத்து எப்படியாவது பிழைத்துக்கொள்ளுமாறு அந்தப் பெரியவர் கூறிவிட்டு இறந்தார். அந்தப்'பணத்தை வைத்து சிறிய குடிசையைப் போட்ட ஆண்டியப்பன், ஆட்டுக்குட்டிகளை வளர்த்து அவற்றை இறைச்சிக்கடையில் விற்றான். அந்தப்பணத்தில் மீண்டும் நான்கு ஆட்டுக்குட்டிகளை வாங்கினான். இப்படியே ஆட்டுக்குட்டிகளை வாங்கி வளர்த்து கசாப்பு கடையில் விற்றுப் பணம் சம்பாதித்தான். தன்னிடம் ஒரளவு பணம் சேர்ந்ததும் லட்சுமி என்ற ஏழைப் பெண்ணை திருமணம் செய்து கொண்டான். ஆண்டியப்பன் செய்து வந்த இந்தத் தொழில் லட்சுமிக்கு பிடிக்கவில்லை. "ஆடுகளை நாமே வளர்த்து அவற்றை இறைச்சிக் கடையில் அனுப்புவது பெரும் பாவம் இந்தத் தொழிலை விட்டு கறவை மாடுகள் வாங்கி வியாபாரம் செய்யலாம் என்று ஆண்டியப்பனுக்கு அறிவுரை கூறுவதை நிறுத்திய லட்சுமி "நீங்கள் செய்யும் தொழிலில் இனி நான் குறுக்கிட மாட்டேன். ஆனால் ஆட்டுக்குட்டியை எனக்கு கொடுங்கள். அதற்கு ராமு எனப் பெயர் வைத்து நான் வளர்க்கின்றேன்." என ஆண்டியப்பனிடம் கேட்டுக்கொண்டாள். அவனும் அழகான ஒரு ஆட்டுக்குட்டியை அவளிடம் கொடுத்தான்.

சில நாட்களுக்குப் பின் பண்ணையார் ஒருவர் பலி கொடுக்க தன்னிடம் ஆடு இல்லை என்பதால் லட்சுமி வளர்க்கும் ராமு ஆட்டை எடுத்துச் செல்ல நினைத்தான். ஆனால் "ராமுவை தரமாட்டேன்" என உறுதியாக நின்றாள் லட்சுமி. மனைவியின் பேச்சைத் தட்டிய ஆண்டியப்பன் இரவு நேரத்தில் கடும் மழையில் ஆட்டை இழுத்துக் கொண்டு பண்ணையார் வீட்டுக்கு விரைந்தான். ஆனால் சிறிது தூரம் சென்றதும் கால் தடுமாறி சுவரில்லாத கிணற்றில் விழுந்தான். ஆடு விழவில்லை கிணற்றினுள் ஒரு செடியின் வேரைப் பிடித்துக் கொண்டு ஆண்டியப்பன் அலறினான். ஆனால் அவனின் அலறல் வெளியே கேட்கவில்லை.

தன் எஜமான் கிணற்றில் விழுந்ததைக் கண்ட ஆடு உதவிக்கு ஆட்களைக் கூப்பிடும் விதமாக அங்குமிங்கும் ஒடி அலறியது. சிறிது நேரம் கழித்து மழைநின்ற பின் அவ்வழியே சென்றவர்கள் ஆட்டின் அலறல் சத்தம் கேட்டு அங்கு சென்றனர். பின் கிணற்றில் எட்டிப் பார்த்து ஆண்டியப்பனை காப்பாற்றினர்.

தன்னைக் காப்பாற்றியது ராமுவே தான் என்பதை உணர்ந்து கொண்ட ஆண்டியப்பன் கண்ணீர் பெருக்குடன் அதைக் கட்டியணைத்துக் கொண்டான். பின்னர் வீடு சென்ற அவன் ராமுவே தன் உயிரைக் காப்பாற்றியதாகவும் இனி ஆடுகளை விற்கும் தொழில் செய்யப் போவதில்லை எனவும் மனைவிக்கு உறுதியளித்தான். அதன் பின் கறவை மாடுகள் வாங்கி இருவரும் தொழில் செய்து செல்வந்த தம்பதியினராக வாழ்ந்தார்கள்.

ந.மதினுயா
தரம்-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவளையின் ஆசை

ஒரு காலத்தில் ஓர் ஆற்றில் சில தவளைகள் இருந்தன. அவைகள் தமக்குள் மிகவும் சந்தோஷமாகவும், ஒற்றுமையாகவும்ஒன்றுக்கொன்று இடையூறுகள் ஏற்படாத வண்ணம் வாழ்ந்து வந்தன.

ஒரு நாள் மூத்த தவளைக்கு ஒரு குருவியின் பாட்டொலி கேட்டது. இந்தப்பாட்டு எவ்வளவு இனிமையாக இருக்கிறது. என்று மூத்த தவளை எண்ணியது. அந்த மூத்த தவளை தன்னுடன் இருந்த இன்னும் ஒரு தவளையிடம் நாங்கள் இந்தக் கிணற்றுக்குள்ளே இருக்கிறோம் பாருங்கள் என்று கூறியது.

எங்களில் ஒருவருக்காவது இந்தப் பாட்டு தெரியாது. நாங்கள் இந்தக் கிணற்றிலிருந்து வெளியேறுவோம். அப்போது நாங்கள் அந்தப்பாட்டைக் கேட்கலாம் என்று மூத்ததவளை சொன்னது. அம்மூன்று தவளையும் அத்தவளையின் பேச்சைக் கேட்டது.

ஒவ்வொரு தவளையும் ஒருவருக்கும் தெரியாமல் மெதுமெதுவாக கிணற்றிலிருந்து வெளியே வந்தன. என்ன புதுமை. என்ன ஆச்சிரியம். "கிணற்றிலி ருந்தது போல் விசாலமாக இருக்கிறது இவ்விடம்" இவ்வாறு சொல்லிக் கொண்டே இருதவளைகளும் நிலத்தில் உள்ள புல் பூண்டுகளைப் பார்த்துக்கொண்டு நடந்தன. வீடுகள் போன்றவற்றைக் கண்ட இரு தவளைகளும் சரியான ஆச்சரியமாக இருந்தது. இயற்கை அழகை இரசித்துக் கொண்டு இரு தவளைகளும் சிறிது தூரம் சென்றன.

ஒரு சாரை நாயகன் தங்களை நோக்கி ஊர்ந்து கொண்டு வருவதைக் கண்டன. விரைவாக இரண்டு தவளைகளும் கிணற்றுப்பக்கம் ஓடின. ஆனால் ஒரு தவளைக்குப் போகக் கிடைக்கவில்லை.

சாரைநாயகன் ஒரு தவளையைப் பிடித்துக் கொண்டது. மற்றைய தவளை ஓடிச்சென்று கிணற்றுக்குள் பாய்ந்தது. இதைப் பார்த்துக் கொண்ட ஒரு தவளை இன்னும் ஒரு தவளையைப் பார்த்து "தெரியாத இடங்களுக்குப் போவதால் ஏற்படும் தண்டனைப் பார்த்தாயா?" என்று கூறியது.

ஜெ.சமீரவன்
தரம் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் களஞ்சியம்

- சட்டைவஸ் தாவரத்தின் பூவின் உலர்ந்த சூழ் முடிகளே - குங்குமப் பூ
- சிங்கப்பூரில் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் கடலுக்குள் கண்ணாடி மாளிகை அமைக்கப்பட்டுள்ளது.
- கங்காரு தான் அதிக தூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் 15 மீற்றர் நீளம் தாண்டி விடும்.
- தேனீக்கு இரண்டு இரப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும் மற்றுமொன்று ஜீரண உறுப்பாகவும் பயன்படுகின்றது.
- உலகிலே மிக நீளமான தாழ்வாரம் உள்ள இடம் ராமேஸ்வரம். 4 ஆயிரம் அடி நீளமுள்ளது.
- 1941ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல் முதலாக ஜெட் விமானம் பறக்க விடப்பட்டது.
- மண்புழுக்களில் ஆண், பெண் என்ற தனித்தன்மை கிடையாது.
- ஈபிள் டவரின் உயரம் 300 அடி.
- ஆமைக்கு பற்கள் கிடையாது.
- டியூப் லைட் சுடாது 6ஆயிரம் மணி நேரம் வரை எரியும் திறன் கொண்டது.
- வாத்தை தேசிய பறவையாகக் கொண்ட இரு நாடுகள் - கனடா, ஜாவா
- பாலில் இல்லாத சத்து - இரும்புச்சத்து
- காளானில் இருந்து "பென்சிலின்" தயாரிக்கப்படுகிறது.
- ஒலிவ் மரங்கள் அதிகம் காணப்படும் கண்டம் - ஐரோப்பா
- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு வயது - 62
- மணநூல் என அழைக்கப்படுவது - சீவகசிந்தாமணி
- அமெரிக்காவுக்கு சுதந்திர தேவிசிலையை பரிசாக வழங்கிய நாடு- பிரான்ஸ்

வி. வியான்சியா

தரம் 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகளுக்கு என்ன பதில்

(1) மிகக்குறைந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி எது?

(2) ஏரியானா என்பது ஒரு நாட்டின் பழைய பெயர் அதன் தற்போதைய பெயர் என்ன?

(3) ரூபாய் நாணயத்தை முதன் முதல் வெளியிட்டவர் யார்?

(4) பூச்சிகளில் மிகவேகமாகப் பறக்க கூடியது எது?

(5) நாய்களுக்கு எத்தனை பற்கள் இருக்கும் தெரியுமா?

(6) ஆபிரிக்க கண்டத்தில் தன் காலணியை நிறுவிய முதல் நாடு எது?

(7) வருடத்தில் இரண்டு நாட்கள் மட்டும் பகல் இரவு நேரம் சமமாக இருக்கும் அந்த இருநாள்கள் எவை?

(8) அடிமை வியாபாரத்தை ஒழித்த முதல் நாடு எது?

(9) தாயின் வயிற்றில் வளரும் கருவில் முதலில் தோன்றும் உறுப்பு எது?

(10) பிரிட்டனின் பிரதமராக 24 வயதில் பதவி ஏற்றவர்?

(11) பங்களாதேஷ் தோற்றம் பெற்றது எப்போது?

(12) முதன் முதலில் எழுதப்பட்ட பொருளாதார நூல் எது?

(13) இந்தியாவின் புகழ்பெற்ற மன்னர் ஒருவர் 13 வயதிலே பதவியேற்றவர் அவர் யார்?

(14) அமெரிக்க ராஜ்யங்களில் பெரியது எது?

(15) இந்திய யூனியன் பிரதேசங்களில் சிறியது எது?

(16) துணைக்கோள்களில் பெரியது எது?

(17) 26 வயதிலேயே மிகப்பெரிய உண்மையை கூறிய விஞ்ஞானி யார்?

(18) இரு கண்களாலும் ஒரு பொருளை காணக்கூடிய பறவை?

(19) அஜந்தாவில் எத்தனை குகை உள்ளது?

(20) திருக்குறள் எந்த அரசன் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது?

**விடைகள்**

(1) சாலாமன் தீவுகளில் வழங்கும் மொழி (11 எழுத்து)
(2) ஆப்கானிஸ்தான்
(3) ஷேர்ஷா
(4) தட்டாரப்பூச்சி
(5) 42
(6) பெல்ஜியம்
(7) மார்ச்சு 21, செப்டெம்பர் 23
(8) டென்மார்க்
(9) கண்கள்
(10) இளைய வில்லியம் பிட்
(11) 1971
(12) அர்த்த சாஸ்திரம்
(13) அக்பர்
(14) அலாஸ்கா
(15) லட்சத்தீவு
(16) சந்திரன்
(17) அல்பெர்ட் ஜன்ஸ்டைன்
(18) ஆந்தை
(19) 29
(20) உக்கிரப் பெருவழுதிப் பாண்டியன்

சி.தர்சினி
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராணிகளின் விநோதங்கள்

- நீந்தத் தெரியாத விலங்கு - ஒட்டகம்
- மிகவேகமாக நீந்தக்கூடிய பாம்பு - பிளக்மாம்பா
- மிகப்பெரிய வாயுள்ள விலங்கினம் - நீர்யானை
- வெள்ளை இரத்தம் கொண்ட உயிரினம் - கரப்பான்பூச்சி
- காலைப்பிடித்து தூக்கினால் இறக்கும் பிராணி - தாரா
- தலையைத் திருப்பாமலே பின்னால் பார்க்கக் கூடிய விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
- ஒருவருடம் ஆணாகவும் ஒருவருடம் பெண்ணாகவும் வாழும் உயிரினம் - ஈரிதழ்சிப்பி
- எருமைக்கும்பசுவுக்கும் இடையே பிறக்கும் கலப்பின விலங்கு - திமிதுள்
- ஓமோன் இல்லாத உயிரினம் - பக்றீரியா
- வெள்ளை நிறத்தைக் கண்டு பயப்படும் விலங்கு - புலி
- $270^0$ வரை தலையைத் திருப்பக்கூடிய பறவை - ஆந்தை
- மிகச்சிறிய முட்டையிடும் பறவை - தேன்சிட்டு
- பிறந்த அன்றே இறக்கும் உயிரினம் - ஈசல்
- சூரியனை நேருக்கு நேர் பார்க்கக்கூடிய சக்தியுடைய பறவை – கழுகு
- பல்லில்லாத முலையூட்டி - தேவாங்கு
- கண்கள் மூலம் சத்தத்தை கேட்கும் ஈரூடகவாழி - தவளை
- அதிகாலையில் முட்டையிடும் பறவை - வாத்து
- தனது வாலில் உணவை சேமித்து வைக்கும் உயிரினம் - பல்லி

மே.மேன்சியா
தரம் 11

## ஜோக்:

பேருந்தால் இறங்கி
பூமாரி பொழிவது போல்
சீர்காழிப்பாட்டு சிங்கார இசை போட
சாப்பாட்டுக்கடை யென்று
நேராக நுழைந்து நாற்காலியமர்ந்திட்டு நிமிராது பார்க்கின்றேன்
ஊரிலுள்ள இலையானின் உல்லாச விடுதி
"அதோ"

அ.தினேஷிகா
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஅறிவு

| | | |
|---|---|---|
| (1) | நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு | நோர்வே |
| (2) | சூரியன் மறையும் நாடு | இங்கிலாந்து |
| (3) | அதிகாலை அமைதி நாடு | கொரியா |
| (4) | உலக சர்க்கரைகிண்ணம் | கியூபா |
| (5) | புனித நாடு | பாலஸ்தீனம் |
| (6) | தங்கப் போர்வை நாடு | அவுஸ்ரேலியா |
| (7) | குடிசை நாடு | வடஅமெரிக்கா |
| (8) | செங்கட்டி வீடு | சீனா |
| (9) | தெற்கேயுள்ள பிரித்தானியா | நியூசிலாந்து |
| (10) | நைல்நதியின் கொடை | எகிப்து |
| (11) | உலகின் கூரை | பமீர் |
| (12) | புல் வீடு | ஹவாய் |
| (13) | கங்காருக்களின் நாடு | அவுஸ்ரேலியா |
| (14) | மரவீடு | பிலிப்பைன்ஸ் |

ர. நிஷாளினி
தரம் - 7

# தெரிந்துகொள்ளுங்கள்

- இந்துசமுத்திரத்தின் முத்து - இலங்கை
- இருண்ட கண்டம் - ஆபிரிக்கா
- இந்தியாவின் நறுமணத்தோட்டம் - கேரளா
- அரண்மனை நகரம் - கல்கத்தா
- அழியாத நகரம் - உரோமபுரி
- உலகின்கூரை - திபெத்
- உலகின் சர்க்கரைக்கிண்ணம் - கியூபா
- சூரியன் உதிக்கும் நாடு - யப்பான்
- சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து
- சீனாவின் துயரம் - குவாங்கோநதி
- மனுநீதிச்சோழனின் மகன் பெயர் - வதிவிடங்கன்
- மாணிக்கவாசகருக்கு பாண்டிய மன்னன் சூட்டிய பட்டப் பெயர்
  - தென்னவன் பிரமராயன்
- தமிழன் "கதி" எனப் போற்றப்படுபவர்கள்- கம்பர், திருவள்ளுவர்
- தேவாரத்தில் உள்ள 3 தமிழ் - கொஞ்சுதமிழ், கெஞ்சுதமிழ், மிஞ்சுதமிழ்

ச. துசாலினி
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுத்தகவல்கள்

## உலகநாடுகளின் சிறப்புப்பெயர்கள்

(1) உலகத்தின் கூரை - திபெத்
(2) நள்ளிரவில் சூரியன் உதயமாகும் நாடு - நோர்வே
(3) சூரியன் மறையும் நாடு - இங்கிலாந்து
(4) ஒரே ஒரு குடாநாடு - இந்தியா
(5) புன்னகைநாடு - தாய்லாந்து
(6) ஆயிரம் வாவிகள் கொண்ட நாடு - பின்லாந்து
(7) உலகத்தின் சர்க்கரைக்கிண்ணம் - கியூபா
(8) தங்கப் போர்வை நாடு - அவுஸ்திரேலியா
(9) நைல்நதியின் கொடை - எகிப்து
(10) வில்லிப்பூக்கள் நாடு - கனடா
(11) பசுபிக் பெருங்கடலின் சாவி - சிங்கப்பூர்
(12) பாறை வீடு - அவுஸ்திரேலியா
(13) தெற்கேயுள்ய பிரித்தானியா - நியுசிலாந்து
(14) கங்காரு நாடு - அவுஸ்திரேலியா
(15) ரொட்டி நாடு - ஸ்கொட்லாந்து

இந்நிரன் லக்சிகா
தரம் 7

# விடுகதைகள்

(1) அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன? சிலந்தி
(2) கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான்? மெழுகுதிரி
(3) வீடு வாசல் காப்பவன் விசுவாசமாய் இருப்பவன் கடிக்கவும் மாட்டான் குரைக்கவும் மாட்டான் அவன் யார்? பூட்டு
(4) இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுவான் அவன் யார்? கடிகாரம்
(5) செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள் அவை என்ன? மாதுளம்பழம்
(6) தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவை எவை? கண்இமைகள்
(7) தலையை சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்? பென்சில்
(8) உயிரில்லா நீதிபதி ஒழுங்காக தீர்ப்பு வழங்குவான் அது என்ன? தராசு
(9) உரசினாலே உயிரை விடுவான் அவன் யார்? தீக்குச்சி

உ. கௌசிகா
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 250 அடி உயரத்திற்கு பறக்கும் அணில்கள்


வானத்தில் விமானங்கள், ஹெலிகொப்டர்கள், ஜெட் விமானங்கள் போன்றவை பறந்து விரைந்து செல்வதைப் பார்த்திருக்கின்றோம். இப்போதெல்லாம் அதற்குப் போட்டியாக பறக்கும் பஸ்கள். அதற்கு விதி விலக்காக பாலூட்டும் வகையைச் சேர்ந்த அணில்கள் அதிக அளவில் வானத்தில் பறக்கின்றன. ஐ ரோப் பாவில் பின்லாந்து நாட்டில் மட்டுமே இந்த ஆபூர்வமான பறக்கும் அணில்கள் காணப்படுகின்றன. சைபீரியாவைத் தாயகமாகக் கொண்ட இந்த அணில்கள் சில ஆசிய நாடுகளிலும் எஸ்டோனியா மற்றும் பால்டிக் நாடுகளிலும் காணப்படுகின்றன. அடர்ந்த காட்டின் உள்ளே வெகுதுாரத்தில் மரம் விட்டு மரம் பாய்ந்து பறந்து செல்லும் இந்தப் பறக்கும் அணில்கள் பறப்பதைப் பறப்பதற்கு மிக அழகாக இருக்கும். 220 அடி முதல் 250 அடி உயரம் வரை பாய்ந்து பறந்து செல்கின்றன. இந்த அணில்கள் மிக முக்கியமாக அந்திக் கருக்கலிலும், இரவு நேரங்களிலும் பறந்து செல்கின்றன.

இந்த இனத்தைச் சேர்ந்த அணில்கள் பின்லாந்து நாட்டில் 50 ஆயிரம் வரை இருக்கின்றன. இந்த வகை அணில்கள் பழமையான காடுகள், காடுகளின் கடைசிப் பகுதி, வயலோரங்கள், ஏரிகள், நதிகள் ஆகிய இடங்களைத் தேர்ந்தெடுத்து வாழ்கின்றன.

மனிதர்கள் வாழும் இடங்களில் உள்ள உயர்ந்த மரங்களில் கூட பறக்கும் அணில்கள் வாழும் பூக்கள், பழங்கள், மொட்டுக்கள் மற்றும் இலைகளைச் சிறந்த உணவாக உட்கொள்கின்றன. குளிர்காலத்தில் வேண்டிய உணவுகளைச் சேகரித்துக் கொண்டு இரண்டு மூன்று நாட்கள் வரை தொடர்ந்து உறங்குகின்றன.

அரிதாகக் காணப்படும் இந்த வகையான அணில்கள் தற்போது அழிந்து வருகின்றன. இவைகளைக் காப்பாற்ற பின்லாந்து நாட்டின் வன வள அதிகாரிகளும், சுற்றுப்புறச் சூழலை ஆய்வு செய்பவர்களும் முயற்சி செய்து வருகின்றார்கள். பின்லாந்து நாட்டின் அரசும் கடுமையான சட்டம் இயற்றியுள்ளது.

தர்சி
தரம் 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ✦ மார்ச் | 08 | மகளிர்தினம் |
| ✦ மார்ச் | 22 | குடிநீர் தினம் |
| ✦ மார்ச | 27 | நாடகதினம் |
| ✦ ஏப்ரல் | 07 | சுகாதார தினம் |
| ✦ ஏப்ரல் | 10 | அன்னையர் தினம் |
| ✦ ஏப்ரல் | 12 | தாதிகள் தினம் |
| ✦ ஏப்ரல் | 22 | பூமிப்பாதுகாப்பு தினம் |
| ✦ ஏப்ரல் | 23 | புத்தக தினம் |
| ✦ மே | 01 | தொழிலாளர் தினம் |
| ✦ மே | 03 | பத்திரிகை தினம் |
| ✦ மே | 08 | செஞ்சிலுவை செம்பிறை தினம் |
| ✦ மே | 08 | நூதனசாலை தினம் |
| ✦ மே | 14 | அன்னையர் தினம் |
| ✦ மே | 15 | குடும்பநலன் தினம் |
| ✦ மே | 17 | தொலைத்தொடர்பு தினம் |
| ✦ மே | 21 | கலாச்சார பண்பாட்டுத்தினம் |
| ✦ மே | 31 | புகையிலை மறுப்புத்தினம் |
| ✦ யூன் | 05 | சுற்றுச்சூழல் தினம் |
| ✦ யூன் | 26 | போதைமருந்து எதிர்ப்பு தினம் |
| ✦ யூலை | 11 | சனத்தொகைதினம் |
| ✦ யூலை | 26 | சித்திரவதை எதிர்ப்புத்தினம் |
| ✦ யூலை | 28 | அகதிகள் தினம் |
| ✦ செப்ரெம்பர் | 08 | எழுத்தறிவு படிப்பறிவு தினம் |
| ✦ ஒக்ரோபர் | 01 | சிறுவர் தினம் |
| ✦ ஒக்ரொபர் | 03 | மது ஒழிப்புத் தினம், உலக உயிரினங்களின் தினம் |
| ✦ ஒக்ரொபர் | 06 | ஆசிரியர் தினம் |
| ✦ ஒக்ரொபர் | 09 | அஞ்சல்தினம் |
| ✦ ஒக்ரொபர் | 10 | உளச்சுகாதார தினம் |
| ✦ ஒக்ரொபர் | 15 | வெள்ளைப்பிரம்பு தினம் |
| ✦ ஒக்ரொபர் | 16 | உணவு தினம் |
| ✦ ஒக்ரொபர் | 17 | வறுமைஒழிப்புத் தினம் |
| ✦ ஒக்ரொபர் | 21 | விவசாய தினம் |
| ✦ ஒக்ரொபர் | 30 | சேமிப்புதினம் |
| ✦ நவம்பர் | 20 | சிறுவர்உரிமைகள் தினம் |
| ✦ நவம்பர் | 21 | கடற்றொழில் தினம் |
| ✦ டிசெம்பர் | 01 | எயிட்ஸ் தினம் |
| ✦ டிசெம்பர் | 02 | ஊனமுற்றோர் நலன் தினம் |
| ✦ டிசெம்பர் | 10 | மனித உரிமைகள் தினம் |
| ✦ டிசெம்பர் | 13 | சிறுவர் ஒலிபரப்பு தினம் |

ரி. கஜிதா
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனைகள்

(1) எளியவர்களுக்கு செய்யும் தொண்டு இறைவனுக்கு செய்யும் தொண்டை விட மேலானது.

(2) ஒருவன் உன்னை குற்றம் கூறியோ, அவதூறாக பேசியோ துன்புறுத்தினாலும் அதனை அவனுக்கு திருப்பாதே, பொறுமையுடன் நடந்து கொள்வாய்.

(3) நூலகத்துக்கு அழகு நூல், குளத்துக்கு அழகு தாமரை, கடலுக்கு அழகு அலை, வானுக்கு அழகு நட்சத்திரங்கள், நமக்கு அழகு கருணை கொண்ட உள்ளம்.

(4) நாம் செய்யும் வேலையில் திறமை, நிதானம், வேகம் இருக்க வேண்டும். ஆனால் பொய், கலப்படம், அவசரம் இருக்கக்கூடாது.

(5) உங்களிடம் பிறருக்கு கொடுத்துதவ பொருள் இல்லாவிட்டாலும் கற்க சொல்லிக்கொடுங்கள் அதுவே பெரிய தர்மம்

எஸ்.தாட்சாயினி
தரம் 9

# அன்பர்களே அறிந்து கொள்ளுங்கள்

- நல்ல நாள் - இன்று
- நல்ல வெகுமதி - மன்னிப்பு
- அறியக்கூடாதது - அடுத்தவரின் செயலை
- இருக்க வேண்டியது - மானம்
- இருக்கக்கூடாதது - ஆணவம்
- தேவைக்கேற்பது - சாமர்த்தியம்
- தேவையற்றது - விவாதம்
- எதிலும் சுலபமானது - குற்றம் காண்பது
- எதிலும் கடினமானது - பிழையின்றி வாழ்தல்
- மேல் தரமானது - நட்பு
- கீழ்தரமானது - துரோகம்
- செய்ய வேண்டியது - உதவி
- செய்யக்கூடாதது - உபத்திரவம்
- அறிய வேண்டியது - உலகசெயல்
- அடங்க நினைப்பது - தாய் தந்தைக்கு
- அடக்க நினைப்பது - உனது மனத்தை
- நம்பக்கூடாதது - வதந்தி
- நம்பக்கூடியது - மனச்சாட்சி
- பார்க்கக்கூடியது - பகுத்தறிவு
- பார்க்கக்கூடாதது - உன்மரணம்
- ஆணுக்குத் தேவையானது - உழைப்பு

க.ஷிந்துஜா
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழிகள்

- இடைவிடாத முயற்சியும் எப்போது மலர்ந்த முகம் அறிவின் அறிகுறியாகும்.
- தன்னால் செய்ய முடிந்த ஒன்றைச் செய்ய விரும்பாதவன் சமுதாய விரோதி.
- பாவம் செய்தவன் காசிக்கு போனாலும் பாவம் தொலையாது.
- எறும்புகள் மோப்ப சக்தியை இழந்துவிட்டால் இறந்துவிடும்.
- மனிதனின் பயணம் அவன் கையில் இல்லை ஆசையின் கையில் இருக்கிறது.
- கண்டதைக்கொண்டு கரை ஏற வேண்டும்.

சி.யனுசியா
தரம் 7

# மூன்றால் முன்னேற

- தவிர்க்க வேண்டிய மூன்று - புகைத்தல், குடித்தல், சூதாடல்
- அடக்க வேண்டிய மூன்று - நாக்கு, கோபம், ஆசை
- கவனிக்க வேண்டிய மூன்று - பேச்சு, நடைமுறை, செயல்
- ஒழிக்க வேண்டிய மூன்று - திருட்டு, பொய், சோம்பல்
- மதிக்க வேண்டிய மூன்று - முதியோர், மார்க்கம், சட்டம்
- போற்ற வெண்டிய மூன்று - திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி

ச.பேபிஷா
தரம்-6

# பொன் மொழிகள்

- வணங்கத்தக்கவர் — தாயும் தந்தையும்
- வந்தால் போகாதது — புகழ், பழி
- போனால் வராது — மானம், உயிர்
- தானாக வருவது — இளமை, முதுமை
- நம்முடன் வருவது — பாவம், புண்ணியம்
- அடக்கமுடியயாதது — ஆசை, தூக்கம்
- தவிர்க்கமுடியாதது — பசி, தாகம்
- பிரிக்கமுடியாதது — பந்தம், பாசம்
- அழிவைத் தருவது — பொறாமை, கோபம்
- எல்லோருக்கும் சமமானது — பிறப்பு, இறப்பு

ச.திலக்ஷிகா
தரம் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

(1) கடலில் கலக்காத நீர், யாரும் குடிக்காத நீர் அது என்ன?
கண்ணீர்

(2) அடிமேல் அடிவாங்கி அனைவரையும் சொக்க வைப்பான் அவன் யார்?
மேளம்

(3) ஓர் அரண்மனையில் இரண்டு காவலர்கள் அது என்ன?
வாய்

(4) விடுமுறை இல்லாத கடை?
சாக்கடை

(5) வடிவழகு மாப்பிள்ளை வயிற்றால் நடக்கிறார் அவர் யாரு?
பாம்பு

(6) வளைந்த நெளிந்து செல்பவன் வழியெங்கும் தாகம் தீர்ப்பவன் அவன் யார்?
ஆறு

(7) அடிக்காமல் திட்டாமல் கண்ணீரை வரவழைப்பான் அவன் யார்?
வெங்காயம்

(8) வளைந்து நெளிந்து ஆடும், குடித்தால் சாகும் அது என்ன?
நெருப்பு

(9) தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்க முடியாது அது என்ன?
முதுகு

(10) மாமா போட்ட பந்தல் பிரித்தால் கந்தல் எது?
சிலந்தி வலை

செ. யசிந்தா
தரம் - 8

# விடுகதைகள்

(1) கூவி அழைப்பான்: கூடி உண்ணுவான் அவன் யார்? காகம்
(2) அவனுக்கு வீடு மற்றவர்களுக்கு வலை அது என்ன? சிலந்தி
(3) கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான் அவன் யார்? மெழுகுதிரி
(4) ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது அது என்ன? ஊஞ்சல்
(5) வீடுவாசல் காப்பவன் விசுவாசமாய் இருப்பவன் கடிக்கவும் மாட்டான் குரைக்கவும் மாட்டான் கதவை ஒட்டிக் கிடப்பான் அவன் யார்? பூட்டு
(6) வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ அது என்ன? சிரிப்பு
(7) தலையைச் சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான் அவன் யாரு? பென்சில்
(8) வெளிச்சத்தில் தெரிவான் இருட்டில் மறைந்திடுவான் அவன் யார்? நிழல்
(9) வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை அது என்ன? கரண்டி
(10) செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள் அது என்ன? மாதுளம்பழம்

க.நவநீதன்
தரம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

(1) ஒடுகிற குதிரைக்கு, விலாவெல்லாம் ஓட்டை அதுஎன்ன? ரயில்

(2) நடந்து செல்லும் நான்கு கால் மண்டபம் அசைந்து செல்லும் அழகைப் பார் அது என்ன? யானை

(3) எளிதில் அகப்படாத திருடன், அவன் வந்த சுவடும் தெரியாது, வைத்த பாலும் மிஞ்சாது அவன் யார்? பூனை

(4) ஊசி மூக்கால் கொத்தி உணவு தேடுவாள் உறவுப் பறவைக்கு கூடு தருவாள் அவள் யார்? மரங்கொத்தி

(5) இணையாத இருவர் பலரையும் இணைக்கிறார்கள் பயணத்தால் அது என்ன? ரயில் தண்டவாளம்

(6) மேடையில் இவன் பாடுவதில்லை பாடுவதில் இவனை மிஞ்சுபவர்கள் இல்லை அவன் யார்? குயில்

(7) தோகை உண்டு ஆனால் மயில் இல்லை, தோகை மழைக்கு ஆடாது, ஆனால் காற்றுக்கு ஆடும் அது என்ன? கரும்பு

(8) முத்துப் போல் பற்கள் ஆனால் முறுக்கை நொறுக்க உதவாது அது என்ன? பொய்ப்பல்

(9) மழைக்கோ, வெயிலுக்கோ உதவாத குடையை உடலிலேயே சுமக்கின்றான் அவன் யார்? குடை மிளகாய்

(10) காயான பின் பூவாவாள் அவள் யார்? தேங்காய்ப்பூ

(11) எடுப்பாய் தோற்றமளிப்பாள் மிடுக்காய் உடை உடுப்பாள்? ஆனால் எங்கும் செல்ல மாட்டாள் அவள் யார்? ஐவுளிக்கடை பொம்மை

(12) கள்ளி ஒருத்திக்கு முப்பத்திரண்டு காவலாட்கள் அது என்ன? நாக்கு

வி.வியான்சியா
தரம் 8

## இலங்கையின் கல்வித்துறை சார்பான விடயங்கள்

- **1945** - இலங்கையில் இலவசக்கல்வித்திட்டம்
- **1952** - புலமைப்பரிசில் திட்டம்
- **1966** - பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது.
- **1980** - இலவசப்பாடநூல் வழங்கப்பட்டது.
- **1986**- மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
- **1987**- தேசிய பாடசாலை உருவாக்கம்
- **1989**- இலவச மதிய உணவுத்திட்டம்
- **1993** - இலவச சீருடை விநியோகம்
- **1999**- பாடசாலை மட்டக் கணிப்பீடு
- **2000**- பாடசாலைக்கல்வி அமைச்சு உருவாக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மது இல்லா உலகிற்காய்...."

இடம் :- வேலாயுதம் மாஸ்டர் வீடு, பாடசாலை
பாத்திரங்கள் :- வேலாயுதம் மாஸ்டர், ஆதித்தியன், சக்தி, அம்மா, அப்பா

**(வேலாயுதம் மாஸ்டர் வரச்சொல்லி ஆதித்தியன் அவர் வீட்டிற்கு சென்று கொண்டிருக்கின்றான். வேலாயுத மாஸ்டர் கதிரையில் அமர்ந்தார்)**

ஆதித்தியன் :- சேர்.... சேர்.... சேர்....
வேலாயுதம் மாஸ்டர் :- ஆதித்தியா வா உள்ளே வா
ஆதித்தியன் :- மாலை வணக்கம் சேர்
வேலாயுதம் மாஸ்டர் :- வணக்கம் ஆதித்தியா வந்து கதிரையில் அமர்ந்துகொள்
ஆதித்தியன் :-ஏன் சேர் வரச் சொன்னீங்க? என்ன விசயமாக வரச் சொன்னீர்கள்?
வேலாயுதம் மாஸ்டர் :- அது ஒன்றுமில்லை. ஏன் இண்டைக்கு வகுப்பறைக்குள் கவலையாய் இருந்தாயடா?
ஆதித்தியன் :- அது ஒன்றுமில்லை சேர்.
வேலாயுதம் மாஸ்ரர் :- பொய் சொல்லாத ஆதித்தியா உனது பிரச்சினையை தயங்காமல் சொல்லு, நான் உனது பிரச்சினையை தீர்த்து வைக்கின்றேன்.
ஆதித்தியன் :- அது ஒன்றுமில்லை சேர்! எனது அப்பா மதுபானம் அருந்திப்போட்டு அம்மாவை போட்டு அடிச்சுக் கொண்டு இருக்கின்றார். அதோட சேர் என்னையும் தம்பியையும் போட்டு அடிச்சுக் கொண்டு இருக்கிறார் சேர்.
வேலாயுதம் மாஸ்டர் :- ஆதித்தியா?இந்த சின்னப் பிரச்சினைக்காகவா நீ இண்டைக்கு பாடத்தை கவனிக்கமாலிருந்தாய்?
ஆதித்தியன் :- ஆம்! ஆம்! சேர்.
வேலாயுதம் மாஸ்டர் :- நான் உனது அப்பாவிடம் கதைக்கின்றேன்.
ஆதித்தியன் :- சேர் எங்கள எங்கட அப்பா வீட்டை விட்டு வெளியே கலைச்சும் போட்டார். நானும் எனது தம்பியும் அம்மாவும் எனது அத்தையின் வீட்டைதான் இருக்கின்றோம் சேர்.
வேலாயுதம் மாஸ்டர் :- ஆதித்தியா நீ அப்பாவ கேட்கலாம் தானே ஏன் ஒவ்வொரு நாளும் குடிச்சிட்டு வந்து எங்களிற்கு அடிக்கிறீங்கள் என்று!
ஆதித்தியன் :- நான் கேட்டனான். அதுக்கு அப்பா சொன்னவர் குடிக்கிறது சுகமாக இருக்கிறது என்றார்.
வேலாயுதம் மாஸ்டர் :- உன்ர அப்பா எனி குடிச்சிட்டு வந்தால் நீ பொலிஸிடம் சொல்லுவேன் என்று சொல்லு பார்க்கலாம்.
ஆதித்தியன் :- இப்படிச் சொன்னால் எனக்கு அப்பா அடிப்பார் சேர். எனக்கு அடித்தால் தாங்குவேன் சேர் என்ர தம்பிக்கும் அடித்தவர் சேர்.
வேலாயுத மாஸரர் :- உனது தம்பி எந்த பள்ளிக்கூடத்தில் படிக்கின்றான்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதித்தியன் :- நான் படிக்கிற பள்ளிக்கூடத்தில் தான் படிக்கிறான் சேர்.

வேலாயுதம் மாஸ்டர் :- நாளை பாடசாலைக்கு வரேக்க உனது தம்பியையும் அப்பாவையும் இந்த வகுப்பறைக்கு கூட்டிக் கொண்டு வா!

ஆதித்தியன் :- சரி சேர்.

வேலாயுத மாஸரர் :- சரி ஆதித்தியா நீ வீட்ட போ.

ஆதித்தியன் :- சரி சேர் நான் போட்டு வாறன் சேர்

<u>காட்சி 2</u>

**(ஆதித்தியன் வீட்டுக்கு செல்கின்றான் வீட்டு வாசலில் அம்மா கவலையுடன் இருக்கின்றார். ஆதித்தியன் அம்மாவின் அருகே செல்கின்றார்.**

அம்மா :- தம்பி எங்கையடா போனீ!

ஆதித்தியன் :- அம்மா நான் வேலாயுதம் மாஸ்டர் வரச்சொன்னார். நான் போட்டுவாறன் அம்மா!

அம்மா :- சரி தம்பி சரியடா.

ஆதித்தியன் :- அம்மா நேரம் ஆச்சுதம்மா நான் படிக்கப்போறன்.

அம்மா :- ஆதித்தியா தம்பியையும் கூட்டிக் கொண்டு படிக்கப் போடா!

ஆதித்தியன் :- சரி அம்மா.

அம்மா :- தம்பி தம்பி வா படிக்கப் போவம்.

:- அண்ணா இன்னும் 6.00 மணி ஆகவில்லை இப்ப படிக்கோனுமோ ? 6.00 ஆகட்டும்

ஆதித்தியன் :- தம்பி 6.00 மணிக்கு மேல் ஆகிவிட்டது.

சக்தி :- சரி அண்ணா நானும் படிக்க வாறன்

**(ஆதித்தியனும் சக்தியும் படித்துக் கொண்டிருக்கும் போது சக்தி மெதுவாக கொட்டாவி விடுகின்றான். சக்தி அண்ணாவிடம் பசிக்குது என்று கூறுகின்றான்.)**

ஆதித்தியன் :- சக்தி நீ மத்தியானம் சாப்பிடவில்லையா?

சக்தி :- இல்லை அண்ணா.

ஆதித்தியன் :- அம்மா! அம்மா! சக்திக்கு பசிக்குதாம் அம்மா!

அம்மா :- படிச்சு முடிஞ்சுதோ? இப்ப என்ன நேரம்?

சக்தி :- அம்மா இப்ப 9.00 மணியம்மா. நானும் அண்ணாவும் படிச்சு முடிஞ்சுதம்மா.

அம்மா :- சரியடா, வாங்கோ சாப்பிட வாங்கோ.

ஆதித்தியன் :- அம்மா இன்டைக்கு என்ன சமைச்சீங்கள் அம்மா

**(தயங்கியவாறு அப்பா எங்கே என்று யோசித்து கொண்டு சமையறையில் போய் உட்கார்ந்தார்கள்)**

அம்மா :- நீ ஒருநாளும் என்ன சாப்பாடு என்று கேட்கிறது இல்லை. ஏதோ இன்டைக்கு என்னிடம் கேட்கப் போறாயா?

ஆதித்தியா :- ஆம் அம்மா. இன்டைக்கு வேலாயுதம் மாஸ்டர் வீட்ட போனான் தானே, அங்க அவர் தம்பியையும், அப்பாவையும் வரச் சொன்னார்.

அம்மா :- ஏனடா வரச்சொன்னார்?

ஆதித்தியன் :- அப்பா குடிக்கிறதைப் பற்றி அவரிட்ட சொன்னனான்.

அம்மா :- ஏனடா உதையெல்லாம் போய்ச் சொன்னனீ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அப்போது குடித்தபடி அப்பா உள்ளே வருகின்றார்)

ஆதித்தியன் :- அம்மா அப்பா வாரார்.
அம்மா :- ஆதித்தியா போடா போ உள்ளே

## காட்சி 3

அம்மா :- வாங்கோ சாப்பிடுறீங்களோ?
அப்பா :- எனக்கு சாப்பாடு ஒண்டும் வேண்டாம் என்ன இன்டைக்கு கவனிப்பு அதிகமாக இருக்கு எதாவது கேட்கப் போறாயா?
அம்மா :- ஆம்.
அப்பா :- என்ன கேட்கப் போகிறாய்?
அம்மா :- இன்டைக்கு என்ர மூத்தவன் வேலாயுதட் மாஸ்டர் வீட்ட வரச்சொல்லி போனவன். அவர் நாளைக்கு உங்களை ஒருக்கா வரச் சொன்னாராம்.
அப்பா :- அதுக்கு நான் என்ன செய்யிறது?
அம்மா :- இஞ்சேருங்கொ ஒருக்கா போய் வாங்கோவன். என்ன சொல்கிறார் எண்டு பாப்போம்.
அப்பா :- அந்தக்கதையை விட்டிட்டு போய்ச்சாப்பாடு கொண்டு வா!
அம்மா :- என்ன சாப்பாடோ? ஏதோ ஒவ்வொரு நாளும் சாப்பாட்டிற்கு காசு தந்த மாதிரி சாப்பாடு கேட்கிறியள்?
அப்பா :- சாப்பாடு தராட்டிக்கும் உன்னட்ட இருக்கிற காசை தா?
அம்மா :- இஞ்சேருங்கோ இந்தாங்கோ சாப்பாடு உங்களிற்கு இல்லாத சாப்பாடா!
அப்பா :- கொண்டா சாப்பாட்டை (மனதிற்குள்) (இவளுக்கு எப்படி நான் அடித்தாலும் இவளுக்கு என்ரமேல் அன்பு அதிகம் தான்)
அம்மா :- ஒருக்கா பள்ளிக்கூடம் போய் வாங்கோவன், இல்லாட்டி ஆதித்தியனிற்கு சேர் பேசுவார்.
அப்பா :- சரி நான் போயன்.

## காட்சி 4

(பாடசாலைக்கு ஆதித்தியன் அவனது அப்பாவை அழைத்துக் கொண்டு வருகின்றபோது வேலாயுதம் மாஸ்டரை ஆதித்தியன் காண்கின்றான்)

ஆதித்தியன் :- வணக்கம் சேர்
வேலாயுதம் மாஸ்டர் :- வணக்கம் ஆதித்தியா!
ஆதித்தியன் :- சேர் நீங்கள் சொன்ன மாதிரி என்ர அப்பாவையும் தம்பியையும் கூட்டிக் கொண்டு வந்தனான் சேர்
வேலாயுதம் மாஸ்டர் :- சரி நீ போய் இரு. உனது அப்பாவிடம் கதைக்க வேண்டும். நீ போகும் வழியில் உன்ர தம்பியை விட்டுட்டுப் போ
ஆதித்தியன் :- சரி சேர்
வேலாயுதம் மாஸ்டர் :- (ஆதித்தியன வகுப்பறைக்குள் போன பின்பு அவனது அப்பாவிடம் கதைக்க ஆரம்பிக்கின்றார்) நீங்கள் தானே ஆதித்தியாவின் அப்பா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| அப்பா | :- ஆம் நான் தான். அதில் என்ன சந்தேகம் வேலாயுதம் மாஸ்டர் |
| | :- நான் நினைச்சேன் ஆதித்தியனிற்கு அப்பா இல்லைஎண்டு |
| அப்பா | :- ஏன் நீங்கள் இப்படி நினைச்சீங்கள்? |
| வேலாயுதம் மாஸ்டர் | :- ஆதித்தியனிற்கு அப்பா இருந்திருந்தால் அவன் வகுப்பறையில் சோகமாகவும், அவனின் அம்மாவும் அவரின் சகோதரமும் வீட்டில துன்பப்படுகின்றார்களாம்? |
| அப்பா | :- அது சேர் வெறியில அப்படிச் சொன்னான் சேர். மற்றபடி நான் என்னுடைய குடும்பத்தை பார்க்கிறன் சேர். |
| வேலாயுதம் மாஸ்டர் | :- குடும்பத்த பார்த்தால் மட்டும் போதாது. அவர்களை நல்ல சந்தோஷமாகவும் வைத்திருக்க வேண்டும். |
| அப்பா | :- உங்களிற்கு யார் சொன்னது சேர்...<br>(அப்பா கோபத்துடன் வேலாயுதம் மாஸ்டரை பார்த்த வண்ணம்) |
| வேலாயுதம் மாஸ்டர் | :- யார் சொன்னால் என்ன? சொல்ல வந்த விஷயத்தை கவனிக்கிறது தான் புத்திசாலித்தனம். இப்படி உங்கட குடும்பவிஷயம் எல்லாருக்கும் தெரிய நீங்கள் தானே காரணம்? பிள்ளைகளின் மனசையும், மனைவியையும் புரிய முடியாத ஆள் தானே நீங்க? |
| அப்பா | :- நீங்கள் இப்படி சொல்லாதேங்கோ சேர். எனக்கும் மனைவி பிள்ளைகளில் விருப்பம் தான். எனக்கும் சந்தோஷம் இருக்கு. |
| வேலாயுத மாஸ்ரர் | :- பிறகு ஏன் உங்கட பிள்ளைகளையும் மனைவியையும் அடிச்சுக்கொண்டு இருக்கிறியள்? |
| அப்பா | :- நீங்கள் என் குடும்பத்தின் நிலையில் இவ்வளவு அக்கறையாக இருக்கேக்க, நான் தலைவன் எனக்கு அக்கறை இல்லையோ? |
| வேலாயுத மாஸ்ரர் | :- நீங்கள் உங்கடபிள்ளைக்கும் மனைவிக்கும் என்ன செய்யப் போகிறீங்கள்? இவ்வளவு நாளும் சித்திரவதை தானே கொடுத்தனீங்கள். |
| அப்பா | :- சரி நான் இனிமேல் குடிக்கமாட்டேன், என்ர மனைவியையும் பிள்ளைகளையும் சரியாக வைச்சு பார்ப்பேன் சேர். |
| வேலாயுத மாஸ்ரர் | :- சரி நீங்கள் போய்வாங்கோ எனி உங்களின் குடும்பத்தில் சந்தோஷத்தை பாரக்க வேண்டும். |
| அப்பா | :- சரி சேர் நான் போய் வாறேன். |

வாய்மையே வெல்லும்!

ர.முருகதாஸ்
தரம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியும் அவனின் தமிழ் சிறப்பும்

"யாமறிந்தபுலவரிலே பாரதி போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை, உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை" என்று பாரதியின் சிறப்பைப் பாடியுள்ளார்கள். காலத்திற்குக் காலம் தமிழுக்கு அழகும், புதுமையும் சேர்த்த கவிஞர் பலர். அவர்களுள் மகாகவி சுப்பிரமணியப் பாரதியாரும் ஒருவராவார்.

அன்றைய சமுதாய சூழலில் தமிழர் பண்பாடு, இலக்கியம் என்பன மாற்றம் பெற வேண்டி இருந்தமையை வரலாற்று அடிப்படையில் கிரகித்துக் கொண்டமையும் பாரதியின் திறமைகளுள் முக்கியமானதாகும். அவருடைய கவித்துவத்திலும் தனித்துவம் உண்டு. இலக்கிய வரலாற்றில் அவர் நிலையான இடம் பெற அவை துணை புரிந்தன. இற்றை வரை தமிழிலே பேசுவேன், தமிழிலே எழுதுவேன், தமிழிலே சிந்தனை செய்வேன், என்பது அவருடைய சங்கற்பமாகும். ஐந்து வயதிலே தாயை இழந்த பாரதி

"என்னை ஈன்று எனக்கைந்து பாராயத்தில்
ஏங்க விட்டு விண் எய்திய தாய் தனை"

என்று தனது தாயை நினைத்து தமிழிலே அழகாகப் பாடியுள்ளார். ஏழு வயதில் பூணூல் பூண்டு உபநயனம் பெற்ற பாரதியாருக்கு தமிழ் மொழியில் அதிக நாட்டம் உண்டானது. எட்டய புரத்துப் புலவர்களுடன் பாட்டிலே பேசி வந்தமையே எதற்கும் எடுத்தளடுப்பில் பாட்டுப் பாடும் கவித்துவம் அவருக்கு வந்தது. மகனைக் கணித மேதையாக்க விரும்பிய தந்தை மைந்தனின் தமிழ் போக்கைக் கண்டு திகைத்தார். எட்டய புரம் ஆங்கில ஆரம்பப் பாடசாலையில் தமிழ் வகுப்புக்களின் பின் திருநெல்வேலி உயர் நிலைப்பாடசாலையில் தமிழில் மூன்று ஆண்டுகள் மூத்த பசுமைச் சோம சுந்தரத்தோடு படித்தார். படித்த காலத்தில் தமிழ் ஆர்வம் கொண்ட இருவரும் மறைவாகத் தேர்க் கொட்டகையுள் இருந்து தமிழ் நூல்களை ஆர்வத்தோடு படித்தனர்.

இருவரும் பாட்டியற்றும் ஆர்வம் உள்ளவராய் இருப்பதைக் கண்ட யாழ்ப்பாணப் புலவர் ஒருவர் அவர்களை வாழை, கழுகு, என்பவற்றைப் பாடச் செய்து இருவருக்கும் "பாரதி" எனவே வழங்கி வந்தார். இருவரும் "சோமசுந்தரப் பாரதி" சுப்ரமணியபாரதி" ஆயினர். பாரதி என்னும் பட்டம் இவருக்கு முன்பும் பின்பும் வாழ்ந்தவர்களுக்கும் வழங்கப்பட்டது. ஆனால் பாரதியார் என்றதும் அது சுப்பிரமணிய பாரதியாரையே குறிக்கும். அலகத் பல்கலைக்கழகத்தில் இடைநிலைத் தேர்வுக்குப் படித்து வரும் காலத்தில் எட்டயபுரம் மன்னன் அரண்மனையில் இலக்கிய இரசனையை உண்டாக்கி மன்னனை மகிழ்விக்கும் வேலை கிடைத்தது.

சிற்றின்டிப் பாடல், சிந்துப் பாடல்களில் சிந்தை கொண்ட மன்னனுக்குப் பழைய பாடல்கள் வழியில் புதிய பாடல்களைப் பாடிஎல்லோரையும் திகைக்க வைத்தார். எட்டயபுரத்துப் புலவர் குழாமில் நாயகம் அணியாக இருந்து நயமான புதுக்கவிதைகளை நிமிடம் தோறும் பாடிக்குவித்தார். "தனிமை இரக்கம்" தலைப்பில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவான கவிதையை "விவேகபானு" பத்திரிகை 1904 ஆம் ஆண்டு யூலை மாதம் வெளியிட்டது. ஆங்கிலப் புலவர் செல்லியின் படைப்பில் இலக்கிய வட்டம் எனும் கழகத்தை நிறுவி இரசனையை அனுபவித்து வந்தார். 1904ம் ஆண்டு யூலை மாதம் முதல் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுறிந்தார். பெரிய இலக்கண வித்தகர்கள், இலக்கிய வித்தகர்கள்செய்த வேலையை இலகுவாக்கி நற் பெயர் பெற்றார். அதை அறிந்த சுப்பிரமணிய ஐயர் தமது சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவிப்பத்திராதிபர் பதவியைப் பாரதியாருக்கே வழங்கினார்.

சுதேச மித்திரன் பத்திராதிபர் ஆகிய பாரதியார் "தமக்குத் தொழில் கவிதை பாடுதல் , இமைப் பொழுதும் சோராதிருத்தல்" எனப் பாடியவாறு வேலையை ஏற்றார். அவரின் பன்மொழிப் புலமையினால் ஆங்கில நூல்களை இலகுவாகப் பொதுமக்கள் படித்தறியும் வண்ணம் மொழிபெயர்த்தார். தம் மொழி பெயர்ப்பால் தமிழுக்குப் புதுநடை ஒன்றை அவர் கற்பித்துள்ளார். அது பாரதியாரின் கொடை உபசரிப்பு. வந்தே மாதரம், நாட்டு வணக்கம், எங்கள் நாடு, சுந்தரப் பெருமை, புதுவருசம் முதலிய பதினான்கு பாடல்களின் தலைப்பில் உருவான "தேசிய கீதங்கள்" எனும் தொகுப்பு நூலை 1908ம் ஆண்டு தாமே வெளியிட்டார். இந்நூல் வெளிவந்த போது பத்திரிகைகள் பலவிதமாக பாராட்டி எழுதின. மதுரை நகரின் தமிழ்ச் சங்கத்தால் வெளியிட்ட "செந்தமிழ்" எனும் பத்திரிகை வெகு உச்சமாகப் புகழ்ந்தது.

இன்று கவிஞர்கள் பலர் காணப்பெற்றாலும் குழந்தைகளுக்கென்று தனிக்கவிதைகள் பாடிய முன்னோடிக் கவிஞர் பாரதியாரே தான். கொஞ்சும் தமிழில் பிஞ்சு உள்ளங்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் பாப்பாப் பாட்டுப் பாடியவர் பாரதியார். "ஓடிவிளையாடு பாப்பா" என்று தொடங்கும் பாடல் அவரின் முதலாவது குழந்தைப் பாடல் ஆகும். இவர் தமிழ் நாட்டிலே தமிழ் மொழியில் சீர்திருத்தம் பற்றி பாடிய பாடல்கள் பாரத நாடு முழுவதிற்கும் பொதுவானவை.

*"சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு தனில் ஒருமித்திடும் மையம்",*

*"ஒன்றுண்டு மானிட சாதி"* என்றெல்லாம் பாடினார். இவர் தொல்காப்பியம் சொன்ன "விருந்து" எனும்அமைப்பிற்கு புதுக்கவிதைகள் பாடியவர்.

இவர் பாடிய முப்பெரும் பாடல்களான குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு என்பனவும் உண்மையை வெளிக்காட்டியவை. தமிழ்ப்பொறி பறக்க விடுதலை உணர்ச்சியை வீறு கொண்டெழச் செய்து விறுவிறுப்பாகப் பாரதியார் எழுதியவற்றை அரசாங்கம் கண்டு இராஜவிழி விழித்தது. அபிமானிகள் அச்சம் காரணமாக இந்தியப் பத்திரிகையை இரகசியமான சூழலில் படித்து வந்தனர். வடமொழில் இருந்து தமிழில் மொழி பெயர்த்து பாடிய பாடல்கள் வேதங்கள், வேதாந்தங்கள், உபநிடதங்கள், சூத்திரங்கள், பகவத்கீதை முதலியன ஆகும். தமிழிலே "கர்மயோகி" எனும் பத்திரிகையை நடாத்தி வந்தார் "யாமறிந்த மொழியிலே" இனிமையானது தமிழ் மொழியே என்று தெளிவாகக் கூறக்கூடியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை....."

என்ற கவிதையினூடாக பெண்ணுரிமை, பொருளாதாரம் பற்றிப் பாடினார். அவர் தமிழிசை ததும்பத் ததும்ப பாடினார். அவரது பாடலைக் கேட்டவர்கள் "பாட்டுக்கொரு புலவர் பாரதியடா" என்றெல்லாம் கூறினார்கள்.

இவ்வாறாகப் பாரதியார் 1882ம் ஆண்டு பிறந்து முப்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து ஆயிரம் ஆயிரம் பாடல்களை இரசனையுடன் பாடிக் குவித்தார். இதனால் தான் பாரதியாரின் தமிழ் வல்லமையை அறிந்த இலக்கிய ஆய்வாளர்கள் தமிழ் இலக்கியத்தை மக்கள் இலக்கியமாகத் தோற்றுவித்த சிறப்பு என்னும் திறனாய்வாளர்கள் பாரதி உலக மகாகவி என்றும் கூறுவர்.

மதுஜா - சிறிதரன்
தரம்- 11

# ஒலிம்பிக்

கி.மு 700களில் தொடக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகளின் நோக்கம் உன்னதமானவை. போருக்கு எதிராகத் தொடங்கப்பட்டதால் ஒலிம்பிக் திருவிழா யுத்த எதிர்ப்பு என்பது எப்போதுமே மனிதர்களின் ஆன்மாவோடு கலந்த விஷயமாக கலந்திருக்கின்றது. அந்த வகையில் தொடங்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் மூன்று முறை யுத்தம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. 1890களில் மீண்டும் ஒலிம்பிக் போட்டிகளை நடத்த வேண்டும் என்ற சிந்தனையை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கல்பெர்ட்டின் என்பவர் விதைத்த போது அதற்குப் பொதுவான ஆதரவு கிடைக்கவில்லை. இருந்தாலும் அவருடைய தொடர் முயற்சி காரணமாக இன்று வரை நவீன ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. உலக நாடுகளிடையே சமாதானமும், நட்புறவும் வலுப் பெற இந்தப் போட்டிகள் உதவியாக இருக்கின்றன.

1908 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போது பிஷப் எந்தல் பெர்ட் தல்போட் நடத்திய பிராத்தனையின் போது கூறிய வாசகம் ஒலிம்பிக் போட்டிகளில் நோக்கமாக கவ்பார்ட்டின் வடிவமைத்தார். ஒலிம்பிக் போட்டிகளின் மிக முக்கியமான நோக்கம் வெற்றி பெறுவது அல்ல. போட்டிகளில் பங்கேற்பது தான் வெற்றி பெறுவதற்காக கலந்து கொள்வதை விட நன்றாகப் போட்டியிடுவது தான் அவசியம் என்பதை வீரர்கள் உணர வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது தான் ஒலிம்பிக் போட்டி.

சி. எழிலவன்
தரம்-5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை அழித்தவனுக்குள் ஒரு உத்தமன் வாழ்கின்றான்

## ஹிட்லரின் வாழ்க்கையின் இறுதி பக்கங்கள்.

"ஹிட்லர் ஒரு கொடூரன்" என்பது ஒரு பக்கம். ஆனால் அன் மறு பக்கத்தை பார்த்தால் தன் தாய் நாட்டை, தன் இனத்தை மொழியை உலகிலேயே உன்னதமான நிலைக்கு கொண்டு வருவதற்கான அளப்பரிய தியாகங்களை செய்தவன். விடா முயற்சியால் உலக வரலாற்றில் இடம்பிடித்தவன்.

ரஷ்ய படைகள் ஜேர்மனியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. ஹிட்லர் 1945 ஜனவரி மாதம் 16 திகதி முதல் ஜேர்மனி தலை நகரில் பலம் வாய்ந்த பாதாளம் அமைத்து வாழ்ந்து வந்தார். 1804ல் மாவீரன் நெப்போலியன் பயன்படுத்திய நாற்காலியும் இவரிடம் இருந்தது. 1945 ஏப்ரல் பிற்பகுதியில் ஜேர்மனி மீது ரஷ்ய படைகள் குண்டு மழை பொழிந்தன. இவ்வாண்டு ஏப்ரல் 25ம் திகதி ஹிட்லர் வாழ்ந்த நகரை ரஷ்ய படைகள் சூழ்ந்தன. 1930 முதல் ஹிட்லரின் மனம் கவர்ந்த காதலியாக இருந்தவர் ஈவா பிரவுன். எதிரிகளிடம் சிக்குவதை விட தற்கொலை செய்வது மேல் என நினைத்து தன் நினைவை தன் காதலியிடம் கூறினார். தானும் உங்களுடன் இறப்பதாக அவள் கூறினாள். ஏப்ரல் 27ம் திகதி அப்பாதாளறையில் தனது பிறந்த தினத்தை தனது காதலியுடனும், உயிர் நண்பர் கோய்பல்ஸ் உடனும் கொண்டாடினார். ஏப்ரல் 28 தனது காதலியின் இறுதி விருப்பப்படி அவரைத் திருமணம் செய்து கொண்டார். அவ்விழாவில் நண்பர்கள் அனைவரும் மது அருந்தினர். ஹிட்லர் மது அருந்தவில்லை. தேநீர் அருந்தினார். ஏப்ரல் 29 தனது மனைவியிடம் உயிரில் எழுதும் படி கூறினார். அவர் எழுதிய உயிரி வருமாறு :-

"வாழ்விலும் தாழ்விலும் என்னோடு இருந்து என் இன்பதுன்பங்களில் எல்லாம் பங்கு கொண்ட ஈவா பிரவுனை என் வாழ்வின் கடைசிக் கட்டத்திலாவது மணந்து கொண்டு கௌரவிக்க வேண்டுமென்று முடிவு செய்தேன். அதன் படி நடந்து கொண்டேன். நாங்கள் இறந்த பிறகு எந்த ஜேர்மன் மண்ணுக்காக கடந்த 12 ஆண்டு காலமாக பாடுபட்டு வந்தேனோ, அந்த ஜேர்மன் மண்ணிலே என்னையும் ஈவாவையும் எரித்து விடுங்கள். என் சொத்துக்கள் கட்சிக்குச் சேர வேண்டும். கட்சி அழிந்தால் நாட்டுக்குச் சேர வேண்டும்" இது ஹிட்லரின் உயில். அன்று மாலை தனது தளபதிக்கு உரை நிகழ்த்துகையில் தான் சமாதானத்தை விரும்புவதாகவும், இப்போரில் நான் இறக்க நேரிட்டால் இறப்பேன் என்றும் எதிரிகளிடம் சிக்கி அவமானம் அடைய மாட்டேன் என்றும் கூறினார்.

ஹிட்லரால் மக்களுக்கு எழுதப்பட்ட சாசனம் குறிப்பிடுவது தான் முதலாம் உலக யுத்தத்தில் சாதாரண வீரனாக களமிறங்கினேன். தன் சக்தி முழுவதையும் 30 ஆண்டுகளாக தாய் நாட்டுக்காக செலவிட்டேன் . போர் வெறிகூடாது, ஆயுத குறைப்பு செய்ய வேண்டும் என வலியுறுத்தி இருக்கின்றேன். இரண்டாம் உலகப் போர் மூளும் என நான் நினைக்க வில்லை. போரின் சிதைவுகள் எதிர்கால சந்ததியினருக்கு நினைவுச் சின்னங்களாகும். இதைப் பார்க்கும் போது ஜேர்மனிய இளைஞனுக்கு உணர்ச்சி வரும் என ஹிட்லர் தன் சாசனத்தை முடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் அந்நிய படையிடம் மண்டியிடமாட்டேன் ஈவாபிரவுன் தன்னுயிரை மாத்திரமல்ல உடலையும் சேர்த்து அழித்துக் கொண்டார்.

உலகில் பல இலட்சம்மக்களின் உயிர்களை பறித்த ஹிட்லரிடமும் உயரிகுணங்கள் உள்ளன. உலகையே நடுநடுங்கச் செய்த ஹிட்லரை ஒட்டு மொத்தமாக விலத்தி வைக்காமல் அவரிடம் இருக்கும் நல்ல பண்பை வாழ்வில் கடைப்பிடித்தால் நாமும் வரலாறு படைக்கலாம்.

"நீநடந்து செல்லப் பாதை இல்லை என்று கவலைப் படாதே
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை"

சி.பவதாரணி
தரம் - 10

## யாழ்ப்பாணமும் ஆறுமுக நாவலரும்

இன்று நாங்கள் மேடையிலே உரையாடிக் கொண்டிருக்கின்றோம். கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கின்றொம். நல்ல தமிழ் வாக்கியங்களை இலகுவாகப் பயன்படுத்துகின்றோம். இதற்கெல்லாம் காரணமாக அமைந்தவர் ஆறுமுக நாவலர் என்றால் இது மிகையாகாது.

நீண்ட காலமாகப் பழந்தமிழ் இலக்கியங்களெல்லாம் செய்யுள் நடையிலேயே எழுதப்பட்டு வந்தன. பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களின் வரவினால் அச்சியந்திர வசதிகள்தோன்றின. அக் காலத்தில் வசன நடையில் எழுதும் முயற்சியும் தோன்றியது.

இவ்வாறு ஆரம்பித்த வசனநடையை நல்ல இலகு தமிழில் குறியீடுகளும் சேர்த்து எழுதும் முறையை ஏற்படுத்திய பெருமை நாவலருக்கே உரியது. ஆறுமுக நாவலர் அழிந்து போய்க்கொண்டிருந்த பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை அச்சேற்றி நமக்குத் தந்தார். உரை விளக்கங்களை எழுதி வழங்கினார். எம்மைப் போன்ற சிறார்களுக்குப் பாலபாடம் முதலிய நூல்களை உருவாக்கித் தந்தார்.

யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஆயிரத்து எண்ணூற்று இருபத்தி இரண்டாம் ஆண்டிலே பிறந்த ஆறுமுகம் தமது நாவான்மை காரணமாக நாவலர் என்ற பட்டத்தைப் பெற்றார். நாவலர் பட்டம் பெற்றவர் பலர் இருப்பினும் நாவலர் என்று குறிப்பிடும் போது அது ஆறுமுக நாவலரையே குறிக்கும்.

ஆங்கிலப் பாடசாலைகள் போலத் தமிழ் பாடசாலைகளை உருவாக்கித் தமிழ்க்கல்வியைப் பரப்பினார். ஈழத்தில் அன்னியர் ஆட்சியின் அடிமைத்தனத்தை எதிர்த்துத் தமிழையும் சைவத்தையும் காத்து வளர்த்த பெருமை ஆறுமுக நாவலருக்கே உரியதாகும்.

ச. கௌசல்யா
தரம் - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்ணின் பெருமை

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்" இக்கூற்றில் இருந்து பெண்ணின் பெருமையை அறிந்து கொள்ளலாம். இந்த உலகை இயக்கும் மகாசக்தியான பராசக்தி பெண்ணாகவே உருவாக்கப்படுகின்றார். ஒரு குடும்பத்தின் குல விளக்காக விளங்குபவள் பெண்ணே.

ஒரு பெண்ணானவள் பாட்டி, தாய், மனைவி , மகள், சகோதரி போன்ற பல ஸ்தானங்களில் வாழ்ந்தாலும் தாய் என்ற ஸ்தானம் தான் பெண்ணை சமூகத்தில் உயர்த்திக் காட்டுகின்றது. தாய் என்ற ஸ்தானத்தைப் பெற்ற பெண் தன் குழந்தையை சமூகத்தில் நற் பிரஜையாக உருவாக்கும் போது அத்தாய் ஆனவள் புகழின் உச்சிக்குச் சென்று வருகின்றாள்.

முற்காலத்தில் பெண்கள் அடிமைத்தனமாக நடத்தப்பட்டார்கள். பெண்களை அடிமையாக நினைத்த ஆணினம் தம்மைப் பெற்றெடுத்த தாயானவள் பெண் என்பதை சற்றுக் கூட சிந்தித்துப் பார்க்கவில்லை. பெண்களை அடிமைத் தனத்தில் இருந்து விடுவிக்கத் தோன்றிய ஒரு விடிவிளக்கே சுப்பிரமணிய பாராதியார். அவர் பெண் விடுதலையைக் கருதி பல பாடல்களைப் பாடி அப் பாடல்களில் பெண்களை அடிமைகளாக நினைத்த ஆணினத்தைச் சாடினார்.

இப்போது பெண்கள் பாரதியார் கண்ட புதுமைப் பெண்களாக மாறி நாட்டை ஆளும் அளவுக்கு நல்ல திறமை கொண்டவர்களாகவும் உருவாகி விட்டார்கள். சர்வதேச ரீதியாக மகளிர் தினம் என்று பெண்களுக்கு ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு பெருமை மிக்க பெண்ணுக்கு ஒரு நாளென்ன ஒரு வருடமே கொடுத்து விடலாம்.

ச.விஜிதரன்
தரம் - 5

## ரோஜா

ரோஜா ஒரு அழகான பூவாகும்.
எனக்கு மிகவும் பிடித்த பூ ரோஜாப்பூ.
இது அனேகமாக எல்லா வீடுகளிலு் காணப்படும்.
இதனை பெண்கள் தலையில் விரும்பி சூடுவார்கள்.
இது வாசனை நிறைந்ததாகப் பல நிறங்களில் காணப்படும்
சிவப்பு, வெள்ளை, மஞ்சள், ரோஸ் எனப் பல நிறங்களில் இப்பூ உண்டு.
இது பல இதழ்களைக் கொண்டிருக்கும்.
இதைத் தலையில் சூடுவதற்கும், அலங்கரிப்பதற்கும் பயன்படுத்துவார்கள்.

ச. டிசாங்கினி
தரம் - 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் விரும்பும் பறவை

நான் விரும்பும் பறவை மயில் ஆகும்.
அதன் கால்களும் தோகையும் கழுத்தும் நீளமானவை.
அதன் தோகையில்பச்சை, நீலம், ஊதா, மஞ்சள் ஆகிய நிறங்கள் உள்ளன.
இது பூச்சி, புழு, தானியம் ஆகியவற்றை விரும்பி உண்ணும்.
மழை முகிலைக்கண்டால் தனது அழகியதோகையை விரித்து ஆடும்.
அது தோகையை விரித்து ஆடுவதைபார்க்க எனக்கு ஆனந்தமாக இருக்கும்.

எஸ்.லினுக்ஷன்
தரம் - 5

## வாழ்வியற் தத்துவங்கள்

1. மிக மிக நல்ல நாள் - இன்று
2. மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
3. மிகவும் வேண்டாதது - வெறுப்பு
4. மிகப் பெரிய தேவை - சமயோசிதபுத்தி
5. மிகக் கொடிய நோய் - பேராசை
6. மிகவும் சுலபமானது - குற்றங்காணல்
7. கீழ்த்தரமான விஷயம் - பொறாமை
8. நம்பக் கூடாதது - வதந்தி
9. ஆபத்தை விளைவிப்பது - தவறுகள்
10. செய்யக் கூடாதது - தவறுகள்
11. செய்ய வேண்டியது - உதவி
12. விலக்க வேண்டியது - விவாதம்
13. உயர்வுக்கு வழி - உழைப்பு
14. நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு

ர. நிஷாளினி
தரம் - 7

## கணித விநோதம்

$$1 \times 8 + 1 = 9$$
$$12 \times 8 + 2 = 98$$
$$123 \times 8 + 3 = 987$$
$$1234 \times 8 + 4 = 9876$$
$$12345 \times 8 + 5 = 98765$$
$$123456 \times 8 + 6 = 987654$$
$$1234567 \times 8 + 7 = 9876543$$
$$12345678 \times 8 + 8 = 98765432$$
$$123456789 \times 8 + 9 = 987654321$$

கே. சஞ்ஜை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள வாக்கியங்களும் சிங்களச் சொற்களும்

**எடுத்துக்காட்டு 3:** මාළු - மாளு - மீன்

| | |
|---|---|
| දියේ ඉන්න මාළුවෝ | (Dh)தியே இன்ன மாளுவோ |
| පුංචි අපේ යාළුවෝ | புஞ்சி அ(ப்)பே யாளுவோ |
| උඩ පැනිල්ල - යට ගිලිල්ල | உட பனில்ல - ய(ட்)ட (G)கிலில்ல |
| හැම තිස්සෙම - ඇති නැටිල්ල | ஹம திஸ்ஸெம- அ(த்)தி ந(ட்)டில்ல |
| දියේ ඉන්න මාළුවෝ | தியே இன்ன மாளுவோ |
| පුංචි අපේ යාළුවෝ | புஞ்சி அ(ப்)பே யாளுவோ |

**பொருள்:**
நீரில் இருக்கும் மீன்கள் எங்கள் நண்பர்கள்
மேலே துள்ளும் - அடியில் செல்லும்
எப்போதும் துடிதுடிப்பாக இருக்கும்

ஆருதி
தரம் - 5

## பொது அறிவு

| | |
|---|---|
| இருதய மாற்றுச் சிகிச்சை முதன் முதலில் செய்தவர்? | Dr. கிறிஸ்ரியன் பேனாட் |
| உலகின் முதலாவது பெண் தாதியர் யார்? | புளோரன்ஸ் நைற்றிக்கேள் |
| உலகின் மிகச் சிறிய சுதந்திர நாடு எது? | வத்திக்கான் |
| விண் வெளியில் மிக நீண்ட நேரம் மிதந்தவர் யார்? | பஜ் ஆஸ்பிறில் |
| விண்வெளிக்கு முதல் முதல் சென்ற உயிரினம் எது? | லைக்கா என்ற நாய் |
| மிக வேகமாக வளரும் தாவரம் எது? | மூங்கில் |
| யாப்பான் நாட்டின் தேசிய விளையாட்டு எது? | கராத்தே |

சி. நயனிஹா
தரம் - 03

## மனச்சாட்சி

இன்று பலர் வாழ்வில்
தேடப்படும் குற்றவாளி
போதையின் ஆயுட்கைதிகள்
பொலிவுற்ற உலகமிது
பிணையில்லா
சந்தேக நபர்களாய்
விபச்சார வியாபாரம்
கலாசாரம் ஊமையாக
கூட்டினில் முடங்கி
முணுமுணுக்கின்றது
நாகரிகம் நடைபயின்று
நடுத்தெருவில் நிற்கின்றது
காலவோட்டத்தால்
களவாடப்பட்ட பண்பாடு
சாட்சிகள் இன்றி
சிறையிருக்கின்றது

ஈ. சிவானுஜா
தரம் - 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக் கிண்ண கிரிக்கட் பற்றிய சில தகவல்கள்

முதலாவது உலகக் கிண்ண கிரிக்கட் போட்டி 1975ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்றது.

முதலாவது உலகக் கிண்ணப் போட்டியில் அவுஸ்திரேலியா, மேற்கிந்திய தீவு அணிகள் மோதி கோப்பையை மேற்கிந்திய தீவுகள் சுவீகரித்தது.

இலங்கை அணி 1996ம் ஆண்டு உலகக்கிண்ண கோப்பையை வென்றது.

உலகக் கிண்ண வரலாற்றில் நியூசிலாந்து அணி ஆறுதடவை அரையிறுதிக்கு முன்னேறி ஆறு தடவையும் தோல்வியடைந்தது.

இறுதியாக நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதி இந்தியா உலகக் கிண்ணத்தை சுவீகரித்தது.

11வது உலகக் கிண்ணப் போட்டி நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் நடைபெற்றது.

12வது உலகக் கிண்ணப் போட்டிகள் இங்கிலாந்து நாட்டில் நடைபெறும்.

நி. நிருஷிகன்
தரம் - 8

## சிரிக்க வைத்த ஒரு நாள்

அன்றைய நாளை நினைத்தால் இன்றும் சிரிப்பாக இருக்கின்றது. அது என் பாடசாலை வாழ்வின் முதல் நாளும் ஆகும். காலையில் எழுந்து கடமைகள் முடித்து பாடசாலைக்கு ஆரம்பமானேன். அன்பு அன்னை அறிவுரைகள் கூறி காலை உணவு தந்தார். என் மனதில் பிரம்பும் கையுமாக ஆசிரியர்கள் தோன்றி மறைந்தனர். அப்பொழுது எனது மனதில் புதிய யோசனை எழுந்தது. அதன் படி சத்தமில்லாமல் ஓடிச் சென்று அடுப்பின் கீழ் புகுந்து கொண்டேன். அடுத்த சில நிமிடம் வீட்டில் பரபரப்பு நிலவியது. அனைவரும் என்னைத் தேடி அலைந்தனர். என் கைகளால் வாய் பொத்தி அமைதியாக நின்றேன். அவ்வேளையில் அக்கா "அம்மா! மயில் வந்திருக்கின்றது" என்று உரத்த குரலில் கூறினார். நான் என்னை மறந்து விட்டேன். ஆவலுடன் "எங்கே அக்க?" என்று உள்ளேயிருந்து வினாவிக்கொண்டு வெளிவந்தேன். வீடே சிரிப்பு வெள்ளத்தில் மூழ்கியது. இப்போது நீங்களும் சிரிக்கின்றீர்களா?

ச. கௌசல்யா
தரம் - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாக்காட்சி

பூரண சந்திரனின் ஒளியிலே வீட்டு முற்றத்தில் இருந்து பெரியவர்கள் பேசி மகிழ்வார்கள். சிறுவர்கள் ஒடிப் பிடித்து மணலில் வீட்டைக் கட்டி விளையாடுவார்கள். கதைகள் பல சொல்லியும், கேட்டும் மகிழ்வார்கள் நிலா ஒளியிலே குடும்பமாய் அமர்ந்து நிலாச்சோறு உண்டு மகிழ்வார்கள்.

இரவின் அமைதியில் வட்ட நிலா ஆகாயத்தில் பவனி வருவது அழகான காட்சி. ஆகாய வெளியிலே விண்மீன்கள் எல்லாம் வைரங்களைப் போல் ஒளிர்கின்றன. அழகு நிலா மேகத்தில் மறையும் போது பூமியை இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. இவ்வேளையில் குழந்தைகளின் முகம்வாடிச் சோர்ந்து காணப்படுகின்றது. மீண்டும் பூரண சந்திரனாக ஒளி சிந்தும் போது அவர்களது முகம் மகிழ்ச்சியினால் பூப்போல் மலர்கின்றன.

அழும் குழந்தைகளுக்கு தாய் நிலவைக்காட்டி சமாதானம் செய்கின்றாள். நிலவின் ஒளியிலே மரங்கள், செடிகள், கட்டிடங்கள் யாவும் கருமை நிறத்திலும், சாம்பல் நிறத்திலும் காட்சியளிக்கின்றது. முல்லை, மல்லிகை, தாமரை மலர்கள் எல்லாம் மின் குமிழ்கள் போலக் காட்சியளிக்கின்றன.

மரங்களை அடையும் வெள்ளை நிறக் கொக்குகள் மலர்களாகக் காட்சியளிக்கின்றன. இரவில் இருளை அகற்றி, ஒளியை அளிக்கும் வெண்ணிலவு, இறைவனால் ஆகாயத்தில் ஏற்றிவைக்கப்பட்ட தீபமாய்க் காணப்படுகின்றது. எல்லா நாடுகளுக்கும், எல்லா மக்களிற்கும் ஒளி வழங்கிச் சேவை செய்யும் வள்ளலாக விளங்குகிறது.

பகலிலே பகலவனால் வாடிய மக்களுக்கு இதமான குளிர்ந்த ஒளியை நிலாவே அளிக்கின்றது. உழைத்து களைத்த மக்களுக்கும் சின்னஞ்சிறு குழந்தைக்கும் உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் அளிக்கின்றது.

ஜெ. பிரணவி
தரம் - 7

# சித்திலெப்பை

1938 ஆம் ஆண்டு ஜீன் 11ஆம் திகதி கண்டியில் பிறந்த இவர் 19ஆம் நூற்றாண்டில் முஸ்லீம்களின் கலாசார வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு அவர்களது உரிமைக்காகவும் உழைத்தார். முஸ்லீம் நேசன் என்ற பெயரில் பத்திரிகையை வெளியிட்டார். 1989 பெப்ரவரி 5ஆம் திகதி இவ்வுலகை விட்டுப்பிரிந்தார்.

ந. சுபானுஜன்
தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபன் கிறேசர்

கட்டட வேலைகளுக்கு தேவையான சகல
அளவுகளிலுமான சல்லிகள், கற்கள்மற்றும்
டஸ்ற் வகைகளை தங்களுக்குத் தேவைப்படும்
இடங்களுக்கு கொண்டு வந்து தருபவர்கள்

# RUBAN GRACER

Kaithady Road,
Kopay.

கைதடி வீதி,
கோப்பாய்.

# APIRAMY PHARMACY

மருந்து வகைகள், பால்மா வகைகள்,
போட்டோக் கொப்பி, லெமனேற்றிங்,
குளிர்பான வகைகள் மற்றும்
யாழ் - கொழும்பு சொகுசு பஸ் ஆசனப்பதிவுகள்,
திருமண வைபவங்களுக்கான
குளிரூட்டப்பட்ட கார் சேவைகள்
அனைத்திற்கும் நாட வேண்டிய இடம்.

# அபிராமி பார்மஸி

Point Pedro Road,
Neervely.

பருத்தித்துறை வீதி,
நீர்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கல்வி நிலையம்

## தரம் 1 முதல் 11 வரை

சகல வசதிகளுடனும் அமைதியான சூழலில்
உங்கள் பிள்ளைச் செல்வங்களின்
கல்வி நிலையை திறம்பட வளர்த்திட
நீங்கள் தெரிவு செய்ய வேண்டிய கல்வி நிறுவனம்

# PARATHY INSTITUTES

Seruppiddi North,
Seruppiddi.

சிறுப்பிட்டி வடக்கு,
சிறுப்பிட்டி.

# DART ENTERPRISE

டாட் என்ரபிறைஸ்

*Wholesale & Retail dealers in watches, Electronic, Electrical,*
*Gift items, Fancy Goods & Cosmeties.*

**No. 11, 12, New Market (Inside), Jaffna.**

*T. P: 021 222 3098, 021 222 7622, Fax: 021 222 3098.*
*dardjaffna1@gmail.com.*

கோவில் தேவைகளுக்குரிய
குடை, கொடி, ஆலவட்டம், திரைச்சேலை, வாகைமாலை
போன்ற பொருட்களின் விற்பனையாளர், உற்பத்தியாளர்,
இப்பொருட்களை திறமையாக திருத்தம் செய்து கொடுப்பவர்கள்.

# அஜந்தாஸ்

*இல. 66, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்*
*T.P: 021 222 2899*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசமான நாய்

நாய் ஒன்று எஜமானுக்கு எப்போதும் விசுவாசமான நன்றியுள்ள மிருகமாய் நல்ல காவல்காரனாய் இருந்து வந்தது. ஒரு நாள் கள்வன் ஒருவன் வீட்டுக்குள் புக முயன்றான். உடனே நாய் குரைத்து அவனைக் கடித்து விட்டது. நாய் குரைத்த சத்தம் கேட்டு விழித்தெழுந்து எஜமான் திருடனைத் தேடி ஏமாந்தான். தனது நித்திரையை நாய் குழப்பி விட்டதாகத் தவறாக நினைத்து நாயை நன்றாக அடித்தான். மீண்டும் ஒரு நாள் கள்வன் வீட்டுக்குள் புகுந்தான் இம்முறை நாய் குரைக்காதிருந்தது. மாறாக திருடன் பணத்தைத் திருடி ஒரு மரத்தின் கீழ் புதைப்பதை அவதானித்துக் கொண்டிருந்தது. மறுநாள் தனது பணம் காணாமல் போனதை அறிந்தான். நாயை முன்பு அடித்ததற்காக மனம் நொந்தான். நாயோ எஜமானை கள்வன் பணத்தைப் புதைத்த இடத்திற்கு அழைத்துச் சென்றது. தனது கால்களால் மண்ணைக்கிளறி அவனது பணத்தை காட்டியது எஜமான் மகிழ்ச்சியில் நாயைக் கட்டிப் பிடித்துத் தடவிக் கொண்டான்.

லோகேஸ்வரன்
தரம் - 5

# ஏமாந்த சிங்கம்

ஒரு காட்டில் கிழச்சிங்கம் ஒன்று வசித்து வந்தது. ஒரு முறை தனது குகைக்கு வெளியே முயல் ஒன்று விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டது. அதனைப் பாய்ந்து பிடித்து விட்டது. தனது உணவுக்குப் பயன்படும் என்று எண்ணிய போது மான் ஒன்று துள்ளி ஓடுவதைக் காண்டது. இந்த சிறிய முயலைக்காட்டிலும் மான் மிகப்பெரிதாக உள்ளதே, இந்த மானை ஒருவாறு பிடித்தால் வயிராற உண்ணலாம் என மனதிற்குள் நினைத்துக் கொண்டது.

உடனே அந்தக் கிழச்சிங்கம் முயலை அந்த இடத்திலே விட்டு விட்டது. நீண்ட நாட்கள் உணவு எதுவுமின்றி பட்டினியால் வாடிய அந்தக் கிழச்சிங்கத்தினால் மானின் ஓட்ட வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. வயதாகிவிட்ட அந்தக் கிழச்சிங்கம் சோர்வுற்றபடி சரி முயலையாவது சாப்பிடலாம் என்ற எண்ணத்துடன் திரும்பியது. ஆனால் அந்தோ பரிதாபம்! முயலும் அந்த இடத்தில் இல்லை முயல் தப்பி யோடி விட்டது. பேராசைப்பட்ட சிங்கம் (கிழச்சிங்கம்) தனது செயலுக்காக வருந்தியது.

இருப்பதை விட்டுவிட்டு
பறப்பதற்கு ஆசைப்படாதே

ச. முகுந்தினி
தரம் 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கு ஏச்சு

ஓர் அரசனுக்கு ஒரு பெண்ணொருத்தி இருந்தாள். அவளிடம் பேச்சுக் கொடுத்து யாராலும் ஜெயிக்க முடியாது. அவள் வளர்ந்துபெரியவளானதும்அவளை யாருக்கு மணம் செய்து கொடுப்பதென்று பிரச்சனை அவன் முன் எழுந்தது. அவளோடு பேசி எவன்வெற்றி பெறுகின்றானோஅவனுக்கு தன் மகளை விவாகம் செய்துவைத்து தன் நாட்டிலே பாதியையும் கொடுப்பதாக அவன் நாடெங்கும் பறை சாற்றினான்.

அரச குமாரியையும் நாட்டையும் அடைய ஆசைப்பட்டுக் கொண்டிருந்த பலர் அரச குமாரியோடு வாதம் புரிய வந்தனர். "வாதத்தில் தோற்றால் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியால் அவர்களது காதுகளில் சூடு போடப்படும்" என்ற நிபந்தனையையும் அரசன் விதித்தான். அதன்படியே அவன் செய்தும் வரலானான். அவளை யாராலும் பேச்சிலே வெல்ல முடியவில்லை.

ஒருமுறை மூன்று சகோதரர்கள் அந்த அரசகுமாரியை மணக்கும் எண்ணத்தோடு தம் ஊரில் இருந்தி கிளம்பிவந்தனர். வழியில் இறந்த கிளி கிடந்தது. அதனைக் கடைசித் தம்பி எடுத்துக் கொள்ளவே மற்ற இருவரும் சிரித்தனர். இது போலவே அவன் வழியில் கிடந்த வாழை மட்டை, ஒரு ஒட்டாஞ்சில், இரண்டு கொம்புகள், மரமுளை, பழைய செருப்பு ஆகியவற்றை எடுத்துக் கொண்டான்.

இதையெல்லாம் கண்டு அவனது அண்ணன்மார்கள் இருவரும் சிரித்தனர். மூவரும் அரண்மனையை அடைந்தனர். இரு அண்ணன் மார்களும் அரசகுமாரியிடம் தோற்றுப்போய் சூடுகளைப் பெற்றனர்.

மூன்றாவது சகோதரன் அரசகுமாரியின் முன் சென்றான் அவன் முன் நெருப்பில் பழுக்க காச்சிய இரும்புக் கோல்கள் இருந்தன. அதைக் காட்டிய அவள் "ஓ! நல்ல சூடாக இருக்கும் போல் இருக்கிதே" என்றாள்.

அதற்கு அந்த வாலிபன் "ஆமாம் இதில் கிளியைச் சுட்டுச் சாப்பிடலாம்" என்றான் அதுகேட்டு இராஜகுமாரி "அது தீய்ந்து விடுமே" என்றாள். இந்த வாழைப்பட்டையால் எடுத்து விடலாம்" என்றான். அப்போது அரசகுமாரி "அது நழுவி விட்டால்" என்று கேட்டாள். "அதோ அந்த மரமுளையில் மாட்டி எடுக்கலாம்" என்று அவன் பதிலளித்தான். "அதன் கொழுப்பு உருகினால் என்ன செய்வாய்" என்று அரச குமாரி கேட்க" இந்த ஒட்டாஞ்சில்லில் பிடிப்பேன்" என்றான் அவன்.

அப்போது அவள் "நீ நான் சொல்லுவதற்கெல்லாம் ஏதாவது பதிலை குத்துவது போலக் கூறுகிறாயே" என்றாள். அதற்கு அவன் குத்துவது நானல்ல இந்தக் கொம்பு தான் என்று ஒரு கொம்பை எடுத்துக் காட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அடேயப்பா நீ நன்றாக குட்டையில் ஊறி அடிப்பவன் போலிருக்கிறாயே" என்று அவள் கூறினாள். அதற்கும் களைக்காமல் அவன் குட்டையில் ஊறியடிப்பது நானல்ல இந்த பழஞ் செருப்பே" என்றான்.

அதற்கு பிறகு அரச குமாரிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் தோற்றதாக ஒப்புக்கொண்டாள் அவனும் அந்த அரச குமாரியை மணந்து கொண்டு பாதி நாட்டையும் பெற்றான்.

சி. தசோதரன்
தரம் - 9

## பழமொழிகளும் ஆழ்ந்த கருத்துக்களும்

*அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடலாமா?*
எமக்கு நன்மை செய்தவர்களுக்கு தீமை செய்யலாமா?

*ஆறு கடக்கின்ற வரையில் அண்ணன் தம்பி அப்புறம் நீ யார் நான் யார்?*
உதவி கிடைக்கும் வரை உறவு முறை உதவி கிடைத்த பின் உறவு முறையை அறுத்துவிடல்

*உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?*
வசமாக மாட்டினால் தண்டனையை விட்டுத் தப்பலாமா

*எட்டாப்பழத்துக் குக் கொட்டாவி விட்டென்ன.*
எமக்குக் கிடைக்காத ஒன்றை பார்த்து ஆசைப்பட்டு பலனென்ன?

*கொஞ்சம் இடம் கொடுத்தால் மிஞ்ச இடம் பிடிப்பான்*
பாவம் என்று பரிதாபப்பட்டால் தலைக்கு மேல் ஏறி விடுவான்

இ. தரணியா
தரம் - 7

## பயனற்றவை ஏழு

ஆபத்துக்கு உதவாத பிள்ளை
அரும்பசிக்கு உதவாத அன்னம்
தாகத்தைத் தீர்க்காத தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்காத வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாவத்தைத் தீராத் தீர்த்தம்
பயனில்லை ஏழுந்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கையின் வெற்றிக்காய்...

நீர்க்குமிழி போன்ற இவ்வாழ்க்கையில்
சோதனைகளோடு வாழாதே - மாணிடா
சோதனைகளைச் சாதனைகளாக்கி
வென்றிடு வெற்றி உனதே!

வாழும் வாழ்க்கை சில காலம்
நாம் பதித்த சுவடுகளோ பலவாகும்
பள்ளிப்பருவம் அருமையானதாம்
காணும் இன்பங்களோ அழியாதவையாம்

கூண்டுக்கிளியாய் இருந்திடாதே
சிறைக்குள் உன்னை அடைத்திடுவர்
துணிவாய் தோள் நிமிர்ந்து நில்
சுற்றமும் உன்னை போற்றிடுவர்

மாணவர்கள் துடிப்பாய் பள்ளி செல்வதும்
தொழிலாளி மண்ணில் வியர்வை சிந்துவதும்
இலட்சிய வாதி வாழ்ந்து கொண்டிருப்பதும்
வாழ்க்கையின் வெற்றிக்காய்........

டிலானி யுகராஜ்

## நிஜம்

வெண்மை என்பது நிறம் அல்ல
அது நிஜம்
பெண்மை என்பது நிஜம் அல்ல
அது நிறம்

உலகின் பொய்களை எல்லாம்
ஒன்றாய் சேர்த்த போது
ஒரு பெண்ணின் புன்னகை கிடைத்தது

உலகின் உள்ள ஏமாற்றங்களை எல்லாம்
ஒன்றாய் சேர்த்த போது
ஒரு ஆணின் கண்ணீர் கிடைத்தது

இசையில் சொல்ல முடியாததை
கண்ணீரால் சொல்ல முடியும்
கண்ணீரால் சொல்ல முடியாததை
எப்படிச் சொல்வது

ஆ. தனோஷா
தரம் - 7

## பியானோ வாசிக்கும் பூனை

அமெரிக்காவின் பிலடெல்பியா பகுதியைச் சேர்ந்த ஒருவர் நோரா என்று பெயரிட்ட பூனையை வளர்க்கின்றார். இது பியானோ இசைக்கருவியை இசைக்கும் திறன் கொண்டது. தனது முன்னங்கால்களால் சுருதிக் கட்டைகளை அழுத்தி இசைக்கும். இந்தத் தகவல் இணையத்தில் வெளியாகியது. இதை அறிந்த லித்துவேனியாவைச் சேர்ந்த கிளைபீடா ஆர்கெஸ்டிரா என்ற இசைக்குழு நோராவின் இசை மற்றும் பிற இசைக்கோர்வைகளை வைத்து "கேட்ரெட்டோ" என்ற பெயரில் ஒரு சிம்பொனி இசையை உருவாக்கி உள்ளனர்.

ஞா. மதுஷா
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாழடைந்த கிணறு பேசுகின்றது

அன்று சனிக்கிழமை பாடசாலை விடுமுறை காலை வேளையில் நிதர்சனை சந்திப்பதற்காக அவனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். செல்லும் வழியில் பாழடைந்த கிணறு ஒன்றைக்கண்டேன். மேல் கட்டுக்கள் யாவும் உடைந்த நிலையில் குப்பை கூழங்கள் நிறைந்ததாக அக்கிணறு காணப்பட்டது. அக்கிணற்றை எட்டிப் பார்த்த போது, "என்ன தம்பி ஜோசிக்கிறாய்?" என்று அக் கிணறு கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தேன். யாரும் இல்லை. கிணறு பேசுகிறது என்று எண்ணினேன். "பயப்படாதே தம்பி நான் ஏன் இப்படிக் கிடக்கிறேன் என்று தானே யோசிக்கின்றாய்? என் கதையைக் கூறுகின்றேன் கேள்" எனத் தொடங்கியது தன் கதையை.

"தம்பி இந்தக் கிராமத்துக்கு வயலூர் என்று பெயர். இந்தக் கிராமத்தில் உள்ள கிணறுகள் எல்லாம் உவர் நீர். இதனால் நன்னீரைப் பெறுவதற்காக அயல் கிராமத்திற்கு செல்ல வேண்டும். இவ்வூரில் நன்னீர் கிணறொன்றை அமைத்தனர் அக்கிணறே நான். என்னைப் பாதுகாப்பாக அடியிலிருந்து மேல் பக்கம் வரை உட்பக்கமாக சீமெந்து பூசி விட்டனர். மேற்பக்கமாக வட்டமாக சுவர் அமைத்து பாதுகாப்புச் செய்தனர்.

தினமும் நூற்றுக் கணக்கானோருக்கு குடி நீர் கொடுத்த நான் இன்று கழிவு பொருட்கள் போடும் இடமாக மாறி விட்டேன். மக்கள் நடமாட்டம் இன்றி துர் நாற்றத்துடன் "பேய்க்கிணறு" என்ற பட்டத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இது தான் தம்பி உலகம், நல்லாயிருக்கும் போது பயன் பெறத் தேடிவருவார்கள். விட்டுப் போனால் உன்னிடம் எனது கவலையை தெரிவித்தமையால் வேதனை சற்றுக் குறைகிறது. போய் வா தம்பி. என் கதையைக் கேட்டதற்கு நன்றி!"

இன்துஜா
தரம் - 7

# நீர்

தண்ணீர் தண்ணீர் தண்ணீர்
தாகம் தீர்த்திடும் தண்ணீர்
தண்ணீர் தண்ணீர் தண்ணீர்
தரணிக்கு இதுவே உயிர்நீர்

உணவு சமைத்திட உதவும் நீர்
உடலைக் கழுவிட உதவும் நீர்
வீட்டை கழுவிட உதவும் நீர்

உடைகள் தோய்த்திட உதவும் நீர்
உயிர்கள் வாழ உதவும் நீர்
பயிர்கள் வாழ்ந்திட உதவும் நீர்
பள்ளம் பார்த்து பாயும் நீர்

ஓடும் நீரின் வேகத்தால்
ஒருசில பொருட்கள் மிதந்திடுமாம்
அழுக்கை அகற்றிட உதவிடுமாம்
அரிய வளமாம் தண்ணீரே

நீரின் அருமை தெரிந்திடுவோம்
நினைவிற் கொண்டு வாழ்ந்திடுவோம்
சிக்கனமாகப் பயன்படுத்திச்
சீராய் வாழக் கற்றிடுவோம்

பி. சரசிகன்
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜோடிக் காக்கை

ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு நாள் தூங்கி எழுந்து விடியற் காலையில் ஜோடியாக உள்ள காக்கையைக் கண்டால் அன்றைக்கு நல்ல அதிஷ்டம் உண்டாகும் என்று கேள்விப்பட்டு இருந்தான். தான் ஜோடிக்காக்கைகளைக் காலையில் எழுந்ததும் காண வேண்டும் என்னும் எண்ணம் கொண்டான்.

அவ்வாறு எண்ணம் கொண்ட அப் பணக்காரன் தன் வேலைக்காரனை அழைத்து "நீ விடியற் காலையில் ஜோடிக்காக்கையைப் பார்த்து வந்து என்னை எழுப்பு" என்று கூறினான்.

அவ் வேலைக்காரன் மறு நாள் விடியற்காலையில் ஓர் இடத்தில் ஜோடிக்காக்கைகள் இருப்பதைப் பார்த்தான் உடனே ஓடிச் சென்று தன் எசமானை எழுப்பினான்.

அப் பணக்காரன் படுக்கையில் இருந்து எழுந்து சென்று பார்க்கும் போது அங்கு ஒரு காக்கை மட்டுமே இருந்தது. மற்றொரு காக்கை பறந்து போய் விட்டது. ஒரு காக்கையை மட்டும் பார்த்த பணக்காரன் கோபம் கொண்டு மற்றொரு காக்கை பறந்து செல்வதற்கு முன்னால் என்னை வந்து எழுப்ப வில்லையே என்று சொல்லிக் கொண்டே வேலைக்காரனை அடித்தான்.

அப்போது அந்த வேலைக்காரன் எசமானே! விடியற் காலையில் யோடிக் காக்கைகளைப் பார்த்தால் எனக்கு உண்டான அதிஷ்டத்தைப் பார்த்தீர்களா? உங்களிடம் அடிவாங்கியது தான் அந்த அதிஷ்டம்! என்று கூறினான். அதைக் கேட்ட பணக்காரன் ஆமாம் என்று சொல்லி அடிப்பதை நிறுத்தி விட்டான்.

த. குருபரன்
தரம் - 6

## சிங்கமும் சுண்டெலியும்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. ஒரு நாள் அது இரை தேடி அலைந்து திரிந்தது. இரை உண்ட களைப்புடன் குகைக்குத் திரும்பியது. அசதியாய் அயர்ந்து உறங்கியது. அப்போது அங்கு வந்த எலி ஒன்று தாவிக்குதித்து விளையாடி சிங்கத்தின் மேல் விழுந்தது. உறக்கம் கலைந்த சிங்கம் சுண்டெலியைக் கண்டது. தன் காலால் அதை அழுத்திப் பிடித்து சுண்டெலியும் "கிறீச்" சென்று கத்தியது. சிங்கம் சுண்டெலியைப் பார்த்து "ஏ! அற்பப்பதரே நீ என் உறக்கத்தைக் கலைத்ததாய்? உன்னை நசுக்கிக் கொல்கின்றேன்" என்றது. பயங் கொண்ட சுண்டெலி நடுங்கிக் கொண்டே "ஐயா! அறியாமையால் இங்கு வந்து தங்களுக்குத் தொந்தரவு கொடுத்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். தங்கள் உதவியை என்றும் மறக்க மாட்டேன்" என்றது. இது கேட்டு சிங்கம் நகைத்துக் கொண்டே "ஏ! அற்பனே! நீ எனக்கு எவ்வழியில் உதவ முடியும்?" என்று அலட்சியமாகக் கூறி சுண்டெலியை விட்டு விட்டது. சுண்டெலியும் தாவிக் குதித்து ஓடி மறைந்தது. சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் தன்னையும் அறியாமல் அச்சிங்கம் வேடன் ஒருவனது வலையில் சிக்கிக் கொண்டது. பல வழிகளில் முயன்றும் அதனால் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. வருத்தத்துடன் பலமாக கர்ஜித்தது. தற்செயலாய் சிங்கத்தின் அலரலைக் கேட்ட சுண்டெலி சிங்கம் இருக்கும் இடம் நோக்கி ஓடி வந்து சிங்கத்தின் பரிதாப நிலையைக் கண்டது. தனது கூரிய பற்களால் வலையை பல இடங்களில் கடித்துத் துண்டாக்கியது. அதனால் சிங்கமும் வலையிலிருந்து தப்பி வெளியே வந்தது. மகிழ்ச்சியுடன் சுண்டெலியைப் பார்த்துநன்றி கூறிச் சென்றது.

"நாம் பிறருக்குச் செய்யும்உதவி என்றும் வீண் போகாது"

தி. டினோஜன்
தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கரை பச்சை தேடி

செல்வத்திலே உயர் செல்வம் கல்விச் செல்வம்
செவ்வனே அதை வழங்கிடும் கல்விக்கூடம்
நல்லதாய் நம்மூரில் வாழ்விருக்க
நயந்து கல்வி கற்றிட மறுத்திட்டார்

பிச்சை புகினும் கற்கை நன்றே எனும்
பொன் மொழியையும் புறந் தள்ளிவிட்டார்.
இச்சைப் படி கற்றலானார் எம் ஊரில் சில காலம்
இனிய எம் ஊரில் பணி பெற்றிடாது

அக்கரையில்பச்சை தெரியுதென்றார்
ஆகாய விமானமேறி பறந்து போனார்
இக்கரை மறந்தார் எம்மூர் மறந்தார்
எழிலான பண்பாட்டை இழிவென்றார்

வீடு வாசல் வீழ்ந்தழிய கும்பிட்ட கோயிலோடு
விளையாடும் வெளியினிளங்காற்று
தேடு கல்வியாவும் விட்டார் தேசம் விட்டார்
தேசுபுகழ்மொழி மறந்தார் துறந்தார்

அக்கரையும் பச்சையில்லை என்றுணர்ந்தார்
அழுத்தும்மனத்துயரில் அழுந்தி நின்றார்
எக்கணமும் மகிழ்வின்றி எந்திரம்போல்
உழைத்து என்ன தான் பயன் கண்டார்

உனக்கென்று காத்திருக்கும் தேசமிது
உன்பணியும் உன்மகிழ்வும் இங்கு தானே
தனக்கென்று இல்லாத சூனியத்தில் போய்
தேன் வாழ்வை துலைத்து விட்டு இன்று

முகவரி இழந்து வாழும் வாழ்வும் ஏன்
முழுதாகி மனங்குமுறும் நிலையும் ஏன்
முகமிழந்த மனிதராகி என்ன கண்டீர்
முன்னே கண்ணில்தெரியலையோ

வி. வாசவன்
தரம் - 11

## கல்வி தேடடா

சிந்தனை சிதறல்களை
சிந்துது இந்த மனம் - உடன்
சந்தன தேரினிலே சுற்றி சுழலவே
இந்த வயதினிலே
கற்ற கல்வியே எமக்கு
வந்து உதவிடும்
வாழ்க்கை முழுதுமே
பிச்சை எடுப்பினும்
கற்றல் சிறந்தது
அறிவு ஆறதை பெற்ற மானிடா
உன் ஆயுள் முழுவதுமே கல்வி
தேடடா

## என்தாய்

அன்புடனே பெற்று என்னை
அவனியிலே வாழச் செய்தார்
பண்புடனே அவர் எனக்கு
பாசத்தைப் பொழிந்து வந்தார்
பள்ளி சென்று வந்தவுடன்
பாடத்தையும் படிக்க வைத்தார்
அல்லும் பகலும் அயராமல்
பிள்ளை என்னைப் பாதுகாத்தார்
துன்பம் ஏதும் வந்தாலும்
துணிவுடனே நிற்கச் செய்தார்
இன்பமாக நான் வாழ
இறைவனையும் துதித்து வந்தார்
முத்தம்பல எனக்குத் தந்த
முகம் மலர்ந்து இருக்கச் செய்தார்
நித்தம் வரை போற்றி
நானும்நிம்மதியாக வாழ்கின்றேன்.

உ. ஹரணி
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை எது?

ஓடும் பேருந்தில் நான் தரிப்பிடத்தில்
ஒரு நங்கை கைக்குழந்தையுடன் கைநீட்டி
வாடும் குழந்தைக்கு வயிற்றில் சத்திர சிகிச்சை - இல்லையெனில்
வாழும் காலம் ஒரு மாதம் உதவுங்கள் என்றாள்

கலங்கியதென் நெஞ்சு ஐயோ பாவம்
கற்பதற்கு அம்மா தந்தகாசு ஆயிரம்
துலங்கட்டும் குழந்தை வாழ்வென்று கொடுத்தேன்
துன்பப்பட்டு அம்மா சேர்த்த காசு தூயதாய் போகுதென்று

உளத்தில் மகிழ்வுடன் ஓராண்டு கழித்திட
ஒரு நாளில் மீண்டுமொரு பேருந்துப் பயணமொன்று
வளர்ந்திட்ட குழந்தையுடன் அதே நங்கை
வந்து ஐயோ! மூளையில் கட்டி என்றாள் - காசு கேட்டு

நெஞ்சு துடித்திடவே நீதானே முன்பொருகால்
நிலைத்த நோய் வயிற்றில் என்றாய்
கொஞ்சம் கடுப்பாய் நான் கேட்க
கொடுமை இது வேறாரோ என்றாளே

உண்மை எது உண்மை எது
உயிரைப் பணயம் வைத்து எடுக்கும் பிச்சை
உண்மை தெரிவதெப்போ?
உதவுவது யாருக்கோ? உண்மை எதுவோ...?

வ. குகபபிரியன்
தரம் - 10



ச. விஜிதரன்
தரம் - 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி

சிங்கத்தின் மீது ஏறியே
சிறப்பாக வருவாள் துர்க்கை அன்னை
அங்கும் எல்லாம் வீரம் தந்து
அருள் புரிவாள் துர்க்கை அன்னை

பக்கம் இன்றியே நாம் அன்னையைப்
பாடிப் பணிந்து வணங்கிடுவோம்
செந்நிற ஆடை அணிந்துமே
செந்தாமரையில் வீற்றிருப்பாள்

செல்வம் எல்லாம் தந்து
சிறப்படையச் செய்வாள் ஸ்ரீதேவி
தங்க நிறம் உடையவளின்
தாள் பணிந்து பாடுவோம்

வெண்ணிற ஆடை அணிந்துமே
வெண்டாமரை தனில் வீற்றிருப்பாள் சரஸ்வதி
வீணையைக் கரத்தில் ஏந்தியே
வேண்டும் கலைகள் எமக்கு அளிப்பாள்

பாமகள், நாமகள், வாணி, கலைமகள் எனப்
பாடிப் பரவிப் பணிந்திடுவோம்

U.நிருத்திகா
தரம் - 3

## அம்மா

அகிலம் போற்றும் உறவு என் அம்மா
ஆண்டவனின் மறு ஜென்மம் என் அம்மா
இன்னல்கள் தீர்த்திடுவாள என் அம்மா
ஈடு இல்லாத உயிர் என் அம்மா

உண்மையான உறவு என் அம்மா
ஊக்கம் ஊட்டி விடுவாள் என் அம்மா
என்றும் எனக்குத் துணையாய் என் அம்மா
என்னுடனே வாழ்ந்திருப்பாய்

## பறவைகள்

குயில் அக்கா பாட்டுக்கு
மயில் அண்ணா அபிநயம்
மரங்கொத்திமாமாவின்
மிருதங்க வாத்தியம்

தகிட தகிட தகிட தகிட
தகிட தகிட தகிட தகிட
தகிட தகிட தகிட தகிட
காகம் புறா கோழியும்
கிளி கொக்கு நாரையும்
நாகணவாய் வாத்துக்கள்
நடனம் பயின்று பாக்கினம்
(தகிட தகிட)
கொண்டை கிளார் சிட்டுக்கள்
கூடும் புளுணிக் கூட்டங்கள்
பெண்டு நடை அன்னங்கள்
பின்னால் ஆடிப் பார்க்கினம்
(தகிட தகிட)
நாவை மடித்து கரிச்சானும்
விசில் அடித்து மகிழ்கிறார்
கூவை கூவ ஆந்தையார்
கூடுமேளம் கொட்டுறார்
(தகிட தகிட)

வ. டிலக்சனா
தரம் - 7

## நீர்

நாம்உயிர் வாழ நீ வேண்டும்
எம் தாகம் தீர்க்க நீ வேண்டும்
எம் சுத்தம் பேண நீ வேண்டும்
குளிர்மையைத் தந்திட நீவேண்டும்
பஞ்ச பூதங்களில் ஒருவன் நீ
சமுத்திரமாய்இருப்பவன் நீ
மழையென மண்ணில் பொழிந்து
மண்செழிக்க வைத்திவாய்

கே.ஜெயகௌரி
தரம் -4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அம்மா

பூக்களின் புன்னகை முழுவதையும்
கண்டேன் அம்மா - நான்
உன் பூ முகத்திலே
மொட்டுக்கள் விரியும் - தாமரையை
உன் சிரிப்பினாலே அள்ளினாய் அம்மா

செந்நிற முழு மதியை நெற்றியிலே
சின்னமாக்கிய என்தாயே!
பிறந்த பொழுதிலிருந்து ஒரு நொடியேனும்
பிரியாத என்தாயே - இப்படி
என்னை அழ வைப்பதும் ஏனோ?

அமைதி வடிவான என் தாயே!
நீ முன்னிருக்கும் போது
வேறொருவரை நான் அடையாளம்
காண்பதா?

என்னை விட்டு இத்தனை நாளும்
எப்படி அம்மா உன்னால்
இருக்க முடிகிறது!
உன்னைப் பிரிந்து ஒரு நொடி
வாழ முடியவில்லை
இவ்வுலகத்தில்

நொடிகள்அனைத்தும்
ஜென்மமாகிறது அம்மா
உன்னைப் பிரிந்து இருக்கையில்
ஜென்மங்கள் அனைத்தும்
நொடிகளாகும் அம்மா!
உன்மடி சாய்கையில்

நீ உணவு ஊட்டும் போது
வேண்டாம் என்றேனே - இப்பொழுது
ஒரு கைபிடி உன் கையால்
விசமானாலும் உண்ண
ஏங்குகின்றேன் தாயே

பாடசாலை விட்டு வந்ததுமே
உன் புன்சிரிப்பால் என் பசியை ஆற்றினாயே
என் வீடு பாலைவனமானது நீயிலாலாது
எப்போதம்மா வருவாய் நீ

உன் தோள் சாய்கையில்
தீரும் என் கவலைகள்
ஏங்குகின்றேன் அம்மா
ஒரு நிமிடம் உன் தோள் சாய!

எத்தனை உறவுகள் இருந்தாலும்
உன்க்கு ஈடாகுமா என் தாயே
எத்தனை ஜென்மம் நீண்டாலும்
கரையாதம்மா என்பாசம்

நான் கடவுளை நம்பவில்லை - தாயே!
இருந்தாலும் நான் கேட்கின்றேன்
கடவுளே என் தாய்க்கு என் ஆயுளையும்
சேர்த்துக் கொடு என்று

அன்பு என்ற சொல்லிற்கு
எத்தனை பொருள் இவ்வுலகத்தில் இருந்தாலும்
என் தாயின் அன்பிற்கு ஈடாகுமா
அவ் வார்த்தைகள்

ஏழேழு ஜென்மங்கள் இருந்தால்
உன்னோடுசேர்ந்து வர வேண்டும் - நான்
உனக்கு மகளாக அல்ல என் தாயே
என் மகளாக நீ வேண்டும்

உன் விருப்பங்களை நிறைவேற்றும் தாயாக
உன் கட்டளை செய்யும் சேவகியாக
உன் பாதம் தொழும் அடியவளாக
உன் அன்புக்குரிய இந்த மகள்
பிறக்க வேண்டும் என் தாயே!

சி. அபிரா
தரம் - 5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்ததில் பிடித்தது

### இராப்பொழுது

*மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே*
*வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா*
*வானுங் கடலாக மாறுதம்மா - இந்த*
*மாட்சியில் உள்ளம் முழுகுதம்மா*

*அம்புயம் வாடி தளர்ந்தம்மா - அயல்*
*ஆம்பலும் கண்டு களிக்குதம்மா*
*இம்பருலகின் இயல்பிதம்மா - மதிக்*
*இன்னார் இனியார் உண்டோ அம்மா*

*சின்னஞ் சிறுவில்லாய் கண்டதம்மா*
*- பின்னர்*
*செம்பொற் குடம் போலவே தோன்றுதம்மா*
*என்ன அதிசயம் பாராயம்மா ஈதோர்*
*இந்திர சாலமோ கூறாயம்மா*

*வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா - உடல்*
*வாட்டந்திருந்தி வருகுதம்மா*
*தளர்ந்து தளர்ந்து பின் போகுதம்மா*
*- கண்ணில்*
*சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா?*

*ஸ்ரீ. ரனுசிகா*
*தரம் - 5*

## பாடல்

*வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்*
*வீட்டில் வளருது கண்டீர்*

*பிள்ளைகள் பெற்றந்தப் பூனை - அவை*
*பேருக் கொரு நிறமாகும்*

*சாம்பல் நிறமொரு குட்டி - கருஞ்*
*சாந்து நிறமொரு குட்டி*

*பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்*
*பாலின் நிறமொரு குட்டி*

*எந்த நிறமிருந்தாலும் - அவை*
*யாவும் ஒரே தரமன்றோ?*

*இந்த நிறம் சிறிதென்று - இஃது*
*ஏற்றஞ் சொல்ல லாமோ*

*ஒன்றென்று கொட்டு முரசே*
*ஒங்கொன்று கொட்டு முரசே*

*நன்றென்று கொட்டு முரசே - இந்த*
*நானில மாந்தர்க் கெல்லாம்*

*பி. சாம்பவி*
*தரம் - 3*

### ලේනා - லேனா - அணில்

හඬ මෙන් වීනා- ටිං ටිං ගානා
ஹ(ண்)ட மென் வீனா - டிங் டிங் (G)கானா
පොඩි ළමයින්ගේ - මිතුරෙකි ලේනා
பொடி லமயின்(G)கே மி(த்)து(ரெ)க்கி லேனா
අතු අග දුවමින් - සෙල්ලම් කරමින්
அ(த்)து அ(G)க (Dh)துவமின் - ஸெல்லம் கரமின்
යන්නේ ලේනා - පලවැල සොයමින්
யன்னே லேனா பலவல ஸொயமின்
දරු පැටවුන් පොඩි - කන්ට කැමති ගෙඩි
தறு பு(ட்)டவுன் பொடி - கன்ட தமத்தி (G)கெ(D)டி
කන්නේ ලේනා - වෙහෙස නැතුව වැඩි
கன்னே லேனா - வெஹெஸ நத்துவ வடி

*அ. கரோலின்சாலினி*
*தரம் - 5*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்தது வசந்தம்

வண்ண உடை அணிந்து வட்ட நிலா ஒன்று
வனப்பாக சிறகடித்து வானத்தில் பறக்கயிலே
தன் போன்ற ஒரு நிலவை தரணியிலே கண்டதுவாம்

பாரினிலே பார்த்த நிலா பாசமுள்ள பிள்ளை நிலா
பள்ளி செல்லும் பருவத்தில் சிறகடிக்கும் வெள்ளை நிலா
தன் நிலமை தான் தெரிந்து தரணியிலே தானுய்ய நினைத்ததுவாம்

அன்பான அந்நிலவிற்கு அடுக்கடுக்காய் சோதனைகள்
பள்ளிக்குச் சென்றால் பாடமோ விளங்காது
காரணம் காலம் செய்த கோலத்தால் கண்ட பல வேதனைகள்

கலங்காமல் உள்ளமதை கல்வியிலே கரைத்த விட்டு
இல்லம் வந்து சேரும் முன்பு இதயத்தில் சோர்வு தோன்ற
இன்பம் பெறுவதற்காய் விளையாட நினைப்பாள் அவள்

கடந்த சென்ற சோதனைகள் நிழலாய் அவளின்முன்
கற்பனைகள் பல செய்து வாழ்ந்த அவள் சிந்தனையை
காலனவன் கலைத்துவிட வெறுப்புத்தான் மின்னியது

எட்டுத் திசைகளிம் தொல்லைகளால் அவள் வாடி
சூனியமாய் தோன்றியது - அவளிற்கு ஒளிகொடுக்க
வந்தது வசந்தம்அவள் நண்பியாக

நம் சிந்தையைக் கலைப்பதற்கு சிலர் செய்யும் திட்டமிது
உன் இலட்சியத்தை நினைத்து உன்னதமாய் வீறு கொண்டால்
உயர்வடைவாய் நீ என்று நண்பி சொன்ன வார்த்தையினால்
உயிர் பெற்றது இந்நிலவு

திருமகள் .சி
தரம்-11

## மழை

வழக்கம் போல் தொடங்கிய
நாளில் திடீர் வானிலை மாற்றம்
மின்னலும் இடியுமாக வானில்
ஆவேச யுத்தம்"ஓ" என்ற
ஓசையுடன் விண்விட்டு மண்
தொடும் இராட்சத ஊசி மழை
சூழ்கின்ற இருள் போர்வை

திடீர் மழையை சபித்தபடி
சிதறி ஓடும் மனிதர்கள்
நிழற் குடையுள் நிற்கும் என்னுள்
விரிகிறது காட்சி ஒன்று
மழை ஓய்ந்து உடல் தொய்ந்து
வீடு சென்று படி மிதிக்க
அங்கேயும் ஓர் யுத்தம்
அதுவும் மழையாகும்.

ஸ்ரீ. தாரணி
தரம் - 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் நாம் சமாதான உலகிற்கு குரல் கொடுப்போம்

புதிதாய் பூத்த
புன்னகை மொட்டுக்கள் - நாங்கள்
பூக்களாய் மணம் வீசி
பூமிக்காய் குரல் கொடுப்போம்

அன்னை மடியில் அன்பாய் தவழ்ந்து
அறிவு பெருக்கிட அறிவாலயங்கள் நாடி
உரிமையோடு வலம் வந்து
சமாதானத்திற்காய் குரல் கொடுப்போம்

விதையாய் மண்ணில் விழுந்து
விருட்சமாய் நிமிர்ந்திட
விண்ணோக்கி தலை நிமிர்ந்தும்
விடியலுக்காய் குரல் கொடுப்போம்

பூட்டிய இதயங்களைத்திறந்து
புகழ் மாலை சூட்ட வைப்போம்
காற்றும் கூட புக முடியா இடங்களில்
சமாதான காற்றைப் பரவிடச் செய்வோம்

ஆர்ப்பரிக்கும் கடலும்
ஓயாத ஓடும் நதியும்
சுழன்றடிக்கும் காற்றும் கூட - நாளை
எம் போல் சமாதானத்திற்காய் கவிபாடும்

தொல்லைகள் துரத்திடுவோம்
துயரங்களை கலைத்திடுவோம்
தொண்டுகள் செய்து
தெவிட்டாத சமாதான
இன்பத்தைத் தந்திடுவோம்.

மே. மேன்சியா
தரம் - 11

## வெல்வோம்

அறிவெனும் தீபத்தை ஏற்றி - நல்ல
அன்பெனும் சுடரினைப் படைத்து
தெளிவெனும் ஒளியினால் நாங்கள் - பெரும்
சிந்தனை வளர்த்திடுவோம்

வளமெனும் நீர் நிலை ஆக்கி - அதில்
உண்மையாய் படகினைத் தேக்கி
வளமெனும் துடுப்பினால் உக்கி - நல்
வாழ்வைப் படைத்திடுவோம்

நல்லது செய்திடல் காண்போம் - எம்
நாவிற்கினியன சொல்வோம்
வலிமை பெற்றுயர் கொள்வோம் - தூய
வாழ்வு மலர்ந்திடும் வெல்வோம்!

க. துஷந்திகா
தரம் -6



ஆ.தனோசா
தரம் - 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூச்சுக்காற்று

நாம் வெளிவிடும் மூச்சுக்காற்று சற்று சூடாக இருப்பதை கவனித்திருப்பீர்கள். ஏனெனில் நாம் உள் இழுக்கும் மூச்சுக்காற்று உடல் இயக்கத்தால் நம் உடல் வெப்பநிலையை அடைகிறது. அந்தக் காற்றில் அதிக அளவு காபனீரொக்சைட்டு இருப்பதும் ஒரு காரணமாகும்.

நாம் உள் இழுக்கும் காற்றில் 20 % ஒட்சிசன், 0.04 % காபனீரொட்சைட் உள்ளது. ஆனால் வெளிவிடும் காற்றில் 16 % ஒட்சிசன் 4.04% காபனீரொட்சைட் உண்டு.

மு. திவியா
தரம் - 8

## மூச்சுக்கருவி

தண்ணீருக்கு அடியில் வெகுநேரமாக நீந்த உதவும் மூச்சுக்கருவியின் பெயர் ஸ்கிய்பா (Scuba) அதவது Self Contained Under Water Breathing Apparatus என்ற ஆங்கிலப் பெயரின் சுருக்கமே ஸ்கிய்பா. இதை நீருக்கு அடியில் ஆழ் கடலில் சென்று ஆராய்ச்சி செய்யும் வீரர்கள் பொருத்திக் கொள்வார்கள். அது நுரையீரல் போல் செயற்ப்படும். இதனால் கடல் வாழ் உயிரினங்களைப்பற்றி ஆராய முடிகிறது. மேலும் அங்குள்ள நிலப்பரப்புக்கள், கடல் வாழ்தாவரம் மற்றும் உயிரினங்களைப் பற்றி ஆராயலாம். எண்ணெய் எடுப்பதற்காகவும் மற்றும் இராணுவ தொடர்புகளுக்காகப் கப்பற் படையிலும் இது பெரும்பங்கு வகிக்கிறது. மூச்சுக்குத் தேவையான ஒட்சிசன் சிலிண்டரில் இருந்து எடுக்கப்படும். வெளிவிடும் மூச்சு வாய்வழியாக வெளியேற்றப்படும் வசதியும் இதில் உள்ளது. இது ஒட்சிசனை மட்டும் உள்ளே அனுமதிக்கும். இதனால் சீரான சுவாசம் ஏற்படுகின்றது. அதனால் கடலில் சில மணி நேரங்கள் நீந்தலாம்.

ஜெ. துசாயினி
தரம் - 8

## மீனவனின் வாழ்வு

இவன் வாழ் வாதாரம்
இவனது தொழில்
இவன் தொழிலுக்கு ஆதாரம்
தோணி
இது கடலில் கவிழ்ந்து விடில்
இவன் வாழ்வது
நிச்சயமா?
இறுதியாக இவன் வாழ்வே
போராட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுஅறிவு

| | |
|---|---|
| அப்பிள் கணனியை கண்டு பிடித்தவர் யார்? | ஸ்டிபன் ஜோன் |
| கடலில் கிடைக்கக் கூடிய உலோகம் எது? | மக்னீஷியம் |
| காற்றோட்ட நகரம் எனப்படும் நகரம் எது? | சிகாகோ |
| உப்பை விரும்பிச் சாப்பிடும் விலங்கு எது? | முள்ளம்பன்றி |
| எப்போதும் புயல் வீசிக் கொண்டிருக்கும் கோள் எது? | வெள்ளி |
| அன்னை திரேசா பிறந்த தினம் எது? | 26.08.2012 |
| கரடியின் ஆயுட் காலம் யாது? | 30 ஆண்டுகள் |

சி. யனுசியா
தரம் - 7

# சாதனைப் பெண்மணிகள்

✦ இங்கிலாந்திலுள்ள ஏறுவதற்கு கடினமான மலையான ஹாரியூன் மலையில் ஏறி சாதனை புரிந்த முதல் பார்வையற்ற பெண்மணி காஞ்சன் காபா என்ற இந்தியப் பெண் ஆவார்.

✦ தனது வாழ் நாளில் 6140 கோப்பைகள், 125 கேடயங்கள் வென்ற அமெரிக்க கூடைப்பந்து வீராங்கனை செரில் மில்லர்.

✦ 19 வயதில் உலக அளவில் பளு தூக்கும் போட்டியில் இரண்டு தங்கப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை கர்ணம் மல்லேஸ்வரி

✦ ஒரு குழந்தைக்கு தாயான பிறகும் 1976 ஒலிம்பிக்கில் தொடர்ந்து நான்கு ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற முதல் பெண்மணி கிரனகா சிவின்ஸ்கா.

✦ கரம் விளையாட்டில் முதல் உலக மகளீர் சம்பியன் பட்டம் பெற்றவர் அனுராஜ். இவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்.

✦ உலகிலேயே இளம் வயதில் செஸ் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற முதல் பெண்மணி என்ற பெருமையை பெற்றவர் ஜீடிஸ் போல்கர் என்ற ஹங்கேரி நாட்டு பெண்ணாவார். இவர் தனது 16 வயதில் பெற்றார்.

✦ ஒலிம்பிக்கின் முதல் வீராங்கனை என்ற சிறப்பு பெற்றவர் பேணிடுரக் என்ற அவுஸ்திரேலியா நாட்டுப் பெண்.

✦ ஐ. நா. சபையின் முதல் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் விஜயலட்சுமி பண்டிட் ஆவார். இவர் 1953ல் இப் பதவி வகித்தார்.

✦ எட்டு முறை ஒஸ்கார் விருது பெற்ற முதல் பெண்மணி எடித் ஹெட் ஆவார்.

✦ 1988 ஆம் ஆண்டில் தனது 13வது வயதில் 20 கிலோ மீற்றர் தூரத்தை 9 மணி 5 நிமிடத்தில் நீந்திக் கடந்து சாதனை படைத்தார் அர்ச்சனா பாரத் குமார் என்ற இந்திய நீச்சல் வீராங்கனை.

சங்கவி
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினோத உயிரினங்கள்

- சத்தமிடாத விலங்கு எது? ஒட்டகச்சிவிங்கி
- ஞாபக சக்தி கூடிய விலங்கு எது? யானை
- நீல நிற இரத்தத்தை உடைய கடல் உயிரினங்கள் எவை? இறால், நண்டு
- பல்லில்லாத முலையூட்டி எது? தேவாங்கு
- கடல் நீரை பருகும் ஒரே யொரு பறவை எது? பென்குயின்
- பித்தப்பை இல்லாத முலையூட்டி எது? எலி
- கண்கள் மூலம் வியர்வை வெளியேறும் உயிரினம் எது? முதலை
- நாக்கின் மூலம் வியர்வை வெளியேறும் உயிரினம் எது? நாய்
- பூவின் மூலம் சுவாசிக்கும் கடல் உயிரினம் எது? மீன்
- மிகப் பெரிய வாயுள்ள விலங்கு எது? நீர்யானை

வி. நிறோஜனா
தரம் - 9

## நிறுவனங்கள்


| | | |
|---|---|---|
| U.N.O | - United Nations Organization | ஐக்கியநாடுகள் சபை |
| N.A.T.O | -North Atlantic Treaty Organization | வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம் |
| W.T.O | World Trade Organization | உலக வர்த்தக நிறுவனம் |
| B.B.C | British Broadcasting Co -operation | பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் |
| I.C.C | International Cricket Committee | சர்வதேச கிறிக்கட் சங்கம் |
| I.C.R.C | International Committe for Red Cross | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் |
| I.O.C | International Olympic Committe | சர்வதேச ஒலிம்பிக் குழு |
| I.A.E.A | International Atomic Energy Agency | சர்வதேச அணுச்சக்தி முகவரகம் |
| P.L.O | Plastine Liberetion Organization | பலஸ்தீன விடுதலை இயக்கம் |
| N.G.O | Non Government Organization | அரச சார்பற்ற நிறுவனம் |
| C.I.A | Central Intelligent Agency | மத்திய புலனாய்வு முகவரகம் |
| W.H.O | World health Organization | உலக சுகாதார நிறுவனம் |
| F.A.O | Food and Agricultural Organization | உணவு விவசாய நிறுவனம் |
| A.D.B | Asian Development Bank | ஆசிய அபிவிருத்தி வங்கி |
